## நக்கல் நமசிவாயம்

சர்வசன வாக்கெடுப்பு நடத்த காசு எங்கிருந்து வருமாம் ?



Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 157 சோபகிருது வருடம், ஆனி மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (25.06.2023) ஹிஜ்ரி-1444, துல்ஹஜ் - 06, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130

## இலங்கைக்கு ஐ.எம்.எவ் முழு அளவில் ஆதரவு

## ஜனாதிபதி ரணிலிடம் உறுதி



02 ஆம் பக்கம்

# 2024ஆம் ஆண்டில் சர்வசன வாக்கெடுப்பு!

## தேர்தல் தொடர்பில் நடத்துவதற்குத் தயாராகிறார் ரணில்



*(அரசியல் செய்தியாளர்)*

பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்து வருவதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

1982 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலையே நடத்தாமல் சர்வசன வாக்கெடுப்பில் பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடித்த அப்போதைய ஜனாதிபதி ஜே .ஆர்.ஜெயவர்தனவின் செயற்பாட்டை பின்பற்றியே சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த ரணில் ஆலோசித்து வருவதாக சொல்லப்படுகிறது.

இதற்குத் தேவையான பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள சிறுபான்மை அரசியல் கட்சிகளின் எம்.பிக்களை ஆளுங்கட்சிக்குள் உள்வாங்குவதற்கு ரணில் ஆலோசித்துள்ளதாக தெரிகிறது.

பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் சர்வசன வாக்கெடுப்புக்கு தேவையான சட்ட ஆலோசனைகளை ரணில் ஏற்கனவே பெற்றுள்ளார்.

## 'வெழ்'மணியம்



ஐக்கிய நாடுகள் சபை ஜெனிவாவில் மீண்டும் "கடையை" திறந்துள்ளது.

வழமைபோல இலங்கை விவகாரத்தை கையில் எடுத்து "எச்சரிக்கை" செய்வது போல;

சும்மா பம்மாத்துக்கு படம் காட்டியுள்ளார்கள்.

வழமைபோல ஸ்ரீலங்கா அரசு இந்த "அலட்டல்களை" கணக்கில் எடுக்காது தன்னுடைய வேலையை பாத்துக்கொண்டிருக்கிறது.

2009 இக்கு பிறகு நடந்த "உலக ஒழுங்கு மாற்றத்தில்" ஸ்ரீலங்கா மிக முக்கிய பேசுபொருளாக இருக்கிறது.

ஸ்ரீலங்காவை பொறுத்தவரை ஐக்கிய நாடுகள் சபையில் தனக்கு எதிராக கொண்டுவரப்படும் எந்த ஒரு "தீர்மானத்தையும்" கிஞ்சித்தும் கருத்தில் கொள்வதில்லை.

சீனா, அமெரிக்கா,இந்தியா என்ன சொல்கிறதோ அதைத்தான் ஸ்ரீலங்கா செய்தது. இப்போதும் அதைத்தான் செய்கிறது. இனியும் அதைத்தான் செய்யும்.

14 ஆம் பக்கம்

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக மீண்டும் மஹிந்த நியமனம் பெறலாம்



*(நா. தினுஷா)*

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவராக செயற்பட்ட மஹிந்த தேசப்பிரிய, மீண்டும் அந்த ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த தேசப்பிரிய, தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் பதவிக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. அதற்கமையவே, அவர் மீண்டும் அந்தக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

02 ஆம் பக்கம்





## யாழில் பாடசாலை மாணவிகளை கண்காணிக்க வட்ஸ்அப் குழுக்கள்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக வட்ஸ் அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு மாணவிகளின் பெற்றோரின் கைபேசி இலக்கங்கள் இணைக்கப்பட்டு வகுப்பு ஆசிரியைகளால் கையாளப்பட வேண்டும் என்றும் மாணவிகள் தொடர்பான அவதானிப்புக்கள் அதில் பதிவிடப்பட வேண்டும் என்றும் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரினால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

02 ஆம் பக்கம்

## விகாரைக்கு சென்று திரும்பிய உக்ரேனிய யுவதி துஷ்பிரயோகம்

ஹபராதுவை, பீல்லகொட பிரதேச விகாரை ஒன்றுக்கு வழிபாடு செய்யச் சென்ற உக்ரேனிய சுற்றுலாப் பயணியான பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தின் பேரில் 19 வயது இளைஞரை ஹபராதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் உனவட்டுன பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உனவட்டுன பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ள இந்த யுவதி விகாரைக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர் என...

02 ஆம் பக்கம்

## ஜூன் 30 ஆம் திகதி விசேட விடுமுறை

வங்கிகளுக்கான விசேட விடுமுறை தினமாக எதிர்வரும் 30 ஆம் திகதியை அறிவித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு பொறுப்பை வகிக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையினால் நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கை

விசேட மருத்துவ நிபுணர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ளதாலும் ஏனைய சிலரை சர்வதேச பல்கலைக்கழகங்கள் உள்வாங்குவதாலும் இலங்கையின் சுகாதாரத் துறை நெருக்கடிகளை எதிர்கொள்ளநேரிடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை சமீபத்தில் வைத்தியர்களின் ஓய்வு வயது எல்லையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றமும் இதற்குக் காரணமாக உள்ளது எனவும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

2024 இல் நாட்டுக்கு 4229 விசேட வைத்திய நிபுணர்கள் தேவை என சுகாதார அமைச்சு மதிப்பிட்டுள்ளது. எனினும் இடமாற்றம் அடிப்படையிலான புள்ளிவிபரங்கள் 750 வெற்றிடங்களை உடனடியாக நிரப்பவேண்டியுள்ளதை புலப்படுத்தியுள்ளன.

இருதயநோய் நிபுணர்கள், நுண்ணுயிரியல் நிபுணர்கள் தோல்நோய் நிபுணர்கள் அவசரகால...

02 ஆம் பக்கம்



# வடக்கு சர்வதேச வர்த்தக கண்காட்சி ஓகஸ்ட் 11 முதல்13 வரை யாழ்ப்பாணத்தில்



வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறையை விருத்திசெய்யும் நோக்கில் முதன்முறையாக 'வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி (Northern International Trade Exhibition - NITE 2023)' எதிர்வரும் ஓகஸ்ட் 11 முதல்13 வரை யாழ்ப்பாண கலாசார மண்டப வளாகத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சி தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட ஊடக சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் கடந்த வியாழக்கிழமை (22) இடம்பெற்றது.

வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் குறித்த கண்காட்சி நடைபெறவுள்ளது.

புதிய வர்த்தகத் தொடர்புகள் மற்றும் எதிர்கால வர்த்தக வாய்ப்புகளைக் கட்டியெழுப்பும் முயற்சியாகவும் வட மாகாண கைத்தொழில் வர்த்தக வணிகங்களின் தளமாகவும் இந்த வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சி அமையுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றமானது (NCI) ஜேர்மன் நாட்டின் ஆசிய பசுபிக் வியாபார கூட்டமைப்புடன் (Asia Pasific Business Association - OAV) இணைந்து கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் பல்வேறு தொழில்சார் அபிவிருத்தித் திட்டங்களை வடக்கு மாகாணத்தில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஓர் அங்கமாக வடக்கு சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கான பல்வேறு வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த ஜேர்மன் நாட்டின் ஆசிய பசுபிக் வியாபார கூட்டமைப்பு தயாராகவுள்ளது.

நிறுவனங்கள், வணிகர்கள், உள்ளூர் வர்த்தகத்தில் ஆர்வமுள்ள இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் கணிசமான எண்ணிக்கையிலான பார்வையாளர்களை எதிர்பார்க்கிறோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் தலைவர் கனகசபை பூரணச்சந்திரன், வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் துணைத் தலைவர் சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் ஊடக சந்திப்பில் பங்கேற்றனர்.

# பிரேத பரிசோதனை தகவலை வெளியிடுவதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தம்?

## கேள்வி எழுப்பும் சிவாஜிலிங்கம்

யாழ்.நிருபர்



இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை அரசாங்கம் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் மூடிமறைத்து முழுப்பொய்களை சொல்லி வருகின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கை வெளியிடுவதற்கும் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ், ஊடகவியலாளர் ஒருவரால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க நாட்டின் பாதுகாப்பு அமைச்சு, இராணுவத் தலைமையகம் மறுப்புத் தெரிவித்தது.

இந்நிலையில், பிரபாகரன் மரபணு பரிசோதனைக்காக அவரின் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து மாதிரிகள் பெறப்பட்டதா என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபாகரனின் நெருங்கிய உறவினருமான எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிரிழந்ததாகக் கூறப்பட்ட பின்னர், உயிரிழந்தது அவர்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணு பரிசோதனை செய்து உறுதிப்படுத்தினோம் என்று யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் அரசாங்கம் அறிவித்திருந்தது,

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணு பரிசோதனை செய்துகொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் ஐதராபாத், சிங்கப்பூர் போன்ற இடங்களில்தான் அந்த வசதி இருந்ததாக நாங்கள் அறிந்து கொண்டோம்.

ஆகவே யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் மரபணு பரிசோதனை செய்ததாக பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

ஒருவேளை அவரின் உடல் என்று சொல்லப்பட்டதில் இருந்த ஒரு பகுதியை எடுத்துவைத்து, பின்னர் பிரபாகரனின் தந்தை, தாயார் அல்லது சகோதரர்களான டென்மார்க்கில் உள்ள மூத்த சகோதரர், இந்தியாவில் தமிழ் நாட்டில் வாழும் சகோதரி, கனடாவில் வாழும் மற்றுமொரு சகோதரி போன்றவர்களிடம் எந்த கால கட்டத்திலும் மரபணு மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆனால், தந்தையாரும் தாயாரும் யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து 3 நாட்களின் பின்னர்தான் அரசாங்கத்தின் பாதுகாப்பிலிருந்து எடுக்கப்பட்டார்கள். அவர்கள் இராணுவ தடுப்பு முகாமான பலாங்கொடையில் இருந்தபோது, அவர்களுக்கே தெரியாமல் அரசாங்கம் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டதா? அல்லது தந்தை இறந்த பின்னர் அவரின் உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டதா? அதேபோல் வைத்தியசாலையில் இருந்தபோது அவரின் தாயாரின் மாதிரிகளும் அவர்களுக்கு தெரியாமல் பெற்றிருக்க முடியும்.

பிரபாகரனின் தாயார் 2011ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ஆம் திகதி காலமாகியிருந்தார். அவருடைய தகனக்கிரியைகள் 22ஆம் திகதி நடைபெற்றது. அன்று நள்ளிரவுவேளை சிதையில் இருந்த அவரின் அஸ்திகளின் மேல் 4 நாய்களை இராணுவத்தினர் சுட்டு கொலைசெய்துவிட்டு கோர தாண்டவத்தை ஆடிச் சென்றிருந்தனர். அப்போது வேண்டுமென்றால் தாயாரின் அஸ்தியைக்கூட எடுத்துச் சென்றிருக்க முடியும்.

இவ்வாறான நிலைமையில் பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம். அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம் என்று சொல்வதற்கும் தேசிய பாதுகாப்புக்கும் குந்தகம் என்பதற்கும் என்ன தொடர்பு உள்ளது.

அரசாங்கம் பச்சைப் பொய்யை சொல்கின்றது. ஒரு பிரேத பரிசோதனை நடத்தப்படவேண்டும் என்றால், சட்டவைத்திய அதிகாரி முன்னால்தான் நடத்தப்பட வேண்டும். ஆனால், அவ்வாறான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

அதைவிட ஒரு நீதிபதி முன்னால்தான் மரண விசாரணை நடைபெறவேண்டும். நீதிபதிதான் பிரேத பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்கவில்லை.

கருணாவையும் தயா மாஸ்டரையும் கொண்டுசென்று காட்டியவர்களுக்கு, ஒரு நீதிபதியையும் அல்லது ஒரு சட்டவைத்திய அதிகாரியையும் ஹெலிகொப்டர் மூலம் அழைத்துச் செல்வதற்கு அரசாங்கத்துக்கு என்ன தடை இருந்தது.

அரசாங்கம் தொடர்ந்தும் பொய்யும், பித்தலாட்டமும் செய்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையே மெய்மையாக்குகின்றது. தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செய்வது உட்பட அரசாங்கம் நினைத்தவற்றை செய்வதற்கு தேசிய பாதுகாப்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதுபோல, பிரபாகரனின் விடயத்தையும் மூடி மறைப்பதற்காக திட்டமிட்டு தேசிய பாதுகாப்பு என்பதை நாட்டின் பாதுகாப்புத் துறையும் படைத்துறையும் பயன்படுத்தியுள்ளது என்பதே உண்மை என்றார்.

## வைத்திய நிபுணர்கள்...

மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள் போன்றவர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் அடுத்த ஆண்டு 1000க்கும் மேற்பட்ட வைத்தியர்களுக்கான தேவை ஏற்படலாம் என நிபுணர்கள் தொடர்ந்து எச்சரித்துவந்த நிலையிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகின்றன.

இலங்கையில் தற்போது 2007 விசேட வைத்திய நிபுணர்களே உள்ளனர். இது பொதுமக்களின் மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதல்ல எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## விகாரைக்கு...

பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் கடந்த புதன்கிழமை (21) வழக்கம்போல் விகாரைக்குச் சென்று போதி மரத்தை வழிபட்டுள்ளார்.

அப்போது, குறித்த சந்தேக நபர் அங்கு வந்து புத்தர் சிலையை வழிபட வருமாறு யுவதியை அழைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞரின் அழைப்பின் பிரகாரம், புத்தரின் சிலையை வணங்கிவிட்டு வெளியே வந்தவுடன் யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துவிட்டு ஓடிவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தேர்தல்...

தேசிய எல்லை நிர்ணயக் குழுவின் பதவிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில், அதன் தலைவராக அதன் உறுப்பினராக இருந்த கலாநிதி கே. தவலிங்கம், பாராளுமன்றத்தால் நியமிக்கப்படும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் உறுப்பினர்களாக கலாநிதி டீ. அனிதா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் எம்.ஐ.அமீர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுவில் மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நிமல் ஜ. புஞ்சிஹேவா தலைமையில் செயற்பட்டுவரும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக எஸ்.பி.திவாரத்ன, எம்.எம்.மொஹமட் மற்றும் கே.பி.பி.பத்திரண ஆகியோர் செயற்பட்டு வருகின்றனர். ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக செயற்பட்டுவந்த பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அண்மையில் வடமாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்.

எனவே, தேர்தல் ஆணைக்குழுவில் நிலவும் ஒரு பதவி வெற்றிடத்துக்கு, நபரொருவரை தேர்ந்தெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

## யாழில்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதின்ம வயதினர் தொடர்பான குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மாணவிகளின் வரவு உட்பட அவர்கள் தொடர்பான ஆசிரியர்களின் அவதானிப்புகளை மாணவிகளின் பெற்றோர், பாதுகாவலர் பார்க்கும் வகையில் வட்ஸ்அப் குழுக்களை உருவாக்க வேண்டும் என்றும், இந்தக் குழுக்கள் வகுப்பு ஆசிரியைகளாலேயே கையாளப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

மாணவிகள் பாடசாலைக்கு சமுகமளிக்காவிட்டால் உடனடியாக இந்தக் குழுக்கள் ஊடாக பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும் மாணவிகள் பாடசாலைக்கு வரும் வாகன விவரங்கள், சாரதிகளின் கைபேசி இலக்கங்கள் போன்றவையும் இந்தக் குழுக்களில் பகிரப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் குறித்த செயற்றிட்டம் அந்தந்த பொலிஸ் பிரிவில் உள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படும் எனவும் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் பெண்கள் பாடசாலை அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# அதிகரித்த வரி அறவீட்டுக்கு எதிராக கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தகர்கள் கடைகளை மூடி எதிர்ப்பு

- மு.தமிழ்ச்செல்வன் -

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் பொதுச் சந்தை வர்த்தகர்கள் வெள்ளிக்கிழமை (23) சந்தை வளாகத்திலுள்ள அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி எதிர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர். மே மாதம் தொடக்கம் தங்களிடம் அதிகரித்த வரி அறவீடு மேற்கொள்வதற்கு எதிராக இவ்வெதிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் 1,500 ரூபா வரி மற்றும் கழிவகற்றலுக்காக ஒவ்வொரு வியாபாரியிடமும் மாதாந்தம் பெறப்பட்டுவந்த நிலையில் மே மாதம் தொடக்கம் 7,500 ரூபா வரியாகவும் 600 ரூபா கழிவகற்றலுக்கும் என 8,100 ரூபா அறவிடுவதற்கு கரைச்சி பிரதேச சபை தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தே சந்தை வியாபாரிகள் தங்களது வியாபார நிலையங்ளை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2021 ஆம் ஆண்டு கரைச்சி பிரதேச சபையால் விலை மதிப்பீட்டுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு அதற்கமைவாக வலை மதிப்பீடு செய்யப்பட்டே அதிகரித்த வரி அறவிடப்படுவதாக கரைச்சி பிரதேச சபையின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். இது சட்டரீதியானது எனவும் இதனை மேற்கொள்ளாதுவிடின் கணக்காய்வு விசாரணைகளுக்கு உள்ளாகவேண்டிய நிலை உருவாகும் எனவும் தெரிவித்தார்.

பின்னர் பேராட்டத்தில் ஈடுபட்ட சந்தை வர்த்தகர்கள் சார்பாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரை சந்தித்து தங்களது கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

## இலங்கைக்கு...

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், தெரிவித்துள்ளார்.

பரிஸில் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஜனாதிபதி விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு மிகவும் நல்லது. தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கத்தின் வலுவான உரிமையை நான் அன்புடன் வரவேற்கிறேன். இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பொருளாதார சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்" என அவர் ட்வீட் செய்துள்ளார்.

# அவுஸ்திரேலியாவில் தமிழுக்கும் சைவத்துக்கும் அளப்பரிய பணியாற்றிய 'வானொலி மாமா' மகேசன்

இலங்கை வானொலியில் சிறுவர் மலர் என்ற 45 நிமிட நேர நிகழ்ச்சி மூலம் 1965 முதல் தனது கலைப்பணியை ஆரம்பித்து, 1981 வரை விடாது நடத்திவந்தார். இதனால் இவர் வானொலி மாமா என சிறுவர்களாலும் பெரியவர்களாலும் அன்புடன் அழைக்கப்பட்டார். சிறுவர் மலர் நிகழ்ச்சியில், சிறுவர்களுக்கான நாடகங்களை எழுதியும், நெறிப்படுத்தியும் வந்த 'வானொலி மாமா' புகழ் நா. மகேசன் ஜூன் 22ஆம் திகதி சிட்னியில் காலமானார்.

சிறுவயதில் நாம் வானொலியின் ஊடாக கேட்டு ரசித்த குரல், ஆற்றலும் அறிவும் கொண்ட அரிய ஆசானாக விளங்கியவர். சிறுவயதிலேயே இலங்கை வானொலியில் அவரால் தொகுத்து வழங்கப்படும் 'சிறுவர் நிகழ்ச்சி' எம்மால் ரசித்து அனுபவித்த நிகழ்வு இன்னமும் பலருக்கு நினைவிருக்கும்.

இலங்கையின் சிறுவர் இலக்கிய வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்கும் மூத்த தலைமுறையினருக்கு இவரை நன்கு தெரியும். சமகாலத்தின் இளம் தலைமுறையினர் கூட இவரை நன்கு அறிந்திருப்பார்கள்

இவரது இயற்பெயர் நாகலிங்கம் மகேசன். அக்கால பாடசாலை மாணவர்கள் இவரை வானொலி மாமா என்றே அழைத்தனர். சிறந்த முறையில் சிறுவர் மலர் நிகழ்ச்சியை நடத்திவந்தவர்.

பிள்ளைக் கவியரசு, அழ. வள்ளியப்பா போன்ற அறிஞர் பெருமக்களால் பாராட்டப்பட்ட இவர் சிட்னியில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தவர்.

**சிட்னியில் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய அளப்பரிய பணி:**

தமிழும் சைவமும் கண்ணென வாழ்ந்த வானொலி மாமா யாழ். மண் பெற்ற சிறந்த கல்விமான். சிட்னி சைவமன்றக் காவலர், கலைஞர், பழந்தமிழ் இலக்கிய விற்பன்னரும் கூட. அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடந்த பல ஆண்டுகள் அரிய நிகழ்ச்சிகளை நடத்திய அறிஞர் நா.மகேசன் அவர்களாவார்.



வானொலி மாமா தமிழுக்கும், சிட்னி தமிழ் சமுகத்துக்கும் ஆற்றிய அளப்பரிய பணிக்கு எமது சமுகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. அவர் ஆற்றிய உயரிய சேவைகளால், எம்மவர் மனங்களில் என்றும் வாழ்வார். அத்துடன், அவுஸ்திரேலியா – நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தமிழ் மாணவர்களுக்காக இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

சிட்னி முருகன் கோயில், சைவப் பாடசாலைகள், தமிழ்க் கல்வி நிலையங்கள், அவுஸ்திரேலியா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மூலம் பல சமூகப்பணியாற்றினார். சிட்னி சைவர்களுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

பல வருடங்களாக சைவர்களின் இறுதிக் கிரியைகளை திருமுறைகள் பாராயணம் செய்து இதற்காக புத்தகம் தயாரித்து வெளியிட்டார். இது உலகளாவிய ரீதியில் பாவிக்கப்படுகின்றது.

சிட்னியில் தமிழ்ச் சமூகத்துக்கும் அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி நியூ சவுத் வேல்ஸ் அரசு 2006இல் அவருக்கு "THE ACHIEVER" என்ற விருதை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

**கலைப்பணியில் நா. மகேசன்:**

சிறுவர் நாடக விற்பன்னரான மகேசன் ஈழத்தில் 1933இல் பிறந்த இடம், யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு ஆகும். மேடை நாடக விற்பன்னரும் பல பயனுள்ள நூல்களைப் படைத்தவர். வானொலி மாமா நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தவர்.

"வானொலி மாமா" நா. மகேசன் இளவாலை சென் ஹென்றிஷ் கல்லூரியில் கல்வி பயின்றார். இலங்கை அரசாங்க கணக்காளர் சேவையில் கணக்காளராகப் பணிபுரிந்தார்.

**நா. மகேசன் எழுதி வெளியிட்ட நூல்கள்:**

குறளும் கதையும் (சிறுகதைகள், 1973), பாட்டும் கதையும் (கதைப்பாடல்கள், 1974), முனியன் முரளிகானன் (குறுநாவல், 1977), ஆத்திசூடி அறநெறிக் கதைகள் (1978), உடைந்த உள்ளம் (நாவல் - 2 பாகங்கள், 1979), அவுஸ்திரேலியாவில் ஆத்திசூடி (சிறுவர் கதைத்தொகுதி, 1991), திருமுறையும் திருக்கதையும் (தேவார விளக்கக் கதைகள், 1994), பாலர் நாடகங்கள் பத்து (1995), நாடகக் கவியரங்கு நாலு (சிறுவர் கவியரங்குத் தொகுதி, 1995), ஆறுமுகமான பொருள் (திருப்புகழ் விளக்கம், 1995), திருவிழா (சிறுவர் சைவ சமய நாவல், 1996), A Glimpse of Saiva Religion (சைவ சமய விளக்கம், 1996), சிறுவர் பாடல்கள் (அவுஸ்திரேலியப் பின்னணியில் சிறுவர் பாடல்கள், 1997), சைவசமய குரவர் போற்றி மாலை (போற்றித் துதி, 1998), சைவசமய இறுதிச் சடங்கு - நடைமுறையும் விளக்கமும் (1998), சிட்னி முருகன் பிள்ளைத் தமிழ் (பிரபந்த நூல், 1999),ஔவை வந்தால். (மாணவர் மேடை நாடகங்கள், 2001) ஆகியன நா. மகேசன் எழுதி வெளியிட்ட நூல்களாகும்.

வானொலி மாமா தமிழுக்கும், சிட்னி தமிழ் சமூகத்துக்கும் ஆற்றிய அளப்பரிய பணிக்கு எமது சமூகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. அவர் ஆற்றிய உயரிய சேவைகளால், எம்மவர் மனங்களில் என்றும் வாழ்வார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைக் கண்டித்து சிவில் சமூகம் அறிக்கை

ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் (ICCPR) உள்ளடங்கலாக சட்டத்தின் தொடர்ச்சியான துஷ்பிரயோகம் மற்றும் இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை மீறுவதற்காக அச்சட்டத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரயோகம் ஆகியவை தொடர்பில் கீழே கையொப்பமிட்டுள்ள தனிநபர்கள் மற்றும் அமைப்புகளாகிய நாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம்.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமென ஏற்படுத்தப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தை மனித உரிமைகளின் பாதுகாவலர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் சட்டத்தரணிகளை மௌனிக்கச் செய்வதற்கும் தண்டிப்பதற்கும் அரசு திட்டமிட்டுப் பயன்படுத்துகின்றது. அண்மையில் நகைச்சுவைக் கலைஞர் நதாஷா எதிரிசூரிய மற்றும் SLVlog யூடியூப் தளத்தின் உரிமையாளர் புருனோ திவாகர ஆகியோர் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் கீழ் பிணையை நாடுவதற்கான வழிவகையின்றிக் கைது செய்யப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

2023 ஜூன் 21 ஆம் திகதி, திவாகர பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவருக்கெதிரான வழக்கிலிருந்து குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் நீக்கப்பட்டது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு மற்றும் குற்றவியல் சட்டக்கோவை ஆகியவற்றின் கீழ் நதாஷா எதிரிசூரியவுக்குப் பிணை மறுக்கப்பட்டதுடன் அவர் 2023 ஜூலை 5 ஆம் திகதி வரை சிறையிலடைக்கப்பட்டுள்ளார்.

முக்கியமான சர்வதேச மனித உரிமைகள் சமவாயம் ஒன்றான குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குக்குப் பயனளிப்பதற்கும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை அதன் கடப்பாடுகளைப் பயனுறுதியுடன் நிறைவேற்றுகின்றது என்னும் சமிக்ஞையை வெளிப்படுத்துவதற்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் 2007 ஆம் ஆண்டில் சட்டவாக்கம் செய்யப்பட்டது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டுப் பதிவு தொடர்பில் பிரதான அளவுகோல் ஒன்றாகும்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள அமைப்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு, 2023 ஆம் ஆண்டில் அதன் இலங்கைக்கான மீளாய்வில், "கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதற்காக" குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தைத் து

துஷ்பிரயோகம் செய்தல் "அத்துடன் அந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு உரிய நேரத்தில் பிணை வழங்குவதற்கு அதிகாரிகள் தவறியமை" பற்றிய அதன் கரிசனையை வெளியிட்டது. "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் கீழ் உள்ளடங்கலாக, ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் ஏனைய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தங்களின் அபிப்பிராயங்களை சுதந்திரமாக வெளிப்படுத்துவதைத் தடுப்பதற்கு அல்லது ஊக்கமிழக்கச் செய்வதற்கான ஒரு வழிவகையாக வழக்குத் தொடருவதிலிருந்தும் சிறையில் அடைப்பதிலிருந்தும் இலங்கை விலகியிருக்க வேண்டும் எனக் குழு விதந்துரைத்தது.

இந்தச் சட்டத்தின் துஷ்பிரயோகமானது, இலக்கு வைக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுபவர்களுக்கு மாத்திரமன்றி தற்போதைய அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கும் மிகுந்த சேதத்தை ஏற்படுத்துகின்றது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து, மனித உரிமைகள் பாதுகாவலர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சட்டத்தரணிகள் மற்றும் தற்போது நகைச்சுவை கலைஞர்களை இலக்கு வைத்து மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவு "ஆளெவரும் போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மத ரீதியிலான பகைமையை ஆதரித்தலோ ஆகாது" எனக் குறிப்பிடுகின்றது.

குறிப்பாக, பிணையை நாடுவதற்கான வழிவகையின்றி இலக்கு வைக்கப்பட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிப்பதனால் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு மிகவும் ஆபத்தானது. சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் பிரகாரம், இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஆளொருவர் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மேல் நீதிமன்றத்தினால் தவிர பிணையில் விடுவிக்கப்பட முடியாது. செப்டெம்பர் 2019 இல், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் அமுலாக்கம் சீரான மற்றும் சமமான முறையொன்றில் மேற்கொள்ளப்படவில்லை" எனக் குறிப்பிட்டு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் பிரயோகம் மீதான வழிகாட்டல்களை வெளியிட்டது.

இலங்கை அரசு அதன் மனித உரிமைகள் செயற்பாட்டுப் பதிவின் மீது அல்லது இந்தச் சட்டத்தின் பயன்பாட்டின் மீதான தேசிய அல்லது சர்வதேச அழுத்தங்கள் மீது மிகவும் குறைவான கவனம் செலுத்தியுள்ளது என்பதை அண்மைய கைதுகள் சுட்டிக்காட்டுகின்றன.

கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதற்காக, தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுவது தொடர்பான ஏற்பாடுகளை இலங்கை அரசு தொடர்ந்தும் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது.

அதன் நடவடிக்கைகள், தனி நபர்களின் கருத்துக்களுக்காக அவர்களை இலக்கு வைப்பதற்கும் முத்திரை குத்துவதற்கும் பகிரங்கமாக அச்சுறுத்துவதற்கும் பேரினவாத மற்றும் வன்முறைத் தீவிரவாத குழுக்களுக்கு துணிச்சல் அளித்துள்ளன. நதாஷா எதிரிசூரியவின் சம்பவத்தில், 2023 மே 27 ஆம் திகதி அவர் கைது செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் கடுமையான இணையவழி அச்சுறுத்தல்களை நகைச்சுவைக் கலைஞர் எதிர்கொண்டார். இந்த அச்சுறுத்தல்கள் அவரைத் தனது பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முயற்சிப்பதற்குத் தூண்டியது. அவரது தனிப்பட்ட தரவுகள் மற்றும் முகவரியை வெளிப்படுத்துதல், உடல் ரீதியான வன்முறை குறித்த அச்சுறுத்தல்கள் மற்றும் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட கைது அச்சுறுத்தல்கள் ஆகியவை இந்த அச்சுறுத்தல்களில் அடங்கும். அவரைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, இலங்கை அதிகாரிகள் இந்த நகைச்சுவைக் கலைஞரைக் கைது செய்துள்ளதுடன் இன்றுவரை அவர் சிறையிலேயே உள்ளார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்குச் சட்டத்தின் துஷ்பிரயோகத்தை உடனடியாக நிறுத்துவதற்கும் அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்காகவும் துஷ்பிரயோகத்தைத் தவிர்ப்பதற்காகவும் சட்ட மறுசீரமைப்பு மற்றும் பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். இந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுவிப்பதற்கும் அத்துடன் ஆகக் குறைந்தது விசாரணைகள் தொடரும் அதேவேளை அவர்களுக்குப் பிணைக்கான அணுகல் வழங்கப்படுவதற்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

பேரினவாத மற்றும் வன்முறைத் தீவிரவாதக் குழுக்கள் சிறுபான்மையினரையும் வெளிப்படையாகக் குரலெழுப்புபவர்களையும் தாக்குவதற்கும் முத்திரை குத்துவதற்கும் அச்சுறுத்துவதற்கும் வலுவூட்டப்பட்டுள்ள இலங்கையில், இன மற்றும் மத ஐக்கியம் ஒரு சவாலாகவே உள்ளது. மனித உரிமைகள் பாதுகாவலர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் நகைச்சுவைக் கலைஞர்கள் ஆகியோரை எவ்வித அடிப்படையுமின்றி சிறையில் அடைத்தல், ஏற்கனவே பலவித நெருக்கடிகளால் சூழப்பட்டுள்ள ஒரு முறைமையின் மீதான நம்பிக்கையை சிதைப்பதாக மாத்திரமே அமையும்.





உங்கள் இல்லமே உங்கள் சரணாலயம். இதுவே உங்கள் அருங்காட்சியகம் அமையப்பெறும் இடம், முடிவில்லா கற்பனைகளின் பிம்பமாக, அதன் அழகிய வடிவங்களை புதிதாய் தோற்றுவித்து, நீங்கள் உங்களை பிரதிபலிக்கும் விதத்தை மீள்வடிவமைக்கின்றது. Rocell டைல்ஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் நேர்த்தியான தொகுப்பானது அதன் ஈர்த்தெடுக்கும் நிறம், அமைப்பு, வடிவம் மற்றும் வனப்பு என்பனவற்றின் கொண்டாட்டங்களினூடாக, உங்கள் இல்லத்தை எழில்மிகு அழகின் உறைவிடமாக மாற்றுகின்றது.

அழையுங்கள் 076 6 22 33 44

Rocell

தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 25, 2023

# நீதியான ஆய்வுகள் தேவை

இலங்கை இராணுவத்தின் அதிகாரியாக தாம் இருந்த காலப்பகுதிக்குரியது என அடையாளப்படுத்தப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை தடுக்கும் வகையில் காவல்துறை பதிவுகளை சிதைத்தார் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழிகளை தோண்டியெடுப்பதில் கோட்டாபய ராஜபக்ஷவின் பங்கு அரசியல் தலையீட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு என சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம், இலங்கையில் ஜனநாயகம் மற்றும் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆகியன கூறியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ இராணுவ அதிகாரியாக இருந்தபோது, 1989ஆம் ஆண்டுகளில் இரத்தக் களரிமிக்க மார்க்சிச கிளர்ச்சி உச்சக்கட்டத்தில் இருந்துடன், அந்தக் காலப்பகுதிக்குரியதென கூறப்படும் மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த 2013ஆம் ஆண்டு இலங்கையின் மத்திய மாகாணமான மாத்தளை மாவட்டத்தில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், அந்தப் பகுதியிலுள்ள காவல்நிலையங்களில் உள்ள ஐந்து ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து காவல்துறை பதிவுகளையும் அழிக்குமாறு அப்போதைய பலம்வாய்ந்த பாதுகாப்பு அதிகாரியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களில் சுமார் 20 பாரிய புதைகுழிகளைத் தோண்டியதில் நூற்றுக்கணக்கான எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம், இலங்கையில் ஜனநாயகம் மற்றும் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு ஆகியன கூறியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு, அவர்களது உடல்களை அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் பல்லாயிரக்கணக்கான எச்சங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படாத மனிதப் புதைகுழிகளில் புதைக்கப்படலாம் என்றும் அந்த அமைப்புகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

விசாரணைக்கு இடையூறு விளைவித்ததாகக் கூறப்படும் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மூத்த காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களால் நிறுவப்பட்ட பல விசாரணை ஆணைக்குழுக்களில் எதுவுமே, பாரிய புதைகுழிகள் பற்றி ஆராய கட்டளையிடவில்லை என்பதுடன், மாறாக, உண்மையை வெளிக்கொணரும் முயற்சிகள் தடை ஏற்படுத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மற்றும் தடயவியல் நிபுணர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதுடன், குடும்பங்களின் சட்டத்தரணிகளுக்கு இடமளிக்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உயிருள்ள சாட்சிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதுடன், பிரேதப் பரிசோதனை தரவுகள் சேகரிக்கப்படவில்லை எனவும் மிகவும் அரிதான ஒருவர் தண்டிக்கப்பட்டபோதிலும் பின்னர் அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாகவும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனிதப் புதைகுழி தொடர்பான தரவுகளை அழித்தமை தொடர்பாக முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டாலும் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வாய்ப்பே இல்லை. ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் அரசியல் பலத்தை தக்கவைக்க அரசியல் கட்சிகளையும் தனிநபர்களையும் அரவணைப்பதன் வெளிப்பாடே அது. சுயாதீன விசாரணை ஆணைக்குழுக்கள் நியமனம் பெற்றால்கூட அவரின் அறிக்கைகள் பழைய பேப்பர் கடைக்கு விற்கப்படும் நிலையே உள்ளது. அவ்வாறான ஆணைக்குழுக்களின் சிபார்சுகளால் தண்டிக்கப்பட்டவர்கள் என்று எவருமில்லை.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் எம்பிலிப்பிட்டிய மனிதப் புதைகுழிகள் பற்றி பேசப்பட்டது. வடக்கு, கிழக்கில் காணாமல்போனோரைக் கண்டறியும் விசேட ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால், இறுதி முடிவென்று எதுவும் இல்லை. மாத்தளை புதைகுழி விவகாரமும் அப்படியானதாக ஆகிவிடக் கூடாது.

# பா.ஜ.கவுக்கு எதிராக களமாடும் தி.மு.க.



திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றிருந்த தமிழக அரசியலில் தன் இருப்பை பாரதீய ஜனதா அழுத்தமாகப் பதித்துள்ளது. ஜெயலலிதா உயிருடன் இருக்கும்வரை பம்மிக்கொண்டிருந்த பாரதீய ஜனதா, பன்னீரையும், எடப்பாடியையும் மோதவிட்டு தான் நினைத்ததைச் சாதித்துள்ளது.

அமுலாக்கத்துறையை ஏவிவிட்டு அமைச்சர் செந்தில் பாலாஜியைக் கைதுசெய்ததால் அமைதியாக அரசியல் செய்த முதலமைச்சர் ஸ்டாலின் நேரடியாகவே பாரதீய ஜனதாவுக்கு எதிராகக் களமிறங்கியுள்ளார். செந்தில் பாலாஜியின் மீதான விசாரணைக்கு எதுவித .... இல்லை என தமிழக அரசு அறிவித்தது. அமுலாக்கத்துறையில் தொடர் விசாரணைகளால் அமைச்சர் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்டார். அவருக்கு இதயமாற்று சிகிச்சை நடைபெற்றது. ஆறு வாரங்கள் வைத்தியர்களின் கண்காணிப்பில் செந்தில் பாலாஜி இருக்கவேண்டும். ஆனால், அவரைக் கைதுசெய்த அமுலாக்கத்துறை அடுத்து என்ன செய்வதெனத் தெரியாது தடுமாறுகிறது. மேலும் மூன்று அமைச்சர்கள் மீது நடவடிக்கை பாயும் என தகவல் வெளியாகியுள்ளது.

அறிக்கை, காட்டமான பேட்டிகள், முக்கிய புள்ளிகளின் கருத்துகள் மூலமாக மட்டுமே பாரதீய ஜனதாவுக்கு எதிர்வினையாற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாக மோதிப் பார்க்கத் துணிந்துள்ளது. சமூக வலைத்தளங்களில் அத்துமீறும் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்களை தமிழக அரசு கைதுசெய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் அளித்த புகாரில், பா.ஜ.கவின் மாநிலச் செயலாளர் எஸ்.ஜி.சூர்யா கைதுசெய்யப்பட்டிருக்கிறார். பா.ஜ.கவில் மாநில அளவில் பொறுப்பிலிருக்கும் ஒருவர், இந்த தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு காவல்துறையால் கைதுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறை. அவரின் கைதைக் கண்டித்து, மதுரையில் நீதிபதி வீட்டுக்கு முன்பு போராட்டம் நடத்திய மாவட்ட பா.ஜ.க. தலைவர் உட்பட 43 பேர் மீது வழக்கு பாய்ந்திருக்கிறது.

துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய புகாரில், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜ.க. பிரமுகர் வெங்கடேசன் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல், கொலை மிரட்டல் புகாரில் பா.ஜ.கவின் நெசவாளர் அணியின் மாநிலச் செயலாளர் மின்ட் ரவி மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது. பா.ஜ.கவில் உறுப்பினர்களாக இணைந்திருக்கும் ரௌடிகள் பட்டியலை மாவட்டவாரியாக எடுத்திருக்கிறது உளவுத்துறை. இதுவரை 124 ரௌடிகள் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது 630 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. கொலை, கொள்ளை, கடத்தல் எனக் குற்றப் பின்னணி கொண்டவர்களையெல்லாம் அடுத்தடுத்து கைதுசெய்து சிறையில் அடைக்கத் தீவிரமாகியிருக்கிறது தமிழக காவல்துறை.

பொருளாதாரக் குற்றப் பிரிவின் விசாரணையிலிருக்கும் ஆருத்ரா வழக்கை வேகப்படுத்தி, அதில் சம்பந்தப்பட்டிருக்கும் பா.ஜ.க. நிர்வாகிகளைக் கைதுசெய்யவும் முதல்வர் உத்தரவிட்டிருக்கிறார். இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்டிருக்கும் ஹரீஷ் என்பவருக்கும், பா.ஜ.க. மாநிலத் தலைமைக்கு நெருக்கமான நிர்வாகி ஒருவருக்குமிடையேயான தொடர்புகள் விரைவிலேயே வெளிச்சத்துக்கு வரும். கைதிலிருந்து தப்பிப்பதற்காக, வெளிநாட்டில் பதுங்கியிருக்கும் பா.ஜ.க. பிரமுகரும், நடிகருமான ஆர்.கே.சுரேஷை இந்தியா கொண்டுவரும் முயற்சிகளும் நடக்கின்றன. விரைவிலேயே ஆருத்ரா நெருப்பு கமலாலயத்தைப் பற்றும்.

**மோடியைப் பற்றி அவதூறாக பதிவிட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனை கண்டித்த தலைமை, அதை நீக்கும்படி உத்தரவிட்டது.**

**ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரை பம்மிக்கொண்டிருந்த பாரதீய ஜனதா பன்னீரையும், எடப்பாடியையும் மோதவிட்டு தான் நினைத்ததைச் சாதித்துள்ளது.**

மற்ற மாநிலங்களில் இதுவரை செய்ததுபோல் இங்கேயும் செய்யப் பார்க்கிறது பா.ஜ.க. அமுலாக்கத்துறையை வைத்து மிரட்டுவது, ஆளுநரை வைத்துக் குடைச்சல் கொடுப்பது, ஊழல் கட்சி என முத்திரை குத்துவது - இதை எப்படி எதிர்கொள்ள வேண்டுமென எங்களுக்குத் தெரியும் என திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைப்பதில் தி.மு.க. தலைவர் காட்டும் வேகத்தைக் கண்டு அஞ்சுகிறது பா.ஜ.க.

மோடியைப் பற்றி அவதூறாக பதிவிட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டனை கண்டித்த தலைமை, அதை நீக்கும்படி உத்தரவிட்டது. குஷ்புவைப் பற்றி கேவலமாக பேசிய பேச்சாளரை திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியிலிருந்து நீக்கியது.

அண்ணாமலையின் தொடர் அடாவடிப் பேச்சையும், செந்தில் பாலாஜி மீது எடுக்கப்பட்ட கைது நடவடிக்கையையும் ஸ்டாலின் மிக சீரியஸாகப் பார்க்கிறார்.

இது டில்லியின் ஆசியில்லாமல் நடக்கவில்லை. பாராளுமன்றத் தேர்தலுக்குள் இதுபோல் பல தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பா.ஜ.கவுடன் இனி அனைத்து வகையிலும் தீவிரமாக மோதுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டது திராவிட முன்னேற்றக் கழகம். ஆளுநரோ, அண்ணாமலையோ, அமுலாக்கத்துறையோ, அமித் ஷாவோ யாராவது வரட்டும். மோதிப் பார்க்கலாம் என்பதுதான் தி.மு.கவின் இப்போதைய முடிவு. அண்ணாமலைக்கும், தமிழக பா.ஜ.கவுக்கும் பாடம் புகட்ட வேண்டிய நேரமும் வந்துவிட்டது என்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்.

தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு தொடர்ந்த அவதூறு வழக்கில், பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையை ஜூலை 14ஆம் திகதி நேரில் ஆஜராகச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறது சைதாப்பேட்டை நீதிமன்றம். இந்தச் சூழலில், புதுக்கோட்டை மாவட்டம், கல்லாக்கோட்டையிலிருக்கும் டி.ஆர்.பாலு தரப்புக்குச் சொந்தமான மது ஆலையை மூடக் கோரி போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள் பா.ஜ.கவினர். போகிற போக்கைப் பார்த்தால், நாளொரு சவால், பொழுதொரு மோதல் என பாராளுமன்றத் தேர்தலுக்குள் ரணகளமாகும்போலத் தெரிகிறது தமிழகம்.

தமிழகத்தில் நிலவும் இந்த அசாதாரணச் சூழலைப் பயன்படுத்தி, அரசியல் களத்தில் பா.ஜ.கவுக்கும் தி.மு.கவுக்குமிடையேதான் சண்டை என்பதுபோலவும், தி.மு.கவுக்கு நிகராக பா.ஜ.க. வளர்ந்துவிட்டதைப்போலவும் ஒரு மாய்மாலம் காட்ட நினைக்கிறார்கள் டில்லியை ஆள்பவர்கள். இதில் அ.தி.மு.க என்கிற ஒரு பெரிய கட்சியை, பேசுபொருளாகவே இல்லாமல் ஆக்கும் வியூகமும் இருக்கிறது. ஜூன் 23ஆம் திகதி பாட்னாவில் நடைபெறும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தி.மு.கவும் கலந்துகொள்ளவிருக்கிறது. பா.ஜ.கவுக்கு எதிரான கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலை நோக்கி ஒன்றுதிரள ஆரம்பித்திருக்கின்றன. இந்தச் சூழலில், தி.மு.கவை ஓர் ஊழல் கட்சியாக



**ஆளுநரோ, அண்ணாமலையோ, அமுலாக்கத்துறையோ, அமித் ஷாவோ யாராவது வரட்டும் மோதிப் பார்க்கலாம் என்பதுதான் தி.மு.கவின் இப்போதைய முடிவு.**

முத்திரை குத்துவதுதான் பா.ஜ.கவின் நோக்கம். அவர்களின் திட்டத்துக்கு ஏற்றாற்போல் செந்தில் பாலாஜியின் நடவடிக்கைகளும் அமைந்துவிட்டன.

2ஜி குற்றச்சாட்டின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது ஊழல் புகார் சுமத்தப்பட்டது. விசாரணை முடிவில் குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், பாரதீய ஜனதாக் கட்சிக்கும் இடையிலான மோதலால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் காணாமல்போய்விட்டது. நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குகையில், தமிழக அரசியல் களநிலைமை மிகவும் சூடாகும்.

ரமணி

# தென்னிலங்கை ஊடகங்களுக்கு ஒரு திறந்த மடல்



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

இலங்கையின் சுதந்திர கால வரலாற்றில் இன்றைய நிகழ்கால தென்னிலங்கை அரசியல், ஒட்டுமொத்த மக்களையும் நாட்டையும் 'பழி தீர்க்கும் வன்ம அரசியலின்' மொத்த உருவமாக உள்ளது. ரணில் - ராஜபக்ஷ ஆளும் தரப்பினர் தமது அரசியலின் நிகழ்கால எதிர்கால இருப்புக்கான 'சட்டரீதியான இரும்புக் கவசத்தை' உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

### 'சட்டவாக்க கவசத்தை' நோக்கி ரணில் - ராஜபக்ஷ அணியினர்

அந்த வரிசையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஊழல் எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு, (BRC) ஸ்தாபனம் என வரிசையாக அவசர அவசரமாக சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

இது மனசாட்சி இல்லாதவர்களின் வரலாற்று ஜனநாயக படுகொலையாகும் என்பதில் மாற்றுக்கருத்துகளுக்கு இடமில்லை. ரணில் - ராஜபக்ஷக்களின் இந்த நகர்வுகள் வெற்றிபெறுமாக இருந்தால் ஒன்றல்ல, எத்தனை அரகலயாக்கள் உருவாகினாலும் இவர்களது கவசத்துக்குள் இருந்து நாடு மீள்வது கடினமாகவே இருக்கும்.

ஏனெனில், இவை அனைத்தும் ரணில் - ராஜபக்ஷ அணியினருக்காக சட்டரீதியாக நிபுணத்துவமிக்கவர்களால் வடிவமைக்கப்படும் விடயங்களாகும்.

### ராஜபக்ஷக்களின் வழமையான அரசியல் தொடர்கிறது

சிஸ்டம் சேன்ஜ் எனக் கூறி ஒரு வருடத்திற்கு முன் மடை திறந்த வெள்ளம்போல் மக்கள் திரண்டனர். நாட்டின் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறினார். பிரதமர் இராஜினாமா செய்தார். அடுத்தடுத்து மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால், இந்த மாற்றங்கள் சூறாவளியை எதிர்த்து நிற்பதற்குப் பதிலாக நிலத்தோடு ஒட்டிப் படுத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நிகழ்வுகளாகவே இருந்தன என்பதை ராஜபக்ஷக்களின் அணியினர் அன்று பதுங்கியதும், பதுங்கியவர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்பதும் உணர்த்தி நிற்கின்றன.

அரகலய சூறாவளி வந்த வேகத்தில் போய்விட்டது. ராஜபக்ஷக்களின் வழமையான அரசியல் ரணில் விக்கிரமசிங்கவின் நிழல் அரசில் கோலோச்சிக்கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது ரணில் மற்றும் ராஜபக்ஷக்களின் மீளெழுச்சி தொடர்ந்தும் அரசியலில் தம்மை தக்கவைத்துக்கொள்வதற்கு அவர்கள் முன்நகர்த்தும் அரசியல் காய்களின் தாற்பரியத்தை விளங்கிக்கொள்ளலாம்.

ரணில் - ராஜபக்ஷக்களின் நகர்வுகள் தென்னிலங்கை அரசியலை கொதிநிலைக்குள் தள்ளியுள்ளது. அதேவேளை, ஒட்டுமொத்த மக்களின் இயங்கியலையும் தமக்கான ஜனநாயக இருப்பையும் காப்பாற்றியாக வேண்டும் என்ற கோபாவேசத்துக்குள் நாட்டையும் மக்களையும் தள்ளியுள்ளது.

### ஊடகத்துறையின் எதிர்காலம்?

இந்த விடயத்தில் ஊடகத்துறையினரின் எதிர்காலமே ஒரு நிச்சயமற்ற நிலையில் ஊசலாடிக்கொண்டிருக்கின்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. மொத்தத்தில் இந்த சட்டவாக்கங்கள் ஊடகத்துறையினரை - குறிப்பாக, இலத்திரனியல் ஊடகத்துறையினரை வாழ்வா, சாவா என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது.

### 1958 இனக் கலவரம்

ஊடக அடக்குமுறை என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றுடன் இரண்டறக் கலந்த ஒரு விடயமாகும்.

தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட 1958 இனக் கலவரத்தையடுத்து சேர். ஜோன் கொத்தலாவல பத்திரிகை நிருபர்களை அழைத்து கலவரம் குறித்த செய்திகளை வெளியிடவேண்டாமெனக் கட்டளையிட்டார் என விதாச்சி தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### லேக் ஹவுஸ் தேசியமயம்

சிறிமாவோ பண்டாரநாயக்கா 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 1973இல் லேக் ஹவுஸ் குழுவை தேசிய மயமாக்கினார்.

அவ்வேளையில் 'தி நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை மே 8, 1974ஆம் ஆண்டு பின்வருமாறு எழுதியது.

ஆசியாவிலேயே மிகவும் உயிரோட்டமான பத்திரிகைகளில் ஒன்றான இலங்கைப் பத்திரிகை, அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

சுதந்திர பத்திரிகையான 'சன் குழுமம்' 1974இல் சிறிமாவோ பண்டாரநாயக்காவால் அவசரகால விதிமுறைகளின்கீழ் சீல் வைக்கப்பட்டது.

உணவுப் பற்றாக்குறை மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் குறித்து அதிகரித்துவரும் விமர்சனங்களுக்குள்ளான பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, வேண்டுமென்றே உண்மைகளை செய்தித்தாள்கள் திரிபுபடுத்தி பரப்புரை செய்கின்றன கூறினார்.

அந்தக் காலகட்டத்தில் 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகை மாத்திரமே போட்டியாளர் நிலையில் இருந்தது. ஆனால், அப்பத்திரிகை அவ்வேளையில் நிதி நெருக்கடிக்குள் சிக்குண்டு இருந்ததால் அரசாங்க ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருந்தது.

நாட்டின் ஒரே இலத்திரனியல் ஊடகமாக அரச சார்பான இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ( B) இருந்தது.

இதுபோன்ற பல சம்பவங்கள் இலங்கை அரசியலில் பதிவுகளாக இருக்கின்றன. இவை அனைத்தும்

**இனவாதமும் மதவாதமுமே அரசியல் முதலீடு**

அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற்காக மேற்கொண்ட சம்பவங்களாக பதிவாகியுள்ளன.

### ரணில் - ராஜபக்ஷக்களின் நகர்வுகள் அபாயமானவை

ஆனால், தற்போதைய நிலை அவ்வாறானதல்ல. ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம் இணைந்து தமது நிகழ்கால எதிர்கால அரசியல் இருப்புக்காகவும் இலங்கையின் அரசியலை தீர்மானமிக்க தமக்கான திசை நோக்கி நகர்த்துவதற்குமாக மேற்கொள்ளப்படும் நகர்வாக இருக்கின்றது.

இந்த நகர்வுகள், நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் அராஜகப் பிடிக்குள் தள்ளிவிடும் போக்கைக்கொண்டவை என்பதால் நாட்டின் அனைத்துத் தரப்பினரும் எதிர்த்து நிற்கின்றனர். மக்களும் ஊடகத் துறையினரும் இவ்விடயத்தில் வெற்றி பெற்றாக வேண்டும்.

இந்த வெற்றியுடன் ஊடகத்துறை தன்னை சுய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமா என்ற கேள்வியை இவ்வேளையில் முன்வைப்பது சிறந்ததாக இருக்கும்.

### இனவாதமும் மதவாதமுமே அரசியல் முதலீடு

ஏனெனில், சுதந்திர இலங்கை கடந்த 75 வருடங்களாக ஜனநாயகம் இல்லாத ஜனநாயகத்தில் - அதாவது, மாய சுதந்திரத்துக்குள் மூழ்கிக் கிடந்துள்ளோம் என்று அரகலயாக்களின் எழுச்சியுடன் தென்னிலங்கை ஊடகங்களில் பெரிதாகப் பேசப்படுகின்றது. அதாவது, இலங்கையின் தென்னிலங்கை அரசியல் சக்திகள் இனவாதத்தையும் மதவாதத்தையும் அரசியல் முதலீடாகக்கொண்டே அரசியல் வெற்றிகளை ஈட்டி வந்தன.

தென்னிலங்கை மக்களை இவ்வாறான ஒரு மாயைக்குள் வைத்த

**அதிகாரமளித்தல் நகைச்சுவையாகிவிட்டது.**

பெருமை கடந்த 75 வருடத்துக்கும் மேற்பட்ட கால வரலாற்றில் தென்னிலங்கை ஊடகங்களுக்கும் பெரும் பங்குண்டு. அந்தளவுக்கு தென்னிலங்கை ஊடகங்கள் மக்களை இருட்டுக்குள் தள்ளி ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப நடந்ததுடன், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும் அரசியல்வாதிகளுடன் ஊடகங்களும் பொறுப்பேற்க வேண்டும்.

அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப பெரும்பாலான தென்னிலங்கை ஊடகங்கள் செயற்பட்டன என்பது பரம இரகசியமல்ல.

இலங்கையில் 1994இல் திருமதி குமாரதுங்கவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு ஊடகங்கள் முக்கிய பங்கு வகித்தன.

நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டு வந்ததில் ஊடகங்களின் பங்கு அளப்பரியது.

அண்மையில் Change Of System அரகலயா கருத்தியல் நாடுபூராவும் வியாபிக்கவும் நூறு நாட்களுக்குள் வெற்றியை எட்டுவதற்கும் ஊடகங்களின் பங்கு அளப்பரியது.

''ஒரு நாடு தகுதியற்ற தலைவர்களால் நாசமாய்ப் போவதில்லை. தகுதியற்ற தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களாலேயே அந்த நாடு நாசமாய்ப் போகிறது'' என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியானால், இலங்கையில் தகுதியான தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் சுதந்திர இலங்கையில் ஊடகங்கள் மக்களுக்கு வழிகாட்டத் தவறிவிட்டன. ஏனெனில், ஊடகங்கள் மக்கள் குறித்தோ அல்லது நாட்டின் எதிர்காலம் குறித்தோ சிந்தித்து மக்களின் - நாட்டின் குரலாக செயற்படவில்லை. பெரும்பாலும் அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் குரலாகவே செயற்பட்டன.

எனவேதான் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ போன்றதொரு தலைவரை உருவாக்க தென்னிலங்கை ஊடகங்களால் முடியவில்லை. இன்றுகூட முடியவில்லை.

அதன் கோர விளைவுகளை நாடும் மக்களும் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களுடன் ஊடகங்களின் பயணமும் பெரும்பாலும் ஒத்திசைவாகப் பயணித்ததன் விளைவு இன்று நாடு 'தோற்றுப்போன' நாடாக உலக அரங்கில் நிற்கின்றது. இதுகுறித்து தென்னிலங்கை ஊடகங்கள் இன்று பெரிதாகப் பேசுகின்றன.

சுதந்திர இலங்கையின் 75 வருட கால அரசியலில் மாற்றம் அவசியம் வேண்டும் என்றும் பரப்புரை செய்கின்றன.

### மக்களின் குரலாக தென்னிலங்கை ஊடகங்கள்

அந்தவகையில் ஊடகங்கள் முதன் முறையாக மக்களின் குரலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளன. எனவேதான் ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கத்தின் ஒட்டுமொத்த கோபமும் ஊடகங்கள் மீதும் பாய்ந்துள்ளது.

அதேவேளை, மக்களின் சிந்தனை, அதன் விளைவாக ஆளும் வர்க்கத்துக்கு எதிராக எழுகின்ற தன்னெழுச்சிப் போராட்டங்கள், ஊழலுக்கு எதிரான கோஷங்கள் என அனைத்து ஜனநாயக விழுமியங்களையும் சட்டரீதியிலான கவசத்துக்குள் நிரந்தரமாக முடக்கிவிட ரணில் - ராஜபக்ஷ அணியினர் முயல்கின்றனர்.

ஊடகங்களுக்கு எதிரான பொறிமுறைக்கு சிங்கப்பூர் நாட்டை உதாரணம் காட்டும் ரணில் - ராஜபக்ஷ அணியினர், சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவின் நடைமுறை செயற்பாடுகள் குறித்து பேச மறுக்கின்றனர்.

தொழிலதிபர் நண்பருடன் விடுமுறைக்கு சென்ற சிங்கப்பூர் துணை அமைச்சர், திரும்பியபோது கைதுசெய்யப்பட்டார்.

அவரைக் கைதுசெய்து விசாரித்தபோது, ''நீங்கள் ஒரு தொழிலதிபருடன் விடுமுறையில் சென்றிருந்தீர்கள், உங்கள் செலவுகள் அனைத்தையும் அவர் செலுத்தினார். அதுதான் ஊழல்'' என நிரூபிக்கப்பட்டது.

சிங்கப்பூரின் இத்தகைய ஆட்சியை நடைமுறைப்படுத்த ரணில் - ராஜபக்ஷ அணியினர் தயாராக இருக்கின்றனரா? நடைமுறைப்படுத்தினால் ஆட்சியில் ஒரு சிலரே மிஞ்சுவர். பெரும்பாலானவர்கள் சிறைக்கம்பிகளுக்குள் இருக்கவேண்டி வரும்.

### மலிந்துவிட்ட ஊழல்

இன்றும் நாட்டின் கடன் சுமையின் பின்னணியில், பூண்டு ஊழல், சீனி ஊழல் போன்ற மோசடிகள் மூலம் உயர்மட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இந்த நாட்டின் வளங்களை தங்கள் ஊழல் நடவடிக்கைகளால் தொடர்ந்து கொள்ளையடித்து வருகின்றனர். ஊழல்களால் மக்களின் உயிர்களும் பறிபோய்க்கொண்டிருக்கின்றன.

இத்தகைய அராஜகப் போக்கிலிருந்து நாடும் மக்களும் மீட்டு எடுக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருக்க முடியாது. இனவாத, மதவாத அரசியலில் இருந்தும் விடுதலையாக வேண்டும்.

அதேவேளை, நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க ஊழலுக்கெதிரான செயற்பாடுகளுடன் அரகலயாக்களின் 'சிஸ்டம் சேன்ஜ்' கருத்தியல் மாத்திரம் போதாது. நாடும் மக்களும் இனவாத மதவாத அரசியலில் இருந்தும் விடுதலையாக வேண்டும். தென்னிலங்கை மக்கள் இது குறித்து ஆழமாகவே சிந்திக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆனால், இந்தச் சிந்தனையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடும் போக்கு தென்னிலங்கை ஊடகத்துறையில் விதைக்கப்படுகின்றது. இது மீண்டும் இனவாத, மதவாத அரசியல் ஊடாக ஆட்சிபீடம் ஏறி அரசோச்ச முயலும் சக்திகளுக்கு பாதை அமைத்துக் கொடுப்பதாக அமைகின்றது.

இது தென்னிலங்கை பேசுகின்ற - எதிர்பார்க்கின்ற 'சிஸ்டம் சேன்ஜ்' கருத்தியலுக்கு மாறான பழைய போக்கிற்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதாக அமைந்துவிடும்.

இலங்கை 'தோற்றுப்போன' அரசாக உருவெடுக்க இனவாத மதவாதத்துடன் கண்மூடித்தனமான ஊழல் அரசியல் மாத்திரமல்ல, தமிழர் விவகாரத்துக்கு நிரந்தரமான தீர்வைக் காணத் தவறியதும் காரணம் என்பது தென்னிலங்கை மக்கள் மாத்திரமல்ல, தென்னிலங்கை ஊடகத்துறையினரும் பட்டறிந்துகொண்ட உண்மையாகும்.

### போர் மௌனிக்கப்பட்டது; ஆனால், தீர்வு இல்லை

போர் மௌனமாக்கப்பட்டதென்பது உண்மை. ஆனால், தமிழர் விவகாரத்துக்கான தீர்வு இன்றுவரை காணப்படவில்லை என்பதும் அதே அளவு உண்மையாகும். எனவேதான் 2009ஆம் ஆண்டிலிருந்து தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரை தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காண்பது குறித்து பேசி வருகின்றனர். இலங்கையில் அதிகாரமளித்தல் என்பது நகைச்சுவையாகிவிட்டது.

எண்பதுகளின் பிற்பகுதியில் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டபோதிலும் இந்த நிறுவனங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

**போர் மௌனிக்கப்பட்டது. ஆனால் தீர்வு இல்லை.**

உதாரணமாக, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான அதிகாரங்கள் படிப்படியாக மத்திய அரசால் கையகப்படுத்தப்பட்டன.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அது ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதுவே இலங்கையில் மோதல் சூழ்நிலைக்குக் காரணமாக அமைந்தது. அரசியல் கட்சிகளும் சிவில் சமூகங்களும் 13அவது திருத்தத்தை அமுல்படுத்தக் கோரி போராடினாலும் இந்தக் குரல்களுக்கு ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் செவிசாய்க்கவில்லை.

அதேவேளை, அதிகாரமளித்தல், அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அனைவருக்கும் சம உரிமைகள் ஆகியவற்றின் அவசியத்தை ஊடகங்கள் கவனம் செலுத்தினாலும் கடந்த 30 வருடங்களில் ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கமும் செவிசாய்க்கவில்லை.

சிவில் சமூகமும் ஊடகங்களும் ஒன்றிணைந்து உண்மையான நிலைமையை அம்பலப்படுத்தி மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் போராடுவதற்கு மக்களைத் தூண்டினால் மட்டுமே இந்த செயல்முறையை சிறப்பாகச் சாதிக்க முடியும்.

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான தென்னிலங்கை ஊடகங்கள் அதிகாரப்பரவலாக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளன. ஊடகவியலாளர் அமைப்பொன்றின் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மனுஷ நாணயக்கார 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது பற்றி தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு ஊடகத்துறையினர் சாதகமாக இல்லை என்பதை பகிரங்கமாகக் கூறியதை இங்கு பதிவுசெய்வது பொருந்தும்.

### கொழும்புப் பத்திரிகைகள் குறித்து 1923 பதிவு

இலங்கையில் ஊடகத்துறை இனரீதியாகப் பிளவுபட்டுக் கிடக்கின்றது. தமிழர் விவகாரங்கள், தமிழர் அரசியல் அபிலாஷைகள் என அனைத்து விடயங்களையுமே குதர்க்கமாகப் பார்க்கும் போக்கை காலம் காலமாக கொழும்புப் பத்திரிகைகள் தமது ஊடகக் கொள்கையாகவே கொண்டுள்ளன.




இதனைச் சரியாகக் கணக்கிட்டு 1923இல் அதாவது 100 வருடங்களுக்கு முன் குரங்கெல்லாம் ஒரே முகம் என்று இந்துசாதன பத்திரிகையின் ஆசிரியர் திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியுள்ளர். இந்த முகம் இன்றும் தொடர்கின்றது.

வடமாகாண முதலமைச்சராக இருந்த முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி கண்டியிலுள்ள பௌத்த மதபீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின் ஊடகவியலாளர்களிடம் பேசும்போது, கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் எம்மை பிரிவினைவாதிகள், இனவாதிகள் நாட்டைப் பிரிக்க முற்படுபவர்கள் என பிரசாரங்களை முன்னெடுக்கின்றன. நாம் பிரிவினைவாதிகள் அல்ல, இனவாதிகள் அல்ல என்று குறிப்பிட்டார்.

கொழும்புப் பத்திரிகைகள் 100 வருடங்களுக்குப் பிறகும் தம்மை மாற்றிக்கொள்வதற்குத் தயாராக இல்லை என்பதையே முன்னாள் வடமாகாண முதலமைச்சரின் கூற்றும் உறுதிப்படுத்துகின்றது.

தென்னிலங்கையில் ஊடக அரசியல் எவ்வளவு ஆழமாக ஊடுருவியுள்ளது என்பதும் பரம ரகசியம் அல்ல.

தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணாதவரை இலங்கைக்கு மீட்சி இல்லை.

தமிழர் விவகாரத்துக்குத் தீர்வு காணாதவரை இலங்கை காண விழைகின்ற பொருளாதார மீட்சியோ அல்லது சுபீட்சமோ அல்லது சிஸ்டம் சேன்ஜோ நிலைக்கப் போவதில்லை. ஏனெனில், இலங்கை மீண்டும் இனவாத - மதவாத அரசில் சேற்றுக்குள் மூழ்கடிக்கப்படவே வழிவகுக்கும்.

சிங்கள ஆளும் தரப்பின் கபடத்தன அரசியலை விளங்கிக்கொள்ள 75 வருடங்களை வீணாக்கிவிட்ட சிங்கள மக்களும் தென்னிலங்கை ஊடகங்களும் நீண்ட நித்திரையிலிருந்து தற்போதுதான் விழித்துக்கொண்டுள்ளனர். விழித்தெழுந்து என்ன பயன். நாடு ஒட்டுமொத்தமாக சூறையாடப்பட்டுவிட்டது. அதற்கான விலையையும் மக்களே கொடுக்கவேண்டுமென சூறையாடியவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று தீர்ப்பும் எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

அதேவேளை, சிங்கள ஆளும் தரப்பின் கபடத்தன அரசியலை முன்னெடுக்க அவர்கள் பிரசவித்த குழந்தைதான் இனவாதமும் மதவாதமுமாகும். இந்தக் குழந்தைகளை சிங்கள ஆளும் வர்க்க அரசியல்வாதிகளுக்குத் துணையாக நின்று வளர்த்தெடுத்ததில் தென்னிலங்கை ஊடகங்களுக்குப் பெரும் பங்குள்ளது. இதனைத்தான் இந்துசாதன பத்திரிகையின் ஆசிரியர் திருஞானசம்பந்தப்பிள்ளை 1923ஆம் ஆண்டே மிகச் சரியாகக் கணக்கிட்டுப் பதிவு செய்துள்ளார்.

இந்த நூற்றாண்டுகால இன, மத சித்தாந்தத்திலிருந்து தென்னிலங்கை மக்களும் தென்னிலங்கை ஊடகங்களும் வெளியேறாதுவிட்டால் நீங்கள் காணவிழையும் மாற்றம் கானல்நீராகவே போய்விடும்.

போர் மனிதர்களின் மனதில் தொடங்குவதால், அமைதிக்கான பாதுகாப்பை உருவாக்குவதும் மனிதர்களின் மனதில்தான் உள்ளது என்று யுனெஸ்கோவின் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அத்தகைய விசாலமான மனதைக்கொண்ட அரசியல் கலாசாரமும் அதனை காத்திரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஊடக கலாசாரமும் உயிர்பெற வேண்டும்.

அந்தவகையில் அதிகாரமளிப்பதற்கான மாற்றத்தை எளிதில் அடைய ஊடகங்கள் 'குரலற்றவர்களின் குரலாக' ஒலிக்க வேண்டும்.

ஊடகத்துறை என்பது நாட்டையும் மக்களையும் நெறிப்படுத்தும் புனிதப் பணியாகும். தென்னிலங்கை ஊடகங்கள் நூற்றாண்டுகால சித்தாந்தத்திலிருந்து விடுபட்டு ஒரு புதிய இலங்கையை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வர வேண்டும்.

Email: vathevaraj@gmail.com




# முள்ளிவாய்க்கால் மௌனத்துக்கு முன்னர் போதைப்பொருள் பாவனை வடக்கு, கிழக்கில் இருக்கவில்லை!

உலகளவில் போதை எதிர்ப்புத் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26 அன்று அனுஷ்டிக்கப்படுகிறது. போதைப்பழக்கம் பல தலைமுறைகளைப் பாதிக்கக்கூடிய மோசமான ஒன்று.

போதைப்பொருள் கடத்தலும், ஆயுதக் கடத்தலும் உலகில் மிகப்பெரிய தொழிலாக நடந்து வருகின்றன. உண்மையில் இலங்கையைப் பொறுத்தவரை போதைப்பொருட்களை கடத்தியவர்கள், கொண்டுசென்றவர்கள், வைத்திருந்தவர்கள் என பலர் கைதுசெய்யப்பட்ட பல செய்திகள் தினமும் வெளிவருவதைக் காணலாம். போதைப்பொருட்கள் பிடிபடுவது மட்டும் செய்தியாக வந்தாலும் பிடிபடாமல் பல கோடி பெறுமதியான போதைப்பொருட்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றன என்பதே உண்மை.

இதில் வேதனையான விடயம் என்னவென்றால், வடக்கு, கிழக்கில் போர் மௌனித்த பின்னர் 2009, மே 18க்குப் பின்னர் 14 வருடங்களில் வடக்கு, கிழக்கு தாயகத்தில் இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் திட்டமிட்டு போதைப்பொருள் பாவனைகளில் அவர்கள் உள்ளீர்க்கப்படுகின்றனர் என்ற சந்தேகம் பரவலாக உள்ளது.

போதை என்பது மதுபானம், கேரள கஞ்சா தொடக்கம் தற்போது பரவலாக பேசப்படும் ஹெரோயின், ஐஸ் போதை மாத்திரைகள் உட்பட பல வகைகள் அடங்கும். வடக்கு, கிழக்கில் 2009, மே 18க்கு முன்னர் ஈழ விடுதலை ஆயுதப் போராட்டம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை முப்படையினருக்கும் இடையில் இடம்பெற்றபோதிலும் வடக்கு, கிழக்கு இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் ஒழுக்கமும், கட்டுப்பாடும், நேர்மையும், பண்பும், ஒற்றுமையும், மற்றவர்களை மதிக்கும் பண்பும், கீழ்ப்படிவும், தமிழ்த் தேசிய பற்றும் இருந்தன என்பதை எவராலும் மறுதலிக்க முடியாது.

ஆனால், இன்று அப்படியான நிலைமை இல்லை. தமிழ் இளைஞர்களின் தமிழ்த் தேசிய சிந்தனையை திசை திருப்பும் நோக்கில் போதைப்பொருட்களை கருவியாகப் பயன்படுத்தி தமிழ் இளைஞர்களிடையே குரோத மனப்பான்மையை ஊக்குவிக்கும் செயல்களில் மறைமுகமாக அரசாங்கம் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகம் உள்ளது.







அராஜகம் மேலோங்கி ஆணவம் தான் நினைத்ததை செய்யும் விதமாக வாள் வெட்டுக் கும்பல்களும், அடிதடி கும்பல்களும், தீய பழக்கவழக்கங்களும், முதியோரை மதிக்காத எண்ணங்களும் தமிழ் இளைஞர்களிடையே தோற்றம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படியாத மாணவர்கள், முதியோரை சமூகத் தலைவர்களை மதிக்காத மனோநிலையுள்ள இளைஞர்கள் ஆகியோரை தற்போது ஊர் முழுவதும் காணமுடிகிறது. இதன் அடிப்படைகளை ஆராயும்போது போதைப்பொருள் பாவனைகள் தமிழ் இளைஞர்கள் மத்தியில் என்றுமில்லாத அளவு கூடியுள்ளது. வடக்கு, கிழக்கிலுள்ள மதுபானசாலைகளில் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மதுபானசாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்

2009, மே 18க்கு முன்னர் வடக்கு, கிழக்கு தாயகப் பகுதியில் மதுபானசாலைகள் குறைவாகவே காணப்பட்டன. முள்ளிவாய்க்காலில் போர் மௌனித்ததன் பின்னர் பல மதுபானசாலைகள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதுவும் ஏற்கனவே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மதுபானசாலைகள் இருக்கவில்லை.

தற்போது ஏற்கனவே விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக இருந்த இடங்களில் எல்லாம் பல மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இதுவும் ஒருவகையில் தமிழ் இளைஞர்களை தமிழ்த் தேசிய சிந்தனையிலிருந்து திசை மாற்றுவதற்காக அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என்பதே உண்மை.

சட்டரீதியான மதுபானசாலைகளில் ஒருபக்கம் மதுபானம் விற்பனை உயர்ந்துள்ள அதேவேளை, சட்டவிரோத மற்ற வடிசாராயம் காச்சும் பழக்கம் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இது ஒருவகை சுயதொழில்போன்று குடும்பம் குடும்பமாக இரகசியமாக வடிசாராய உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கிராமங்களில் இது சர்வசாதாரணமாக இடம்பெறுகிறது. இதனைத் தடுக்க ஊர் சமூக பொது அமைப்புகள் முயற்சி மேற்கொண்டாலும் அதனை பூரணமாக தடுக்க முடியவில்லை. இதற்குக் காரணம், அந்தந்த பகுதி காவல்துறையினரும் இதற்கு உறுதுணையாக இருப்பதாகவும் அவர்களுக்கும் கசிப்பு உற்பத்தியாளர்கள் ஒருதொகைப் பணத்தை நன்கொடையாக வழங்குகின்றனர் என்பதையும் அறியமுடிகிறது.

மட்டக்களப்பில் ஒரு கிராமத்தில் நடந்த உண்மை இது (ஊரின் பெயரை குறிப்பிடவில்லை). அந்த ஊரில் பரவலாக பலர் கசிப்பில் அன்றாட தொழிலாக செய்வதை அறிந்த அந்த ஊர் கிராமவாசி ஒருவர் பொலிஸாருக்கு முறையிட்டு வந்தார். பொலிஸாரும் பெரியளவில் நடவடிக்கை எடுப்பதாக இல்லை. இதனை அறிந்த அந்த கிராமவாசி சம்பந்தப்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் நேரில் சென்று கசிப்பு காச்சும் நபர்களின் பெயர்ப் பட்டியலை வழங்கினார்.




சில நாட்களின் பின்னர் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு கசிப்பு களவில் காச்சும் நபர்கள் பலர் சென்று அந்தக் கிராமவாசியை ஊரைவிட்டு துரத்தினர். அவர் அந்தக் கிராமத்தில் வாழமுடியாமல் வேறொரு கிராமத்தில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்து வாழும் நிலை மட்டக்களப்பு தமிழ் கிராமம் ஒன்றில் ஏற்பட்டதாக என்னிடம் அந்த ஊர் பாடசாலை அதிபர் மனவருத்தத்துடன் கூறினார். இது கதையல்ல உண்மை.

சில இடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்பு காச்சுவோர் ஓர் அமைப்பாக (சங்கமாக) செயல்படுவதையும் அவதானிக்க முடிகிறது. கசிப்பு (வடிசாராயம்) விலைகளை இவர்களே தீர்மானிப்பதாகவும் கசிப்பை ஏனைய இடங்களுக்கு எடுத்துச் சென்று இரகசியமாக விற்பனை செய்வதையும் கசிப்பு கொண்டுசெல்லும்போது அவர்களுக்கு பொலிஸார் ஏதும் இடங்களில் நின்றால் அதை தெரியப்படுத்த சில இளைஞர்களுக்கு தொலைபேசி வசதிகளையும் கசிப்பு உற்பத்தியாளர்கள் செய்து கொடுத்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26ஆம் திகதி உலக போதைப்பொருள் ஒழிப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. உலகம் முழுவதும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை 25 கோடி பேர் போதைப்பொருட்களுக்கு அடிமையாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மது மற்றும் புகையிலைப் பொருட்களை உபயோகிப்பது சர்வசாதாரணமாகிவிட்ட நிலையில், கஞ்சா, அபின், கொக்கெய்ன், பிரவுன்சுகர் ஆகியவை கரையான்புற்றுபோல் இளைஞர் சமூகத்தை அழித்து வருகின்றன. கட்டுக்கோப்பான உடலை வைத்திருக்க வேண்டிய இளமைப் பருவத்தில், நரம்பு தளர்ந்து, உடல் சோர்ந்துபோய்க் கிடக்கும் கொடுமையை என்னவென்று சொல்வது? தனிநபரின் உடல், மனம் இரண்டையும் சிதைப்பதுடன், சமூகத்திற்கும் பெரும் ஆபத்தை விளைவிக்கின்றன இந்த போதைப்பொருட்கள். இந்தப் பழக்கத்திலிருந்து மீளவே முடியாது என்ற சூழலில் தற்கொலைகளில் போய் முடிகின்றன.

உலகளாவிய ரீதியில் போதைப் பொருள் பயன்படுத்தல், போதைப் பொருள் கடத்தல், போதைப்பொருள் விற்பனை செய்தல் என்பன ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. போதைப்பொருளைக் கட்டுப்படுத்த அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. போதைப் பொருள் கடத்தலுக்காக சில அரசுகள் மரணதண்டனையைக்கூடச் சட்டமாகப் பிரயோகித்து வருகின்றன. எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும்கூட, போதைப்பொருளை முற்றாக ஒழித்துவிட முடியவில்லை. போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட தினமாகவே உலக போதைப்பொருள் எதிர்ப்புத் தினம் காணப்படுகிறது.

போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்காக பேரணிகளையும், பதாகைகளையும், துண்டுப்பிரசுரங்களையும் விழிப்புணர்வாக மேற்கொண்டாலும் இதனை முற்றாக தடுக்க முடியவில்லை "தவளையும் கத்தும் மழையும் பெய்யும்" என்ற நிலையில்தான் போதை எதிர்ப்பு பற்றி எதனை முன்னெடுத்தாலும் பூரணமாக அதை தடுக்க முடியவில்லை.

கடந்த 2009, மே 18 தொடக்கம் 2023, மே 18 வரையான 14 வருடங்களை அவதானித்தால் இலங்கையில் அதிகூடிய போதைப்பொருள் பாவனையும் அதேவேளை, போதைப் பொருட்களை சட்டவிரோதமாக கடத்தப்பட்டவர்களை கைதுசெய்த செய்திகளையும் காணமுடிந்தது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு தாயகத்தில் தமிழ் இளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனைகளும், வாள்வெட்டுக் குழுக்களும், மாணவர்களிடையே ஒழுக்கச் சீர்கேடுகளும், தற்கொலை முயற்சிகளும் என்றுமில்லாத அளவு அதிகரிக்கப்பட்டுள்ள பரிதாபகர நிலைமையை அவதானிக்க முடிகிறது.

ஈழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் தமிழீழத்தைப் பெற்றுத்தரவில்லை, சுயநிர்ணயம் சுதந்திரத்தை ஏற்படுத்தவில்லை. அரசியல் தீர்வைப் பெறவில்லை என்பதெல்லாம் உண்மைதான். ஆனால், ஈழ விடுதலை போராட்டக் காலத்தில் தமிழ் மாணவர்கள், தமிழ் இளைஞர்கள், ஏன் பொதுமக்கள் மத்தியில் சிறந்த நல்லொழுக்கமும் அர்ப்பணிப்பான சிந்தனையும், ஒற்றுமையும் மேலோங்கி இருந்தன அது கடந்த 14 ஆண்டுகளாக அறவே இல்லை என்பதை ஒவ்வொருவரும் தனது மனசாட்சியை தொட்டு சொல்லமுடியும்.

போதை எதிர்ப்புத் தினத்தில் மட்டும் போதைக்கு எதிராக போராட்டம் குரல்களை கொடுப்பதாலும், கவனயீர்ப்புப் பேரணிகளை நடத்துவதாலும் மட்டும் நாட்டிலிருந்து போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்திலும், சமூகத்திலும், ஊர், பிரதேசம்,மாவட்டம், மாகாணம் முழுவதிலும் உள்ள மக்கள் சுயமாக போதைப்பொருளை தடுக்கும் மன எண்ணம் உள்ளத்திலிருந்து எழுந்தால் மட்டுமே போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க முடியும்.

தற்போது சில இடங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒன்றாக கடற்கரைகளிலும் உணவகங்களிலும் மதுபானம் அருந்தும் மிக மோசமான கலாசாரம் தமிழ்ப் பகுதிகளிலும் இருப்பது வேதனையான வெட்கக்கேடான செயலாகும். இதேபோல் குடும்பத்தில் தகப்பன், பிள்ளைகள், சகோதரர்கள் ஒன்றாக மதுபானம் அருந்தும் மேற்கத்திய கலாசாரமும் புலம்பெயர் தமிழ் உறவுகள் சிலர் மூலமாக வடக்கு, கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதும் வெளியில் சொல்ல வாய்க்கூசும் நிலை உள்ளது.

போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக பெனர் பிடித்து கவனயீர்ப்பு நடத்தும் சில பிரமுகர்களே இரவினில் மதுபானம் அருந்தி கும்மாளம் போடுபவர்களாக இருக்கின்றனர். இப்படியானவர்களா போதைப்பொருள் பாவனையை தடுப்பார்கள் என்ற கேள்வி பலர் மத்தியில் உள்ளது.

சிலர் போதை என்பது ஹெரோயின், கஞ்சா, அபின், ஐஸ் மாத்திரை போன்ற சில பொருட் கள் மட்டும்தான் என எடை போடு கிறார்கள். உண்மையில் மதுபானங் களான சாராயம், பியர், விஸ்கி, புகைத்தலுக்கான பீடி, சுருட்டு, சிக்ரெட் எல்லாமே போதைப்பொருட்கள் என்பதை உணர்ந்து அதிலிருந்து எமது சமூகத்தை நல்வழிப்படுத்த அனைவரும் இன்றைய போதைப்பொருள் தடுப்பு நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.



பா.அரியநேத்திரன்

# நாட்டு மக்களின் நலன் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கடமையும் பொறுப்பும் திருப்தியானதா?



சின்னத்தம்பி குருபரன்



பாராளுமன்றத்தில் பல கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றார்கள். அவர்களைப் பொதுவாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரண்டாக வகைப்படுத்துவர். இந்த இரண்டு பிரிவினரும் பாராளுமன்றத்தில் நேரெதிராக முன்வரிசை, பின்வரிசை என்றவாறு அமர்ந்திருப்பர். நாட்டின் ஜனநாயகத்துக்குச் சான்றாக அமைவது, பாராளுமன்றம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதாகும். இங்கு தொகுதி ரீதியாக, மாவட்ட ரீதியாக, இனம், மொழி, மதம் சார்பாக தமது மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக - நாடு, நாட்டு மக்களின் நலன்கள், பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கின்றனர். பல சந்தர்ப் பங்களில் அரசியல் வாரிசுகளும் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்படுகின் றனர். இவர்களின் எதிர்காலம் தமக்கு வாக்களித்த மக்களின் நலன் பேணுவதிலேயே தங்கியுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓரிருவரைத் தவிர வாரிசு அரசியல் இல்லை என்பதனால் பெரும்பாலான அரசியல்வாதிகளோடு அவர்களின் அரசியல் வாழ்க்கை முற்றுப் பெற்றதையும் கண்டிருக்கிறோம்.

ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு நாட்டில் எதிர்க்கட்சியின் பங்கும் பணியும் பொறுப்பும் மிகப் பிரதானமானதாகும். நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங் கம், அரசியல், பொருளாதார, மக்கள் நலன் சாராது எதேச்சதிகாரப் போக்கில் செல்கின்றபோது அதற்குக் கடிவாளமிட்டு நல்ல திசையில் ஆட்சி நடைபெறு வதற்குரிய ஆலோசனைகள், வழிகாட் டல்களை வழங்கியும் எதிர்ப்புகளை வெளிக்காட்டியும் சாத்வீகப் போராட்டங் களை நடத்தியும் நல்லாட்சி நிலவுவதற்கு உறுதுணையாக இருப்பதே எதிர்க்கட்சியின் தார்மீகக் கடமையாகும்.

நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் சட்டங்கள், மசோதாக் கள், திருத்தங்கள் என்பவற்றில் பாராளு மன்ற விவாதங்களின்போது தமது ஆலோசனைகள், நியாயமான கருத் துகள் என்பவற்றைத் தெரிவித்து, வாக்கெடுப்பின்போது எதிர்த்து அவை நிறைவேறாமல் தடுப்பதிலும் கவனமாக இருத்தல் வேண்டும். அத்தோடு அதன் விளைவுகள் தொடர்பாக மக்களுக்கு எடுத்துச்சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இதில் நாட்டு நலன், மக்கள் நலன், பாதுகாப்பு, பூகோள அரசியல்சார் நலன், சர்வதேச பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நட்புறவு என்பவற்றில் அரசு சுயேச்சையான முடிவுகளை எடுத்துச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் இருப் பதற்குத் தகுந்த ஆலோசனை, வழிகாட்டல் களை வழங்குதல் வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையுடனும் பலம்வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்றுடனும் இருப்பது நல்லாட்சி அரசு நிலவுவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது அதற்கு மேலும் ஆட்சியாளர்களின் பலம் இருப்பதும் பலம் குன்றிய எதிர்க்கட்சி ஒன்று இருப்பதும் நாட்டுக்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்திவிடும்.

1970, 1977, 2005, 2010, 2020 ஆகிய காலப்பகுதிகளில் நடந்த பொதுத் தேர்தல்களின்போது அறுதிப் பெரும்பான்மைக்கு மேலதிகமாக ஆட்சியாளர்களுக்கு பாராளுமன்றப் பலம் கிடைத்தமையால் ஆட்சியாளர்கள் தலைகால் புரியாமல் ஆட்டம்போட்டனர். எதிர்க்கட்சியைக் கணக்கில் எடுக்காமலே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத் தைப் பயன்படுத்த பாராளுமன்ற ஜனநாயகத்தையும் கேள்விக்குறியாக்கி ஆட்சிசெய்ய வெளிக்கிட்டனர். இக்காலப் பகுதியில் நாட்டில் அமைதியின்மையும், இரத்த ஆறும் ஓடியதோடு, கொலை, கொள்ளை, களவு, ஆட்கடத்தல், காணாமல் போதல், சித்திரவதை, பாதாள உலகச் செயற்பாடுகள், மக்களுக்குப் பாதுகாப் பின்மை, புலம்பெயர்வு, அகதி வாழ்க்கை, ஊழல், மோசடி, எதேச்சதிகாரம், குடும்ப அரசியல், இன, மத, மொழி ரீதியிலான ஒடுக்கல்கள் ஆகியனவும் இடம்பெற்றன. அவற்றுள் பல இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மறைமுக ஜனநாயக முறையில் (பிரதி நிதித்துவ ஜனநாயக முறையில்) ஒன்றுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்வார்கள். இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவே நாடாளுமன்றத்தில் செயற்படுவார்கள். ஒரு நாட்டில் அரசியல் கட்சிமுறை செயற்படு வதனால் ஆளுங்கட்சியின் பாதகமான தீர்மானங்களைத் திருத்திக் கொள்ளலாம். எதேச்சதிகார ஆட்சியைத் தடுக்கலாம். சமூக ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். ஒற்றுமையின் மூலம் வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்பலாம். இவை கட்சிமுறை ஜனநாயகத்தால் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகளாகும். கட்சிமுறை ஆட்சியால் கிடைக்கக்கூடிய நன்மைகள் பலவற்றை மக்கள் அனுபவிக்க முடியாத கீழ்த்தரமான ஜனநாயகம் நிலவும் நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகிறது. மக்கள் பிரதிநிதிகள் பலரை விலைக்கு வாங்கும் நாட்டில் எவ்வாறு கட்சிமுறை ஜனநாயகம் வெற்றியளிக்க முடியும்.

ஒரு நாட்டில் ஜனநாயக ஆட்சி வெற்றிபெறுவதற்கு எதிர்க்கட்சியின் பொறுப்புகளும் கடமைகளும் முக்கியமானதாகும். ஓர் எதிர்க்கட்சி, ஆளுங்கட்சியின் சிறந்த, வெற்றிகரமான, பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உதவுதல். ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தல். நல்ல மசோதாக் கள், சட்டங்கள், தீர்மானங்கள் வாக்கெடுப் புக்கு விடப்படும்போது ஒத்துழைப்பு வழங்கல். ஆட்சிக் கடிவாளம் பிடித்தல், எதிர்காலத்தில் மிகச் சிறப்பான ஆட்சியமைப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல். ஆளுங்கட்சியின் தவறான, பிற்போக்கான செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லல் ஆகியவற்றில் நாட்டு நலன், மக்கள் நலன் கருதிய செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து எதிர்க்கட்சிகள் பெரும்பாலும் நாட்டு நலன் கருதியன்றி தமது அரசியல் நலன் கருதிய செயற்பாடுகளில் ஈடுபட்டனர். 1977 - 1989 வரையான காலப்பகுதியில் பலம் குன்றிய எதிர்க்கட்சி இருந்தமையால் ஆட்சியாளர்களின் எந்தவிதமான எதேச் சதிகாரச் செயற்பாடுகளையும் தடுக்க முடியாத மிகப் பலம் குறைந்த கட்சி யாகவே செயற்பட்டு வந்தன. இக்காலப் பகுதியில் (1977 - 1984) தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்க்கட்சியாக இருந்தது. பின்னர் 1989 வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

2015 - 2019 வரை எதிர்க்கட்சி என்ற போர்வையில் அரசு சார்பான, அரசுக்கு வக்காலத்து வாங்குகின்ற, அக்காலத் தில் எதையும் சாதிக்க முடியாத, அரசுக்கு விலைபோன எதிர்க்கட்சி ஒன்று இருந்து வந்தது. இவ்வெதிர்க்கட்சி தமது மக்களின் 30 வருடகால யுத்தத்தில் புரையோடிப் போயிருந்த இன்னல்கள், துன்பங்கள், வடுக்கள், காணி இழப்பு, காணாமல்போனோர் விவகாரம், மீள் குடியேற்றம், புனர்நிர்மாணம், அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக பேசித் தீர்ப்பதற்கு, தீர்வு காண்பதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்தும் அதனைப் பயன்படுத்தி மக்களுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்காது அரசால் வழங்கப்பட்ட வசதி, வாய்ப்புகள், வரப்பிரசாதங்கள், பதவி, கௌரவம், அவிபாகம், தரகு ஆகியவற்றைப் பெற்றுக் கொண்டு, காலத்தைக் கடத்தி வெறுமனே அறிக்கை மாத்திரம் விட்டுக்கொண்டிருந்த எதிர்க்கட்சியாகவே காணப்பட்டது.

அக்காலப்பகுதியில் இருந்த நல்லாட் சிக்கு முட்டுக்கொடுத்த அதேவேளை, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எத்தனையோ விடயங்களைச் சாதித்து மக்களுக்கு விமோசனம் கொடுத்திருக் கலாம். இவை எதனையும் சாதிக்க முடியாத, கையாலாகாத எதிர்க்கட்சி யாகவே நான்கு வருடத்தைக் கடத்தினர்.

இன்று கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கை குறைந்து கொண்டு செல்கின்றன. கட்சி தாவுதல், ஊழல், மோசடிகள், ரவுடித்தனம், எதேச் சதிகாரம் இதுபோன்ற பல காரணங்களால் அரசியல்வாதிகள் தொடர்பான நல்ல அபிப்பிராயம் ஆகியன இழந்துகொண்டு செல்வதைக் காணலாம்.

அரசியல் யாப்பு, சட்டவாக்கம், சட்ட நிறைவேற்றம் ஆகியவற்றில் ஏதோ குறைபாடு இருப்பதன் காரணமாகவே கட்சித் தாவல்கள் இலகுவாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆளுங்கட்சியில் சேர்ந்துகொண்டால் பதவி, அதிகாரம், செல்வாக்கு, பணம் ஆகியன கிடைக்கும் என்கின்ற பலவீனமான அரசியல்வாதிகள் பலர் விலைக்கு வாங்கப்படுவதனால் எதிர்க்கட்சிகளும், கட்சிகளின் தலைவர் களும் தடுமாறி நிற்கின்றனர். தமது உறுப்பினர்களை இறுக்கிப் பிடித்துக் கட்டுப்படுத்த முயற்சித்தால் கட்சி தாவி விடுவார்கள் என்ற பயத்தில் தளர்வுப் போக்கைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் நினைத்தவாறு கட்சித் தாவலை தடுப்பதற்கு நாட்டின் அரசியல் யாப்பிலோ அல்லது பதிவுசெய்யப்பட்ட கட்சிகளின் யாப்பிலோ எந்தவிதமான இறுக்கமான சட்ட விதிமுறைகளும் உள்வாங்கப்படாமல் இருப்பதனால் தனது தெரிவுக்குக் காரணமான கட்சியையும், மக்களையும் ஏமாற்றிவிட்டுக் கட்சி தாவிச் சென்று அதனை நியாயப்படுத்திப் போலியான அறிக்கை ஒன்றும் விடுவார் கள். அதன்பின்னர் பணம், பலம், அதி காரம், பதவி, அரசின் சலுகைகள் வரப் பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு சுகபோக வாழ்க்கை நடத்துவார்கள்.

எதிர்க்கட்சிகள் அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் பலவீனமடைந்து இருக்கின்றன. ஒன்றின் பலவீனமே இன்னொன்றின் வெற்றி என்பதை நன்கு புரிந்துகொண்ட ஆளும் தரப்பினர் இப்பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு செயற்படுகின் றனர். நாட்டின் அரசியல், பொருளாதார நெருக்கடிகள், மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, சிறுபான்மை யினரின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சியினரும் எதிர்த்தரப் பினரும் கூறும் கருத்துகள், ஆலோசனை கள் பெரும்பாலானவற்றை ஆளும் தரப் பினர் 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல்' எடுத்துக்கொள்வதையே பார்க் கிறோம்.

**ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையுடனும் பலம்வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்றுடனும் இருப்பது நல்லாட்சி அரசு நிலவுவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்**

1977 இன் பின்னர் பாராளுமன்றத்தில் இருந்த பலவீனமான எதிர்ககட்சிகளால் பெரிதாக எதனையும் சாதிக்க முடிய வில்லை. 2010 - 2014 இறுதிவரை பல மான எதிர்க்கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி இருந்தது. அக்காலப் பகுதி யில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறைமுகமாக அரசுடன் சார்ந்த கொள்கையையே இறுதிவரை கடைப்பிடித்து வந்தார். தனது கட்சிக்குள் அவருக்கிருந்த பிரச்சினைகள், பல பொதுத் தேர்தல்களில் தமது கட்சி தோல்வி யடைந்தமைக்கு அவரின் தலைமைத் துவமே காரணம் என பல மூத்த அரசியல் வாதிகளும், பலமும் செல்வாக்கும்மிக்க இளம் அரசியல்வாதிகளும் கட்சிக் கூட்டங் களிலும், பொதுவெளிகளிலும் குற்றஞ் சாட்டியதோடு எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் விலகுமாறு பல கோஷங்களை எழுப்பினார்கள். ரணிலை பதவியிலிருந்து விலக்குவதற்கான பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இச்சந்தர்ப் பங்களிலெல்லாம் அப்போதைய ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ, ரணிலின் இருப் பைப் பாதுகாத்து வந்தார். அதற்கு உறவு முறையும், ரணில் எதிர்க்கட்சித் தலை வர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு புதிய ஒருவர் நியமிக்கப்பட்டால் தனது எதேச்சாதிகாரப் போக்கிற்குப் பங்கம் ஏற்பட்டுவிடும் என்ற பயமும் காரண மாக அமைந்தன. மொத்தத்தில் 2004 முதல் 2020 வரை நடைபெற்ற தேர்தல் களில் தனதும், கட்சியினதும் பல தோல்வி களுக்குக் காரணமான இராசியற்ற தலை வராகவே ரணில் காணப்பட்டார். மக்களும் அவரின் தலைமைத்துவத்தை விரும்பாமல் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ரணிலுக்கும் அவரின் கட்சிக்கும் தகுந்த பாடம் கற்பித்தனர்.

நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பாதகமான பல மசோதாக்களும் சட்ட மூலங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பான வாக்கெடுப்பு மீதான விவாதங்களும், வாதப்பிரதிவாதங்களும் பாராளுமன்றத்தில் நடந்து பல எதிர்ப்புகள். பகிஷ்கரிப்புகளுக்கு மத்தியில் வாக்கெடுப்புக்கு விடப்படும். இறுதியில் சட்டமூலம் வெற்றிபெறும். பலர் குறித்த மசோதா அல்லது சட்டமூலத்தை ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் வாக்களிப்பார்கள். சிலர் வாக்களிப் பில் கலந்துகொள்ளாமல் வெளியேறி விடுவார்கள். வாக்களிப்பின் முன்னரும் பின்னரும் அரசிடமிருந்து பல சலுகைகள், வரப்பிரசாதங்களைப் பெறுவதற்காக சிலர் பின்கதவால் நழுவிச் செல்வார்கள். எதிர்த்து வாக்களித்திருந்தால் எண்ணிக்கை யும் கூடியிருக்கும். அதனைத் தவிர்ப்பதற் காக நழுவிச் செல்பவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் (இப்போது பல கட்சிகள் பிரிந்து நிற்கின்றன) பிரதான மானவர்களாகக் கொள்ளப்படுகின்றனர்.

'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்பதுபோல் நழுவிச் சென்று காட்ட சாட்டமான அறிக்கை ஒன்று விடுவார் கள். தாம் ஏன் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்பது அவர்களுக் குத்தான் தெரியும். இதற்குப் பின்னால் பல மர்மங்களும் அவிழ்க்கப்படாத முடிச்சுகளும் நிறைந்திருக்கும். பாராளு மன்ற விவாதங்களில் பங்குபற்றி வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் நழுவிச் செல்லும் உறுப்பினர்களுக்கு அன்றைய தினத்துக்குரிய கொடுப்பனவுகள், சலுகைகள், வரப்பிரசாதங்களைத் தடைசெய்யும் சட்டமூலம் பாராளுமன்றத் தில் நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் இத்தகைய பிரதிநிதிகள் திருந்துவார்கள். இத்தகைய நடவடிக்கைகள் எதிர்க்கட்சியினரின் காத்திரமான செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாக அமைந்துவிடுகின்றன.

1978ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த அரசியல் யாப்பு இன்றுவரை 21 திருத்தங்களைக் கண்டிருக்கிறது. அவற் றுள் பெரும்பாலான திருத்தங்கள் அவ்வப்போது ஆட்சியிலிருந்த ஆட்சி யாளர்களின் நலன் கருதியே மேற்கொள் ளப்பட்டன. சில திருத்தங்கள் மாத்திரமே மக்கள் நலன், நாட்டு நலன் சார்ந்திருந்தன. யாப்புத் திருத்தங்களில் 18, 20 ஆகியன நாட்டில் மிக மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடி நிலை ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன. இந்தத் திருத்தச் சட்டங்கள் வர்த்தமானியில் வெளியிட்ட நாளிலிருந்து பல எதிர்ப்புகள், போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்த போது எதிர்க்கட்சியினரால் மிகக் கடுமை யான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன. இறுதியில் வாக்கெடுப்பில் வழமைபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்குபற்றாது பின் கதவால் வெளி யேறிவிட்டனர். எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இருந்த பலர் இச்சட்டமூலத் துக்கு ஆதரவாக வாக்களித்து வெற்றிபெறச் செய்தனர். 2022இல் ஜனாதிபதி தெரிவுக் கான வாக்கெடுப்பிலும் இவ்வாறுதான் நடந்தது.

341 உள்ளூராட்சிச் சபைகளுள் 339 சபைகளுக்கான தேர்தல் தினம் அறிவிக் கப்பட்டு, வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. தேர்தல் தினம் அறிவிக் கப்பட்டதிலிருந்து தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவருக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பெரிய பனிப்போரே நடந்து கொண்டிருந்தது. தேர்தல் நடத்தப்படுவது தொடர்பான நம்பிக்கையீனம் காரணமாக பல கட்சிகளும், சமூக அமைப்புகளும் தேர்தல் நடத்தப்பட வேண்டும், எதிர்ப் புகள், போராட்டங்கள், பேரணிகள், என பாராளுமன்றத்தில் பல வாதப்பிரதி வாதங்களும் நடத்தப்பட்டன. தேர்தல் நடத்துவது ஆட்சியாளர்களுக்குப் பாதக மாக அமையும் என்பதனால் இறுதியில் தேர்தல் திகதியை காலவரையறையின்றி பிற்போட்டனர். எதிர்க்கட்சிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அவ்வாறுதான் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவரைப் பதவி நீக்கு வதற்கும் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அவரைப் பதவியிலிருந்து நீக்கினர். அரச கட்டுப்பாடுகளுக்கு அப் பாற்பட்ட சுயாதீனமான பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் எதிர்காலம் கேள்விக்குட்படுத்தப்பட்டுக் கொண்டிருப் பதாக பலரும் பேசிக்கொள்கின்றனர். சட்டவாக்கம், சட்ட அமுலாக்கம், நிரு வாகம் ஆகியவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சி செய்துகொண்டிருக் கும் அரசாங்கத்தை எதிர்த்து எதிர்க்கட்சி களால் எதுவும் செய்ய முடியாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

1977ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஆட்சியாளர்களின் கை ஓங்கியிருக்கின்றது. எதிர்க்கட்சிகள் எப்படிப்பட்ட எதிர்ப்புக் காட்டினாலும் அரசு கண்டுகொள்ளாமல் செயற்படுவது ஜனநாயகத்துக்குக் குந் தகத்தை ஏற்படுத்திவிடும். இன்று நாட்டி னதும் மக்களினதும் நலன்சார்பான கடமை கள் பொறுப்புகளை நிறைவேற்று வதில் எதிர்க்கட்சிகள் தள்ளாடிக்கொண் டிருப்பதைக் காணமுடிகிறது. எதிர்க்கட்சிகளிலுள்ள பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்கதவால் சென்று தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வதில் குறியாக இருப்பதனால் எதிர்க்கட்சித் தலைவரும் சில சமயங்களில் கண்டும் காணாததுபோல் செயற்பட்டுக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது.

# தகவல் அறியும் உரிமைச் சட்டமும் அதிகாரிகளால் மறைக்கப்படும் தகவல்களும்

எம்.எஸ்.அமீர் ஹுசைன்




அரசாங்கம் அவசரமாக கொண்டுவருவதற்காக முயற்சி செய்துகொண்டிருக்கின்ற ஊடக அதிகாரசபைச் சட்டமூலம் நாட்டில் தொடர்ந்து அதிர்வலைகளை கிளப்பிக்கொண்டிருக்கின்றது. எதற்காக ஊடக அதிகாரசபைச் சட்டமூலம் கொண்டுவரப்பட வேண்டும், இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டால் ஊடகங்களின் எதிர்காலம் என்னவாகும், அதன்மூலம் மக்களது தகவல் அறிவதற்கான உரிமைக்கு என்ன நடக்கும் போன்ற பலவிதமான கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊடகங்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று கூறப்படுகின்றது. ஒரு நாட்டில் ஜனநாயகம் பலம்பெற்றதாக அமைய ஊடக சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். ஊடக சுதந்திரம் மறுக்கப்படுமானால் அங்கே உண்மையான ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுவதாக அடையாளப்படுத்த முடியாது. இந்த ஊடக சுதந்திரமானது சட்டங்களால் உறுதிப்படுத்தப்பட்டதாக அமையும்போதே அதற்கான பூரண பாதுகாப்பு கிடைக்கக்கூடியதாக அமைகின்றது. இந்த ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் பிரிவுகளாக அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தில் சொல்லப்பட்டுள்ள பிரிவு 19 அமைகின்றது. அதனைத் தழுவியதாக எமது நாட்டின் அரசியலமைப்பின் பிரிவு 14 (1) (அ) அமைகின்றது.

அதனடிப்படையிலேயே நாட்டில் ஊடகங்கள் செயற்பட முடியுமானதாக இருக்கின்றது. இந்த அரசியலமைப்புச் சட்டத்துக்கு மேலதிகமாக 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இந்நாட்டில் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அதுவரையில் நடைமுறையில் இருந்த ஊடக சுதந்திரத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் 2015ஆம் ஆண்டு பதவியில் இருந்த நல்லாட்சி அரசாங்கம் மூலம் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றைய ஆட்சியில் பிரதமராக இருந்த இந்தத் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தைக் கொண்டுவர பாடுபட்ட முன்னோடியே இன்றைய ஜனாதிபதியாவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2001ஆம் ஆண்டுமுதல் 2003ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கா ஆட்சியில் பிரதமராக இருந்த அதே ஜனாதிபதியின் நிர்வாகத்தின்கீழ் அதுவரையில் நடைமுறையில் இருந்த அவதூறுச் சட்டத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் இன்றைய சூழ்நிலையில் ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக பாடுபட்ட இதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் ஊடக அதிகாரசபைச் சட்டம் என்ற ஒன்றை கொண்டுவருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே இவ்வாறான எதிர்ப்பலைகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன.

ஊடக அதிகாரசபைச் சட்டமூலம் நிறைவேறுமானால் இலத்திரனியல் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் பின்புலத்திலிருந்து வெளிப்படலாம் என்பதும் அதன் மூலம் பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட இடமிருக்கின்றது என்பதும் அரசியல் வல்லுனர்கள், ஊடக விற்பன்னர்கள், சட்ட வல்லுனர்களது கருத்தாக அமைகின்றது. அதனால் இவ்வாறான அபாயகரமான சட்டம் ஒன்று நிறைவேறுவதற்கு முன்னரே அதனை தடுத்துநிறுத்துவது அவசியமாகின்றது.

அதேநேரம் 2015ஆம் ஆண்டுமுதல் 2019ஆம் ஆண்டுவரையில் பதவியில் இருந்த நல்லாட்சி அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் மக்களுக்கு அதிகாரிகளால் மறைக்க முற்படக்கூடிய தகவல்களை கேட்டுப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை வழங்குவதாக இருக்கின்றது. இந்தச் சட்டம் ஊடகத்துறையினருக்கு நாட்டில் நடைமுறையில் இருந்துவருகின்ற ஊடக சுதந்திரத்தை மிகவும் பயனுள்ளதாக மாற்றியமைக்க கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதிகாரிகள், பொதுமக்களால் கோரும் சட்டத்தால் வழங்க முடியும் என்று அதிகாரமளிக்கப்பட்ட தகவல்களை வழங்க வேண்டும் என்று சட்டம் வலியுறுத்துகின்றது. ஆனாலும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து 07 வருடங்கள் கழிந்தும் தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இன்றுவரையில் அரச மட்டங்களில் அதிகாரிகள் மத்தியில் இருந்து போதுமான ஒத்துழைப்பு இல்லாமல் இருந்துவருகின்றது. இதனால் ஊடகவியலாளர்களாலும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி உண்மையான தகவல்கள் அறிய முடியாமல் இருக்கின்றது. ஆனாலும் ஊடகங்களால் எதிர்பார்க்கப்படுகின்ற உண்மையை வெளிப்படுத்தல் என்ற நியாயதர்மத்தை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டுமானால் அரசாங்கத்தால் வெளிப்படுத்த முடியும் என்ற விடயங்களிலான தகவல்களை அதிகாரிகள் அச்சமின்றி வெளிப்படுத்த முடியும். அப்படி இருந்தும் அரச திணைக்களங்கள், இலாகாக்களில் கடமை புரிகின்ற அதிகாரிகள் ஊடகவியலாளர்களைக் கண்டால் அல்லது தொலைபேசியில் அழைத்தால் அப்படியும் இல்லாமல் ஓர் அலுவலகத்திற்குள் தாம் ஓர் ஊடகவியலாளன் என்று அடையாளப்படுத்திக்கொண்டு உள்ளே போக முற்பட்டால் அனுமதிக்க தயக்கம் காட்டுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

ஊடக அதிகாரசபைச் சட்டத்தை ஏன் கொண்டுவர வேண்டும் என்பதற்கான விளக்கத்தை முன்வைத்த ஜனாதிபதி, ''ஊடகங்கள் ஆதாரமற்ற, உறுதிப்படுத்திக் கொள்ளாத, உண்மைக்குப் புறம்பான அல்லது மற்றவர்களுக்கு அவதூறை ஏற்படுத்தக்கூடிய தகவல்களை வெளிப்படுத்துகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஊடகங்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு நியாயம் கிடைக்க எந்தவிதமான வழிமுறைகளும் இல்லை. அதனால் இவ்வாறான ஊடக அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் ஒரு கண்காணிப்பு, விசாரணைக்கும், நியாயத்தை நிலைநாட்டுவதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது. அதனால் தவறிழைக்காத ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இந்த சட்டமூலம் குறித்து அஞ்சவேண்டிய அவசியம் இல்லை'' என்று தெரிவித்து வருகின்றார்.

எவ்வாறாயினும் ஏற்கனவே 1976ஆம் ஆண்டு காலப்பகுதியில் அச்சு ஊடகத்துறையைக் கட்டுப்படுத்தும் வகையில் இதேபோன்ற அதிகாரசபைக்கு நிகராக பத்திரிகைப் பேரவைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த பத்திரிகைப் பேரவைச் சட்டத்துக்கு 2010ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் திருத்தம் கொண்டுவரப்பட்டு மீண்டும் உயிரூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 16ஆம் பிரிவுகளின் கீழ் தவறிழைக்கும் அச்சு ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உள்ளடக்கப்பட்டிருந்தமை அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் இந்த பத்திரிகைப் பேரவைக்கு மாற்றீடாக அச்சு ஊடகத்துறையினரால் சுய கட்டுப்பாட்டு ஒழுக்கக் கோவை ஒன்று முன்வைக்கப்பட்டு அதனை கண்காணித்து நடைமுறைக்கு சாத்தியமாக்கும் வகையில் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. ஆனாலும் இந்தப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற நடைமுறை இல்லாமல் மத்தியஸ்த தீர்வு சட்டத்தின்கீழ் நல்லிணக்கம், சமாதானப்படுத்தல் மற்றும் மத்தியஸ்த தீர்வின் அடிப்படையில் பத்திரிகை பிரசுரங்களால் பாதிக்கப்படும் வாசகர்களுக்கு அல்லது பொதுமக்களுக்கான நியாயம் வழங்கும் நடைமுறை இருந்து வருகின்றது. ஆனாலும் இன்றைய நிலையில் இந்த பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவும் அச்சு ஊடகத்துறையினரின் போதுமான ஒத்துழைப்பு இல்லாமல் செயலிழந்த ஒரு நிலையில் இருந்து வருகின்றது.

தற்போது உத்தேச ஊடக அதிகாரசபையின் கீழ் இதுபோன்ற ஒரு நடைமுறையை கொண்டு வருவதற்காகவே அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருகின்றது. அச்சு ஊடகத்துறையைக் கண்காணிப்பதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவதே திட்டமாகும். ஆனாலும் அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பேச்சு, எழுத்து, கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை எவ்வாறான சட்டங்கள் வாயிலாகவும் நசுக்க அல்லது முடக்கி வாய்க்கு பூட்டுப் போட முயற்சி எடுக்கப்படுமானால் அது கண்டிக்கத்தக்கதாகும். அதேநேரம் ஊடகங்கள் உண்மையை வெளிப்படுத்த நாட்டில் சுதந்திரம் இருக்கவேண்டும். அந்த உண்மையை மேலும் உறுதிசெய்வதற்காகவே தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டமும் நடைமுறையில் இருந்துவருகின்றது.

ஆனாலும் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட தகவல்களைக் கூட வெளிப்படையாக வழங்க உரிய இலாகாக்களில் கடமை புரியும் அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். குறிப்பாக, தகவல் முக்கியத்துவம் பெறுவது பொதுமக்களுக்காகும். தேசிய அல்லது மரபு ரீதியான ஊடகங்கள் எந்தளவுக்குப் பொறுப்புணர்வுடன் தகவல்களை வெளிப்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றனவோ இன்றைய காலகட்டத்தில் புது ஊடக வரிசையில் வளர்ந்து வருகின்ற சமூக ஊடகங்களால் நாட்டுக்கு பெரிதும் பாதிப்புகளும் அச்சுறுத்தல்களும் உள்ளன என்பதையும் புறந்தள்ளிவிட்டு இதுபோன்ற விடயங்களில் கவனம் செலுத்துவது தவறானதாகும்.

அதனால் அரசாங்கம் எந்தளவிற்கு மரபு ரீதியான ஊடகங்களில் கவனம் செலுத்துகின்றதோ அதே அளவிற்கு தகவல்களை தாராளமயப்படுத்துவதிலும் ஒரு தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். தமது அதிகாரிகளை ஊடகவியலாளர்களுடன் அச்சமின்றி நெருக்கமாக பழகுவதற்கு இருக்கின்ற அச்சநிலையை போக்கும் வகையில் தகவல் வழங்கும் உரிமைச் சட்டத்தை மேலும் பலமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்க போதுமான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தைக்கொண்டு ஊடகங்களைக் கட்டுப்படுத்தி ஊடக சுதந்திரத்தை நசுக்க முற்படாமல் ஆட்சியிலும் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் உறுதிப்படுத்த வேண்டும். தகவல்களை வழங்கவேண்டிய அதிகாரிகளை சுற்றுநிருபங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் கட்டுப்படுத்திவிட்டு ஊடகங்களில் உண்மையை அல்லது உறுதிப்படுத்திக்கொண்ட தகவல்களை எதிர்பார்க்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற தகவல்களில் தவறுகள் இடம்பெற இடமிருக்கின்றது. தகவலோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதிப்புகள் ஏற்பட இடமிருக்கின்றது.

அதேநேரம் அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட மத சுதந்திரத்தைப் பயன்படுத்துவதில் ஊடக சுதந்திரம் செல்வாக்குச் செலுத்துவதாக அமைகின்றது. கடந்த காலங்களில் ஒருசில இலத்திரனியல் ஊடகங்கள் இந்த ஊடக சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தியதை மாத்திரம் காரணமாக வைத்துக்கொண்டு புதிய சட்டங்களைக் கொண்டுவந்து ஊடகங்களுக்கு விலங்கிட முயற்சி எடுப்பதை எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் மக்கள் அனுமதிப்பதில்லை.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட - பொதுமக்கள் எதிர்நோக்கிய பலவிதமான பிரச்சினைகளை ஊடகங்கள் வெளிப்படுத்தியதாலேயே நாடு சரியான திசைக்கு பயணிப்பதை உறுதிப்படுத்த முடியுமாகியது. உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், எரிபொருள் தட்டுப்பாடு, 2020ஆம் ஆண்டுமுதல் நாட்டில் குறிப்பாக பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் ஏற்பட்ட பலவீனங்கள் ஊடகங்களால் வெளிப்படுத்தப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியில் இருக்கவேண்டிய சிறப்பெடுப்பு ஒதுக்கு (எஸ்.டி.ஆர்) வீழ்ச்சி பற்றி பொருளியல் வல்லுனர்களின் கருத்துகளை அடிப்படையாக வைத்து தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன. அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவும், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ராலும் அதனைப் பொருட்படுத்தாமல் இருந்தமை ஊடகங்களால் சுட்டிக்காட்டப்பட்டன. அன்று உடனடியாக இத்தகைய விடயங்கள் குறித்து போதுமான நடவடிக்கை எடுத்திருந்தால் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டிருக்காது. இவ்வாறாக நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகமான பிரச்சினைகளை வெளிப்படுத்துவது ஊடகங்களின் பொறுப்பாக அமைகின்றது. ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள் பற்றி வெளிப்படுத்தப்பட்டது. இவ்வாறான பிரச்சினைகளை வெளிப்படுத்துவதைக் கட்டுப்படுத்தவும் வெளிப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் உத்தேச ஊடக அதிகாரசபைச் சட்டம் பயன்படுத்தப்படலாம் என்ற ஒரே அச்சம் காரணமாகவே எதிர்ப்புகள் வெளிப்பட்டுள்ளன.





'தமிழன்' பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 'தமிழன்' பத்திரிகை அலுவலகத்துக்கு நேரில் விஜயம் செய்து வாழ்த்துகளைத் தெரிவித்தார். இதன்போது 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர், பிரதி ஆசிரியர் உட்பட அனைத்து ஊழியர்களையும் நேரில் சந்தித்த சஜித் பிரேமதாச, பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியடைய தனது வாழ்த்துகளையும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் இன்றைய நிலைக்கு யார் காரணம்?



ஹுதா உமர் அலி

வரிசைகள் ஓய்ந்தாலும் எமது நாட்டில் வறுமை இன்னும் ஒழிந்தபாடில்லை. மக்கள் தனது அன்றாட தேவைகள் எதனையும் பூரணமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியொரு நிலை திடீரென உருவானதா, வேண்டுமென்றே உருவாக்கப்பட்டதா என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இருக்கிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி அல்லது பஞ்சத்துக்கு இதுதான் காரணமென தனித்த ஒரு காரணியையோ, குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியையோ மட்டும் தனித்துக் குறிப்பிட முடியாது. அது பல காரணிகளின் தொகுப்பு, நீண்டகால தாக்கம். இலங்கையில் ஜனநாயகம் இல்லாமற்போனதே இன்றைய தடுமாற்ற நிலைக்குக் காரணம் என்பதே பொருத்தம்.

இதுபற்றி பொருளியல் வல்லுநரும் பொருளியலுக்கான நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியாசென் தான் எழுதிய 'Development as Freedom' என்ற புத்தகத்தில் "மக்களாட்சி (ஜனநாயகம்) செயல்படும் இடங்களில் உலக வரலாற்றில் இதுவரை பஞ்சம் ஏற்பட்டதில்லை" என்று கூறியது எவ்வாறு இலங்கைக்குப் பொருந்திப் போகின்றது என வரலாற்றுக் காலவோட்டத்துடன் பொருத்தி ஒவ்வொன்றாக விரிவாகப் பார்த்தால் முதலில் பஞ்சத்துக்கான காரணங்களென ஏற்கனவே பலர் கூறிய கருத்துகள் சரியா என ஆராயவேண்டியுள்ளது.

பலரும் சொல்வதுபோன்று கொரோனா தொற்று மட்டுமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமா? கொரோனா தொற்றும், அதனைத் தொடர்ந்த ஊரடங்கு, அதனால் ஏற்பட்ட விளைவுகளுமே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என பலரும் சொல்வது சரியா? என பார்க்க வேண்டியுள்ளது. நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலை உலகளவிலோ/ஆசியா அளவிலோ/ தென்னாசிய மட்டத்திலோ எடுத்துப் பார்த்தால், இலங்கையின் தொற்று விகிதம் அல்லது இறப்பு விகிதம் ஒன்றும் மோசமானதாகவில்லை. (மூலம் : https://www.worldometers.info/coronavirus/) பாதிப்பின் அடிப்படையில் இலங்கை 80ஆவது இடத்திலேயே உள்ளது.

இலங்கையின் வருமான மூலங்களான தேயிலை, தைத்த ஆடைகள், சுற்றுலா என்பன இக்காலப்பகுதியில் பாதிக்கப்பட்டதாக அடுத்ததாகச் சொல்லுகிறார்கள். மூன்று வருவாய் மூலங்களில் தேயிலைக்கும், தைத்த ஆடைகளுக்குமான கேள்வியில் (Global demand ) கடந்த இரு ஆண்டுகளை மொத்தமாக நோக்கினால், அதில் பெரிதாகக் குறைவு எதுவும் ஏற்படவில்லை. அவற்றின் உலகளாவிய நுகர்வின் அளவானது நோய்த் தொற்றின் தொடக்க காலத்தில் சற்றுத் தடுமாறியபோதும், பின்னர் வழமைக்கு வந்துவிட்டது. சுற்றுலாத்துறை மட்டுமே கடும் சரிவைச் சந்தித்தது. தனது மொத்த உள்நாட்டு ஆக்கத்தில் (GDP இல்) சுற்றுலாத்துறை வகிக்கும் விகிதாசாரத்தின் அடிப்படையிலான பட்டியலைப் பார்த்தால் முதல் ஐம்பது நாடுகளில் கூட இலங்கையானது இல்லை.

மாலைதீவானது சுற்றுலாத்துறையில் தனது மொத்த உள்நாட்டு ஆக்கத்தில் (GDPஇல் ) 75% அளவுக்குத் தங்கியிருக்க, இலங்கையோ 10.4 சதவீத அளவுக்கே தங்கியிருந்துள்ளது. இது நோய்த் தொற்றுக் காரணமாக பாதியாகக் குறைந்தது (4.9% in 2020) உண்மையே. எனினும், ஏனைய நாடுகளிலும் (குறிப்பாக மேலுள்ள 50 நாடுகளிலும்) கூட சுற்றுலாத்துறையானது வீழ்ச்சியையே சந்தித்துள்ளது.
அந்த நாடுகளில் எல்லாம் பஞ்சம் ஏற்படாமலிருக்க, இலங்கையில் மட்டும் ஏன் இந்த நிலை? இங்குதான் இச்சிக்கலை ஆழமாக நோக்க வேண்டியுள்ளது.
ஏற்கனவே பார்த்தமாதிரி, மக்களாட்சி (Democracy) ஒழுங்காகச் செயற்படாமையே இந்த நிலைக்குக் காரணமாகும்.

மக்களாட்சி நடைபெறும் இடங்களில் பஞ்சம் ஏற்படுவதில்லை என்ற கூற்றை இலங்கைக்கான பொருத்தப்பாடாக நோக்கினால் மக்களாட்சி (Democracy) என்றால் "மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசாங்கம்" என ஆபிரகாம் லிங்கன் கூறியுள்ளார். இன்று அதனை மேலும் மேம்படுத்தி, மக்களாட்சி என்பது முழு மக்களையும் சார்புபடுத்தும் ஒரு முறைமையால் /சார்பாளர்களால் (Elected representatives ) மக்கள் ஆளப்படும் ஒரு முறை என்கின்றோம். இங்கு முழு மக்கள் என்பது எந்தவொரு சிறுபான்மைப் பிரிவினையோ குழுவினையோ ஒதுக்கிவிடக் கூடாது என்பதற்காகவே அழுத்திக் கூறப்படுகின்றது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே சட்டம் எனப் பேசி, பன்முகத்தன்மையை மறுத்து, அதிகாரப் பரவலாக்கலைப் புறந்தள்ளும் எந்த நாட்டிலும் மக்களாட்சி நடைபெறுவதாகக் கொள்ள முடியாது. அவ்வாறான நாடுகள் ஏதோ ஒரு காலத்தில் வந்து சேரவேண்டிய இடத்துக்கே இலங்கை இன்று வந்து சேர்ந்துள்ளது என்பதே உண்மை. இதனை வரலாற்று காலவோட்டத்தில் இலங்கைக்குச் சற்றுப் பொருத்திப் பார்ப்போம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே இலங்கையைத் தாங்கி நின்றது பணப் பயிர்ச்செய்கை எனும் பெருந்தோட்டப் பயிர்களே. தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பயிர்களே




இலங்கையின் முதன்மையான வருமான மூலங்கள். இலங்கை விடுதலையடைந்த பின்பும் அதே நிலைமைதான். இந்தப் பெருந்தோட்டப் பயிர்களே ஒரு காலத்தில் (1948இல் 92%) இலங்கையின் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டித் தந்திருந்தது (Source : Athukorala and Huynh, 1987).

இந்தப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையானது இலங்கையின் மரபுசார் மக்களால் உருவாக்கப்பட்டவையல்ல, மாறாக, இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களால் அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்களால் உருவாக்கப்பட்டது. காடுகளாகவிருந்த நிலங்களைக் கழனிகளாக மாற்ற அவர்கள் தமது உயிர்களையும், குருதியையும் கொடுக்க வேண்டியிருந்தது. கழனிகளாக மாற்றிய பின்பும் அவர்களது உழைப்பைச் சொல்லில் அடக்க முடியாது, அவ்வளவு கடுமையாக உழைத்தனர். அவர்களின் உழைப்பில் இலங்கை வளம் கண்டது, ஆனால், அவர்களது வாழ்விலோ எந்த முன்னேற்றமும் இல்லை.

இவ்வாறு இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கைக்காக உழைத்துக் கொடுத்த மக்களை, திடீரென நாட்டைவிட்டு வெளியேற்ற இலங்கை அரசு முடிவெடுத்தது. இதற்கான ஒரே காரணம், அவர்கள் பேசிய மொழி தமிழ் என்பதுதான். இவ்வாறு நாட்டை வளமாக்கிய ஒரு பெருந்திரள் மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியை இலங்கை அரசு வெளியேற்றியபோதே, அங்கு மக்களாட்சி இறந்துபோய்விட்டது. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான அடிக்கல்லும் நடப்பட்டுவிட்டது.

இவர்களின் நாடு கடத்தலிலும், இனவாத நடவடிக்கைகளிலும் இலங்கை அரசு ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை, ஏனைய சில நாடுகள் இலங்கையின் கோப்பிச் சந்தைப் பங்கைக் கைப்பற்றிக்கொண்டன. இறப்பருக்குப் போட்டியாக, செயற்கை இறப்பர் சந்தைக்கு வந்துசேருகின்றது. இவ்வளவுக்குப் பின்னர் கூட தேயிலை ஏற்றுமதி இலங்கையைத் தாங்கிப் பிடித்தே வந்திருந்தது. இருந்தபோதிலும் எஞ்சியிருந்த மலையகத் தமிழ்த் தோட்டத் தமிழர்களையும் இலங்கை அரசும், கம்பனிகளும் நசுக்கியே வந்தன. இதனால் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டங்களும் வேலைநிறுத்தங்களும் இடம்பெற்றே வந்தன. இதனால் இலங்கையால் முழு வினைத்திறனுடன் தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. எழுபதுகளின் தொடக்கத்தில் அரசாண்ட சுதந்திரக் கட்சி தன்னிறைவுப் பொருளாதார நோக்கில் நகரத் தொடங்கியது. இடதுசாரி அரசியல் பேசிய அவர்களால் கூட, இனவாத அரசியல் செய்யாமலிருக்கவோ/ அடித்தட்டுச் சிங்கள மக்களின் சிக்கலைத் தீர்க்கவோ முடியவில்லை. அப்போது ஜே.வி.பியால் பெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு, இலங்கையே வன்முறைக் களமாக மாறுகின்றது. பின்னர் அப்போராட்டம் ஒடுக்கப்படுகின்றது. சுதந்திரக் கட்சியானது ஆக்கு /அழிந்து போ (Produce or perish) என்ற முழக்கத்துடன் முன்னெடுத்த தன்னிறைவுப் பொருளாதாரம் என்ற






முன்னெடுப்பு உரிய முறையில் நகர்த்தப்படாமையால், இலங்கை விடுதலையின் பின்னரான முதலாவது பஞ்சத்தை எதிர்கொள்கின்றது.

இங்கு ஒவ்வொரு பின்னடைவுகளின் போதும், மக்களாட்சி ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படாமையை நோக்கலாம். ஒழுங்காக மக்களின் குரலைக் கேட்டிருந்தாலோ அல்லது ஊடகங்களின் அறிவுரைக்கமைய செயற்பட்டிருந்தாலோ இந்தப் பின்னடைவுகளைத் தவிர்த்திருக்கலாம் என்பதை நோக்குக. பின்னர் யானை ஆட்சியில் நிலைமை இன்னமும் மோசமடைகின்றது, இனவாதம் தலை விரித்தாடுகின்றது. 1983 இனப்படுகொலை அரசின் மறைமுகத் தாங்கலுடன் இடம்பெறுகின்றது. சிங்கள இனவெறியர்களால் தமிழர்கள் தென்னிலங்கையில் வேட்டையாடப்பட்டு வந்த வேளையில், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர், "போர் என்றால் போர், அமைதி என்றால் அமைதி" என்று கூறிய விடயங்களை மீட்டிப்பார்க்க வேண்டியுள்ளது. இதனை அவர் கூறியது தனது சொந்த நாட்டு மக்களின் ஒரு பிரிவினரைப் பார்த்து. அவ்வாறு ஒரு நாட்டின் தலைவரே கூறும்போது மக்களாட்சி எவ்வாறு நடைபெறும்? ஜே.ஆரை அடுத்து இலங்கையைப் பொறுப்பேற்ற ஆர். பிரேமதாச "போரில் யாரும் வெல்வதில்லை, எல்லோருமே தோற்கின்றனர். அமைதி மூலமே யாரும் வெல்லலாம்" என்று கூறியிருந்தார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் நடைபெற்ற போர், இலங்கையின் வளங்களை எல்லாம் துடைத்து அழித்துவிட்டது. பெரும் சேதங்களுடன் போர் முடிந்தபோதிலும், பாதுகாப்புச் செலவுகள் குறைக்கப்படவில்லை. ஒருவித இராணுவ ஆட்சியின் கீழ் இலங்கையை வைத்திருக்கவே ஆட்சியாளர் விரும்பினர். அதனால் படை அதிகாரிகளே முதன்மையான பொறுப்புகளில் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டார்கள். அவர்கள் இராணுவ மனநிலையிலேயே நிர்வாகத்தை நடத்தினர். மக்களாட்சி என்பது கிஞ்சித்துமில்லை.

எந்தவொரு நாடோ அல்லது நிறுவனமோ வளர்ச்சியடைய வேண்டுமாயின், அங்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டிருக்க வேண்டும். இதுபற்றிய பல முகாமைக் கோட்பாடுகள் வந்துள்ளன. வளர்ந்த நாடுகளில் உள்ளூராட்சி சபைகளுக்கே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதிகாரப்பரவலாக்கலைப் பொறுத்த வரையில் இலங்கையில் பின்நோக்கிய நகர்வே நடந்துள்ளது. அரைகுறையான அதிகாரங்களுடன் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தாமல் முடக்கி வைத்துள்ளமை சிறந்தவொரு எடுத்துக்காட்டாகும்.

இதற்கும் மக்களாட்சி பற்றிய புரிதலின்மையே காரணம். இவற்றையெல்லாம் தாண்டி முக்கிய காரணியாக இருப்பது ஊழலும் அதிகார முறைகேடுகளும். ஆட்சியாளர் செய்த ஊழல்கள் எண்ணற்றவை. அதனைச் சுட்டிக்காட்ட முனைந்த ஊடகவியலாளர்களைக் கூட கொன்ற வரலாறுகள் இலங்கைக்கு உள்ளது. ஜனநாயகத்தின் நான்வது தூணான ஊடகத்தின் நிலை இவ்வாறிருக்கும் ஒரு நாட்டில் மக்களாட்சி எவ்வாறு நடைபெறும்? ஊடகங்களின் வாய் அடைக்கப்பட்ட பின்பு ஊழலுக்கும், அதிகார முறைகேடுகளுக்கும் என்ன குறை இருக்கப்போகின்றது. இப்போதும் ஊடகங்களின் வாயடைக்கும் சட்டமூலங்கள் தயாராகிக்கொண்டுதான் இருக்கின்றன.

நாட்டின் நன்மையைக் கருதாது சகல அரசியல் கட்சிகளும் எந்த எல்லை வரைக்கும் சென்று வாக்கு சேகரிக்கின்றன. சகலருக்கும் இனவாதமே முதன்மையான இலக்கு. ஒரு கட்சி ஒரு திட்டத்தை தான் ஆளும்போது கொண்டுவந்தால் அடுத்துவரும் கட்சி அதனை கேள்வியின்றி மாற்றிவிடும். வாக்கு அரசியலுக்காக பல மக்களைப் பலி கொடுத்த உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு நடந்ததாக பலரும் வாய்திறக்குமளவுக்கு இலங்கை அரசியல் இப்போது மாறிக்கொண்டு வருகிறது. அதேபோன்று கப்பல்களே வர முடியாத இடத்தில் பெரும் துறைமுகம் (அம்பாந்தோட்டைத் துறைமுகம்), ஆட்கள் பெருமளவுக்குப் போகாத இடத்தில் விமான நிலையம் (மத்தள விமான நிலையம்) என்பவற்றை பெரும் செலவில் கட்டுதல், அதற்காக பெருமளவு கடன் வட்டிக்கு வாங்குதல், பின்பு வட்டி கட்டவே வட்டி வாங்குதல் என அடுக்கிக்கொண்டே போகலாம்.

கொரோனா முடக்கல் காலத்தில் கூட, அதனை உரிய முறையில் கையாளாமை. தொற்றுகளைக் கட்டுப்படுத்தக் கூட ஊரடங்கு, படையினரைக் களமிறக்குதல் போன்ற நடவடிக்கைகளையே அரசு எடுத்திருந்தது. மாறாக, ஊரடங்குப் பதில் இன்றியமையாத தேவைகளுக்கு மட்டும் மக்கள் வெளியில் வரக்கூடிய மாதிரியான நடைமுறைகளைக் கொண்டுவந்திருக்கலாம். அப்போதே போதுமான முன்னெடுப்புகளை அரசு எடுக்கவில்லை. நாம் வெளியாரிடம் கடன் பெற்றே காலத்தை ஓட்டிவிடலாம் என்ற நினைப்பிலேயே காலத்தைப் போக்கியமை. இவற்றெல்லாம் விட இயற்கை வேளாண்மைக்கு மாறுதல் எனும் கோமாளிக் கூத்தும் நாட்டில் அரங்கேறியது.

இலங்கையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு என்பன 1977இற்குப் பின்னர் வீழ்ச்சியடைந்தே வந்தன. பால் என்பதே அங்கு அருகி, இறக்குமதியாகும் பால்மாவிலேயே நாடு தங்கியிருந்தது. சிறந்த நெல் வளர்ச்சியுடையதாகவிருந்த இலங்கையானது அரிசிக்கு இறக்குமதியிலேயே தங்கியிருக்கவேண்டிய நிலைக்கு வந்துசேர்ந்தது. அவ்வாறான வேளைகளில் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டிருந்த அரசு அண்மையில் ஒரு நாள், தனது வெளிநாட்டுப் பண இருப்புக் குறைந்ததும் செயற்கைப் பசளைகளுக்கு எல்லாம் தடை விதித்து இயற்கை வேளாண்மைக்குப் போங்கள் என அறிவுறுத்தியது. எவ்வளவு முட்டாள்தனமான செயல்!

தொழில்நுட்ப வளர்ச்சி என்பது ஒரு வகையில் ஒரு வழிப் பாதை. இங்கு திரும்பிப் போவது எளிதானதல்ல. அதுவும் ஒரே நாளில் இயற்கை வேளாண்மை என்றால் முதலில் இன்றைய மக்கள் தொகை முழுவதற்கும் இயற்கை வேளாண்மையால் உணவு போட முடியுமா? என்ற எந்த முறையான ஆய்வுமின்றி இலங்கை அரசு எடுத்த நடவடிக்கை, எஞ்சியிருந்த வேளாண்மையிலும் மண் அள்ளிப் போட்டுவிட்டது.

இவ்வாறு ஒரு நீண்டகாலப் பகுதியில் இலங்கை மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இன்றைய பொருளாதார நெருக்கடிக்குப் பங்களித்துள்ளன என்றபோதிலும், அவற்றுக்கு எல்லாம் அடிப்படைக் காரணம் ஒன்றே. அது இலங்கையில் எழுத்திலிருக்கும் மக்களாட்சி செயலில் இன்மையே அதற்கான காரணம். இனவாத தீ கொடுமையானது. வாக்கு அரசியலை முன்னிருத்தாது மக்கள் பணியை முன்னிருத்த வேண்டியது அவசியமாகிறது.

# மக்களின் சுதந்திரத்துக்கும் அமைதிக்கும் ஜனநாயகத்துக்கும் சவால் விடும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்




■ யூ.எல்.ஏ. மஜிட்

ஒரு நாட்டின் ஜனநாயகம் என்பது அந்நாட்டு மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப் பட்ட அரசியல் முறைமையாகும். தான் ஓர் அடிமையாக வாழ விரும்பாததுபோன்றே ஏனையோரையும் அடிமைப்படுத்தி வாழவும் விரும்பவில்லை. இதுதான் சிறந்த ஜனநாயகமாகும். மக்களை மக்களால் மக்கள் ஆள வேண்டும். அதுவே ஜனநாயகம். இதுக்கு மாறுபட்டது ஜனநாயகமாக இருக்க முடியாது. இது ஆபிரகாம் லிங்கனின் ஆணித்தரமான கருத்தாகும்.

ஒரு நாட்டின் ஆட்சியதிகாரம், நீதி, நியாயம், சட்டம், ஒழுங்கு, சுதந்திரம், மக்களின் இறையாண்மை, மக்கள் பிரதிநிதி சபை, கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரம், கலை, கலாசாரம், மதக் கோட்பாடுகள், மனித உரிமை போன்றவை எவரினதும் தலையீடின்றி சுயமாக செயற்படவேண்டும். இதுவே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும். அவ்வாறான நிலை ஒரு நாட்டில் இல்லையென்றால் அந்த நாடு சிறந்த ஒரு ஜனநாயக நாடாக இருக்க முடியாது என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆனால், அநேகமான நாடுகளில் இதற்கு மாற்றமான ஆட்சிகளே காணப்படுகின்றன.

ஆட்சியாளர்கள் தங்களின் தேவைகளுக்காகவும் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காகவும் பயன் படுத்தப்படுமானால் அவ்வாறான ஒரு நாட்டில் ஜனநாயகம் என்பதையோ சுதந்திர தாகத்தையோ நிம்மதி, அமைதி, சமாதானம், மனிதாபிமானம், புரிந்துணர்வு, இனங்களுக்கிடையிலான நல்லுறவு, மனிதநேயம் போன்றவை இல்லாமலாக்கப்பட்டு மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தையும் அவநம்பிக்கையையும் சந்தேகங்களையும் குளறுபடிகளையும் ஆட்சியாளர்களுக்கெதிரான போராட்டங்களையும் இனவாதத் தாக்குதல்களையும் பிரதேசவாத கெடுபிடிகளையும் ஏற்படுத்துவதோடு சட்டங்களைக் கையிலெடுக்கும் நிலையும் உருவாகலாம். இவ்வாறான சம்பவங்களும் குளறுபடிகளும் அடிதடிகளும் ஆர்ப்பாட்டங்களும் மக்களின் சபையான பாராளுமன்றில் சண்டியர்களால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் மோசமான தாக்குதல் போன்ற சம்பவங்களும் எமது நாட்டில் ஆங்காங்கே இடம்பெற்ற வரலாறுகள் நிறையவே காணப்படுகின்றன.

மேற்படி ஒரு நாட்டின் ஜனநாயகம் சரியாக பேணப்படவில்லையாயின், சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து காணப் படுவதோடு, மேற்கூறப்பட்ட ஜனநாய கத்துக்கு விரோதமான கலவரங்கள் உருவாக நிறையவே வாய்ப்புகள் உள்ளன. ஒரு நாட்டின் சட்டம் என்பது உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஆட்சி செய்பவர்கள், பணம் படைத்தவர்கள், ஏழை எளியோர்கள், பாவலர்கள், பொதுமக்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், சட்டத்தை அமுல்படுத்தும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி, உயர்தரப் பதவிகள் வகிப்போர் போன்ற ஒரு நாட்டில் வாழும் இனத்தவர்களுக்கும் பிரஜைகளுக்கும் சமமானதாகும்.

ஒரு நாட்டின் சட்டம், ஒழுங்கு, நிதி நியாயம் போன்றவற்றுக்கு கட்டுப்பட வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கட்டாய கடமையாகும். அந்தவகையில் மக்களின் வாக்குப் பலத்தால் தெரிவுசெய்யப்படும் அரசாங்கமும் அதன் தலைவர்களும் மக்கள் வழங்கிய ஆணையை மதித்து அதற்கமைவாக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை எந்த முறைகேடுகளுமின்றி நாட்டின் நலன் கருதியும் மக்களின் வாழ்வாதாரத்தை எந்த தடைகளுமின்றியும் கொண்டுசெல்வதற்கும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் வாயிலாக நடவடிக்கை எடுக்கவேண்டியது ஒரு நாட்டின் தலைவரின் தலையாய கடமையாகும்.

அந்தவகையில் பிரித்தானியாவின் பிடியிலிருந்து இலங்கை முற்றிலும் விடுதலை பெற வேண்டும் என்ற நிலையில்தான் இலங்கையில் 1972 முதலாவது அரசியலமைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன் பயனாக இலங்கை தன்னாதிக்கம்கொண்ட நாடாக மாற்றம் பெற்றதுடன், பிரித்தானிய அரசாங்கத்தின் ஆளுமைக்கு கீழ் இல்லாத ஒரு பகுதி குடியரசு அரசியல் யாப்பை கொண்டுவந்ததுடன், 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட புதிய குடியரசு அரசியல் யாப்பின் பேரினவாதத் தன்மைகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

தேசிய அரச பேரவை, மீயுயர் கருவியாக்கப் பட்டு அனைத்து அதிகாரங்களும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய அரச பேரவையில் 157 அங்கத்தவர்களின் 19 பேர் மட்டுமே தமிழர்கள். எனவே, தமிழர்களுக்கு எதிரான அச்சட்டத்தை உருவாக்கும் நிறைவேற்றும் நிலையில் அது இருந்தது. இது விடயத்தில் சோல்பரி அரசியல் திட்டத்தில் செயற்படுத்த முடியாமல் பெயரளவிலாவது இருந்த 29ஆம் பிரிவும் அதிகார சமப்படுத்தலுக்கான கோமறைக் கழகம் நீதிமன்றங்களின் நீதி புனராய்வு அதிகாரம் என்பனவும் நீக்கப்பட்டன.

சிங்கள மொழி அரச கரும மொழியாகவும் சட்டவாக்க மொழியாகவும் இருந்தது. நீதிமன்றங்கள், இணக்க சபைகள், நியாய சபைகள் ஆகிய எல்லாவற்றினதும் மொழி சிங்களமாக்கப்பட்டன. அரச சேவை, நீதிச் சேவை தொடர்பான பொறுப்புகள் அனைத்தும் அவைக்குரிய ஆணைக்குழுவிடமிருந்து அகற்றப்பட்டு ஓர் (சிங்களப் பெரும்பான்மை) அமைச்சரவையில் ஒப்புவிக்கப்பட்டது. பௌத்த மதத்திற்கு விசேட அந்தஸ்து வழங்கப்பட்டது. இது இலங்கையில் 1972இல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பில் பண்டார நாயக்கவின் சிங்கள மட்டும் எனும் சட்டத்தை விடவும் தமிழர்களுக்கெதிராகவும் அவர்களின் உரிமைகளை நசுக்குவதற்காகவும் மேற்படி சட்டங்கள் எந்த மனிதாபிமானமுமின்றி நிறைவேற்றப்பட்டது. ஆனாலும் மேற்படி அரசியலாப்பை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள போவதில்லை எனக் கூறிய த.அ.க. தலைவர் செல்வநாயகம் அவசர அவசரமாக அரசுக்கு ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்தார்.

1. அரசியலமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்படல் வேண்டும்.

2. இலங்கையை மதச் சார்பற்ற அரசாக பிரகடனப்படுத்துவதன் மூலம் எல்லா மதங்களையும் சமமாகப் பேணி வளர்த்தல் வேண்டும்.

3. இந்நாட்டை தம் தாயகமாகக் கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமைச் சட்டங்கள் அரசியலமைப்பில் இடம்பெறல் வேண்டும்.

4. நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டப் படக்கூடிய அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் இடம்பெறல் வேண்டும்.

5. சாதியையும் பிறப்பால் உயர்வு, தாழ்வு கற்பிப்பதையும் அரசியல் யாப்பின் மூலம் ஒழித்தல் வேண்டும்

6. அதிகாரம் பரவலாக்கப்பட்டு மக்கள் பங்குகொள்ளும் ஜனநாயக ஆட்சியமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும்.

ஆனால், மேற்படி கோரிக்கையை அன்றைய பிரதமர் சிறிமா அம்மையாரின் அரசாங்கம்

**இந்நாட்டை தம் தாயகமாக கருதும் தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண குடியுரிமைச் சட்டங்கள் அரசியலமைப்பில் இடம்பெறல் வேண்டும்.**

ஏறெடுத்தும் பார்க்கவில்லை

**1977 பொதுத் தேர்தல்**

இந்த பொதுத் தேர்தலை த.வி.கூ., தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பாக பிரகடனப்படுத்தியது. தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழ் ஈழ தேசிய மன்றம் உருவாக்கப்பட்டு தமிழ் ஈழத்துக்கான முன்னெடுப்புகள் நடைபெறும் என்றும் கூறியது. பின்னர் மு.கா. தலைவர் அஷ்ரப் இந்தக் காலத்தில் த.வி.கூட்டணியில் பீரங்கி பேச்சாளராக இத்தேர்தலில் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உள்ளது என்றும் தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான கல்வி, குடியேற்றங்கள், தமிழ் மொழி உபயோகம், அரசதுறைகளில் வேலைவாய்ப்பு ஆகியவற்றுக்கு சர்வகட்சி மாநாடு மூலமாக தீர்வு காணப்படும் எனவும் குறிப்பிடுகின்றது. இதுபோன்று சி.வ.சு. கட்சியும் பல வாக்குறுதிகளை வழங்குகின்றது.

இவ்வாறு தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்று முதன்முதல் அங்கீகரிக்கப் பட்ட இத்தேர்தலில் த.வி.கூ. கல்குடா தேர்தலை தொகுதியை தவிர, அனைத்திலும் வெற்றிபெறுகின்றது. ஆனால், த.வி.கூ. நிறுத்திய முஸ்லிம் வேட்பாளர்கள் அனைவரும் தோல்வியடைகின்றனர். ஐ.தே.க. 5/6 வெற்றி பெற ஸ்ரீல.சு.க. எட்டு ஆசனங்கள் மட்டும் பெற்று படுதோல்வியடைய பாராளுமன்றில் எதிர்க்கட்சியின் தலைமைப் பதவி த.வி.கூட்டணியை வந்தடைகின்றது.

எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் பதவியேற்று பாராளுமன்றத்தில் முதலாவது கூட்டத்தில் தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தமக்கு தந்த தனிநாட்டுக்கான ஆணையைப் பிரகடனப்படுத்துகின்றார். இந்நிலையில், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிக்கான அரசியலமைப்பைக் கொண்டுவருகின்றது. இதில் மத்திய அரசாங்கத்தில் ஜனாதிபதியின் பதவியில் அதிகாரங்கள் எல்லாம் குவிக்கப்பட்டு ஒற்றையாட்சி அம்சங்கள் உறுதியாக பேணப்பட்டன. மொழி, மதம், குடியேற்றங்கள் போன்ற என்னென்ன விடயங்களில் தமிழ் மக்கள் முன்பு முரண்பட்டு நின்றார்களோ அவற்றை எல்லாம் தனக்குள் கொண்டதாக இருந்தது. அவற்றைப் பாதுகாக்கக்கூடிய வகையில் உறுதியான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இதனடிப்படையில் பின்வரும் விடயங்களில் அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவர வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை உடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு மக்கள் தீர்ப்பு ஒன்றின் (சர்வஜன வாக்கெடுப்பு) மூலம் மக்களின் சம்மதமும் அவசியம் எனக் கூறப்பட்டது.

1. இலங்கை குடியரசு ஓர் ஒற்றையாட்சி அரசு என்பதை மாற்றுதல்.

2. இலங்கை குடியரசின் இறைமை சம்பந்தமான ஏற்பாடுகளை மாற்றுதல்.

3. இலங்கை குடியரசின் தேசிய கொடியை மாற்றுதல்.

4. இலங்கை குடியரசின் தேசிய கீதத்தை மாற்றுதல்.

5. பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட முதன்மை ஸ்தானத்தை மாற்றுதல்.

**1979இல் பயங்கரவாதத் தடைச்சட்டம்**

தமிழ் இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின் மூலம் படையினர் சித்திரவதை செய்து பெறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாகக் கொள்ள முடியும். நீண்டநாட்களுக்கு தடுப்புக் காவலில் வைக்க முடியும். நீதி விசாரணையின்றி சடலங்களை அடக்கம் செய்ய முடியும். இந்தச் சட்டத்துடன் அவசரகால சட்டத்தின் கீழ் பத்திரிகை தணிக்கையும் கொண்டு வரப்பட்டது. மேற்படி சட்டமானது - குறிப்பாக, தமிழ் மக்களுக்கிடையே பாரிய பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியதுடன், பயங்கரவாதம் என்ற பெயரில் எதுவும் அறியாத அப்பாவித் தமிழ் மக்கள் படைத்தரப்பினர்களால் கண்ட கண்ட இடங்களில் கைதுசெய்யப்பட்டதுடன், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் எந்த விசாரணைகளுமின்றி நீண்ட நாட்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

1979 ஜூலை மாதம் நடைமுறைப்படுத்தப் பட்ட பயங்கரவாதச் சட்டமும் 36 வருட காலமாக சிறு சிறு இடைவெளிகளுடன் நடைமுறையில் இருந்துவந்த அவசரகால பிரகடனமும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை அடியோடு மறுத்தன. இவ்வாறுதான் இந்நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நடைமுறைக்கு வந்ததிலிருந்து 45 வருட காலமாக அந்தப் பதவியில் இருந்த அனைத்து ஜனாதிபதிகளும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் செயற்படாது தங்களின் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவும் தங்களுக்கு எதிராக செயல்படுவர்களை சிறையில் அடைப்பதற்காவுமே தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்திய சம்பவங்களே கடந்த 45 வருட கால ஜனாதிபதி நிர்வாகத்தில் காணப்படுகின்றன. அத்துடன், இந்த நிர்வாகத்தின் கீழ் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் ஊடகத்துறையில் பணியாற்றுவோர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், பல எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் அரசாங்கக் குண்டர்களால் தாக்கப்பட்டார்கள், கொலைசெய்யப்பட்டார்கள், கடத்தப்பட்டு காணாமலாகப்பட்டார்கள்.

இதன் காரணமாக நாட்டில் வாழும் மக்கள் அறிந்துகொள்ளக்கூடிய நாட்டு நடப்புகள் மறுக்கப்பட்டதுடன், பேச்சு சுதந்திரம், எழுத்து கருத்துச் சுதந்திரத்துக்கு பெரும் சவால் விடுக்கப் பட்டதுடன், மாற்றுக்கருத்துடையவர்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கருத்துகளை வெளியிடுவதற்கும் அஞ்சினார்கள். அவ்வாறான அச்சமும் பீதியும் எழுத்தாளர்களுக்கும் உண்மை நிலைமையை மக்களுக்கு சொல்பவர்களுக்கும் பிரத்தியேக ஊடகவியலாளர்களுக்கும் கருத்துகளைப் பரிமாறியவர்களுக்கும் கொலை அச்சுறுத்தல் போன்ற மேலும் பல மிரட்டல்கள் போன்ற சம்பவங்கள் முன்னாள் ஜனாதிபதிகளான ஆர்.பிரமேதாச மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்திலேயே ஊடகத்துறை பாரிய சவால்களுக்கு முகஞ்கொடுக்கலாகின.

இவ்வாறு நிறைவேற்றதிகாரத்தில் பயணித்த ஜெயவர்தன, பிரேமதாச. டீ.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ அனைவரும் தங்களின் அதிகாரத்தை தங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்தியதுடன், சர்வதிகார முறையில் செயல்படவும் முயற்சித்தனர். இதில் ஒன்றுதான் 2018இல் மைத்ரிபால சிறிசேன, ஜே.ஆர்.ஜெயவர்தன செய்யாத வேலையை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி 52 நாட்கள் நாட்டையும் நாட்டு மக்களையும் குளறுபடிக்குள் உள்ளாக்கினார். குறிப்பாக, இந்நாட்டில் மிகவும் மோசமான இனவாதத் தாக்குதல் உட்பட மக்களின் சுதந்திரம், இறையாண்மை, சட்டம், ஒழுங்கு, எழுத்து, பேச்சு, கருத்துச் சுதந்திரம் போன்றவை 2005ஆம் ஆண்டுக்குப் பின்னரே சொல்லவொண்ணா அச்சுறுத்தலுக்குள்ளாகி இருந்தன.

இந்த நிலைமையில் நாட்டின் எதிர்வரிசையில் இருந்த ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிகா பண்டாரநாயக்க, கோட்டாபய போன்றவர்களின் நிர்வாகத்தில் காணப்பட்ட அடக்குமுறைகள், சர்வாதிகார திணிப்புகள், முஸ்லிம் மக்களுக்கெதிராக தொடுக்கப்பட்ட தாக்குதல் போன்ற அரசாங்கத்தின் கண்மூடித் தனமான செயற்பாடுகளைக் கண்டித்து அவர்களுக்கெதிராக குரல் எழுப்பினார்.

தனது 46 வருட அரசியல் பயணத்தில் படுதோல்வியை சந்தித்த அவருக்கு கடந்த 2022 ஜூலை மாதம் கோட்டாவின் வெளியேற்றத்தின் பின் பாராளுமன்றில் மொட்டு அணியை சார்ந்த 135 பேர் போட்ட மாலையால் எட்டாவது ஜனாதிபதியாக பதவி

**அரசியலமைப்பில் சிங்கள மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே இடம் தமிழ் மொழிக்கும் அளிக்கப்படல் வேண்டும்**

ஏற்று இந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு எதை எதையெல்லாம் செய்யவேண்டும் என்று அவர் நினைக்கிறாரோ அவற்றையெல்லாம் படிப்படியாக நடைமுறைப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறார்.

இதில் ஒன்றுதான் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாகும். மேற்படி சட்டமானது 1979இல் அமுலுக்கு வந்த நிலையில், இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி பெரும்பான்மையாகக்கொண்டுள்ள சிங்கள மக்களின் மத்தியிலும் பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக, மக்கள் விடுதலை முன்னணியைச் சார்ந்தவர்கள் இந்தச் சட்டத்தின் கெடுபிடிக்கு முகங்கொடுக்க நேரிட்டது. ஆனாலும் 2009இல் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் நிறைவற்ற நிலையில் சக்தி இழந்து கிடந்த மேற்படி பயங்கரவாதச் சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காகவும் தமக்கு எதிராக எடுக்கப்படும் மக்கள் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்கும் புதிய வடிவில் தயாரித்து பாராளுமன்றில் விஜயதாச ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கும் வாய்ப்பூட்டு போட ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உண்மையாகவே ஒரு நாட்டின் ஆட்சியதிகாரம், நீதி, சட்டம், ஒழுங்கு, மக்களின் இறையாண்மை, சுதந்திரம், கருத்துகள், எழுத்துகள், பேச்சுகள், ஜனநாயக சிறப்புகள் ஒரு நாட்டில் சீராக இல்லையெனில், அந்த நாட்டில் ஜனநாயகத்துக்கு மாற்றமான அராஜகங்களும் அடக்குமுறைகளும் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் மக்கள் மத்தியில் பிரதேச வாத கெடுபிடிகளும் குழப்பங்களும் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டங்களும் தலைதூக்குவதோடு நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து சர்வதிகார ஆட்சிக்கு வழிசமைப்பதுடன், அவ்வாறான ஒரு நாட்டில் சிறந்த மக்கள் விரும்பக்கூடிய - நேசிக்கக்கூடிய ஜனநாயக ரீதியிலான ஆட்சி இல்லை என்பதே அர்த்தமாக அமையும்.

ஆகவே, ஒரு நாட்டின் ஆட்சியதிகாரம் அனைத்தையும் நாட்டு மக்களே தங்களின் பெறுமதிமிக்க வாக்குரிமையால் வழங்குகின்றனர். அத்துடன் ஒரு நாட்டின் தலைவருக்கான அதிகாரத்தையும் மக்களே வழங்குகின்றனர். அந்தவகையில் ஒரு நாட்டின் சட்ட யாப்பு என்பது யாவருக்கும் சமமானதாகும். சட்டம் ஒருபோதும் யாருக்கும் அடிமையாகாது. ஆனால், சட்டத்துக்கு நாம் அனைவரும் அடிமையாக வேண்டும். இதுதான் நியதியாகும். அந்தவகையில் குறிப்பாக ஒரு நாட்டுத் தலைவருக்கு நாட்டு மக்கள் அதிகாரத்தை கொடுக்கின்றனர். அந்த அமானிதப் பொறுப்பை எப்படியும் பயன்படுத்தலாம். ஆனால், நாட்டின் சட்டத்தை அவர் விரும்பியபடி பயன்படுத்த முடியாது. மாறாக, அந்த சட்டதிட்டங்களுக்கு அமைவாக அவர் செயல்பட வேண்டும்.

1979இல் நடைமுறைக்கு வந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் 2009இல் யுத்தம் முடிவுற்ற நிலையில், பெயரளவில் காணப்பட்ட மேற்படி சட்டத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயங்கர வாதச் சட்டத்தை புதுப்பித்து மீண்டும் பாராளுமன்றில் சமர்ப்பித்ததுடன் மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கும் வாய்ப்பூட்டு போட அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இவை யாவும் ஜனாதிபதிக்கு எதிராகவும் அரசாங்கத்துக்கு எதிராகவும் மக்களால் எடுக்கப்படும் போராட்டங்களையும் அவர்களால் முன்வைக்கப்படும் கருத்துச் சுதந்திரத்தையும் இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்காகவே மேற்படி சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டாமென பல தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். உண்மையாகவே ஜனாதிபதி மேற்படி சட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதை விடுத்து மக்களுக்கு பயன்பெறக் கூடிய நல்ல திட்டங்களைக் கொண்டுவந்து பொருளாதார வீழ்ச்சியில் அகப்பட்டு தத்தளிக்கும் நாட்டையும் மக்களையும் சிறந்த ஒரு நிலைக்குக் கொண்டுவர வேண்டியதே இன்றைய அவசியமானதும் அவசரமானதுமான தேவையாகும்.

குறிப்பாக ஒரு நாட்டில் அரசியல் ரீதியாக பல கட்சிகள் காணப்படுகின்றன. அந்த வகையில் ஒரு பாராளுமன்றத் தேர்தலிலோ அல்லது ஒரு ஜனாதிபதித் தேர்தலிலோ எல்லா மக்களும் ஒருவருக்கு வாக்களிப்பதும் இல்லை, ஆதரவாக இருப்பதும் இல்லை. தங்களின் வாக்குரிமையை விரும்பியவர்களுக்கு வழங்கி அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் தெரிவுசெய்கின்றனர். அந்த வகையில் வாக்களித்து அதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர்களுக்கு மட்டுமன்றி எதிராக வாக்களித்த அனைவருக்கும் தெரிவுசெய்யப்படும் அரசாங்கம் அல்லது ஜனாதிபதியே பொறுப்பானவர்கள். இதனை ஆட்சியில் இருக்கும் அரசாங்கமோ ஜனாதிபதியோ பிரித்துப் பார்க்கக்கூடாது. எல்லா மக்களுக்கும் பொறுப்புடையவர்கள் என்றவகையில் எல்லா மக்களையும் சமமாக கணித்து அவர்களுக்கான தேவைகளையும் அவர்களது எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவது அவர்களின் தலையாய கடமையாகும். மாறாக, மேற்படி சட்டங் களை நடைமுறைப்படுத்தி மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் ஊடக தர்மத்தையும் ஜனாதிபதியும் அரசாங்கமும் நசுக்க முற்பட்டால் மக்களின் பாரிய எதிர்வலைகளை சந்திக்க நேரிடுவதோடு, ரணிலின் தலைமையிலான ஐ.தே.க. கடந்த 2020இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நாடுபூராகவும் பெற்ற 2,46,863 வாக்குகளை கூட இழக்க நேரிடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# டைட்டன் நீர்மூழ்கி வெடித்து 5 பேரும் இறந்தது எப்படி?

ஆண்டுகளுக்கு முன் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலைக் காண்பதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்ற டைட்டன் நீர்மூழ்கி உள்ளுக்குள்ளேயே வெடித்து இருந்த 5 பேரும் உயிரிழந்து அமெரிக்க கடலோரப்படை டைட்டானில் ஓர் வெடிப்பு நடந்திருப்பதாக கடலோரப்படை கூறுகிறது.



சிதறியதில் அதில் விட்டதாக அறிவித்துள்ளது. அழிவுகரமான அமெரிக்க

இது அமெரிக்கா, கனடா, நாடுகளின் குழுக்கள் கடந்த பெரிய அளவிலான மீட்புப் பணிகளை

பிரெஞ்சு ஐந்து நாட்களாக தேடல்,



கடந்த அமெரிக்கக் டைட்டானிக் குப்பைகளுக்கு பெரிய துண்டுகளை இது நீர்மூழ்கியின் வெடித்திருப்பதைக்

மேற்கொண்டு வந்தன. வியாழக்கிழமை மாலை கடலோரப்படை, தளத்தைச் சுற்றியுள்ள மத்தியில் டைட்டனின் ஐந்து கண்டுபிடித்ததாகக் கூறியது.



அழுத்த அறை காட்டுவதாகக் கூறியது.

உயிரிழந்தவர்களின் இரங்கல் தெரிவித்துள்ள அவர்களின் உடல்கள் எப்போதாவது உறுதிப்படுத்த முடியாது என்று

குடும்பத்தினருக்கு கடலோரப்படை, மீட்கப்படுமா என்பதை கூறியது.

ரிமோட் மூலம் இயக்கப்படும் வாகனங்கள் (ROVs) தளத்தில் இருக்கும் என்றாலும், அடுத்த 24 மணிநேரத்தில் தேடுதல் பணி படிப்படியாக நிறுத்தப்படுகிறது.



ஓஷன்கேட் நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டது என்ன?

அமெரிக்கக் கடலோரப்படையின் செய்தியாளர் சந்திப்புக்கு முன்னதாக, டைட்டானை இயக்கும் ஓஷன்கேட் நிறுவனம் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

“எங்கள் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டாக்டன் ரஷ், ஷாஜதா தாவூத் மற்றும் அவரது மகன் சுலேமான் தாவூத், ஹமிஷ் ஹார்டிங் மற்றும் பால்-ஹென்றி நர்ஜோலெட் ஆகியோரை துரதிர்ஷ்டவசமாக இழந்துவிட்டோம் என்று நாங்கள் இப்போது நம்புகிறோம்” என்று நீர்மூழ்கியை இயக்கும் ஓஷன்கேட் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

“இந்த மனிதர்கள் உண்மையான ஆய்வாளர்கள், அவர்கள் தனித்துவமான சாகச உணர்வையும் உலகின் கடல்களை ஆராய்வதற்கும் பாதுகாப்பதற்கும் ஆழ்ந்த ஆர்வத்தையும் கொண்டவர்கள்.. இந்த துயரமான நேரத்தில் எங்கள் இதயங்கள் இந்த ஐந்து ஆன்மாக்களுடனும் அவர்களது குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருடனும் உள்ளன. அவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்.

மீட்புப் பணியில் மிகவும் கடினமாக உழைத்த சர்வதேச சமூகத்தின் பல அமைப்புகளைச் சேர்ந்த எண்ணற்ற ஆண்களுக்கும் பெண்களுக்கும் முழு OceanGate குடும்பமும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீர்மூழ்கியில் பயணித்தவர்கள் யார் யார்?

காணாமல் போன நீர்மூழ்கியில் 3 சுற்றுலாப் பயணிகள், ஒரு ஓட்டுநர், ஒரு சுற்றுலா வழிகாட்டி ஆகிய 5 பேர் இருந்தனர்.

ஹாமிஷ் ஹார்டிங் - 58 வயதான இவர் பிரித்தானியாவைச் சேர்ந்த பெரும் தொழிலதிபர். சாகசப் பிரியரான இவர் விண்வெளிப் பயணத்துடன் பல முறை புவியின் தென் முனைக்கும் சென்று திரும்பியுள்ளார்.

ஷாஸாதா தாவூத் - 48 வயதான இவர் பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானிய கோடீஸ்வரர்.

சுலேமான் தாவூத் - ஷாஸாதா தாவூத்தின் மகன், 19 வயதேயான இவர் ஒரு மாணவர்

பவுல் ஹென்றி நர்கோலெட் - 77 வயதான இவர் பிரெஞ்சு கடற்படையில் சாரதிப் பணியில் இருந்தவர். டைட்டானிக் சிதைவுகளில் அதிக நேரம் ஆய்வு மேற்கொண்டவர். முதல் பயணத்தில் இடம் பெற்றவர் ஆகிய பெருமைகளைக் கொண்ட இவருக்கு மிஸ்டர் டைட்டானிக் என்ற பட்டப்பெயரும் உண்டு.

ஸ்டாக்டன் ரஷ் - 61 வயதான இவர்தான் இந்த டைட்டானிக் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்த ஓஷன் கேட் நிறுவனத்தின் நிறுவுநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி.

எப்படி விபத்து நடந்தது?

அமெரிக்க கடலோரப்படையின் ரியர் அட்மிரல் ஜான் மௌகரின் கூற்றுப்படி, அவர்கள் கண்டறிந்தது ஒரு “பேரழிவு வெடிப்பு” நடந்திருப்பதைக் காட்டுகிறது.

ஏனென்றால், இரண்டு பாகங்களை அவர்கள் கண்டுபிடித்தனர். ஒன்று டைட்டனின் வால் கூம்பு மற்றும் மற்றொன்று அதன் தரையிறங்கும் சட்டகம் ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது கப்பல் சிதறியதாகத் தெரிய வருகிறது.

இது ஏன் நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இதுவரை கிடைத்திருக்கும் பாகங்களைக் கொண்டு ஆய்வு செய்யப்படும் என்று மீட்புக் குழு நிபுணர்கள் கூறுகிறார்கள்.

“கறுப்புப் பெட்டி எதுவும் இல்லை.எனவே கப்பலின் கடைசி நகர்வுகளை உங்களால் கண்காணிக்க முடியாது” என்று அவர்கள் கூறுகிறார்கள். அதனால் விசாரணையின் செயல்முறை விமான விபத்து போன்றதாக இருக்காது.

புலனாய்வாளர்கள் கிடைத்திருக்கும் துண்டுகளை மேற்பரப்புக்குக் கொண்டு வந்ததும் அந்த கடைசி தருணங்களில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளும் வகையில் அதை ஆய்வு செய்வார்கள்.

நீர்மூழ்கியின் பாகங்கள் நுண்ணோக்கின் கீழ் கவனமாக ஆராயப்படும். எந்த இடத்தில் வெடிப்பு ஏற்பட்டது, பிளவு எங்கே தொடங்கியது என்பது அதன் மூலம் கண்டுபிடிப்பார்கள்.

தந்தைக்காக நீர்மூழ்கியில் சென்ற மகன்

நீர்மூழ்கியில் சென்று உயிரிழந்தவர்களுள் பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தையும் மகனும் அடங்குவார்கள். பிரித்தானியதொழிலதிபர் ஷாஜதா தாவூத் பாகிஸ்தானின் பணக்கார குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். இவர் தனது மகன் சுலைமானுடன் நீர்மூழ்கியில் பயணம் செய்தார்.

தாவூத் தனது மனைவி கிறிஸ்டின் மற்றும் மகள் அலினாவுடன் தென்மேற்கு லண்டனில் உள்ள சர்பிட்டனில் வசித்து வந்தார். நீர்மூழ்கியில் செல்வதற்கு முன்பு இவர்கள் குடும்பம் கனடாவில் ஒரு மாத காலம் தங்கியிருந்தது.

ஷாஜதா ஒரு பெரிய உர நிறுவனமான என்க்ரோ கார்ப்பரேஷன் என்ற பாகிஸ்தானின் கூட்டு நிறுவனத்தின் துணைத் தலைவராக இருந்தார்.

அவர் தனது குடும்பத்தின் தாவூத் அறக்கட்டளை மற்றும் கலிபோர்னியாவை தளமாகக் கொண்ட SETI இன்ஸ்டிடியூட் உடன் பணிபுரிந்தார். இது ஏலியன்கள் பற்றி ஆராய்ச்சி செய்யும் நிறுவனம்.

ஷாஜதா மூன்றாம் சார்ள்ஸ் அரசால் நிறுவப்பட்ட இரண்டு தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்பவராகவும் இருந்தார். அரண்மனையில் இருந்து அவருக்கு மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஷாஜதாவின் குடும்பத்தினர், அவர் “வெவ்வேறு இயற்கை வாழ்விடங்களை” ஆராய்வதில் ஆர்வமாக இருந்ததாகவும் இதற்கு முன்பு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஒக்ஸ்போர்ட் யூனியன் ஆகிய இரண்டிலும் பேசியதாகவும் கூறினார்.

அவர் அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியாவிலும் இங்கிலாந்தில் உள்ள பக்கிங்ஹாம் பல்கலைக்கழகத்திலும் படித்தார்.

அவரது மகன் சுலேமான் கிளாஸ்கோவில் உள்ள ஸ்ட்ராத்க்லைட் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தார், அங்கு அவர் பல்கலைக்கழகத்தின் வணிகப் பள்ளியில் தனது முதல் ஆண்டை முடித்திருந்தார்.

நீர்மூழ்கிப் பயணம் குறித்து பயங்கரமானதாக உணர்ந்ததாகவும் எனினும் தனது தந்தையின் மகிழ்ச்சிக்காக அவருடன் சென்றதாகவும் சுலேமானின் அத்தை தெரிவித்திருந்தார்.




# ‘டைட்டன் நீர்மூழ்கி’ பாதுகாப்பானதா? அது எப்படி இயங்குகிறது?

'டைட்டன் நீர்மூழ்கி' அதன் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னால், கப்பலின் துணைக் குழுவினரால் பயணத்துக்கான ஏற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

ஆழ்கடலுக்குள் நீர்மூழ்கி இறங்குவதற்கு முன்னால், துணைக்குழுவினர் அதை வெளியிலிருந்து பூட்டி, பின் போல்ட் மூலம் மூடினர்.

பின் ஆழ்கடலுக்குள் இறங்கிய நீர்மூழ்கி டைட்டானிக் கப்பல் சிதைந்து கிடக்கும் பகுதிக்குள் சென்றுகொண்டிருந்தபோது, அது தன்னுடைய தகவல் தொடர்பை இழந்தது. இந்த நீர்மூழ்கி ஓஷன்கேட் என்னும் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமானது.

தற்போது நீர் மூழ்கியில் இருந்த அனைவரும் இறந்துவிட்டனர்.

**‘டைட்டன் நீர்மூழ்கி’ - ஒரு பார்வை**

கடல் மட்டத்துக்குக் கீழே 4000 மீட்டர் ஆழத்தை அடையும் திறன் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களில் ‘டைட்டன் நீர்மூழ்கியும்’ ஒன்று. இத்தகைய திறன்கொண்ட நீர்மூழ்கியை, ஓஷன்கேட் என்ற தனியார் நிறுவனம் சொந்தமாக வைத்திருக்கிறது.

‘டைட்டன் நீர்மூழ்கியை’ போலவே ‘சைக்ளாப்ஸ்’ என்ற நீர்மூழ்கியையும் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஓஷன்கேட் நிறுவனம் இயக்கி வருகிறது. ஆனால் ‘டைட்டானிக் சேதத்தை’ பயணிகள் பார்வையிடுவதற்காகவே அந்த நிறுவனத்தால் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டதுதான் இந்த ‘டைட்டன் நீர்மூழ்கி’.

‘டைட்டன் நீர்மூழ்கி சுமார் 10,432 கிலோ எடையளவைக் கொண்டது. மேலும் இரண்டு குவிமாடம் கொண்ட கார்பன் ஃபைபர் மற்றும் டைட்டானிய மூடிகளோடு,13 செ.மீ அளவுக்கு ஏரோஸ்பேஸையும் இது கொண்டுள்ளது.

இதனால் கடலுக்கு அடியில் சுமார் 4000 மீட்டர் (13,123 அடி) ஆழத்துக்கு டைட்டன் நீர்மூழ்கியால் செல்ல முடியும்.

டைட்டானிக் கப்பலின் சிதைந்த பாகங்கள் கடலின் மேற்பரப்பில் இருந்து 3,800 மீட்டர் ஆழத்தில் கிடக்கின்றன. டைட்டன் நீர்மூழ்கியால் அதைச் சென்றடைய முடியும்.

**டைட்டன் நீர்மூழ்கி எப்படி இயங்குகிறது?**

‘ஏனைய நீர்மூழ்கிக் கப்பல்களைப் போல் அல்லாமல், டைட்டன் நீர்மூழ்கி குறைந்தளவு சக்தியைக் கொண்டே இயங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதேநேரம், அது தன்னுடைய இயக்கத்தைத் தொடங்குவதற்கும் நிறுத்துவதற்கும் மற்றொரு தனி கப்பலின் துணையும் ஆதரவும் அதற்குத் தேவைப்படும்’ என அமெரிக்க தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2018ஆம் ஆண்டு, டைட்டன் நீர்மூழ்கி முதன்முதலாக அதன் சோதனை ஓட்டத்தைத் தொடங்கியது. அதன் பின் 2021ஆம் ஆண்டு முதல் அதன் அதிகாரப்பூர்வ பயணம் தொடங்கப்பட்டது.

கடந்த ஆண்டு மட்டும் டைட்டன் நீர்மூழ்கி 10 ஆழ்கடல் பயணங்களை மேற்கொண்டுள்ளது. ஆனால் இந்தப் பயணங்கள் அனைத்துமே டைட்டானிக் கப்பல் சிதைந்து கிடக்கும் பகுதிக்குச் சென்றவை அல்ல.

கப்பல் ஏவுதளத்திலிருந்து புறப்படுவது முதல் மீண்டும் மேற்பரப்புக்குத் திரும்புவது வரை மணிக்கு சுமார் 4 கிமீ வேகத்தில் ‘டைட்டன் நீர்மூழ்கி’ பயணிக்கிறது.

**கப்பலுக்குள் வடிவமைப்பு எப்படியிருக்கும்?**

இந்த நீர்மூழ்கியின் உட்பரப்பு மிகவும் குறுகலாகக் காணப்படுகிறது. வெறும் 670 செ.மீ x 280 செ.மீ x 250 செ.மீ (22 அடி x 9.2 அடி x 8.3 அடி) என்ற கணக்கில் மட்டுமே இதன் கொள்ளளவு இருக்கிறது.

ஒரே நேரத்தில் ஓட்டுநர் உட்பட மொத்தம் 5 பேர் மட்டுமே இதில் பயணிக்க முடியும். ஆனால் இந்த அளவு ஏனைய நீர்மூழ்கிக் கப்பல்களைவிட பெரியது எனக் கூறப்படுகிறது.

கப்பலின் முன்புறத்தில் உள்ள குவிமாடத்தில் ஒரு பெரிய துவாரம் (porthole) இருக்கிறது. அதன் மூலம் நாம் கடலுக்குள் செல்லும் வழியைப் பார்க்க முடியும். இந்தத் துவாரத்தின் அளவு மற்ற எந்த நீர்மூழ்கிகளிலும் இருப்பதைவிட மிகப் பெரியது என அதன் நிறுவனமான ஓஷன்கேட் தெரிவிக்கிறது.

அதேபோல் அத்தகைய ஆழத்தில், நிலைமைகள் மிகவும் குளிராக மாறும் என்பதால், இந்த நீர்மூழ்கியின் சுவர்கள் தொடர்ந்து தன்னைச் சூடாக்கிக்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சுவர்களில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகள் மட்டுமே இந்த பயணத்தின்போது கிடைக்கும் ஒளியின் ஒரே ஆதாரமாக இருக்கின்றன.



நீர்மூழ்கியின் முன்பக்கத்தில் பயணிகளுக்காக சிறியளவில் கழிவறையும் இருக்கிறது. பயணத்தின்போது ஒருவர் கழிவறையை உபயோகிக்க வேண்டுமென்றால், உள்ளே சென்று அங்கிருக்கும் திரைச்சீலைகளை இழுத்துவிட்டுக்கொள்ள வேண்டும். அப்போது மற்றவர்களுக்குத் தொந்தரவு இல்லாமல் இருப்பதற்காக கப்பலின் ஓட்டுநர் மெல்லிய இசையை ஒலிக்க விடுவார்.

ஆனாலும் இத்தகைய அசாதாரண ஆழ்கடல் பயணத்துக்குத் தயாராகும்போது, பயணிகள் தங்களது உணவுப் பழக்கங்களில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என ஓஷன்கேட் நிறுவனம் அதன் அதிகாரப்பூர்வ இணையத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அதேபோல் டைட்டானிக் கப்பல் சிதலமடைந்து கிடக்கும் பகுதியை அடைந்த பிறகு, அதன் காட்சிகளை ஒளிரச் செய்யும் வகையில் நீர்மூழ்கியின் வெளிப்புறத்தில் சக்தி வாய்ந்த விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அதோடு அந்தக் காட்சிகளைப் பதிவு செய்வதற்காக 4K கேமராக்களும் அதில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் கப்பலின் பாதையை நிர்ணயிக்க வெளிப்புற லேசர் ஸ்கேனரும் சோனாரும் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தத் தகவல்கள் அனைத்தும் பதிவு செய்யப்படுவதை நீர்மூழ்கிக்குள் இருக்கும் பெரிய டிஜிட்டல் திரையில் பயணிகளால் காண முடியும்.

டைட்டன் நீர்மூழ்கியில், 96 மணிநேரத்துக்குத் தேவையான ஆக்ஸிஜன் இருப்பு வைக்கப்பட்டிருக்கும். ஆனாலும் இந்தப் பயணத்தின்போது பயணிகளின் சுவாச வீதத்தில் மாறுபாடு ஏற்படலாம்.

நீர்மூழ்கியின் பெரும்பாலான உட்பகுதி “off-the-shelf technology”இல் வடிவமைக்கப்பட்டிருப்பதாக அதன் நிறுவனம் ஒப்புக்கொள்கிறது. இது இந்த கப்பலின் கட்டுமானத்தை சீரமைக்கவும் இதை எளிதான முறையில் இயக்கவும் பயன்படுகிறது எனவும் அந்நிறுவனம் குறிப்பிடுகிறது.

**டைட்டன் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகிறது?**

கடலின் ஆழத்துக்குச் செல்லும் இத்தகைய நீர்மூழ்கிக் கப்பல்களில் ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தை நம்மால் பயன்படுத்த முடியாது.

அதற்குப் பதிலாக, ஒரு பிரத்தியேக வகையில் செய்தி பரிமாரப்படும் அமைப்பு செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலமாக கடலின் மேற்பரப்பில் இருக்கும் குழுவுடன் நீர்மூழ்கிக்குள் இருப்பவர்கள் அறிவுறுத்தல்களைப் பெற முடியும்.

இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நீர்மூழ்கியின் ஓட்டுநர் கப்பலைச் செலுத்துகிறார். வீடியோ கேம் கண்ட்ரோலர் போல இருக்கும் ஒரு சாதனத்தின் மூலம் அவர் நீர்மூழ்கியைத் தனது கட்டுப்பாட்டில் கடலுக்குள் செலுத்துகிறார்.

தற்போது தொலைந்து போயிருக்கும் டைட்டன் நீர்மூழ்கியின் ஓட்டுநர் ரஷ், கடந்த ஆண்டு சிபிஎஸ் செய்தி நிறுவனத்திடம் பேசும்போது, நீர்மூழ்கியை இயக்குவது அவ்வளவு சிரமமான காரியமல்ல என்று தெரிவித்திருந்தார்.

**பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?**

கடலின் ஆழத்தில் செல்லும்போது அங்கு நிலவும் கடுமையான அழுத்தங்களை நீர்மூழ்கி கையாள வேண்டும்.

இதற்காக ‘கப்பலின் ஒவ்வொரு நகர்வையும் உடனுக்குடன் கணிக்கும் கண்காணிக்கும் அமைப்பை’ ஏற்பாடு செய்துள்ளதாக ஓஷன்கேட் நிறுவனம் அதன் இணையத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அதேபோல் கடலுக்குள் நிலவும் மாறுபட்ட அழுத்த நிலைகளைக் கண்காணிப்பு செய்ய அதில் சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நீர்மூழ்கி கடலுக்குள் இறங்குவதற்கு முன்னால், கப்பலின் துணைக்குழு அதை வெளிப்புறத்திலிருந்து பூட்டுகிறது. மேலும் 17 போல்ட்களை கொண்டு வெளிப்புறத்தில் சீல் செய்கிறது.

இத்தனை பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டிருந்தாலும், இந்தப் பயணத்தில் பல சவால்களும், ஆபத்துகளும் இருப்பதாக ஓஷன்கேட் நிறுவனம், அதன் விளம்பர வீடியோக்களிலேயே குறிப்பிட்டிருந்தது.

ஓஷன்கேட் நிறுவனத்தால் ‘டைட்டன்’ வடிவமைக்கப்பட்டபோது, நீர்மூழ்கிக் கப்பல்களைச் சோதனை செய்யும் வல்லுநர்கள் தங்களது ஒருமித்த கவலைகளைத் தெரிவித்திருந்தனர். அதன் வடிவமைப்பில் இருக்கும் ‘பேரழிவுக்கான சிக்கல்கள்’ குறித்து அவர்கள் அப்போதே எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதேபோல் ‘டைட்டன் நீர்மூழ்கியின்’ வடிவமைப்பு குறித்து பல தவறான கூற்றுகளை ஓஷன்கேட் நிறுவனம் கூறி வருவதாக ஏற்கெனவே சர்ச்சைகள் எழுந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பயணத்துக்கு முன் பயிற்சிகள் அளிக்கப்பட்டதா?**

இந்தப் பயணங்களில் கலந்துகொள்ள ஆர்வமுடையவர்களுக்கு ஆழ்கடல் பயணம் மேற்கொள்வதில் கடந்த கால அனுபவம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என ஓஷன்கேட் நிறுவனம் அதன் இணையத்தளத்தில் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் வேறு ஏதேனும் பயிற்சிகள் தேவைப்பட்டால், அது ஆன்லைனில் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல் பயணிகள் நிச்சயம் 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும் எனவும் தங்களுக்கு வரையறுக்கப்பட்ட இடத்தில் நீண்டநேரம் அமர்ந்துகொள்ளவும் ஏணியில் ஏறுவதற்கும் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டுமெனவும் ஓஷன்கேட் நிறுவனம் கூறுகிறது. மேலும் பயணத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பயணிகளுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் ஓஷன்கேட் கூறுகிறது.

அதேநேரம் “பயணத்தின்போது பயணிகள் எவ்வாறு ஈடுபட விரும்புகிறார்கள் என்பதை அவர்களே தேர்வு செய்யலாம்” எனவும் ஓஷன்கேட் கூறுகிறது. தகவல்தொடர்பு குழுக்களுடன் பணிபுரியவோ அல்லது கப்பலின் ஓட்டுநருக்கு வழிசெலுத்துவதில் உதவும் வாய்ப்பையோ பயணிகள் பெறலாம் எனவும் ஓஷன்கேட் குறிப்பிடுகிறது.

# கிழக்கைத் தொடர்ந்து குறிவைக்கப்படும் வடக்கு:

# தமிழர் தாயகம் மாயை ஆகுமா?

வரதராஜன் பார்த்திபன்

தமிழர்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டங்களான முல்லைத்தீவு மற்றும் வவுனியா நிர்வாகப் பிரதேசங்களின் எல்லை மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் அண்மையில் நடைபெற்றதாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா என்று அழைக்கப்படும் மணலாறு பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிங்கள மக்கள், இனிவரும் காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1987ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைந்து காணப்பட்ட இந்நிர்வாகப் பிரிவு 1987ஆம் ஆண்டில் அநுராதபுர மாவட்டத்தின் பதவியா பிரதேச செயலர் பிரிவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டதுடன், 1988ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய இந்நிர்வாகப் பகுதி வெலிஓயா என்று சிங்களத்தில் பெயர்மாற்றம் செய்யப்பட்டு 2011ஆம் ஆண்டு பொது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்புரையின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தின் அடிப்படையில் 9 கிராமசேவையாளர் பிரிவுகளையும் 17 கிராமங்களையும் உள்ளடக்கியதும் 151.18 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்ட புதிய பிரதேச செயலாளர் பிரிவான வெலிஓயாவில் 4,123 குடும்பங்களைச் சேர்ந்த 11,627 பேர் வாழ்கின்றனர்.




அதில் 4,117 குடும்பங்களைச் சேர்ந்த 11,589 பேர் சிங்களவர்களாவர்.

1987ஆம் ஆண்டு அநுராதபுரத்துடன் இணைத்து 1988ஆம் ஆண்டு விசேட வர்த்தமானி அறிவித்தலுடன் வெலிஓயா என்று பெயரிட்டு 2011ஆம் ஆண்டு மீண்டும் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு 6 பிரதேச செயலாளர் பிரிவாக அறிவிக்கப்பட்ட வெலிஓயா பிரதேச செயலளர் பிரிவில் 2020ஆம் ஆண்டு அதன் மொத்த சனத்தொகையில் 99.67 வீதம் சிங்களவர் வாழ்கின்றனர்.

தற்போது 1,34,825 பேரைக்கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் குறித்த திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் 12,516 பேருடனும் மொத்த சனத்தொகையில் 9.08 சதவீதத்துடன் இரண்டாம் தரப் பிரஜைகளாக சிங்களவர்கள் வாழ்கின்றனர். மொத்த சனத்தொகையில் 85.86 சதவீதத்துடன் தமிழர் முதலாம் தரப் பிரஜைகளாகவும் 1.33 சதவீதத்துடன் முஸ்லிம்கள் மூன்றாம் தரப் பிரஜைகளாகவும் வாழ்கின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட மதிநுட்பமான சிங்களக் குடியேற்றங்களை நிறுவி அதன் இன விகிதாசாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற சம நேரத்தில் அதே மதிநுட்பங்களைப் பயன்படுத்தி வவுனியா மாவட்டத்தின் இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றது.

அநுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் போகஸ்வெள1, போகஸ்வெள2, வெகரதென்ன, கம்பிலிவெள, நாமல்கம, நந்திமித்திகம, சலினிகம ஆகிய எல்லைக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான அரச நிர்வாக செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் குறித்த கிராமங்களை வவுனியா மாவட்ட நிர்வாகத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் வவுனியா மாவட்டத்துக்கு அண்மையில் ஒரு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கின் எல்லைப் பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையின மக்களின் திட்டமிடப்பட்ட குடியேற்றங்கள் மூலம் உருவாக்கப்பட்ட இச்சிங்களக் கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதென்பது வவுனியா மாவட்டத்தின் இனப்பரம்பலை கணிசமான அளவு மாற்றியமைக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து அதன்மூலம் ஒரு குறித்த மாவட்டத்தின் இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கலாம் என்பதை 1972ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் பிரயோகித்து அதில் கணிசமான வெற்றியும் அடைந்தது. அன்று சிங்கள அரசு மேற்கொண்ட அவ்விடயம் தொடர்பில் எனது தந்தையான பொருளியல் ஆசிரியர் அமரர் சின்னத்துரை வரதராஜன் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றம் தொடர்பில் மேற்கொண்ட ஓர் ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

அதில் 1972ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து புல்மோட்டை (இல.31G), தென்னைமரவடி (இல.31E) ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளும் கோமரங்கடவல உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்த பரண மதவாச்சி (இல.31F) கிராமசேவையாளர் பிரிவும் அநுராதபுர மாவட்டத்திலுள்ள பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டன. மேலே கூறப்பட்ட பிரதேசங்கள் நிர்வாக ரீதியாக அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டபோதிலும் தேர்தல் தொகுதியைப் பொறுத்தவரையில் இப்பிரதேசங்கள் தொடந்தும் திருகோணமலை மாவட்டத்திலேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தின் சிங்கள வாக்காளர்களின் தொகையைக் குறையவிடாமல் பார்த்துக்கொண்டது.

1972ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும்போது அந்தப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 4,651. அதில் சிங்களவர்களின் எண்ணிக்கை 672. (1971ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு) அதன் பிற்பாடு பத்தாண்டுகளின் பின்னர் 1982ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி தென்னைமரவடி (இல.31E), புல்மோட்டை (இல.31G), பதவிசிறிபுர (இல.31D), பரண மதவாச்சி (இல31F) ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகள் அநுராதபுர மாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

தென்னைமரவடி (இல.31E), புல்மோட்டை ((இல.31G) ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகள் மீண்டும் குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுடன் இணைக்கப்பட்டன. அநுராதபுர மாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு புதிதாக திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட பரண மதவாச்சி (இல.31F), பதவிசிறிபுர ((இல.31D), ஜயந்திவீவ ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி பதவிசிறிபுர என்ற புதியதொரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு திருகோணமலை மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் உருவாக்கப்பட்டது.

1972ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும் போது இங்கு 672 சிங்களவர் மட்டுமே காணப்பட்டனர். ஆனால், 1982ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கப்படும்போது சிங்களவர்களின் எண்ணிக்கை 12,050. இக்காலப்பகுதியில் இப்பிரதேசங்களில் தமிழர்களின் எண்ணிக்கை 62 சதவீதத்தாலும் முஸ்லிம்களின் தொகை 48 சதவீதத்தாலும் அதிகரிக்க, சிங்களவர்களின் தொகையோ 16.93 சதவீதத்தால் அதிகரித்தது.

இம்மாற்றங்களைத் தொடர்ந்து இப்பிரதேசத்தின் இனவிகிதாசாரம் பெரும் மாற்றத்திற்குள்ளாகியது 1972 – 1982 இடைப்பட்ட பத்தாண்டு காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் தமிழர்களின் பங்கு 17 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும் முஸ்லிம்களின் பங்கு 68 சதவீதத்திலிருந்து 26 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. ஆனால், சிங்களவர்களின் பங்கு 14.5 சதவீதத்திலிருந்து 66.6 சதவீதமாக அதிகரித்தது.

1972ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கும்போது ஒவ்வொரு 100 தமிழருக்கும் 83 சிங்களவர்கள் காணப்பட்டனர். ஆனால், 1982ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் மீண்டும் திருகோணமலை மாவட்டத்துடன் இணைக்கும்போது ஒவ்வொரு 100 தமிழருக்கும் 918 சிங்களவர்கள் காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்தே திருகோணமலை மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியில் 217 சதுர கிலோமீற்றர் பரப்புடைய பதவிசிறிபுர என்ற ஒரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

இவ்வாறான செயற்றிட்டங்கள் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் 1901ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் மொத்த சனத்தொகையின் 60 வீதமாக பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்கள் 2012ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டில் மொத்த சனத்தொகையின் 32.3 வீதமாக்கப்பட்டு 3ஆம் தரப் பிரஜைகளாக்கப்பட்டனர்.

ஆக இவ்வாறான நிர்வாகப் பிரதேசங்களின் எல்லை மாற்றங்களும் மறைமுகமான சிங்களக் குடியேற்ற நடவடிக்கையேயாகும். இதன்மூலம் தமிழர் பிரதேசத்தின் இன விகிதாசாரத்தைப் பெருமளவில் மாற்றியமைக்க முடியும் என்பதை கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக எல்லை மாற்றத்தின் மூலம் அரங்கேற்றி அதில் வெற்றிகண்ட சிங்கள அரசு, இன்று அதனை வடமாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதன் மூலம் இனவிகிதாசாரத்தை திட்டமிட்டு மாற்றியமைக்கின்றது.

சுடுசோற்றை உண்ண முற்படுகின்ற ஒருவர் சுடுசோற்றின் நடுவே கையை வைத்தால் சூடு தாங்காமல் உடனே கையை எடுக்கவேண்டியிருக்கும். ஆனால்,




சுடுசோற்றின் ஓரத்திலிருந்து உணவருந்த ஆரம்பித்தால் எதுவித பிரச்சினைகளுமின்றி முழு உணவையும் உண்ண முடியும். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிட்ட தமிழர்களின் பாரம்பரிய பூமியில் சிங்களவர்களைக் குடியமர்த்தி சொந்த மண்ணில் தமிழர்களைச் சிறுபான்மையினராக மாற்றுவதற்கு அரசாங்கம் இத்தத்துவத்தையே கிழக்கில் கையாண்டு அதில் வெற்றியும் கண்டது.

கிழக்கில் அதன் வெற்றியைத் தொடர்ந்து இன்று வடமாகாணத்தின் தமிழர் பிரதேசங்களின் எல்லைகளில் அத்தத்துவத்தை கையாளத் தொடங்கியுள்ளது.

மாறி மாறிவரும் சிங்கள - பௌத்த அரசாங்கங்கள் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கருத்தியியலை உடைப்பதற்கு ஏற்றவகையில் தமிழரின் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாட்டை செயல் வடிவில் தற்போதுவரை செம்மையாக செயற்படுத்துகின்றனர். ஆனால், நாம் எமக்குள்ளேயே தூரோகிப் பட்டங்களை வழங்குவதற்கும் தியாகிப் பட்டங்களை தனதாக்கிக்கொள்வதற்கும் முழுவீச்சாக செயற்படுகின்றோமே தவிர, தாயகக் கோட்பாட்டைச் சிதைக்கும் எதிரியின் செயல்ரீதியான செயற்பாட்டை எதிர்ப்பதற்கு ஒன்றுபடுவதில்லை. இந்நிலை தொடருமாயின் ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் சிங்கள வரலாற்றுப் பேராசிரியர் கே.எம். த சில்வா எழுதிய “The Tamils homeland is a Myth” (தமிழர் தாயகம் ஒரு மாயை) என்ற நூலின் தலைப்புபோல் ஆகிவிடும்.

ஏனெனில், 1981ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து பதவிசிறிபுர என்ற தனிச்சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஒன்றை உருவாக்கி திருகோணமலை மாவட்டத்தின் இனப்பரம்பலை மாற்றியமைத்தனர். 2011ஆம் ஆண்டு அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து வெலிஓயா என்ற தனிச் சிங்கள பிரதேச செயலர் பிரிவு ஒன்றை ஸ்தாபித்து முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களவர்களின் இனப்பரம்பலை அதிகரித்தனர். 2023ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்து வவுனியா மாவட்டத்தின் இனம்பரம்பலை மாற்றியமைக்க திட்டமான்றை முன்மொழிந்துள்ளனர்.

ஆக, வரலாற்றிலிருந்து பாடம் கற்காவிடின் இனி வரப்போகும் வரலாற்றில் எமது இனத்துக்கென்று ஓர் இடம் இருக்காது.

## உலகில் 3ஆவது பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா உருவெடுக்கும்



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

### அமெரிக்க பாராளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி

உலகில் 3ஆவது பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா விரைவில் உருவெடுக்கும். இந்தியா வளரும்போது ஒட்டுமொத்த உலகம் முழுவதும் சேர்ந்தே வளரும் என்று அமெரிக்கா பாராளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

அமெரிக்க பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டம் வியாழக்கிழமை (22) இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்க பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுவதென்பது மிகப் பெரிய கௌரவமாகும். இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு ஜனநாயக நெறிகளால் கட்டமைக்கப்பட்டது. இரு நாட்டு அரசியல் சாசனமும் மக்களாகிய நாம் (We The People) என்ற வார்த்தைகளோடுதான் தொடங்குகின்றன. இரு நாடுகளும் அதன் பன்முகத்தன்மையில் பெருமிதம் கொள்கின்றன. இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பயணிப்பது உலக நன்மைக்கும் சர்வதேச அமைதிக்கும் நிலைத்தன்மைக்கும் வித்திடும். கடந்த 7 ஆண்டுகளில் உலகில் நிறைய மாற்றங்கள் நடந்துள்ளன. ஆனால், இந்தியாவும் அமெரிக்காவும் தனது உறவை ஆழப்படுத்துவதில் உறுதியுடன் முன்னேறியுள்ளன.

சபாநாயகர் அவர்களே, ஒரு துடிப்பான ஜனநாயகத்தின் பிரதிநிதியான நான், ஒரு விடயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய பணி நிச்சயமாக கடினமானது தான். பல்வேறு கருத்து மோதல்களையும் சித்தாந்த வேறுபாடுகள் மீதான விவாதங்களையும் எதிர்கொள்வதன் சிக்கல் எனக்குத் தெரியும். உங்களுக்கு எப்போதெல்லாம் ஆலோசனை வேண்டுமோ அப்போதெல்லாம் நான் உதவத் தயாராக இருக்கிறேன்.

நான் முதன்முதலில் அமெரிக்கா வந்த போது இந்தியா உலகின் 10ஆவது பெரிய பொருளாதார நாடாக இருந்தது. ஆனால், இப்போது 5ஆவது பொருளாதார வல்லரசாக உள்ளது. நிச்சயமாக விரைவில் உலகில் 3ஆவது பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா உருவெடுக்கும். இந்தியா வளரும் போது இந்த ஒட்டுமொத்த உலகமும் வளரும்.

ஜனநாயகத்தின் ஆன்மா, அனைவரையும் உள்ளடக்கும் கொள்கை, நீடித்த தன்மை ஆகியன நம்மை (இந்தியா மற்றும் அமெரிக்கா) அடையாளப்படுத்துகிறது. இவைதான் உலகம் மீதான நம் பார்வையையும் தீர்மானிக்கிறது. இந்தியா இந்த பூமியின் மீதான அக்கறையுடன் வளர்கிறது. இந்தியக் கலாசாரம் சுற்றுச்சூழலை ஆழமாக மதிக்கிறது. இந்தியாவின் வளர்ச்சிக் கொள்கை பூமியின் வளம் சார்ந்தது.

உக்ரைன் மோதலால் ஐரோப்பாவுக்குள் போர் திரும்பியுள்ளது. இது அந்தப் பிராந்தியத்தில் மிகுந்த வலியை ஏற்படுத்துகிறது. இதில் பெரும் வல்லரசுகள் ஈடுபட்டுள்ளதால் விளைவுகளும் கடுமையாக உள்ளன. நான் ஏற்கனவே சொன்னதுபோல் போருக்கான காலம் இதுவல்ல. இது பேச்சுவார்த்தைக்கும் ராஜதந்திரத்துக்குமான காலம்.

இரட்டை கோபுர தாக்குதல் நடந்து 20 ஆண்டுகளுக்குப் பின்னரும் மும்பை தாக்குதல் நடந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னரும் அடிப்படைவாதமும் பயங்கரவாதமும் இன்னமும் அப்படியே அதே அபாயத்தை அச்சுறுத்தலை உலகுக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதம் மனிதநேயத்தின் எதிரி. அதை எவ்வித தயக்கமும் சுணக்கமும் காட்டாமல் ஒடுக்க வேண்டும். பெருந்தொற்று காலத்திலிருந்து விடுபட்டுவரும் நாம், இந்த உலகுக்கு புதிய ஒழுங்கை தர வேண்டும். அதனால்தான் ஜி20 குழுவில் ஆபிரிக்க யூனியனுக்கு முழு பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்று நான் நம்புகிறேன். பலதரப்பு முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டும். உலகம் மாறும்போது நாமும் மாறவேண்டும்.

ஐ.நா. சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் ஒரு புதிய உலக ஒழுங்குக்காக பணியாற்றுவதில், எங்கள் இரு நாடுகளும் கூட்டாளிகளாக முன்னணியில் இருக்கும். “கடந்த காலத்தில் இருந்த ஒவ்வொரு இந்தியப் பிரதமரும் அமெரிக்க ஜனாதிபதியும் எங்கள் உறவை மேலும் முன்னெடுத்துச் சென்றுள்ளனர். ஆனால், எங்கள் தலைமுறையினருக்கு அதை அதிக உயரத்திற்கு எடுத்துச் சென்ற பெருமை உண்டு. இது ஒரு பெரிய நோக்கத்துக்கு சேவை செய்வதால், இது ஒரு வரையறுக்கும் கூட்டாண்மை என்பதை நான் ஜனாதிபதி ஜோ பைடனுடன் ஒப்புக்கொள்கிறேன். இன்று, அமெரிக்கா நமது முக்கியமான பாதுகாப்பு பங்காளிகளில் ஒன்றாக மாறியுள்ளது. இன்று, இந்தியாவும் அமெரிக்காவும் விண்வெளியிலும் கடலிலும், அறிவியல் மற்றும் குறைக்கடத்திகள், ஸ்டார்ட்அப்கள் மற்றும் நிலைத்தன்மை, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம், விவசாயம் மற்றும் நிதி, கலை மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றில் இணைந்து செயல்படுகின்றன. நவீன இந்தியாவில் பெண்களால் நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும். இந்தியாவின் தொலை நோக்கு என்பது பெண்களுக்கு நன்மை பயக்கும் வளர்ச்சி மட்டும் அல்ல. இது பெண்கள் தலைமையிலான வளர்ச்சி, அங்கு பெண்கள் முன்னேற்றப் பயணத்தை வழி நடத்துகிறார்கள் பழங்குடியினத்திலிருந்து வந்த பெண்தான் இந்தியாவின் ஜனாதிபதி. சர்வதேச அளவில் அதிக பெண் விமானிகளை இந்தியா கொண்டிருக்கிறது.

உலகிலேயே அதிக பெண் விமானிகள் கொண்ட நாடாக இந்தியா உள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் டிஜிட்டல் கட்டமைப்பு 85 கோடி மக்களுக்குக் கிடைத்துள்ளது. அனைத்து வகையான தொழில்நுட்பங்களையும் இந்திய மக்கள் சிறப்பாகக் கையாண்டு வருகின்றனர். பெண்களின் கல்வி அறிவு நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் - என்றார்.

# மூலிகைகளும் குழந்தைகளின் மருத்துவ சுகவாழ்வும்

குழந்தை வளர்ப்பு மிகப்பெரிய கலை, அதிலும் நோயில்லாத குழந்தையை வளர்த்தல் பெரிய கலையாகும். சித்த மருத்துவத்தில் காப்பு, நீக்கம், நிறைப்பு என்பன சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

'காப்பு' (Preventive) என்பது நோய் ஏற்படாமல் இருப்பதற்கு செய்யப்படும் உணவு மருந்துகளைக் குறிக்கும். 'நீக்கம்' (Curative) என்பது வந்த நோயை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துகள், சிகிச்சை முறைகளைக் குறிக்கும். 'நிறைப்பு' என்பது உடலில் குன்றிய சத்துகளைச் சீர்ப்படுத்த இழந்த சக்தியை நிறைவுசெய்யவும் வழங்கப்படும் உணவு, மருந்துகளைக் கொண்டதாக அமையும்.

கிரந்தி கொதியெண்ணெய் காப்பு மருத்துவமாகவும், தாமரை வளைய ஏலாதி மாத்திரை, மிருந்தியாதிக் குளிகை, அமுதாதிக் குளிகை, சென்னகரம்பழத்து நெய், அக்கர சஞ்சீவி மாத்திரை, கோரோசனைக் குளிகை, பொடுதலைக் குளிகை, கஸ்தூரி மிருத்தி யாதி, பிரமி நெய், பூசினி நெய், பொன்னாங்காணி நெய், செவ்வகத்தி நெய், சஞ்சீவி எண்ணெய், ஈருள்ளி எண்ணெய், வாழைப்பூ நெய், செங்கத்தாறி எண்ணெய், புங்கம் வேரெண்ணெய், மாது எம்பழத்து நெய் போன்ற பல மருந்துகள் நீக்கம் எனப்படும் குணப்படுத்தும் மருந்துகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மூலிகை இலைக் கஞ்சி, சத்துமாக் கஞ்சி என்பன உடலில் குன்றிய சத்துகளை சீர்ப்படுத்த உதவும் நிறைப்பு முறையாகும்.

தமிழர் பாரம்பரியத்தில் மூலிகை முதலுதவிகளாக கை வைத்திய முறைகள் காலங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சித்த மருத்துவத்தில் மணி, மந்திரம், அவிழ்தம் என்பன சிறப்பாகக் கருதப்படுகின்றன. உடலை, உள்ளத்தை, ஆன்மாவைப் பிணிக்கும் பிணிகளை அவிழ்ப்பது அவிழ்தம் எனப்படும்.

'அவிழ்தம்' என்பது பிரதானமாக மருந்துகள் வழி சிகிச்சை செய்தலைக் குறிக்கும். 'மணி' என்பது இறைசக்தி (Spiritual power) மூலம் சிகிச்சை செய்வது. 'மந்திரம்' என்பது மருத்துவரின் மனத் திறத்தையும் மனதின் தரத்தையும் குறிக்கும். இதற்கு தியானம், மந்திரச் சொல் (Sacred word), தவம், வழிபாடு மூலம் மனதைத் திடப்படுத்துவது, பார்வை பார்த்தல், மந்திர நீர் தெளித்தல், சோதிடம், திருநீறு இடல் என்பன



உளச் சிகிச்சை முறைகளாகும். மந்திர ஒலி அதிர்வுகள் (Regular Rhythmic vibration through sacred words) மூலம் உள்ளத்தைச் சீர்ப்படுத்தும் முறைகள் தமிழர் மருத்துவத்தில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையைக் காணலாம்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளுக்கு அதிமதுரப் பொடியை தாயின் மார்பில் பூசி தாய்ப் பாலூட்ட வேண்டும். சீறி சீறி அழும் குழந்தைக்கு சிறுதிப்பலி, சிறுதேக்குத் தூளைப் பசுநெய் சேர்த்து மார்பில் பூசி தாய்ப்பாலூட்ட வேண்டும்.

குழந்தைகளுக்கு ஏற்படும், சளி, முட்டு, இருமல், தடிமன், காய்ச்சல் ஆகிய நிலைகளில் சிறுவர் கோரோசனை மாத்திரையை இஞ்சிச்சாறு, கற்பூரவள்ளிச்சாறு, தேன், முலைப்பால், கற்கண்டுத் தூள், துளசிச்சாறு போன்றவற்றில் கொடுக்கலாம்.

கிரந்தி எண்ணெய் தேய்த்து காலை இளம் வெயிலில் விடும்போது விற்றமின் 'டி' தொகுக்கப்பட்டு தசைப் பலம், எலும்புப்பலம் அதிகரிப்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகரிக்கும்.

கிரந்தி எண்ணெய் சிறிதளவு உள்ளே கொடுத்தும் வெளியே பூசியும் விடுவர். இதனால் மலச்சிக்கல், மாந்தம் வராமல் தடுப்பதுடன் கிரந்தி அவியல், விரணம், கிரந்திச்சளி, சொடுகு, கடி. கிரந்தி முட்டு ஆகியன தீரும் உழுந்து எண்ணெய் தேய்த்து தசைகளைப் பிடித்துவிடும் போதும் தசைப் பலம், என்புப் பலம் அதிகரிக்கும்.

மாந்தம் ஏற்படும் நிலையில் கைமருந்தாக மாந்தக் கருக்கு குடிநீரில் வேப்பங்காம்பு, ஓமம், கறிவேப்பிலைக் காம்பு, மஞ்சள் நுணா, உத்தமானிக் காம்பு. பொடு தலைக்காம்பு, ஓதியம் காம்பு, வசம்பு, மிளகு, உள்ளி, சீரக மருந்து அவித்துக் குடிப்பது தாய்மாருடைய வீட்டு வழக்கமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் மாந்தத்தில் பொடுதலை மிக முக்கியமான மூலிகையாகும்.

சிறுவர்களுக்கு சளி. இருமல் ஏற்படும்போது கற்பூர வள்ளி, தூதுவளை, இஞ்சி, மிளகு, நற்சீரகம், கடுக்காய், வல்லாரை வகைக்கு ஒரு களஞ்சு வீதம் எடுத்து அரைப் போத்தல் நீர்விட்டுக் காற்பங்காகக் காய்ச்சி இரண்டு தேக்கரண்டி வீதம் கற்கண்டுத்தூள் சேர்த்து ஒரு நாளைக்கு மூன்று தடவை கொடுக்கலாம். இதில் கற்பூரவள்ளி, இஞ்சி, மிளகு, தூதுவளை சளியை நீக்க உதவும். குழந்தை உள் விழுங்கிய சளியை மலத்தினூடாக வெளிப்படுத்த கடுக்காய் உதவும்.

குழந்தைகளுக்கு திட உணவைக் கொடுக்கும்போதும் புதுப்புது உணவுகளைக் கொடுக்கும்போதும் மலச்சிக்கல் ஏற்படலாம். இரவில் தேங்காய்ப்பால் அரை தேக்கரண்டியை ஒரு தேக்கரண்டி வெந்நீரில் கலந்து கொடுக்கலாம். ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நார்ச்சத்துள்ள காய்கறிகளைச் சிறிது சிறிதாக நன்கு பிசைந்து கொடுப்பதுடன் வெந்நீர் அதிகளவில் கொடுப்பதும் நன்று. திராட்சை வற்றலை வெந்நீரிலிட்டு ஆறிய பின்னர் கொடுக்கும்போது மலக்கட்டு தீருவதைக் காணலாம்.

ஏடுகள், ஈழத்து சித்த மருத்துவ நூல்களிலுள்ள இலக்கியச் சுவை, உணர்ச்சியுடன் அமைந்த செய்யுள் நடை (Verse and Emotive prose) அறிவியல் உரை நடையில் (Scientific prose) எழுதி வெளியிடுவதும், மக்களிடம் அவை சென்றடைவதும் காலத்தின் கட்டாயமாகும்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையானது தமிழ் மருத்துவ அறிஞர்கள், வைத்திய கலாநிதிகள் அ.இராசரத்தினம், பூ.உரோமகேஸ்வரன் ஆகியோருக்கு மதிப்புறு முனைவர் வழங்கி கௌரவிப்பதற்கான முயற்சி எடுக்கப்படாமை வேதனைக்குரியது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை ஆங்கில மருத்துவத்துவம் சார்ந்த பாடநெறிகளை கற்பிப்பதைத் தவிர்க்க வேண்டும். இந்திய, இலங்கை சித்த மருத்துவ நூல்களிலுள்ள ஆழமான சித்த மருத்துவ அருங் கருவூலங்களை விரிவாகவும் ஆழமாகவும் கற்பிக்க வேண்டும். பரராசசேகர பாலர் ரோக நிதானம், பால வாகடம் போன்ற நூல் களை ஆழ மாகக் கற்பிக்க வேண்டும்.



டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A. m c. b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,
தெல்லிப்பழை.



# பண மன அழுத்தமும்!



அனுபவத்துக்கும் அறிவுக்கும் நடக்கும் கிரக யுத்தமே மனித வாழ்க்கை. இந்தப் போராட்டத்தின் இறுதியில் அனுபவமே அறிவின் துணைகொண்டு வெற்றியடையும். இதை புரிந்தவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைகிறார்கள். இது புரியாமல் பணம் எனும் அதிர்ஷ்ட குதிரையின் வாலை பிடித்து வாழ்க்கையைத் தொலைப்பவர்கள் அதிகம்.

இந்தக் கட்டுரையில் பண அழுத்தத்தையும் மன அழுத்தத்தையும் எப்படி குறைப்பது என்பதைக் காணலாம்.

### பண அழுத்தம்

சாதாரண மனிதர்கள் முதல் சாதனையாளர்கள் வரை அனைவரின் பிரதான தேவை பணம். மனிதர்களின் வாழ்வாதார காரணியான பணம் மன அழுத்தத்தை அதிகரிக்கிறது. பண அழுத்தத்தால் மன அழுத்தம் ஏற்படுகிறதா? மன அழுத்தம் பண அழுத்தத்திற்கு காரணமாகிறதா? என வியக்கும் வகையில் பண அழுத்தமும் மன அழுத்தமும் அதிகரித்து சமுதாய நோயாக மாறிக்கொண்டே போகிறது. பணம் இருப்பவர்களுக்கு சமுதாயம் வழங்கும் மதிப்பு, மரியாதை, கௌரவம் பணம் இல்லாதவர்களுக்கு கிடைப்பதில்லை.

இதைத்தான் வள்ளுவர்,

"பொருளல் லவரைப் பொருளாகச் செய் யும் பொருளல்லது இல்லை" என்று கூறியுள்ளார்.

இதன் பொருள் தகுதி அற்றவரையும் கூடத் தகுதி உடையவராக ஆக்கிவிடும் தகுதி உடையது, பணமே அன்றி வேறொன்றும் இல்லை என்பதாகும்.

அதாவது, மதிக்கத்தகாதவர்களையும் மதிக்கக்கூடிய அளவுக்கு உயர்த்திவிடுவது அவர்களிடம் குவிந்துள்ள பணத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதாகும்.

நிரந்தரமற்ற காரணியான பணம் சிலரிடம் தேவைக்கு அதிகமாகக் குவிகிறது. சிலருக்கு தன் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பணம் இருக்கும். சிலருக்கு அடிப்படைத் தேவையைக் கூட சமாளிப்பதில் சிரமம் இருக்கும். இன்னும் ஒரு சிலருக்கு பொருளாதாரத்தில் ஏற்ற இறக்கம் சற்று மிகைப்படுத்தலாக இருக்கும். பணமே பிரதான காரணியாக இருக்கும். இந்த காலத்தில் பணம் படைத்தவர்கள் ஏதேனும் ஒருவகையில் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவே வாழ்கிறார்கள். இது ஒருபுறம் இருக்க, பண வசதியுள்ளவர்களுக்கு தேடிய செல்வத்தை எப்படி எதிர்காலத்திற்காக பத்திரப்படுத்துவது என்ற மன அழுத்தம். இருப்பவனுக்கு இருப்பதால் மன அழுத்தம். இல்லாதவனுக்கு இல்லை என்பதால் மன அழுத்தம். இதுதான் பிரபஞ்ச சக்தி. தனக்கு மீறிய விடயங்கள் உலகத்தில் நடக்க முடியாது என்று பிரபஞ்சம் மனிதர்களுக்கு விடும் எச்சரிக்கை.

ஜோதிடத்தில் 2, 5, 8, 11 ஆகிய பணபர ஸ்தானங்கள் பணவரவைக் குறிக்கும் பாவகங்களாகும். இதில் இரண்டாம் பாவகம் என்பது ஜாதகரின் பண வருவாய் நிலையையும், ஐந்தாம் பாவகம் என்பது பூர்வ புண்ணிய பலனால் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய தனத்தின் நிலையையும், எட்டாம் பாவகம் என்பது எதிர்பாராத அதிர்ஷ்டம் மறைமுகமான தன லாபத்தையும், பதினொன்றாம் பாவகம் என்பது 5க்கு 7 என்ற முறையில், பூர்வ புண்ணிய பலனை பதினோராம் பாவத்தில் லாபமாக 10க்கு 2 என்ற முறையில் பத்தாம் வீட்டிற்கு லாபகரமான தன நிலையை குறிக்கும். 2, 11ஆம் பாவகத்துடன் ஒரு ஜாதகத்தில் 5, 8ஆம் பாவகங்கள் தொடர்பு

**பொதுவாக பணம் இல்லாதவர்களை விட அளவுக்கு அதிகமாக பணம் உள்ளவர்களுக்கே மன அழுத்தம் ஏற்படுகிறது**

பெற்று சம்பந்தப்பட்ட தசை வரும்போது, நிச்சயம் பணப்புழக்கம் அதிகரிக்கும். சுய ஜாதகத்தில் குரு பாவ கிரக சேர்க்கை பெறாமல் நல்ல ஸ்தான பலத்துடன் இருக்கும்போது, நிச்சயம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். கிடைத்த பணத்தை பாதுகாப்பது எப்படி என்ற மன அழுத்தம் இருந்துகொண்டே இருக்கும்.

ஒரு ஜாதகத்தில் ஜென்ம லக்னத்தில் இருந்து 3, 6, 8, 12 ஆகிய நான்கு பாவங்கள் துர் ஸ்தானங்கள் அல்லது மறைவு ஸ்தானங்கள் எனப்படும். இந்த நான்கு பாவகங்களும் அதன் அதிபதிகளும் ஒரு ஜாதகருக்கு அசுப பலன் தருபவர்கள். ஒருவரின் கர்ம வினைப்படி அவர் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை மறைவு ஸ்தானம் பரிபூரணமாக தருவது மறைவு ஸ்தான அதிபதிகள்.

மூன்றாம் பாவகம் பாதி மறைவு காலமாக கருதப்படுகிறது. எனவே, இதன் அதிபதி மத்திமமான பவராக அமைகிறார். பன்னிரண்டாமிடம் முக்கால் பங்கு மறைவு ஸ்தானமாகும். ஆறு மற்றும் எட்டாமிடம் முழு மறைவு ஸ்தானங்களாகும். இதன் அதிபதிகள் ஒரு ஜாதகத்திற்கு முழு பாவ கிரகங்களாக அமைகிறார்கள். ஒரு ஜாதகத்தில் மறைவு ஸ்தானாதிபதிகள் வலு குறைவாக இருப்பதே சிறப்பு. மறைவு ஸ்தானமும் அதன் அதிபதிகளும் அதில் நின்ற கிரகங்களும் சுப வலுப்பெற்றால் பணம் ஒருவரை வாழ வைக்கும். உழைக்காத அதிர்ஷ்ட வருமானம், உயில் சொத்துகள் போன்ற அதிர்ஷ்ட பலன்கள் நடைபெறும். அசுபத் தன்மையுடன் இயங்கினால் வம்பு, வழக்கு, சிறைத்தண்டனை, விபத்து, கண்டம் அறுவை சிகிச்சை, தீராத கடன், அடிப்படைத் தேவைக்கு திணறுவது தீர்க்க முடியாத நோய், கண் திருஷ்டி பாதிப்பு போன்ற அசுப பலன்கள் நடக்கும். வாழ்பவரை வீழ வைக்கும். பணபட பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் மன உளைச்சல் மிகுதியாகும். ஆக பணம் இருந்தாலும் மன அழுத்தம், பணம் இல்லாவிட்டாலும் மன அழுத்தம். பொதுவாக பணம் இல்லாதவர்களைவிட அளவிற்கு அதிகமாக பணம் உள்ளவர்களுக்கே மன அழுத்தம் ஏற்படுகிறது.

### மன அழுத்தம்

அவசர கதியான உலகில் டென்ஷன், மன அழுத்தம் தீர்க்க முடியாத ஒரு வியாதியாக சமுதாயத்தில் உலா வருகிறது. மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒருவரால் தனக்கு என்ன பிரச்சினை என்பதை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாது. மன அழுத்தத்தை மெதுவான விஷத்துடன் ஒப்பிடலாம். தீராத மன அழுத்தம் மனிதனை சிறிது சிறிதாக அழித்துவிடும். ஒருவரின் எண்ணங்கள் ஈடேறும்போது அவர்கள் அடையும் சந்தோஷம், மன நிம்மதிக்கு அளவே கிடையாது, நிறைவேறாத எண்ணங்கள் கனவாக - கானல் நீராக ஆழ்மனதில் பதிந்துவிடும். நிறைவேறாத எண்ணங்களை மன வலிமை உள்ளவர்கள் கனவாக நினைத்து மறந்து அடுத்த முயற்சியை நோக்கி அடியெடுத்து வைக்கிறார்கள். மன வலிமை குறைந்தவர்கள் தனிமையில் யோசித்து தம் மனதை தாமே கெடுத்துக்கொண்டு மற்றவர்களையும் வதைக்கிறார்கள்.

அனைவரையும் படாத பாடுபடுத்தும் மன உளைச்சல் ஏற்படுவதற்கான காரணங்களைப் பார்க்கலாம்.

பணம், தொழில், உத்தியோகம் தொடர்பான மன உளைச்சலை பெரிய முதலீட்டாளர்கள் முதல் சிறிய பெட்டிக்கடை வரை யாரையும் விட்டு வைக்காமல்

**சாதாரண மனிதர்கள் முதல் சாதனையாளர்கள் வரை அனைவரின் பிரதான தேவை பணம்**

அனைவரையும் தலை சுற்ற வைக்கிறது. உளவியல் ரீதியாக பண அழுத்தமே மன அழுத்தத்திற்கு காரணமாகிறது. கண்ணுக்குத் தெரியாமல் தொடங்கும் இந்த மன அழுத்தம் ஒற்றைத் தலைவலி முதல் மாரடைப்பு வரையான பல்வேறு நோய்களை மனிதனுக்கு தருகிறது.

ஜனன ஜாதகத்தில் லக்கினம், 3ஆம் இடம், சந்திரன், சூரியன், நல்ல நிலையில் இருந்தால் ஜாதகரின் எண்ணங்கள் 100 சதவீதம் நிறைவேறும். ஜாதகர், நினைக்கும் காரியங்கள் அனைத்தையும் சாதிக்கும் வல்லமை படைத்தவராக இருப்பார், ஜாதகரின் எண்ணங்கள் வலிமையுடையதாக இருக்கும். அதனால் எளிதில் எந்த விடயத்துக்கும் அசருவதில்லை என்பதால் மன அழுத்தம் ஏற்படாது.

ஜோதிட ரீதியாக மனநோய் பாதிப்பு ஏற்படுவதற்கான கிரக அமைப்புகள் உள்ளன. ஒருவரின் ஆழ்ந்த சிந்தனை, ஆழ்மனதைக் குறிக்கும் கிரகம் காலபுருஷ 5ஆம் அதிபதியான சூரியன் ஆகும். சூரியன் ராகு, கேது, சனியுடன் இணைவது, சூரியன்நீசம் பெற்றவர்கள், 6, 8,12இல் மறைந்தவர்கள், அஷ்டம, பாதக அதிபதியோடு சம்பந்தம் பெற்றவர்கள் மனவிரக்தியை அதிகம் சந்திக்கிறார்கள்.

ஜாதகத்தில் மனோகாரகன் எனப்படும் சந்திரன் வலிமை குறைந்தால் மனோரீதியான பாதிப்பு அதிகமாகும். லக்னரீதியாக லக்னத்திற்கோ லக்னாதிபதிக்கோ 8இல் சந்திரன் மறைந்தால் கடுமையான மன அழுத்தத்தை ஏற்படுத்தும். சந்திரனுடன் சனி, ராகு, கேது, அஷ்டமாதிபதி, பாதகாதிபதி சம்பந்தம் கடுமையான மன உளைச்சல் ஏற்படுத்தும்.

ராசியின் அடிப்படையில் பார்க்கும்போது மிதுனம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய ராசிகாரர்களுக்கு சந்திரனால் மனோரீதியான பாதிப்புகள் இருக்கும். நட்சத்திர ரீதியாகப் பார்க்கும் போது சனி, புதன், ராகு, கேது ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் மன அழுத்தம் மிகுதியாக இருக்கும். குறிப்பாக, சனி, புதனின் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு பாதிப்பு மிகுதியாக இருக்கும்.

புதன், சந்திரன், சனி நீச்சம் அடைந்தாலும் கடுமையான மன அழுத்தம் நிச்சயம் ஏற்படும். ராகு, சனி, புதன், கேது, பாதகாதிபதி, அட்டமாதிபதியின் திசை, புத்தி காலங்களில் மன அழுத்தம் உண்டு.

கோட்சார சந்திரன் ராசிக்கு எட்டில் மறையும்போது அல்லது பிறப்பு ராகு, கேது, சனியை கோட்சார சந்திரன் தொடும்போதோ மனோரீதியாக பாதிப்பு நிச்சயம் உண்டு.

கோட்சார ராகு, கேது, சனி சந்திரனுடன் சம்பந்தம் பெறும்போதும், ஏழரை சனி, அஷ்டம சனி, அர்தாஷ்டம சனி, கண்டக சனி, ஜென்ம ராகு, கேது ஆகிய காலகட்டங்களிலும் மனோரீதியான பாதிப்பு அதிகம் உருவாகும்.

லக்னத்தில் சனி, ராகு, கேது, அஷ்ட்டமாதிபதி இருந்தாலோ அல்லது பார்வை சேர்க்கை பெற்றாலோ அல்லது லக்னாதிபதியுடன் சனி, ராகு, கேது இணைந்தாலோ அல்லது 6, 8, 12ஆம் அதிபதியுடன் அமர்ந்தாலும் மனோரீதியான நோய் பாதிப்பு ஏற்படும்.

ஜனன கால ஜாதகத்தில் அதிக வக்ர கிரகம் இருந்தால் மன அழுத்தம் உண்டாகும். மனிதனை கொல்வது நோயா, பயமா? என்று ஆய்வு செய்யலாம். நமது முன்னோர்கள் செயல்பாடுகளில் விவேகத்தையும் நிதானத்தையும் கடைப்பிடித்ததால் பயமும், நோயும் இல்லாமல் 100 வருடங்களுக்கு மேல் கவலை, பயம் இல்லாமல் நிம்மதியாக வாழ்ந்தார்கள். அவசர உலகத்தில் சக மனிதர்களிடம் போட்டி, பொறாமை, யாரை கெடுத்தால் பணம் சம்பாதிக்கலாம் என்ற வஞ்சக எண்ணம், காசு, காமம், சொத்தால் விரக்தி, ஆரோக்கியமற்ற உணவான பாஸ்ட் புட் கலாசாரம் போன்றவை மன வியாதியை பொன்னாடை போர்த்தி வரவேற்கின்றன. யாருடைய திறமையையும் யாரும் விலை கொடுத்து வாங்க முடியாது.

ஒவ்வொரு ஆன்மாவும் பூமியில் ஜீவிக்கத் தேவையான ஞானத்துடன் பிரபஞ்சம் படைக்கிறது. அப்படியிருக்க, பிரபஞ்சத்திற்கு எதிரான செயல்களில் மனிதன் ஈடுபடும்போது இனம் புரியாத பெயரிட முடியாத வியாதி, மனக்கவலை அவனை சிறைப்படுத்துகிறது.எனவே, பிரபஞ்சத்தோடு ஒன்றி நல்ல எண்ணங் களோடு பயபக்தியோடு வாழ்பவர்களுக்கு மன உளைச்சல் வராது. லக்கினம், 3ஆம் இடம், சந்திரன் மூன்றும் நல்ல நிலையில் ஜாதகத்தில் இருந்தால் மட்டுமே ஜாதகரால் மனதை ஒருநிலைப் படுத்த முடியும். எந்த நோயும் மனிதனை கொல்வதில்லை. அதைபற்றிய பயம்தான் அவனை கொல்கிறது.

உடலை ஆன்மாவின் போக்கில் பயணிக்க அனுமதித்தால் அது எதற்காக வடிவமைக்கப்பட்டதோ அதை மிகச் சிறப்பாக செய்யும். இயற்கையோடு ஒன்றி மனமும், உடலும் இணைந்து செயல் பட அனுமதிப்பவர்களுக்கு மனநோய் வருவதில்லை, அப்படியே வந்தாலும் ஓரிரு நாட்களில் குணமாகிவிடும். ஜனன ஜாதகத்தில் லக்னம் வலிமையானவர்களுக்கும், ஆழ்மனதை அடக்கி ஆளத் தெரிந்தவர்களுக்கும், எப்போதும் எந்த பாதிப்பும் இருக்காது.

### பரிகாரம்

வெயில், மழை, குளிர் என அனைத்து பருவ சீதோசனத்தையும் உடலுக்கு பரிட்சயப்படுத்த வேண்டும். சிறிய உடல் உபாதைகளுக்கு அலோபதி மருந்தை பயன் படுத்தாமல் எளிய வீட்டு வைத்தியத்தை கடைப்பிடிக்க வேண்டும். மன அழுத்தத்தால் விரக்தியில் இருப்பவரை குடும்பத்தாரின் அன்பான வார்த்தைகளாலும், ஆதரவாலும் மட்டுமே இயல்புநிலைக்குக் கொண்டு வர முடியும். பூமியில் ஜனனமாகும் ஒவ்வொரு உயிருக்கும் ஒரு வினைப் பதிவு உண்டு. அசைவ உணவு சாப்பிடுபவர்கள் பிற உயிர்களின் கர்மா, நோயை சேர்த்து சுமக்க வேண்டும். எனவே, முடிந்தவரை காய்கறி, பழங்களை அதிகம் சாப்பிட வேண்டும். யோகா, தியானம் போன்றவற்றை பயிற்சிசெய்ய வேண்டும்.

நன்றி - மாலைமலர்

# கால்கள் இல்லையென்ற கவலையை போக்குகிறது தன்னம்பிக்'கை'

■ சிவகுமார் திவியா

எனக்கென்ன குறைச்சல். கண், காது, வாய், மூக்கு, உடல் எல்லாமே இருக்கு. நான் எதற்காக இரு கால்கள் மட்டும் இல்லை என்று கவலைப்பட வேண்டும். இரு கால்கள் இல்லாமல் படைக்கப்பட்டது இன்று உலகத்திற்கு தனித்துவமாய் என்னை காண்பிக்க இறைவன் கொடுத்த வரம் - என மார்பு தட்டிக்கொள்கின்றார் சிங்காரம் சூசைமுத்து. மாற்றங்களைப் படைத்து சாதிக்கத் துடிக்கின்ற மாற்றுத்திறனாளி.

உடலில் குறைபாடு இருந்தாலும் உள்ளத்தில் உறுதியுடன் இருக்கும் மாற்றுத்திறனாளிகள் பலர் தங்களது சுயமுயற்சியால் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருகின்றனர். அவர்களை சமூகம் கண்டுகொள்வதில்லை. மாறாக, அவர்களை ஊனமுற்றோர் என்று அலட்சியப்படுத்துவதும் இங்கே நடக்கிறது. சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினராக உள்ள இவர்களில் ஒருவரான இவர், தனது வாழ்க்கை பற்றி சிரித்தபடியே சுருக்கமாகக் கூறுகின்றார்.





எனது பெயர் சிங்காரம் சூசைமுத்து. முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் வசித்து வருகின்றேன். பிறப்பில் எனக்கு இரண்டு கால்களும் இருந்தன. அந்த காலப்பகுதியில் நான் கடற்றொழிலும் விவசாயமும் செய்து வந்தேன். பின்பும் எனது பிரதான தொழிலாக இதனையே செய்து வந்தேன்.

2009ஆம் ஆண்டு நான் ஒரு விபத்தில் யுத்தத்தில் விழுந்து கால்களை இழந்தேன். ஆனால், இன்றுவரை நான் கால்கள் இல்லை என்பதை யோசிக்கவே இல்லை. இன்றுவரை இழந்த கால்கள் எனது சொந்தக் கால்கள் இருக்கு என்றுதான் நான் நினைத்துள்ளேன். சிலர் என்னை பார்க்கும்போது கால் இல்லாமல் நான் கஷ்டப்படுகிறேன் என நினைப்பார்கள். ஆனால், நான் என் மனதில் எனக்கு கால் இரண்டும் உள்ளது என்று யோசித்துள்ளேன். முதல் எப்படி இருந்தேனோ அப்படியே இப்பொழுதும் உள்ளேன்.

நான் இந்தக் கடற்கரையில் வேலை செய்யும்போது அநேகமானோர் எனக்கு படகை தள்ளிவிடுவார்கள். படகை தண்ணீரிலிருந்து வெளியே இழுத்து விடுவார்கள். இப்படி பல உதவிகளைச் செய்வார்கள். ஆனால், நான் இன்றுவரை எனக்கு கால்கள் இல்லை, இதனால் பின்னர் என்ன செய்யப்போகிறேன் என்று சிந்தித்துப் பார்த்ததில்லை. நான் அதனை சிந்திப்பதாக இருந்தால் அடுத்த படிக்கு என்னால் சென்றிருக்க முடியாது. அப்படி இருப்பதனால்தான் என்னால் எனது பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் பிரயோசனமாக உள்ளது.

நான் வேதனைப்பட்டால் அவர்களுடைய மனமும் வேதனைப்படும். ஏனென்றால், அவர்கள் என்னை நம்பி வாழ்பவர்கள். எனது மனதில் எவ்வளவுதான் வேதனை இருந்தாலும் நான் அதை வெளியில் காட்டுவதில்லை எவரிடமாவது நான் கை ஏந்தி எனக்கு வீட்டில் கஷ்டம் எனக் கூறி சென்றால் ஒருநாள் உதவி செய்வார்கள். ஒவ்வொரு நாளும் ஒருவரும் உதவிசெய்ய மாட்டார்கள். எனது சொந்த முயற்சியில் ஒரு பத்து ரூபா கிடைத்தால் அதனை அடுத்தகட்ட முயற்சியில் இருபது ரூபாவாக்குவேன்.

எனக்கு காலில் பிரச்சினை என்பதால் பலர் வந்து என்னை சந்தித்துள்ளார்கள். எனக்கு அதை நினைத்தால் கவலையாக உள்ளது. ஏனென்றால் என்னைப்போல் பலர் உள்ளார்கள். அவர்கள் தங்கள் சொந்த முயற்சியில் ஏதேனும் செய்யலாம். சிலர் வேலை செய்யாமல் இருந்து பழகிவிட்டார்கள். என்னைப் போன்றோருக்கு மனம்தான் சொந்த முயற்சி. இதனால்தான் சுயதொழிலில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகின்றேன்.

நாம் எடுக்கும் முயற்சி எமது கெட்டித்தனம். கடவுள் கொடுப்பவனுக்கு அள்ளிக் கொடுப்பான் எனக் கூறிவிட்டு வீட்டில் இருந்தால் அவர் தர மாட்டார். நாம் முயற்சி எடுத்தால்தான் கடவுள் அள்ளிக் கொடுப்பார். பேசாமல் தூங்கிக்கொண்டிருந்தால் கடவுள் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்க மாட்டார். நாம் வீட்டில் இருந்துகொண்டு கடவுள் கொடுப்பார் என்று எதிர்பார்த்தால் அவர் எப்படிக் கொடுப்பார்.



எனக்கு பத்து ரூபா கிடைத்தால் அதை இருபது ரூபாவாக்க வேண்டும் என்பதே எனது இலட்சியம். மற்றையது இன்னொருவர் எனக்கு உதவி செய்கிறார் என்றால் அந்த பணத்தை நான் வீண் செலவு செய்யக்கூடாது. அந்தப் பணத்தை வைத்து இன்னொரு தொழிலை மேற்கொள்ள வேண்டும். அது இன்னும் ஒரு முன்னேற்றமாக இருக்கும். இதுவரை நான் யாரையும் எதிர்பார்த்ததில்லை. ஒருதொகை கிடைத்தால் அது என்னால் இன்னும் இருவருக்குப் பயன் கிடைக்கும் என்றால் அதனை நான் பயன்படுத்துவேன்.

அதாவது எனது முயற்சியால் அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுக்கு சம்பளமாக பணத்தை அளிப்பேன். ஒவ்வொருநாளும் வீட்டில் கறிக்கு மீனும் கொடுப்பேன். இவர்களுக்கு ஆயிரம் ரூபா பணம் கூட்டிக் கொடுப்பேன். அவர்களுக்கு ஒரு வாழ்வாதாரமாக இருக்கும். என்னிடன் பத்து பேருக்கு மேற்பட்டோர் வேலை செய்கின்றார்கள்.

வலை துப்புரவாக்குதல், மீன் தரம் பிரித்தல், மீன் துப்புரவுசெய்தல் என சில வேலைகள் உள்ளன. என்னுடன் வேலைக்கு வந்தால் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும். அவர்களும் எனது முயற்சியால் சந்தோஷமாக சாப்பிடுவார்கள்.

ஊனமாகிவிட்டோம், எம்மால் எதனையும் செய்யமுடியாது, பிறந்ததே சாபக்கேடு என எண்ணி உள ரீதியாக பாதிக்கப்பட்டு வீட்டில் ஒரு மூலையில் முடங்கி கிடக்காமல் நாங்களும் சாதிக்கப் பிறந்தவர்கள் என வீரியம்கொண்டு எழுந்து சாதனை படைக்கவேண்டும்.

சாதனையாளர்களை காணும்போது மெய்சிலிர்த்து போகின்றதல்லவா? சாதாரண மனிதன் தன் திறமையாலும் முயற்சியாலும் பல்வேறு தளங்களிலும் சாதனை படைத்துக்கொண்டிருப்பது முயற்சி. ஆனால், மாற்றுத்திறனாளிகள் சாதித்தது, சாதித்துக் கொண்டிருப்பது, சாதிக் கத் துடிப்பது என்பது விடாமுயற்சி.

இறைவனின் படைப்பினில் எவரும் ஒருவருக்கொருவர் சளைத் தவர்கள் அல்லர் என்பதை பறைசாற்றப் பிறந்து சாதனை புரிபவர்கள், இலைமறைகாய்களாய் இருந்தவர்கள் சமூகத்தில் தமக்கென ஓரிடத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணி புறப்பட்டு விட்டனர் என்பது பாராட்டத்தக்கது.

அதாவது அவர்கள் தமது திறன்களை, ஆற்றல்களை, ஆளுமைகளை வெளிப்படுத்தி கல்வி, தொழில் ரீதியாகவும் தனிப்பட்ட முறையிலும் சமூக ரீதியாகவும் முன்னேற்றமடைந்து சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பதைப் பார்க்கையில்,

''ஊனம் என்னடா ஊனம். அட ஞானம் தானே வேணும்...'

என்ற பாடல் வரிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

---

# வெடி மணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*ஆர் ஆரை எங்க வைக்கவேணும் எண்டு சிறிலங்கா அரசு மிகத் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது.*

*சீனா வந்தால் வாலைக் காட்டுவதும்;*
*அமெரிக்கா வந்தால் தலையை காட்டுவதும்;*
*இந்தியா வந்தால் கையை குலுக்குவதாக வும்தான் சிறிலங்காவின் "அரசியல் நகர்வு" இருக்கிறது.*

*மிகக்கச்சிதமாக இந்த "உறவுகளை" சிறிலங்கா அரசு பேணிவருகிறது.*
*"சிறிலங்காவுக்கான தெளிவான ஒரு வெளியுறவுக்கொள்கை இல்லை" என்று பல அரசியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.*

*ஆனால் எங்களைப் பொறுத்தவரை "மிகத்தெளிவான அரசியல் வெளியுறவுக் கொள்கையை" சிறிலங்கா அரசு காலத்துக்கு காலம் வகுத்துக்கொண்டு முன்னேறுகிறது என்பது யதார்த்தம்.*

*அண்மையில் தாய்வானின் முதலீடுகளை வெளிப்படையாக நிராகரித்த சிறிலங்கா அந்த முதலீடுகளை மறைமுகமாக உள்வாங்கிக்கொள்ளும் என்பதை எதிர்காலத்தில் அறிவீர்கள்.*

*சிறிலங்காவை பொறுத்தவரை இப்போதைக்கு யாருடனும் பகைத்துக் கொண்டோ அல்லது புறக்கணித்துக் கொண்டோ பயணிக்கப்போவதில்லை.*

*இந்தியாவின் "ஆலோசனைகளை" கேட்டு அதன்படி ஒருசிலவற்றை நிறைவேற்றும் அதேகணம் அமெரிக்காவின் முதலீடு களையும் சிறிலங்கா உள்வாங்குகிறது.*

*அதேநேரம், ஏற்கனவே முதலீடுகளை செய்த சீனாவோடு நல்லுறவைப் பேணுவதில் மிகக் கவனமாக இருக்கிறார்கள்.*

*சீனா - இந்தியா - அமெரிக்கா இந்த மும்முனை மோதல்களை சிறிலங்காவுக்குள் நிகழாமல் சிறிலங்கா அரசு இதுவரை மிகக் கெட்டித்தனமாக கையாண்டிருக்கிறது என்பது யதார்த்தம்.*

*ரணில் மட்டுமல்ல, எதிர்காலத்தில் வரும் புதிய ஆட்சியாளர்களும் "இதே வெளியுறவுக் கொள்கையைத்தான்" கடைப்பிடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

*எது என்னவோ போன வருடத்தை விட இந்த ஆண்டு சிறிலங்கா பல விடயங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது.*

*வெறுமனே உலக வங்கியில் இருந்து பெறப்படும் பாரிய கடன் உதவிகள் மட்டுமல்ல;*

*நாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள பல "பொருளாதார நடைமுறை மாற்றங்களும்தான்" சிறிலங்காவின் அண்மைய மீள் எழுச்சிக்குக் காரணம்.*

*உலக வங்கியிடம் இருந்து பெறப்படும் மில்லியன் கணக்கிலான உதவிகளை "ஊழல் இல்லாத வினைத்திறனோடு" பயன்படுத்தினால் மட்டுமே சிறிலங்கா எதிர்காலத்தில் உறுதியாக எழுந்துநிற்க முடியும்.*

*வடக்கு, கிழக்கில் நிகழும் அத்தனை "அரசியல் மாற்றங்களும்" நிச்சயமாக சிறிலங்காவின் பொருளாதார ஸ்திரத்தன்மையை நேரடியாக பாதிக்கும்.*

*வடக்கில் ஒருவிதமான சட்டங்களையும் தெற்கில் இன்னொருவிதமான சட்டங்களையும் நடைமுறைப்படுத்தினால் மீண்டும் "அரசியல் நிலைத்தன்மையில்" தளம்பல் ஏற்படும். பொருளாதாரத்தில் மீண்டும் வீழ்ச்சியை நோக்கி நாடு செல்லும்.*

*"வெளியுறவு கொள்கையில்" ஒரு நிலையான மாற்றத்தை பேணும் அதேநேரம் "உள்நாட்டில்" இனங்களுக்கு இடையில் "முரண்பாடுகளை" வளர்த்தால் கடைசியில் எல்லாமே கவுண்டு கொட்டுப்பட்டுப்போடும்.*

*"நில ஆக்கிரமிப்பு"*
*"போதைப்பொருள் விநியோகம்"*
*"லஞ்சம்"*
*"ஊழல்"*
*"பௌத்த மயமாக்கல்"*

*இப்படியே வடக்கு, கிழக்கில் தொடர்ந்து நிகழுமானால்;*

*இன்னொரு "கோல்பேஸ் போராட்டத்தை" போல வடக்கு, கிழக்கில் வந்தாலும் ஆச்சரியப்பட முடியாது.*

*அப்படியான ஒரு "துர்ப்பாக்கிய நிலைக்கு" வடக்கு, கிழக்கு மக்களை தள்ளிவிட்டால் அதற்கு ஆளும் அரசு மட்டுமல்ல, தெற்கு மக்களும்தான் பொறுப்பு.*

*தெற்கில் நிகழ்ந்த "அவலத்தைப்போல" வடக்கில் நிகழ்ந்தால் அதைப் பொறுத்துக் கொண்டு அவர்கள் இருக்கவேண்டும் என தெற்கு மக்களும் அரசும் நினைத்தால் அது தப்பு.*

*இனங்களுக்கிடையே "நல்லிணக்கத்தை" வளர்க்கவேண்டும் என மனதார விரும்பினால்;*

*அது நிகழ்வதற்கு ஏதுவான சூழலை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தவேண்டிய கட்டாயம் அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் உண்டு.*

*இந்த நாட்டை மீளவும் கட்டியெழுப்ப வேண்டுமெனில் சில "விட்டுக் கொடுப்புகளை" சிங்கள மக்களும் சிறிலங்கா ஆளும் அரசும் செய்ய முன்வரவேண்டும்.*

*அப்போதுதான் "நிலையான" ஒரு வளர்ச்சியை நோக்கி சிறிலங்கா நகரும்.*

*அல்லது இப்போது ஏற்பட்டுள்ள இந்த "பொருளாதார ஸ்திரத்தன்மை" வெறுமனே தற்காலிக நீர்க்குமிழியாக மாறிவிடும் அபாயம் உள்ளது.*

*ரணில் அரசு தமிழ்த்தரப்பை பேச அழைக்கும் போதெல்லாம் தமிழ்த்தரப்பு "நம்பிக்கையில்லாமல்தான்" மேசையில் போய் இருந்துவிட்டு வருகிறார்கள்.*

*பேச்சுகளில் எந்தவித முன்னேற்றமோ அல்லது நல்லிணக்கமோ ஏற்படுவதாக இதுவரைக்கும் தென்படவில்லை.*

*இந்த நிலை மாறவேண்டும் எனில் ரணில் அரசு சில "நல்லிணக்க சமிக்ஞைகளை" காட்டவேண்டும்.*

*வெறுமனே உலக நாடுகளின் "அழுத்தத் தின்" வெளிப்பாடாக தமிழ்த்தரப்பை பேச்சுக்கு அழைத்து காலத்தை கடத்திக் கொண்டிருந்தால் அதன் விளைவுகளை ஒட்டுமொத்த நாடும் தான் சந்திக்க நேரிடும்.*

*மீண்டும் மீண்டும் மனம் தளராது தமிழ்த்தரப்பு "கைகளை நீட்டிக்கொண்டேயிருக்கிறது". பதிலுக்கு ஆளும் அரசும் தெற்கும் கொஞ்சமெண்டாலும் மனதார நெருக்கமாக வருவதற்கு முயற்சிக்கவேண்டும்.*

*தமிழ் மக்களுக்கு நடந்த "அநீதிகளை" சிறிலங்கா அரச தரப்பும் சிங்கள மக்களும் உணர்ந்து அதை ஏற்றுக்கொண்டு அதற்கான "பரிகாரங்களை" செய்ய முன்வரவேண்டும்.*

*குற்றம் புரிந்தவர்களை "தண்டிப்பது" இரண்டாம் கட்டம். அதற்கு முதல் தமிழ் நிலத்தில் நிகழ்ந்த பேரவலத்தை ஏற்றுக் கொள்ளும் "பக்குவத்தை" தெற்கு வளர்க்கவேண்டும்.*

*இல்லையேல் தமிழ் மக்களின் மனங்களில் இருக்கும் "வடுக்களும் வலிகளும்" இன்னும் இன்னும் அதிகமாகுமே ஒழிய;*

*அதை "மறந்துவிட்டு" எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு வடக்கும் கிழக்கும் இருக்கும் எண்டு நினைப்பது தப்புக்கணக்கு.*

*இறுதியாக;*

*உலக வங்கி தரும் கோடிக்கணக்கான டொலர்களும் வெளிநாட்டு முதலீடுகளும் மட்டும் இந்த நாட்டை முன்னேற்றிவிடும் என்று நினைத்தால்.....*

*மீண்டும் சிறிலங்காவில் "எல்லாத்துக்கும் வரிசையில்" நிக்கவேண்டிய அவலநிலை வந்துசேரும்.*

*சொல்லுறதை சொல்லியாச்சு.*

*முடிவு எடுக்கவேண்டிய பொறுப்பு சிங்களமக்களின் கைகளிலும் ரணில் அரசிடமும் தான் உள்ளது.*

*பாப்பம் என்ன நடக்குதெண்டு!!!*

# தமிழனுக்கு தமிழனின் தமிழ் வாழ்த்துக்கள்

மூன்றாம் ஆண்டிலே
முத்திரை பதிக்கின்றான்
முத்தமிழ் பெயர்
சொல்லும்
சுந்தர தமிழன்......

இனபாடு இங்கில்லை
மதப்போக்கிற்கிடமில்லை
மாற்றத்தின் நுனி தேடி
சீற்றமாய்
செல்கின்றான்....

நித்தம் மாறுகிற
பூமி உருண்டையிலே
மொத்தமும் மாறாத
எத்தனை விடயங்கள்...
அதில் பத்திரிகை
தர்மத்திற்கு...

தரமான இடமுண்டு...
அனல் தெறிக்க
கதை பேசி
கட்டுரையில் புயல் வீச
நித்தம் தரும் செய்தியிலே
புதுமைகளை பதிய
வைப்பாய்...

அரசியல் சீண்டலை
அச்மின்றி சீண்டிடவும்
அநியாயம்
குரோதங்களை
குதறி வீழ்த்தவும்

தமிழன்னை பெயர்
கொண்ட மிடுக்கான
பெரும் ஏடு
தமிழனுக்கு பயமேது....

நாவில் உரையும்
எங்கள் இன்ப தமிழ்
போலே
நித்தம் நெஞ்சில்
உறைகின்றாய்
மிடுக்கான தமிழ் ஏடு...

மூவாண்டு தாண்டி நீயும்
பல்லாண்டு வாழிய
வாழ்க வென்று
வாழ்த்துகிறேன்...
உனை நானும்...

"வாழ்க நின் தமிழ் சேவை"

*- எம். ராமதாஸ்*
*இறம்பொடை -*

# ஹஜ்ஜுப் பெருநாள்

துல்ஹஜ் மாதம்
நன்மைகளில் பூக்கும்
ஹாஜிகளை உருவாக்கி
தீமைகளை நீக்கும்
பச்சிளங் குழந்தையாய்
பாவங்களைப் போக்கும்
இச்சைகளை விரட்டி
இன்பத்தைத் தேக்கும்

இப்றாஹீம் நபியின்
தியாகத்தை உணர்த்தும்
தப்பை விலக்கி
சுவர்க்கத்தில் உயர்த்தும்
றப்பின் வல்லமை
உள்ளத்தில் கமழும்
கப்ரின் வேதனையிலிருந்து
விடுபடவே மனமழும்

சபா மர்வா
தொங்கோட்டம் என்றும்

அன்னை ஹாஜரா நாயகியை
நினைவூட்டும் இன்றும்
இஸ்மாயில்(அலை)
அவர்களுக்கும்
வந்ததே சோதனை
ஸம்ஸம் தண்ணீர்
மக்காவின் சாதனை

கஃபத்துல்லாவை கண்டாலே
உள்ளம் திளைக்கும்
துஆப் பிரார்த்தனை
கண்களை நனைக்கும்
நாவும் லெப்பைக்கை
உச்சரித்தே களிக்கும்
தாவும் மனமும்
நல்லெண்ணத்தில் துளிர்க்கும்

இஹ்ராம் துணியும்
உடலை மறைக்கும்
குர்பான் கடமையும்

உள்ளத்தை நிறைக்கும்
மறுமை வாழ்வும்
கண்முன் சிறக்கும்
இம்மையும் மறைந்தே
நன்மைகள் நிறைக்கும்

தியாகத்தை நினைவூட்டும்
இந்நாள் பெருநாள்
யாகத்தைக் கூட்டிடும்
அழகியத் திருநாள்
தீமையை அழித்திடும்
நன்மையின் நிறைநாள்
தூய்மையை உரைத்திடும்
ஹஜ்ஜுப் பெருநாள்..!

*- ஏரூர் கவிமாமணி*
*எம்.ரி.எம்.அன்ஸார்*
*ஏறாவூர்-*

# ஈனம்

பட்ச பாதமும்
பாவ நீட்சியும்
கட்ட விழ்ந்திடும்
காத கங்களும்
விட்ட கன்றிடா
வீண வாக்களும்
இட்ட வாழ்வினில்
ஈன மாகுமே!

துட்டு தேடியே
சோரம் போவதும்
கட்டு டைப்பினால்
கருத்தி ழப்பதும்
கெட்ட ழிந்தவர்

கேண்மை கொள்வதும்
இட்ட வாழ்வினில்
ஈன மாகுமே!

மட்ட மானதாய்
வார்த்தை நீளலும்
துட்ட ரோடுளம்
தோது காண்பதும்
வெட்டிப் போக்கினில்
வீம்பு கொள்வதும்
இட்ட வாழ்வினில்
ஈன மாகுமே!

*- "கவிச்சுடர்"*
*மு.மீ.அமீர்அலி-*

# எழுதும் மனம்!!!

விரல்களுக்கிடையில் வீற்றிருந்த
உங்களை என் கரங்கள் பற்றிப்பிடித்திருந்தாலும்
மனம் இன்னும் பற்றுதலிலிருந்து
சற்று தன்னை விலக்கிக்கொண்டுள்ளது
காரணம் பென்சிலின் அகலமான கூர்முனை
எழுத்துக்களுக்கு வடிவம்
கொடுப்பதற்கு
தடுமாற்றம் அடைகின்றது.
சீவிலியை தேடி அலையும்
பென்சிலைப் போல
படைப்புக்களை தேடி
அலைந்துகொண்டிருக்கிறது
கூர்மையான மனத்தை தேடி...

*- கு.க. அமுதன்.-*

## தூறல்கள்

# நானும் ஹாஜி!

ஹஜ்ஜுக்குப் போகிறாய்
பாவத்தைப்போக்கி பாலகனாக மாற
ஏழு நப்ஸையும் அறுத்து
இதயத்தை துலக்கி ஈமானுடன் வாழ
இறையில்லம் நோக்கிப் போகிறாய்
ஹஜ்ஜை நிறைவேற்றி
ஹஜ்ஜும் செய்கிறாய்
மீண்டும் நப்ஸுக்கு
வழிபடுகிறாய்
பொறுமையிழந்து
செயல்படுகிறாய்
பாவத்தை அழித்து
பரிசுத்தமடையப்போன நீ
பாழ்கிணற்றில் விழுகிறாய்
போன நோக்கம் புரியாமல்
புலம்புகிறாய்
புனிதமான ஹஜ்ஜை
புதினமாக்குகிறாய்
பெயருக்கு நீ ஹாஜி
எதார்த்ததில்.......?

*- கவியாக்கம்*
*காத்தநகர்*
*அபூ அஸ்மியா-*

இது போன்று உங்களுடைய கவிதைகளையும் பிரசுரிக்க வேண்டுமானால் thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# தமிழன் தர்பார்



இது எங்க ஏரியா

## மூன்று மகன்கள்



ஒரு கோடீஸ்வரருக்கு மூன்று மகன்கள். மரணப் படுக்கையில் இருக்கும் பொழுது மூன்று பேரையும் அழைத்துச் சொன்னார். எனது சொத்து முப்பது கோடி. நான் உங்களுக்கு சமமாக அளிக்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. நான் இறந்த பின் புதைக்கும்போது, அதில் பாதியை ஒவ்வருவரும் போட வேண்டும். அப்போது தான் அடுத்த பிறவியிலும் நான் பணக்காரனாக முடியும். அனைவரும் சம்மதித்தனர்

ஒரு நாள் அவர் இறந்துபோனார். காரியங்கள் முடிந்த பின்பு மகன்கள் பேசிக்கொண்டார்கள். நீ அப்பா சொன்ன மாதிரி காசு புதைத்தாயா?

முதல் மகன் : நான் ஒரு கோடி போட்டேன்.

இரண்டாவது மகன்: நானே பரவாயில்லை. மூணு கோடி போட்டேன். நீ என்னை விட மோசம்.

மூன்றாவது மகன்: நீங்கள் ரெண்டு பேரும் அப்பாவுக்கு கொடுத்த சத்தியத்தை மீறி விட்டீர்கள். நான் அப்படியில்லை. அப்பா அஞ்சு கோடிதான் கேட்டார். ஆனாலும் நான் கொடுத்த பத்து கோடிக்கும் ஒரு செக் எழுதி போட்டுட்டேன்.

## தம்பதிகளின் விருப்பம்



ஒரு தம்பதியினர் கோயிலுக்குச் சென்றனர். அங்கு ஒரு கிணறு இருந்தது. அது விருப்பத்தை நிறைவேற்றும் கிணறு. அதனிடம் சென்று கணவன் தன் விருப்பத்தைக் கூறிவிட்டு வந்தான்.

பிறகு மனைவி அந்த கிணற்றுக்கு அருகே சென்றாள். அவளுக்கு உயரம் போதாததால் கொஞ்சம் எட்டிப்பார்த்தாள். அவ்வளவுதான் அவள் கால் தவறி கிணற்றுக்குள் விழுந்துவிட்டாள்.

கணவன் பதறியபடி நிஜமாகவே பலிக்கிறதே என்றான்.

## வாழ்த்துகள் தமிழன், வாழ்க தமிழுடன்!!

முன்னேற்ற பாதையில் மூன்று ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் 'தமிழன்' நாளிதழின் இந்த மகத்தான வெற்றி நம் அனைவரையும் பெருமைகொள்ளச் செய்கிறது.

'தமிழன்' கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது. எட்டு கோடி தமிழர்கள் வாழும் தமிழகத்தில் கூட தமிழன் என்ற பெயரில் ஒரு நாளிதழ் வெளியானதாக நான் அறியவில்லை.

ஆனால், இலங்கையில் மிகவும் குறைவான தமிழர்கள் வாழும் சூழலில் அதுவும் ஈழத்தில் ஒரு மிகப் பெரிய ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்கள் நிம்மதி பெருமூச்சுவிட்ட சந்தர்ப்பத்தில் 'தமிழன்' என்ற பெயரில் நெஞ்சு நிமிர்த்தி அஞ்சாமல் வெளிவந்ததுதான் 'தமிழன்' நாளிதழ்!

'தமிழன்' என்ற பெயர் ஓர் இனத்தின் அடையாளம். அந்தப் பெயரைச் சொல்லி கடைகளில் இந்த நாளிதழை தமிழ் பேசும் மற்ற சமூகத்தினர்கள் எப்படி



வாங்குவார்கள்?

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பத்திரிகை முகவர்கள் இந்தப் பெயரை உச்சரிக்கும்போதே முகம் சுழிப்பார்களே, என்றெல்லாம் சமூக ஊடகங்களில் பரிகாசம் செய்து எழுதியிருந்தார்கள். இந்த நெருக்கடி நிலையில், வைத்தால் 'தமிழன்' என்ற பெயரைத்தான் வைப்பேன் என்று பிடிவாதமாக இருந்த 'தமிழன்' நாளிதழின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் வெற்றிகரமாக தமிழனை வெளியிட்டு மகத்தான சாதனையை படைத்திருக்கிறார்.

ஓராண்டுக்குள் கதை முடிந்துவிடும் என்று கருத்து பகிர்ந்தவர்களின் முகத்தில் கரியை பூசிவிட்டு மூன்று ஆண்டுகளை நிறைவு செய்து ஆச்சர்யப்படுத்தியிருக்கிறார்.

மதச்சார்பற்ற நாடாக விளங்கும் இந்தியாவில், 1878ஆம் ஆண்டில் சென்னையை தலைமையிடமாகக்கொண்டு ஒரு மதத்தின் பெயரால் 'இந்து' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை தொடங்கி அதனை அனைத்து மதத்தவர்களும் வாங்கிப் படிக்கும் ஒரு ஜனரஞ்சக பத்திரிகையாக இன்றுவரை வெளியாகி கொண்டிருப்பதை மறந்து விட்டு, 'தமிழன்' பெயரில் ஒரு பத்திரிகையா, இது சாத்தியமா இனத்தின் பெயரில் ஒரு பத்திரிகையை இலங்கையில் வெற்றிகரமாக நடத்த வாய்ப்பில்லை என்று எள்ளி நகையாடிவர்கள் இன்று வாயடைத்து நிற்கிறார்கள்!

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலனாக அனைவரின் பேரபிமானம் பெற்று அவர்களின் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் நாளிதழாக விளங்குகிறது நமது 'தமிழன்' நாளிதழ்.

வாழ்த்துகள் தமிழன்!
வாழ்க தமிழுடன்!!

## ஒன்றே குலம் ஒருவனே தேவன்



அறிஞர் அண்ணாவுக்குச் சிலை வைக்க நினைத்த எம்.ஜி.ஆர். அண்ணாவை போட்டோ எடுத்துவரச் சொன்னார். புகைப்படம் எடுப்பவரிடம் அண்ணா, 5 விரலைக் காட்டி புகைப்படம் எடுக்கச் சொன்னார்.

அதற்கு, உங்களை ஒரு விரல் காட்டித்தான் படம் எடுத்து வரச் சொன்னார் என்றார் போடோகிராபர். அண்ணாவுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை ஆனாலும் போட்டோகிராபர் சொன்னபடி ஒரு விரலைக் காட்டி போட்டோவுக்கு போஸ் கொடுத்தார்.

பிறகு எம்.ஜி.ஆரை நேரில் சந்தித்தபோது ஏன் ஒரு விரலை காண்பித்தபடி புகைப்படம் எடுக்கச் சொன்னாய் என்று கேட்டார் அண்ணா, அதற்கு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உங்கள் பொன்மொழியை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று எம்.ஜி.ஆர் சொன்னதும் அவரை வெகுவாக பாராட்டியிருக்கிறார் அண்ணா.

## என்னையா முந்துகிறாய்..



ஒரு இந்து, ஒரு சர்தார், ஒரு அமெரிக்கர், விமானத்தில் பயனம் செய்துகொண்டிருந்தனர். திடீரென்று விமானத்தின் எஞ்ஜினில் கோளாறு ஏற்பட்டு அது தாறுமாறாக பறக்க ஆரம்பித்தது. பரசூட் இல்லாததால் விமானத்தில் இருந்த மூவரும் உயிரை பணயம் வைத்து அதிலிருந்து கீழே குதிக்க முடிவு செய்தனர்.

முதலில் சர்தார் குதித்து விட்டார். தன்னுடைய டர்பனை பரசூட் போன்று பிடித்துக்கொண்டு மெதுவாக இறங்கிக்கொண்டிருந்தார். அடுத்து, இந்து குதித்தார். அவர் தன்னுடைய வேட்டியை அவிழ்த்து அதை பரசூட் போல் பிடித்துக்கொண்டு மெதுவாக இறங்க ஆரம்பித்தார். கடைசியாக அமெரிக்கர் தன் சட்டையை கழட்டி அதை பரசூட் போல் பிடித்துக்கொண்டு குதித்தார், ஆனால், அவருடைய சட்டை, மற்றவர்களுடைய டர்பன் அல்லது வேட்டியைப் போல் மெதுவாக இறங்குவதற்கு உதவவில்லை. அதனால் அமெரிக்கர் வேகமாக கீழ் நோக்கி விழ ஆரம்பித்தார். விழும்போது முதலில் இந்துவை தாண்டி கீழே சென்றார். அப்போது இந்து, "உங்களை அந்த பகவான்தான் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அடுத்து சர்தாரை தாண்டி சென்றார். அதைப் பார்த்த சர்தார், "என்கிட்டயா போட்டி போடுகிறாய், இப்ப பார் யார் வேகமா போறான்னு பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டு, தான் பிடித்திருந்து டர்பனை விட்டு விட்டார்.

## என்னால பார்க்க முடியாது



மனோதத்துவ டாக்டர் ஒருவரிடம் அறுபது வயதான பெரியவர் தன் மனநிலை சரியாக இருக்கிறதா என்று செக் பண்ணிக்கொள்ள சென்றார்.

அவரை பரிசோதித்த டாக்டர் அவரிடம் மனநிலை சரியாக இருக்கிறதா என்பதை கண்டுபிடிக்க சில கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்..

டாக்டர்:- நான் உங்களோட வலது காதை வெட்டி எடுத்துட்டா என்ன ஆகும்?

பெரியவர்:- சத்தம் கேட்பது கொஞ்சம் சிரமமா இருக்கும்..

டாக்டர்:- வெரி குட்.. (தெளிவா தானே பதில் சொல்றார்)

பெரியவர்:- தேங்க்ஸ் டாக்டர்..

டாக்டர்:- ம்.. இப்போ உங்களோட இடது காதையும் வெட்டி எடுத்துட்டா என்ன ஆகும்?

பெரியவர்:- என்னால பார்க்க முடியாது சார்..

டாக்டர்:- (குழப்பத்துடன்...) என்ன சொல்றீங்க? ரெண்டு காதையும் வெட்டிட்டா பார்க்க முடியாதா?

பெரியவர்:- கண்டிப்பா டாக்டர்.

டாக்டர்:- (மனநிலை சரியில்லதான் போலிருக்கு.) எப்படி சொல்றீங்க?

பெரியவர்:- என் மூக்குக் கண்ணாடி காதுல தானே மாட்டி இருக்கேன், காதை வெட்டிடீங்கனா கண்ணாடி கழண்டு விழுந்துடுமே சார், அப்புறம் எப்படி எனக்கு கண்ணு தெரியும்?




# சீத்துவக்கேடு 245

வல்லாட்டம் இல்லாட்டில் வல்லுப்போர் எண்டு சொல்லுற வல்லு எண்டு ஒரு விளையாட்டை எங்கடை வயதுபோன ஆக்கள் அந்தக் காலத்திலை விளையாடி இருக்கினம் எண்டு சங்க இலக்கியங்களிலை கன விபரங்கள் இருக்குது கண்டியோ. குன்றப்பூதனார் எண்ட புலவர் “வல்லுப் போர் வல்லாய்” (பரிபாடல் 18) எண்டு இந்த விபரத்தைச் சொல்லுறார். வல்லு எண்டது இப்ப நாங்கள் விளையாடுற செஸ் மாதிரி எண்டு ஆக்கள் சொல்லுகினம் எண்ட அப்பு, உந்த விளையாட்டை விளையாடப் பாவிக்கிற பலகை வல்லுப்பலகை எண்டு சொல்லுகினம். உந்தப் பலகை கிட்டத்தட்ட மூண்டு அடி உயரம் இருக்கும். உது சம்பந்தமா ஒரு பாட்டு கலித்தொகையிலை இருக்குது எண்டு போட்டு மருதன் இளநாகனார் எழுதின

“குறிப்புக் காண் வல்லுப் பலகை எடுத்து நிறுத்தன்ன

கல்லாக் குறள! கடும் பகல் வந்து எம்மை,

இல்லத்து வா என, மெய் கொளீஇ, எல்லா! நின்

பெண்டிர் உளர்மன்னோ? கூறு”

(கலித்தொகைப் – 94) எண்ட பாட்டு வரியளைச் சொன்னார்.

பேந்து உதுகின்ரை கருத்து என்னண்டா எங்கடை கட்டையன் மாதிரி ஒருத்தன் கூனி ஒருத்தியைப் பாத்து அவளைத் தொட்டு எனக்கு உன்னிலை சரியான ஆசையாக் கிடக்கு வா சந்தோசமா இருக்கலாம் எண்டு கேட்டானாம். உடனை அவள் வல்லுப்பலகையை நிமித்தி வைச்ச மாதிரி இருக்கிற நீ எல்லாம் ஒரு ஆள் எண்டு என்னை வா எண்டு என்னண்டு கேப்பாய் ஏன் உன்ரை பெண்டிலோடை போய் உரஞ்சன் எண்டு பேசினாளாம் எண்டது அர்த்தம் எண்டார் .



உந்த வல்லாட்டத்தை வல்லுப்பலகை இல்லாமல் நாங்கள் இப்ப தாயம் விளையாட பெட்டியள் கீறி விளையாடுற மாதிரி வீடுகளிலை பொது இடங்களிலை உள்ள விறாந்தையளிலை திண்ணையளிலை வயதுபோன ஆக்கள் விளையாடி இருக்கினம் எண்ட செய்தியை எங்கட மருதன் இளநாகனார்

“பலிகண் மாறிய பாழ்படு பொதியில், நரைமூ தாளர்

நாயிடக் குழிந்த

வல்லின் நல்லகம் நிறையப் பல்பொறிக்

கான வாரணம் ஈனும்

காடாகி விளியும் நாடுடை யோரே”

(புறம் 52) எண்டு சொல்லுறார் எண்டார் அப்பு.

உங்கை ஊர்வழியை இருக்கிற பொது இடங்களிலை வயதுபோன ஆக்கள் வல்லு விளையாடேக்கை காய்களை உருட்டி உருட்டி விளையாடினதாலை வந்த குழிகளிலை காட்டுக்கோழியள் வந்து முட்டை போட்டதாம் எண்டது பொருள் எண்ட அப்பு, உதிலை இருந்து வயதுபோன ஆக்கள் உந்த விளையாட்டை விளையாடி இருக்கினம் மற்றது வல்லுப்பலகை இல்லாமலும் விளையாடி இருக்கினம் எண்டது விளங்குது எண்டார். அதுமாதிரி உந்த விளையாட்டு விளையாடப் பாவிக்கிற காய்களை வல்லுக்காய்கள் எண்டுவினம்.

உதுமட்டும் இல்லை. அந்தக் காலத்திலை வயதுபோன ஆக்கள் விளையாட எண்டு பொது இடங்கள் எல்லாம் இருந்து இருக்குது. அப்பிடியான ஒரு இடத்திலை ஒரு பக்கத்திலை வைச்சிருந்த வல்லுப்பலகை கறையான் அரிச்சுக் கிடந்ததாம் எண்டு மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்

“கொழுங் குடி போகிய பெரும் பாழ் மன்றத்து,

நரை மூதாளர் அதிர் தலை இறக்கி,

கவை மனத்து இருத்தும் வல்லு வனப்பு அழிய,

வரி நிறச் சிதலை அரித்தலின், (அகநானூறு 377)

அக நானூறிலை சொல்லுறார் எண்ட அப்பு, உங்கை லண்டனாலை வந்த நாகராசாற்றை பெடி சொல்லுறமாதிரி வெள்ளைக்காரன்தான் வயதுபோன ஆக்களை கவனமாப் பாக்கவேணும் எண்டு பொது இடங்களை வைக்கேல்லை எங்கடை ஆக்கள் எத்தினையோ நூறு வரியங்களுக்கு முதலே யோசிச்சு உப்பிடி வயதுபோன ஆக்கள் இருந்து விளயாட வேணும் எண்டு பொது இடங்களை வைச்சிருக்கிறாங்கள் எண்டார்.

*(இன்னும் ஆடுவம் )*

# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

மேஷம்

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியுமான சூழ்நிலையே காணப்படும். பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபட நேரிட்டால் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்றாலும் அதனால் பாதிப்பு இருக்காது. வெளியூர்ப் பயணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்கவேண்டி வரும். புதிய முதலீடுகள் தவிர்க்கவும். பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

ரிஷபம்

பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை இல்லாத வாரம். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும். அதனால், தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். பிள்ளைகள் வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

அலுவலகத்தில் பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். இருக்கும் வேலையிலிருந்து வேறு வேலைக்கு மாற முயற்சி மேற்கொள்ள வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும்.

வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஒத்துழைப்பு தருவார்கள்.

### மிதுன ராசி அன்பர்களே!

மிதுனம்

சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயல்படும் வாரமாக இருக்கும். நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விடயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாட்களாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். அதிகாரிகளின் ஆதரவால் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் தங்கள் பணிகளில் உங்கள் உதவியை நாடி வருவார்கள். சலுகைகள் கிடைக்கும்.

வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பால் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

### கடக ராசி அன்பர்களே!

கடகம்

அதிர்ஷ்டம் தரும் வாரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் மதிப்பு அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். பங்குதாரர்கள் அனுகூலமாக இருப்பார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

சிம்மம்

புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருந்தாலும், செலவுகளையும் ஏற்படுத்தும். வழக்குகளில் நிதானம் தேவை.

வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள்.

வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

### கன்னி ராசி அன்பர்களே!

கன்னி

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். திருமண வயதில் உள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல வரன் அமைவதற்கு வாய்ப்பு உள்ளது. பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பயணங்களும் அதனால் ஆதாயம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒருசிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. அலுவலகப் பணியின் காரணமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம்.

### துலா ராசி அன்பர்களே!

துலாம்

கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். அரசாங்க வகையில் திடீர் செலவுகள் ஏற்படக்கூடும்.

அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி பதவி உயர்வுடன் கூடிய இடமாறுதல் கிடைக்கும்.

வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

விருச்சிகம்

பணப்புழக்கம் அதிகரிக்கும் வாரம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விடயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ளவேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவைப்படும். தந்தைவழியில் ஆதாயம் கிடைக்கும்.

அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும்.

### தனுசு ராசி அன்பர்களே!

தனுசு

வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நண்பர்கள் தக்க தருணத்தில் உதவி செய்வார்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்க முடியாது.

வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

### மகர ராசி அன்பர்களே!

மகரம்

பணவரவுக்கு குறைவிருக்காது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. தந்தைவழி உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களுடன் பேசும்போது சற்று எச்சரிக்கையாக இருக்கவும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். தந்தையின் உடல் நலனில் கவனம் செலுத்தவும்.

அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். முக்கியமான ஒரு பிரச்சினையை சமயோசிதமாகத் தீர்த்து நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பாராத சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

### கும்ப ராசி அன்பர்களே!

கும்பம்

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தந்தைவழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கை யாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். சிலருக்கு விரும்பத்தகாத இடமாற்றம் ஏற்படும்.

வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

### மீன ராசி அன்பர்களே!

மீனம்

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற் பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் சுபச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒருசிலருக்கு இருக்கும் இடத்திலிருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே நடக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்தத் தேவையான வங்கிக் கடனுதவி கிடைக்கும்.பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

தமிழன் தொடர்கதை

# யார் அவன்

அத்தியாயம்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்



ஆனாலும் உள்ளே சென்றவளுக்கு அவள் அச்சப்பட்டதுபோல் எதுவுமே எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. அதற்கு முற்றும் முழுதாக மாறுபட்ட வகையில்,

''வாம்மா.... ராதா. என்னம்மா ரவி தம்பியோட பைக்கிலயா வந்தே... இப்பதாம்மா ரவி தம்பியைப் பற்றியும் அவருடைய நல்ல குனங்களைப் பற்றியும் நாங்கள் கதைத்துக்கொண்டிருந்தோம். அவரு நல்ல மனுசன். அவரை நமக்கு நட்பாக்கி தந்த இறைவன், அவருக்கு நல்ல வாழ்க்கையை கொடுக்கணும் என்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தோம்'' என்று அவளுடைய அப்பா சொல்ல, இடையில் குறுக்கிட்ட ரவி.

''என்ன மாமா நீங்கள் இப்படி என்னை வேறாகப் பிரிச்சு கதைக்கிறீங்க. என்னுடைய அப்பா, அம்மாவாதான் நான் உங்களை நினைக்கிறேன். அது மாதிரி உங்களுடைய இந்தக் குடும்பத்தை என்னுடைய சொந்தக் குடும்பமாக நான் நெனைக்கிறேன். அதனால இதுக்கு மேலே எந்தக் காரணத்தைக்கொண்டும் என்னையும் உங்களையும் வேறு வேறாய் பிரிச்சு பேசுறதை முதலில் விடுங்க.... ப்ளீஸ்'' என்று உருக்கமாகக் கெஞ்சினான். அதனைக் கேட்ட ராதாவின் அப்பாவின் விழிகளில் கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்தன.

அதற்குப் பின்னர் அவன் எல்லோரிடமும் ஒரே குடும்பம்போல் மனம் விட்டுப் பேசி குதூகலமாக இருந்துவிட்டு பிரிய மனமில்லாமல் மிகவும் கஷ்டத்துடன் அங்கிருந்து ரவி பிரிந்து சென்றான்.

அவனுடைய உறவு அக்குடும்பத்துக்கும் ஒரு புது அனுபவத்தை, மகிழ்ச்சியை, உற்சாகத்தை, நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. அவன் அவர்களுக்கு பெரும் உதவியாகவும் இருந்தான்.

இப்படியே ராதா - ரவியின் காதல் முளைத்து கிளை விட்டு அதிவேகமாக வளர்ந்து அன்பு பூ மலர்ந்து பெரும் மரமாக ஆவதற்கு அவ்வளவு நீண்டகாலம் எடுக்கவில்லை. மாறாக, வெறும் ஆறே ஆறு மாதம் மட்டுமே சென்றது. அதற்கிடையில் இருவரும் சேர்ந்து நிறைய இடங்களுக்குச் செல்வதும் சுற்றித் திரிந்துவிட்டு வருவதும் என்று மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்தனர். இது ராதாவின் வீட்டாருக்கு நன்கு தெரிந்தும் அதை அவர்கள் தடுக்கவுமில்லை, எச்சரிக்கவுமில்லை. அதற்கான முழு சுதந்திரமும் அவர்களுக்கு கொடுத்திருந்தனர். அந்தளவுக்கு அவர்களுக்கு ரவியின் மேல் நம்பிக்கை இருந்தது.

இவ்வளவு நடந்தபோதும் தமது காதலை கடையில் இருக்கும் ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் என்றும், அப்படி அவர்களுக்கு அது தெரிந்தால் அதனால் சில சிக்கல்கள் வரும் என்றும், தமது திருமணத்துக்குப் பின்னர் அதனை அவர்களிடம் சொல்லிக்கொள்வோம் என்றும் ரவி அவளிடம் கண்டிப்பாக சொல்லியிருந்தான். அதனை ஏற்றுக்கொண்ட ராதாவும் அவன் சொன்னதைப்போலவே தம் காதலை அவர்களிடமிருந்து மறைத்தே வந்தாள். அதனால் இந்த விடயம் அவளுடன் வேலை பார்க்கும் சக தோழிக்குக் கூட தெரியாது.

இப்படியே அவர்களுடைய காதல் பயணம் ஆரேழு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், அன்று திடீரென்று ராதாவை தன்னருகே அழைத்த அவளுடைய தாய்,

''அம்மா ராதா... நான் சொல்லுறேன் என்று தப்பாக நெனைக்காதே... நான் ஏதும் கோபத்தில் சொல்லவில்லை. உன்மேல் உள்ள அக்கறையில் நல்லதுக்கே நான் சொல்கிறேன். நீயும் ரவியும் ரொம்ப நெருக்கமாக போறீங்க, வாறீங்க. அதில் ஒன்றுமில்லை. ஏனென்றால், உங்களைப்பற்றி எங்களுக்கு நன்றாகவே தெரியும். உங்களின்மேல் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. அதில் எந்தச் சந்தேகமுமில்லை.

ஆனால், ஊர் உலகம் இருக்கே... அது அப்படியில்லமா கண்ணு. ஒரு சின்ன விடயத்துக்கும் காது, மூக்கு, வாயெல்லாம் வைச்சி அதை பெரிசாக்கி வீண் கதையை பரப்பி விடுவாங்கம்மா.... அது பிறகு உங்களுடைய வாழ்க்கையைத்தான் பாதிக்கும். அதனாலேதானம்மா உன் கிட்டே சொல்றேன். ரவி தம்பியோட பக்குவமாய் கதைச்சி நீங்கள் ரெண்டு பேரும் விரைவில் திருமணம் செஞ்சிக்கிட்டீங்கனா வேறு யாருக்கும் உங்களைப் பற்றி ஒண்ணும் கதைக்கவும் முடியாது. அவரும் நம்ம வீட்டோட வந்து நம்மளோட ஒண்ணாவே இருந்திடுவாரு. அது எல்லோருக்கும் நல்லதுதானம்மா'' என்றாள் உருக்கமாக.

அதனைக் கேட்ட ராதாவுக்கும் அம்மா அப்படிச் சொல்வது மிகவும் சரி என்றே பட்டது. அதில் நிறையவே நியாயங்கள் இருப்பதையும் உணர்ந்தாள். அதனால் அவளும் அவளுடைய அம்மாவிடம்,

''ஆமாம் அம்மா. நீங்கள் சொல்வதும் முற்றும் முழுதாக சரிதாம்மா. அதில் எந்த விதமான பிழையும் இல்லை. இப்படியே போனால் காலப்போக்கில் இன்னும் நிறைய பிரச்சினைகள் வரும். அதனால் நீங்கள் சொல்வதுபோல் இப்போதே அதனை சரி செய்வதுதான் சரி. அதனால் நான் அவரிடம் எப்படியும் கதைத்து ஒரு நல்ல முடிவை எடுக்கிறேனம்மா...'' என்று அம்மாவின் கூற்றை ஏற்றுக்கொண்ட ராதா, அம்மாவுக்கு சாதகமான பதிலையும் சொன்னாள்.

மறுநாள் கடைக்குப் போகும் வழியில் ரவிக்கு அவசரமாக அழைப்பை எடுத்தாள். அதனை மறுமுனையில் ஓன் பண்ணியவன்,

''சொல்லுடா ராதா குட்டி...'' என்றான் செல்லமாக.

அதனைக் கேட்டவள் அதற்குப் பதிலாக,

''இல்லைங்க உங்களை நான் அவசரமாக தனிமையில் கொஞ்சம் சந்திக்கணும். சில விடயங்கள் பற்றி பேசணும், முடிவெடுக்கணும்'' என்றாள்.

அதற்கவன், ''அவ்வளவுதானா. அதுக்கென்ன தாராளமாய் சந்திப்போமே... பேசுவோமே... முடிவெடுப்போமே'' என்றான்.

அவன் சொன்னபடியே கடை முடிந்து வரும்போது இருவரும் அந்தக் கடற்கரையில் ஒதுக்குபுறமாக சந்தித்தனர். முதலில் வந்ததும் வராததுமாய் இதனை சொல்லக்கூடாது என்று நினைத்தவள் அவளுடைய அப்பாவின் வீசிங் கதையை அவனிடம் சொன்னாள். பின் தன் நிலையை கூறினாள். அதற்குப் பின்னர் அவனின் அணைப்பிலிருந்து சற்று விலகியவள்,....

(தொடரும்)

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

ஊருவிட்டு ஊருவந்த
அந்த ஊம காலத்திலே
பேச்சியம்மா என்று
மாரிமுத்து உடன்பிறந்த
தங்கச்சியும்
வந்தாளே....

பேச்சியம்மா அவ பேரு
கேகால ஊரினிலே
தண்டவாளம்
போடயிலே
கால்தடுக்கி
விழுந்ததிலே...
வயித்து
புள்ளயோட சேத்து
பொதைச்சாங்களே

அது வேறு யாரும்
இல்லயய்யா இவனோட
தங்கச்சி தான்....
அப்போ வேலபாத்த
சுப்பே கங்காணியும்
தோட்டம் தேடி போயிவிட
ஊட்டுவள்ளி
தோட்டத்திலே

மேக்கணக்கு பிரிவினிலே
வந்து சேர்ந்துவிட்ட
கூட்டத்தாங்க
இந்த மாரிமுத்து
கூட்டமிது....

கேகாலை
ஊருக்குள்ளே
ரயில் பாதை வேல
எல்லாம்
முடிந்து விட்ட பின்னே
அங்கேயே குடியான
வடிவேலும்
சின்ராசும்....

இவனோட சேர்ந்து
வந்த
பறைக்காரே வடிவேலும்
சேகண்டி சின்ராசும்
சேர்ந்து இங்கிருக்க....

சூழ்ந்து வந்த
துன்பங்களோ
எள்ளளவும் தீரவில்ல
நாலு காச சேத்துக்கிட்டி
நாள கழிச்சி வரும்
நல்ல பொழுது ஒன்றில்
நாடு போயி
சேந்துடலாம்
என்கிற நெனப்பு
இப்போ சுருங்கியே
போயிடுச்சி....
சாமி தொர என்று
சொல்லி
சாமி மாதிரி
ஆளொருத்தர்

நெடுந்து
வளர்ந்திருப்பார்
கோட்டு சூட்டு
மாட்டிருப்பார்
தொப்பித்தோட்ட
தொங்கவர
மேக மல எல்லவர
வெச்சிருந்த
ராசனவர்...

தொழிலாளர்
சனத்துக்குன்னு
சாமி போல வந்தவரு
ஆளுகளா பாத்து
தானே
வெச்சாங்க சாமி
பேரு...
பேயிபோல வந்து
நிக்கும்

தொரமாரு மத்தியில
காக்க வந்த சாமி
போல
இரக்கமுள்ள சாமி
இவர்....
பாசமாக பேசிடுவார்

கர்தரே என்று சொல்லி
கருணையும்
காட்டிடுவார்
எத்தி மிதிக்க வரும்
எதேச்சதிகாரத்த
தொழிலாளர் பக்கம்
நின்னு பக்குவமா
பேசினாரு...

பேயாட்டம் போடுகிற
பேய்வாழும்
ஊருக்குள்ள
காக்கவந்த சாமியாக
தெரிஞ்சாரு சாமி
தொர

(சொல்ல மறந்த
கதை இன்னும்
சொல்லப்படும்)

தொடரும்
எம் ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

# நாளையும் விடியும்

ஈழத்து நூரண்



எனது உம்மாவின் வாப்பா முஹம்மது மோதினார். அவர் தொழிலாக வரித்துக்கொண்டது. பள்ளிவாசலில் 'பாங்கு' சொல்வதும் பள்ளி வேலைகளைக் கவனிப்பதும்தான். பெரிதாக சம்பளம் என்றில்லை. ஆனால், ஆத்மதிருப்திக்காக அத்தொழிலை தொடர்ந்து செய்துவந்தார்.

பள்ளிவாசலில் உடல்சுத்திக்காக (வுழு) கட்டப்பட்ட அந்தப் பெரிய நீர்த்தடாகத்தை தினசரி அதிகாலையில் நிரப்புவது அவரது பிரதான பணியாக இருந்தது. அத்தோடு ஐந்து நேரத் தொழுகைக்காக நேரம் தவறாது பாங்கு சொல்வார். அவரது குரலோசை இன்றைய ஒலிபெருக்கியை விடவும் கூடுதல் சப்தமாகவே காணப்பட்டது.

ஒவ்வொரு நாளும் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்துகொள்வார். ஐந்து பெற்றரி துண்டுகள்கொண்ட டோர்ச் லைட்டை எடுத்துக்கொண்டு பள்ளிக்கு விரைவார். முதலில் இறைச்சிக்கடைக்கு மாடறுப்பதற்குச் செல்வார். தினசரி ஒன்று அல்லது இரண்டு மாடுகளை அறுத்துக் கொடுத்துவிட்டே பள்ளிக்குச் செல்வார்.

பஜ்ர் தொழுகைக்கான பாங்கு சொன்னதன் பின்னர் தொழுகை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாளிக் கிணற்றலிருந்து நீரை வார்த்து தடாகத்தை நிரப்புவார். வயது அறுபதைத் தாண்டியிருந்தாலும் முப்பது வயது வாலிபத் துடிப்புடன் இயங்குவார். அவர் எனது அப்பா தாயாரின் தந்தை வீட்டில் நான் சின்னவனாக இருப்பதால் என்மீது அலாதியான நேசம் கொண்டிருந்தார். எனக்கு மூத்த நானாவும் அவர் வயதொத்த சின்ன மாமாவும் இருந்தனர். குடும்ப வருமானம் நாளாந்த வாழ்க்கைக்கு போதுமானதாக மட்டுமே இருந்தது.

ஒரே வீட்டில் மூன்று குடும்பங்கள். மாமா குடும்பம், எங்கள் குடும்பம், அப்பா தாத்தாவின் குடும்பம். அன்றைய பொருளாதார நிலையில் அப்பாவுக்கு மாதம் 30 ரூபா சம்பளம். மாடறுப்பின் மூலம் எப்படியும் 15 அல்லது 20 ரூபா மாதாந்தம் கிடைக்கும். எங்கள் வாப்பா தினசரி மூன்று நான்கு ரூபா உழைப்பார். கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. மாமா திருமணம் முடித்திருந்தாலும் தொழிலின்றி எங்கள் தயவிலேயே காலம் கடத்திக்கொண்டிருந்தார்.

எமது கந்தலைக் கிராமத்தில் வசதி படைத்த ஒருசில குடும்பத்தினர்தான் ஓட்டு வீடுகள் கட்டியிருந்தனர். ஏனைய எல்லோருமே குடிசை போன்ற வீடுகள்தான். அதுவும் களிமண் சுவரும் தென்னோலைக் கிடுகுகளால் வேயப்பட்ட கூரையும்தான். மழை காலத்தில் கடும் குளிராக இருக்கும். கோடை காலத்தில் இரவில் கூட நித்திரைகொள்ள முடியாது. அந்தளவுக்கு வெப்பம்தான். எங்கள் வீடு கற்களால் கட்டப்பட்டிருந்தபோது கிடுகு வேயப்பட்ட கூரைதான்.

ஒருநாள் பள்ளிக்குச் செல்லும் குறுக்குப் பாதையான கன்றுத் தோட்டத்தின் ஒற்றையடிப் பாதையால் போய் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள தர்ஹாவுக்கு பக்கமாக நீண்டு வளர்ந்திருக்கும் கோங்கா மரம், அது மிக உயரமான 'நெடுமி'யாக வளர்ந்திருந்தது. தர்ஹாவில் காணிக்கை போட்டு அந்த நெடுமியிலிருந்து கொழுந்தொன்றைப் பறித்து வாயில் போட்டு சப்பி மென்று விழுங்கினேன். எனக்கு வயிற்றுவலி வந்தபோது உம்மம்மா வைத்த நேர்த்திக்கடன் அது. ஊர் மக்கள் அந்த தர்ஹாவில் அடங்கிப்பட்டிருக்கும் இறைநேசர் மீதும் அந்த நெடுமியின் மீதும் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். சில காரிய சித்திகளுக்காக அங்கு நேர்த்தி வைத்து மக்கள் விசேடமாக பெண்கள் காரியங்களில் இறங்குவார்கள்.

மழைகாலம் வந்தால் எல்லா வீடுகளிலும் கஷ்டம்தான். பெரும்பாலான வீடுகளில் மழை நீர் ஒழுகி இருக்கும். நித்திரை கொள்ளவோ முடியாத அளவுக்கு நிலைமை மோசமாக இருக்கும். தொடர்ந்து மழை பெய்ததால் மக்கள் கஷ்டத்தை எதிர்கொண்டனர். வறுமை தாண்டவமாடியது. ஒருவேளை சாப்பாட்டுக்குக்கூட மக்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டது. விடிவு காலம் பிறக்காதா என மக்கள் ஏங்கினர். ஒருநாள் அப்பாவிடம் நான் கேட்டேன்.

''அப்பா எங்களுக்கு நல்ல காலம் வராதா? நாங்கள் வீடுகட்டி சந்தோஷமாக வாழும் நிலை வராதா?''

அப்பா சொன்ன பதில், ''ஒருநாள் எங்களுக்கும் விடியும். அன்று நாமிருப்போமா என்பது எமக்கே தெரியாது '' – என்றார்.

இன்று எங்கள் அப்பா, உம்மம்மா, வாப்பா, உம்மா எல்லோருமே மரணித்து கப்ருக்குப் போய்விட்டார்கள். காலம் மாறியது. கற்றலை கிராமமும் மாற்றம் கண்டது. ஊரில் நிறையவே ஓட்டு வீடுகளும் வந்துவிட்டன. நாங்களும் இன்று ஓட்டு வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஓரளவு வசதிகளும் வந்துவிட்டன.

அந்தக் காலத்தை இன்று ஓரளவு மறந்துவிட்டோம். எமது பிள்ளைகளுக்கு அந்தக் காலத்தை கதையாக மட்டுமே சொல்ல முடியும். அவர்கள் அது அந்தக் காலம் என்று சொல்லி சிரித்து விளையாடி எங்களை கேலி செய்கிறார்கள். எம்மால் என்னதான் பதில் சொல்ல முடியும். காலம் மாறித்தான் போய்விட்டது.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. அப்பா மரணித்த நினைவு நாள். நான், எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் ஜும்மாவுக்குச் சென்று தொழுதுவிட்டு பள்ளிவாசலுக்குப் பின்புறமாக உள்ள 'மூஃபின்கள் பூங்கா' மையவாடிக்குச் சென்று அப்பா, உம்மம்மா, வாப்பா, உம்மா, உறவுகள் மற்றும் ஊரவர்களின் கபுறடிகளில் யாஸீன் ஓதி அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்தித்து துஆ கேட்டேன். பிள்ளைகளும் என்னோடு சேர்ந்து ஆமீன் சொன்னார்கள்.

பின்பு அங்கிருந்து வெளியேறும்போது அன்று அப்பா என்னிடம் சொன்ன ''எங்களுக்கும் நாளை விடியும். அப்போது நாங்கள் இருப்போமா என்பது படைத்த அவனுக்குத்தான் தெரியும்'' என்ற வார்த்தைகள் என் செவிப்பறைகளில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருப்பது போன்ற பிரமை என்னில் ஏற்பட்டது.

என்னை அறியாமலேயே என் கண்கள் குளமாகின.



# வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் தொடரின் பெயர் உருவானதன் சுவாரஸ்ய கதை

LV= INSURANCE
MEN'S ASHES SERIES



ஆங்கிலேய கிரிக்கெட் உலகம் எதிர்பார்த்துள்ள பென் ஸ்டோக்ஸ் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கும், பெட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலிய அணிக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் கடந்த வாரம் ஆரம்பமானது. கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் ஆஷஸ் தொடர் கிரிக்கெட் ரசிகர்களை மகிழ்விக்கிறது. இம்முறை தொடர் இங்கிலாந்தில் நடைபெறுகிறது.

முதலாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை (16) ஆரம்பமாகி கடந்த செவ்வாய்க்கிழமை (20) நிறைவுக்கு வந்தது. வழமைபோன்று பரபரப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்ற முதல் ஆட்டத்தின் இறுதி மணித்தியாலத்தில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்றது. இதன்மூலம் ஆஸி. அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது ஆஷஸ் ஆட்டம் எதிர்வரும் புதன்கிழமை (28) லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

ஆஷஸ் என்பது இவ்விரு அணிகளுக்கு இடையே நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெறும் பாரம்பரியமிக்க உணர்வுபூர்வமான ஒரு தொடராகும். ஆஷஸ் என்ற பெயர் உருவானதற்கு சுவாரஸ்யமான ஒரு கதை உண்டு. அது தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

**பெயர் உருவானது எப்படி ?**

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 1882ஆம் ஆண்டு லண்டன் ஓவலில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. இதில் அவுஸ்திரேலியா நிர்ணயித்த 85 ஓட்டங்கள் என்ற இலக்கைக்கூட எட்ட முடியாமல் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து அணி 77 ஓட்டங்களில் சுருண்டது. இங்கிலாந்து மண்ணில் அவுஸ்திரேலிய அணி பெற்ற முதல் வெற்றி இதுதான்.

இங்கிலாந்தின் மோசமான ஆட்டத்தைக் கண்டு கொதிப்படைந்த அங்குள்ள பத்திரிகை ஒன்று வித்தியாசமான இரங்கல் செய்தியை வெளியிட்டது. அதில், ஓவலில் 1882ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி இங்கிலாந்து கிரிக்கெட் செத்துவிட்டது. அதன் உடலை எரித்து சாம்பலை (ஆஷஸ்) அவுஸ்திரேலியா எடுத்து செல்கிறது என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தது. சில வாரங்கள் கழித்து இங்கிலாந்து அணி, அவுஸ்திரேலியா சென்றபோது இழந்த ஆஷஸை இங்கிலாந்து மீட்டுக்கொண்டு வருமா? என்று அந்த பத்திரிகை கேள்வி எழுப்பியது.

அப்போதைய இங்கிலாந்து அணியின் தலைவர் இவோ பிலிக், இங்கிலாந்து கிரிக்கெட்டின் சாம்பலை மீட்டு வருவோம் என்று சூளுரைத்தார். அதன்படி இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது. அந்த சமயத்தில் மெல்போர்னில் குழுமியிருந்த சில பெண்கள் கலைநயத்துடன் கூடிய சிறிய ஜாடியை இவோ பிலிக்கிடம் பரிசாக அளித்தனர்.

இங்கிலாந்து கிரிக்கெட்டின் சாம்பலை திரும்ப வழங்குகிறோம் என்பதை குறிப்பிடும் வகையில் ஸ்டம்பின் மீது வைக்கப்படும் பெய்ல்சை எரித்து அதன் சாம்பலை ஜாடிக்குள் வைத்திருந்தனர். இதன் பின்னணியில்தான் ஆஷஸ் பெயர் உதயமானது.

**எம்.சி.சி. அருங்காட்சியகத்திலுள்ள சாம்பல்**

அப்போதைய இங்கிலாந்து அணியின் தலைவரான இவோ பிலிக் மறைந்த பிறகு அந்த சிறிய ஜாடி 1927ஆம் ஆண்டு மெல்போர்ன் கிரிக்கெட் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது இப்போது லண்டன் லோர்ட்சில் உள்ள எம்.சி.சி. அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதன் மாதிரிதான் ஆஷஸ் தொடரில் வெற்றிபெறும் அணிக்கு கிண்ணமாக வழங்கப்படுகிறது.

**நேருக்கு நேர்**

குறைந்தது 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் இந்த ஆஷஸ் தொடரை 34 தடவைகள் அவுஸ்திரேலியாவும், 32 தடவைகள் இங்கிலாந்தும் கைப்பற்றியிருக்கின்றன. 6 தொடர்கள் சமநிலையில் முடிந்துள்ளன. இறுதியாக கடந்த 2021ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஆஷஸ் தொடரை அவுஸ்திரேலியா 4-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com


## தற்போது விற்பனையில்...

**தரம் 4, 5 மாணவர்களுக்கான**
**ஜூனியர் தமிழன் புலமைப்பரிசில் வழிகாட்டி**



நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

தொடர்புகளுக்கு 0768313896

விலை ரூ.60 மட்டுமே





# கிரிக்கெட் வருமானம், விளம்பரங்களை தாண்டி சமூக ஊடகங்களிலும் கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் கோஹ்லி

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு அடுத்து, உலகளவில் அதிக ரசிகர் பட்டாளங்களைக்கொண்டுள்ள வீரராக நட்சத்திர துடுப்பாட்ட வீரர் விராட் கோஹ்லி திகழ்கிறார். உலகின் அதிக வருமானம் ஈட்டும் கிரிக்கெட் பிரபலங்களில் ஒருவராகவும் விராட் கோஹ்லி காணப்படுகிறார்.

விராட் கோஹ்லியின் நிகர சொத்து மதிப்பு ரூ.1050 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்த ஒப்பந்தம், கார், மோட்டார்சைக்கிள், வீடு, ஐ.பி.எல். வருமானம் ஆகியவற்றையும் தாண்டி விராட் கோஹ்லி இன்ஸ்டாகிராம் போஸ்ட் மற்றும் டுவிட்டர் மூலமாகவும் அதிக வருமானம் ஈட்டுகிறார்.

ஒரேயொரு இன்ஸ்டாகிராம் போஸ்ட்டுக்காக விராட் கோஹ்லி ரூ.8.9 கோடி வருமானம் ஈட்டுகிறார். அதுமட்டுமன்றி ஒரே ஒரு டுவிட்டர் பதிவுக்கு ரூ.2.5 கோடி வருமானம் ஈட்டுகிறார். இது தவிர, மும்பையில் ரூ.34 கோடி மதிப்பில் ஒரு வீடும், ஹரியானாவின் குருகிராமில் ரூ.80 கோடி மதிப்பில் ஒரு வீடும் வைத்திருக்கிறார். மேலும், ரூ.31 கோடிக்கும் அதிகளவில் விலை உயர்ந்த ஏராளமான கார்களை வாங்கி வைத்திருக்கிறார்.

மேலும், ஸ்டார் ஸ்போர்ட்ஸ், வாலினி, வீவோ, அமெரிக்கன் டூரிஸ்டர், நாய்ஸ், சிந்தால், எம்.ஆர்.எவ், ஊபர், மைந்த்ரா, டூத்சி, கிரேட் லேர்னிங், புளூ ஸ்டார், ஹெச்.எஸ்.பி.சி, வ்ரான், ஃபையர் போல்ட், லுக்ஷர் ஆகிய நிறுவனங்களின் விளம்பரத் தூதராகவும் இருக்கிறார். இந்த நிறுவனங்களின் மூலமாக ஒரு நாளுக்கு மட்டும் ரூ.7.5 கோடி முதல் ரூ.10 கோடி வரையில் வருமானம் ஈட்டுகிறார். மேலும், உதைபந்து கிளப் அணி, ப்ரோ ரெஸ்லிங், டென்னிஸ் அணி ஆகிய விளையாட்டில் முதலீடு செய்து இதன் மூலமாகவும் வருமானம் ஈட்டுகிறார். இப்படி ஒவ்வொன்றின் மூலமாக விராட் கோஹ்லி ஆண்டுக்கு ரூ.1050 கோடி வரையில் வருமானம் ஈட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலக சம்பியனுடன் ஆடும் வாய்ப்பை இழந்த இந்தியா



நிதி பற்றாக்குறையால் ஆர்ஜென்ரீனா அணிக்கு எதிராக விளையாடும் வாய்ப்பை இந்திய உதைபந்து அணி இழந்துள்ளது.

உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா - அவுஸ்திரேலியா அணிகள் இடையிலான நட்புரீதியிலான போட்டி சீனாவிலுள்ள பீஜிங் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. முன்னதாக, இந்திய அணியுடன்தான் ஆர்ஜெண்டினா முதலில் விளையாட விரும்பியது.

மெஸ்சி தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி, தெற்காசியாவில் இரு அணிகளுடன் நட்புறவு ஆட்டமாக சர்வதேச போட்டிகளில் விளையாட முடிவு செய்து அவற்றில் ஓர் ஆட்டத்தை இந்திய அணியுடன் ஆட விருப்பம் தெரிவித்தது. முறைப்படி, இந்திய உதைபந்து அமைப்பின் கதவையும் ஆர்ஜென்ரீனா தட்டியது. ஆனால், இந்திய உதைபந்து அமைப்பு இந்த அரிய வாய்ப்பை நிராகரித்தது. நிராகரிப்புக்கான காரணங்கள் தற்போது வெளிவந்துள்ளன. அதன்படி, நிதி பற்றாக்குறையே அதற்கான காரணம் என்று இந்திய உதைபந்து கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அனைத்து இந்திய உதைபந்து கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் ஷஜி பிரபாகரன் இது தொடர்பாக வெளியிட்டுள்ள விளக்கத்தில், "ஆர்ஜென்ரீனாவுக்கு எதிரான ஆட்டத்துக்கு ஏற்பாடு செய்யவே மிகப்பெரிய தொகை வேண்டும். மேலும் அந்த அணிக்கான போட்டிக் கட்டணமும் ஏறக்குறைய 40 கோடி ரூபா அளவு இருக்கும். அந்த அளவு தொகை தற்போது அனைத்து இந்திய கூட்டமைப்பிடம் இல்லை. அதை திரட்டுவதற்கான நிதி ஆதாரம் இல்லை என்பதாலேயே ஆர்ஜென்ரீனாவுடன் விளையாடும் வாய்ப்பைத் தவிர்க்கும் சூழல் வந்தது" எனத் தெரிவித்துள்ளார்.

லயோனல் மெஸ்ஸிக்கென தனி ரசிகர்கள் பட்டாளமும் இந்தியாவில் உள்ளது. இப்படியான அணியை எதிர்த்து விளையாடும் வாய்ப்பை இந்திய அணி நிதி பற்றாக்குறையால் இழந்துள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இரு மனங்கள் இணையும் திருமணத்திற்காக...

# VIVAHA
# විවාහ
# விவாஹா

மலர் :1 இதழ் : 37- 25.06.2023

## ஏக நட்சத்திர திருமணப் பொருத்தம்

## திருமணத் தடை விலகுவதற்கான பிரத்தியேக பரிகாரம்

## புதுமணத் தம்பதிக்கு ஆரத்தி எடுப்பது ஏன்?



kamal raj
& shanu udeshika







# நக பராமரிப்பு



நம்முடைய விரல்களுக்கு கவசமாகவும், விரலின் நுனிகளைப் பாதுகாப்பதும் நகங்கள்தான். இதனால்தான் நகங்களைப் பராமரிப்பதென்பது மிகவும் முக்கியமானது என்கின்றனர் மருத்துவர்கள்.

நகங்களை வைத்து நீங்கள் எந்தளவுக்கு உடல் ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள் என்பது உட்பட உடலில் என்னென்ன ஊட்டச்சத்துக் குறைபாடுகள் உள்ளன என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

பொதுவாக நான்கு முதல் எட்டு மாதங்களில் ஒரு நகம் முழுவதுமாக வளர்ச்சியடைந்துவிடும். ஒரு மாதத்திற்கு கை விரலில் 3 மில்லி மீற்றரும், கால் விரலில் ஒரு மில்லி மீற்றரும் நகம் வளரும். ஆனாலும் கோடைக்காலத்தில் நகங்கள் வேகமாக வளரும் தன்மை கொண்டவை.

நகத்தின் வளர்ச்சி இயல்பாகவே இவ்வாறு இருந்தாலும், சிலநேரங்களில் ஊட்டச்சத்து குறைபாடு, தொடர்ந்து நோய்வாய்ப்படுதல், சில வகையான மருந்துகளைத் தொடர்ச்சியாக சாப்பிடுதல், வயது முதிர்ச்சி போன்ற பல்வேறு குறைபாடுகளால் நகத்தின் வளர்ச்சி குறைவாக இருக்கும் அல்லது மிகவும் மெதுவாக வளரும். இதுபோன்ற நேரத்தில்தான் நம்முடைய நகங்களை முறையாக பராமரிக்க வேண்டும் என்பது குறித்தும் எப்படி நகங்கள் ஆரோக்கியமற்றதென கண்டறிய வேண்டும் என்பது குறித்தும் இங்கே தெரிந்துகொள்வோம்.

*நகங்கள் பாதிப்படைந்துள்ளனவா என்பதைக் கண்டறிவது எப்படி?*

*பலவீனமான நகங்கள்:*

நகங்கள் எளிதில் உடையக் கூடியதாகவே அல்லது பிளவுபடக் கூடியதாகவோ இருந்தால், அதற்கு அதிக பராமரிப்பு தேவை என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ஊட்டச்சத்துக் குறைபாடு, தண்ணீரில் அதிகநேரம் இருக்கும்போது நகங்கள் வலுவிழந்து உடையக்கூடும். எனவே, இதுபோன்ற நேரங்களில் உங்களுடைய நகங்களை முறையாக பாதுகாக்க வேண்டும்.



*நிறமாற்றம்:*

உங்களுடைய கை மற்றும் கால் நகங்கள் மஞ்சள் அல்லது கறுப்பு உள்ளிட்ட நிறத்தில் மாறினால் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இதைச் சரிசெய்ய வேண்டுமென்றால் நீங்கள் அடிப்படை சுகாதாரத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். உங்களுடைய நகங்கள் நிறம் மாறுவதற்கு பூஞ்சைதொற்று ஒரு காரணமாக அமையலாம்.

*நகங்கள் உரிந்து வருவது:*

அதிகநேரம் தண்ணீரில் இருப்பது, மற்றும் நகங்களுக்கு அதிகப்படியான இரசாயனம் நிறைந்த நகப்பூச்சுகளைப் பயன்படுத்தும்போது அவை சேதமடைகின்றன. குறிப்பாக, நகங்கள் உரிந்து போவது அல்லது பிளவுபடும் என்பதால், நீங்கள் இரசாயனம் அதிகம் உள்ள நெயில் பொலிஷ்களை உபயோகிக்கக்கூடாது.

*முகடுகள் அல்லது பள்ளங்கள்:*

நகங்களில் செங்குத்தான முகடுகள் அல்லது பள்ளங்கள் ஏற்படுவது, வயதாகிறது என்பதைக் குறிக்கும் ஒரு அறிகுறியாகும். இருப்பினும், பியூவின் கோடுகள் எனப்படும் ஹாரிசாண்டல் முகடுகள் அல்லது குழிகளை கவனித்தால், அது உடலில் ஏதோ பிரச்சினை இருக்கிறது அல்லது நகங்களுக்கு ஏற்படும் அதிர்ச்சியின் அறிகுறியாக இருக்கலாம். மேலும் இரும்புச்சத்து குறைபாடுகளினாலும் நகங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, ஆரோக்கியம் நிறைந்த உணவுப்பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

சிலநேரங்களில் நகங்களைச் சுற்றி சிறிய தோல் வளரும் போது, வலி மற்றும் வீக்கம் ஏற்படும். எனவே, உங்களுக்கு நகங்களை வளர்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், உங்கள் நக பராமரிப்பு வழக்கத்தை முறையாக பின்பற்ற வேண்டும். இந்த அறிகுறிகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் கவனித்தால், உங்கள் நகங்களுக்கு கூடுதல் கவனிப்பைக் கொடுப்பது நல்லது. உங்கள் நகங்களை வைத்தே உடலிலுள்ள பிரச்சினைகளைக் கண்டுபிடித்துவிடலாம்.

*உங்களது நகங்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த சில குறிப்புகள் இங்கே:*

உங்கள் நகங்களை எப்போதும் சுத்தமாகவும் உலர்ந்ததாகவும் வைத்திருக்க வேண்டும்.

உங்கள் நகங்கள் மற்றும் க்யூட்டிகல்களை ஹைட்ரேட் செய்ய மொய்ஸ்சரைசர் அல்லது க்யூட்டிகல் ஒயிலைப் பயன்படுத்தவும்.

உங்கள் நகங்களைப் பாதுகாக்க வீட்டு வேலைகள் அல்லது தோட்டக்கலை செய்யும்போது கையுறைகளை அணியவேண்டும்.

நீளமான நகங்களை நீங்கள் வளர்த்தாலும் இதை ஒழுங்காக பராமரித்து வர வேண்டும்.

நெயில் பொலிஷ் மற்றும் நெயில் பாலிஷ் ரிமூவரை சிக்கனமாகப் பயன்படுத்தவும். அதேசமயம் கடுமையான இரசாயனங்கள் இல்லாத பொருட்களைத் தேர்ந்தெடுக்கவும்.

ஒட்டுமொத்த நக ஆரோக்கியத்தை ஆதரிக்க விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்த ஒரு சீரான உணவை சேர்த்துக்கொள்ள வேண்டும்.



# ஏக நட்சத்திர திருமணப் பொருத்தம்





1. ரோகிணி, திருவாதிரை, மகம், உத்திரட்டாதி, விசாகம் திருவோணம், ரேவதி இந்த நட்சத்திரங்களுக்கு உத்தம பலன் தசா சந்திப்பு தோஷம் உண்டாக முடியாது.

2. அசுவினி, கிருத்திகை மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம் இந்த நட்சத்திரங்களுக்கு மத்திம பலன்.

3. பரணி ஆயில்யம், சுவதி, கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி இந்த நட்சத்திரங்கள் கூடாது.

திருமணப் பொருத்தம் பார்க்கும்போது வரனுக்கும், வதுவுக்கும் ஏக தசை வரக்கூடாது என்று சிலர் கூறுகின்றனர். ஏக தசை என்றால் ஒரேசமயத்தில் ஆண், பெண் இருவருக்கும் ஒரே தசை நடைபெறும்.

அதாவது ஆணுக்கு புத மஹா தசை என்றால் பெண்ணுக்கு புத மஹா தசை நடக்கும். இவ்வாறு இருவருக்கும் ஒரே தசை நடைபெற்றால் அது ஆகாது என்று கூறுவார்கள்.

தினப் பொருத்தத்தில் 19 நட்சத்திரங்களை ஏக நட்சத்திரமாக வந்தால் சேர்க்கலாம் என்று ஜோதிடம் கூறுகின்றது. அப்படி ஏக நட்சத்திரங்களை இணைத்தால் இருவருக்கும் ஒரே தசைதானே நடைபெறும். அப்படியிருக்கும்போது ஏக தசை என்று ஜாதகங்களை நிராகரிப்பது சரியல்ல.

தசவிதப் பொருத்தங்களென பத்து பொருத்தங்களுக்கு 25 சதவீதம்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மற்றபடி ஜாதகப் பொருத்தத்துக்கு 75 சதவீதம் முக்கியத்துவம் கொடுத்து பொருத்தம் பார்க்க வேண்டும்.

ஒரு பெண் ஜாதகத்தில் அஷ்டமம் எனப்படுகின்ற ஸ்தானத்திற்கு அதிபதியான கிரகம் விரய ஸ்தானமான பன்னிரண்டில் அமர்ந்து இருந்தாலோ, அஷ்டம ஸ்தானத்தில் அசுப கிரகங்கள் இணைந்து இருந்தாலோ, அந்தப் பெண்ணின் பூர்வபுண்ணியம் பலவீனப்பட்டு இருந்தாலோ, பாக்கியாதிபதி படுமோசமான நிலைக்கு ஆட்டப்பட்டிருந்தாலோ, லக்னாதிபதி நலிந்து போயிருந்தாலோ நட்சத்திரப் பொருத்தம் எப்படி அப்பெண்ணின் வாழ்வை காத்திட முடியும் என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல் ஆணின் ஜாதகத்தில் களத்திர ஸ்தானம் பாதிக்கப்பட்டு களத்திர ஸ்தானமான ஏழாம் கூட்டில் அசுப கிரகங்கள் இணைந்து நிற்க, களத்திர காரகனான சுக்கிர பகவான் நீசம் அடைந்து (நீச்சபங்க ராஜயோகம் பெறாமல் இருந்து) அசுப கிரகங்களுடன் இணைந்திருக்க, லக்னாதிபதி எந்தவொரு குறிப்பிடும்படியான சிறப்பான பலம் பெறாமல் இருக்க, பூர்வபுண்ணிய பாக்கிய ஸ்தானங்களும் பலம் இழந்து அமைந்திருக்க நட்சத்திரப் பொருத்தம் எதை சாதித்து விடமுடியும்.

உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினிலே தெளிவு உண்டாகும் என்பது பாரதியார் வாக்கு. இதை ஜோதிட அடிப்படையில் பார்ப்போம். உள் ஒளி இதை குரு பலம் என்றால் சந்திர பகவானை மனோ காரகர், தனு காரர் என்கிறோம்.

ஒரு ஜாதகத்தில் சந்திர குரு பகவான்கள் நேர் பார்வையாகப் பார்வை செய்தால் முழுமையான கஜகேசரி யோகமும், குரு பகவானுக்கு நான்கு, பத்தாம் வீடுகளில் சந்திர பகவான் இருந்தால் முக்கால் பங்கு கஜகேசரி யோகமாகும்.

இந்த கஜகேசரி யோகத்தால் ஜாதகத்தில் வேறு தோஷங்கள் இருந்தாலும் அவை பலவீனமடைகின்றன. அதாவது, தோஷத்தின் கெடுபலன்கள் உண்டாகாமல் காப்பாற்றப்படும் நிலை ஏற்படும். பெரிய அமைச்சர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும் பெரிய தொழிலதிபராகவும் இருப்போருக்கு சந்திர பகவானுக்கு ஏழாம் வீட்டில் குருபகவான் அமர்ந்து கொடுக்கும் கஜகேசரி யோகம் பலம் உள்ளதாகக் கருதப்படுகிறது.



S.P. Selvan photography

Flash Studio
Rathnapura
0778242631

# திருமணத்தில் செவ்வாய் தோஷமும்

நமது ஜோதிட ஞானிகளால் சொல்லப்பட்ட எத்தனையோ ஜோதிடத் தகவல்கள், தங்களை ஜோதிடர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் சில அனுபவமற்றவர்களால் தவறாகப் புரிந்துகொண்டு சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன. அந்த வரிசையில் இந்த செவ்வாய் தோஷம் முதலிடம் பெறுகின்றதைக் காணலாம்.

ஒவ்வொரு ஜோதிடரும் தங்கள் மனத்திற்கேற்ற கருத்துகளையும், பலன்களையும் சொல்லும் இந்த செவ்வாய் தோஷத்தைப் பற்றிய நமது ஜோதிட மூல நூல்களில் - குறிப்பாக, எந்த விதிகளையும் சொல்லவே இல்லை. ஒரு கிரகம் என்ன பலனை ஜாதகருக்குக் கொடுக்கும் என்பதற்கு பல விதிகள் மற்றும் விதிவிலக்குகளுடன், நுட்பமான கணிப்புகளும் தேவைப்படும் மகா பெரிய இந்த ஜோதிட சாஸ்திரத்தில், செவ்வாய் இந்த இடத்தில் இருப்பதால் இன்ன பலன் என்பதை துல்லியமாக் கணிக்கத் தெரியாத ஜோதிடர்களால் பயமுறுத்திச் சொல்லும் விடயமாக இந்த செவ்வாய் தோஷம் இன்றைய காலகட்டத்தில் அமைந்துவிட்டதைக் காணமுடிகின்றது.

செவ்வாய் ஒரு பாபக்கிரகம் என்பதால் அவர் இருக்கும் இடம் மற்றும் அவரது பார்வை படும் இடங்கள் பலவீனமடையும் என்ற கருத்தில் இந்த தோஷம் சொல்லப்பட்டது. அதாவது, குடும்ப ஸ்தானம் எனும் இரண்டாமிடம், கற்பு எனும் ஒழுக்கத்தைக் குறிக்கும் நான்காமிடம், வாழ்க்கைத் துணையைக் குறிக்கும் ஏழாமிடம், கணவனின் ஆயுளைக் காட்டும் எட்டாமிடம், தாம்பத்திய சுகத்தைக் குறிப்பிடும் பன்னிரண்டு ஆகிய பாவங்களில் செவ்வாய் கடுமையான பாவத்து அமைப்பில் இருந்தால், மேற்படி பாவகங்களுக்கு நல்ல பலன்களைத் தராது என்ற அடிப்படையில் இது பொதுவாக "செவ்வாய் தோஷமென" பேசப்பட்டது.

ஆயினும் மேற்கண்ட பாவகங்களில் இருக்கும் செவ்வாய் என்ன நிலையில் இருக்கிறார்? அவர் அந்த லக்னங்களுக்கு தீமை செய்பவரா? தீமை செய்யும் அமைப்பில் இருக்கிறாரா? வலுவாக இருக்கிறாரா? பலவீனமாக இருக்கிறாரா? யாருடன் இணைந்திருக்கிறார்? சுபத்துவம் அடைந்திருக்கிறாரா? யாருடைய பார்வை அவருக்கு இருக்கிறது? கெடுதல் செய்வார் என்றால் எந்த வயதில் எப்போது செய்வார்? அவருடைய தசை வருகிறதா? போன்ற அனைத்தையும் கணித்த பிறகே செவ்வாய் தோஷத்தை அளவிட வேண்டும்.

இவை எதையும் கணிக்காமல், கணிக்கத் தெரியாமல் செவ்வாய் 07இல் இருக்கிறார், 08இல் இருக்கிறார், எனவே, செவ்வாய் தோஷம் என ஒரு ஜோதிடர் சொல்லுவாரேயானால், அதைவிட ஜோதிடத் துரோகம் வேறெதுவும் இருக்க முடியாது. அதைத்தான் ஒரு அனுபவமற்ற, கணிக்கத் தெரியாத, திறமைக் குறைவான ஜோதிடர் செய்கிறார்; செய்து கொண்டும் வருகின்றார்.

ஏனைய கிரகங்களைப் போலவே செவ்வாயும் ஒரு ஜாதகரின் பூர்வ ஜென்ம பலன்களைப் பொருத்து காரகத்துவ மற்றும் ஆதிபத்திய வழிகளில் நல்ல, கெட்ட பலன்களைச் செய்பவர் என்பதே உண்மையே தவிர, அவருக்கென்று தனியாக தோஷம் உண்டு என்ற கருத்தை



| | | | |
|---|---|---|---|
| மீனம் | மேஷம் | ரிஷபம் | மிதுனம் |
| கும்பம் | இராசி | | கடகம் |
| மகரம் | | | சிம்மம் |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

ஏற்றுக்கொள்ள முடியாது.

செவ்வாய் ஒருவரின் ஜாதகத்தில் 02, 04, 07, 08, 12 பாவகங்களில் இருக்கும் அமைப்பைப் பற்றி கெடுதலாகக் குறிப்பிடப்படவில்லை. பிறகு வந்த சிலர், செவ்வாய் சுபத்துவமின்றி மேற்படி இடங்களில் இருக்கும்போது திருமண உறவைப் பாதிப்பதை அனுபவத்தில் கண்டதால்தான் செவ்வாய் தோஷமாக சொல்லப்பட்டது. ஆனால், தற்காலத்தில் இது மிகைப்படுத்தப்பட்டு ஒரு பயமுறுத்தும் ஜோதிட விதியாக மாறி நிற்கிறது என்பதே உண்மை. செவ்வாய் தோஷத்தைக் கணக்கிடுவதில் -அதாவது, தோஷம் தானா என்று கணிப்பதில் ஒரு ஜோதிடருக்கு அதிக அனுபவமும், கணித அறிவும், நுணுக்கமும் தேவைப்படும். செவ்வாய், குருவின் வீடுகளிலோ, குருவுடன் இணைந்தோ, குருவால் பார்க்கப்பட்டோ இருந்தால் தோஷமில்லை என்ற விதிவிலக்கு, உண்மையில் குருவின் பலத்தைக்கொண்டே கணிக்கப்பட வேண்டும். குருவின் வீடுகளான தனுசு, மீனத்தில் இருக்கும் செவ்வாய் சுபத்துவம் பெறுவார் என்பது மாறாத விதி. ஆனால், தனுசு, மீனம் தவிர்ந்த வேறு இடங்களில் செவ்வாய், குருவுடன் இணைந்தோ அல்லது பார்க்கப்பட்டாலோ அங்கே குருவின் வலிமையைக் கணக்கிடப்பட்டு அதன்பிறகே செவ்வாயின் நிலையை கணிக்க வேண்டும்.

பொதுவாக அனைத்து விதிவிலக்குகளும் அதன் உள்ளர்த்தம் புரிந்து கணிக்கப்பட வேண்டுமே தவிர, இரண்டிலோ ஏழிலோ அல்லது எட்டிலோ செவ்வாய் இருந்தால் தோஷமென கண்ணை மூடிக்கொண்டு சொல்லக்கூடாது. செவ்வாய் இருக்கும் பாவம் பல வகையிலும் வலிமை இழந்திருந்தால் அல்லது பாவத்துவமாக அமைந்திருந்தால் மட்டுமே அது மணவாழ்வைக் கெடுக்கக்கூடிய வகையில் அமையும் என்பதால் செவ்வாய் தோஷம் என்பதை விட செவ்வாய் இருக்கும் அந்த பாவகம் கெட்டிருக்கிறதா என்பதைக் கருத்திற்கொண்டு பார்ப்பது நல்லது.

மேற்படி ஏழாம் பாவத்தில் செவ்வாய் அமர்ந்து, அவருக்கு வீடு கொடுத்த அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டில் மறைந்தோ, நீசம் பெற்றோ, ராகுகேதுகளுடன் இணைந்தோ அல்லது சனியுடன் தொடர்புபட்டு பலவீனமாகி அமைந்திருக்க, ஏழாம் பாவத்திற்கு சுபகிரகங்களின் பார்வை தொடர்பு எதுவும் இல்லாமல், சனி பார்வையோ, சம்பந்தமோ அல்லது ராகுகேதுகளின் நெருக்கமான இணைவோ ஏற்பட்டு, செவ்வாயின் தசையோ, ஏழுக்குடையவனின் தசையோ அல்லது ஏழாம் பாவத்தோடு சம்பந்தப்பட்ட கிரகத்தின் தசையோ நடக்கும்போது மட்டுமே ஒருவருக்கு மணவாழ்க்கையில் அல்லது திருமணம் பாதிக்கப்படும். எனவே, செவ்வாயின் மேல் மட்டும் பழியைப் போடாமல் மற்ற கிரகங்களையும் சேர்த்துப் கணித்துப் பலன் துல்லியமாக பார்ப்பது நல்லது.

செவ்வாய் நன்மை செய்யும் அமைப்பில் இருந்தால் எந்த லக்கினத்தில் பிறந்திருப்பினும் நிச்சயமாக தீமைகள் எதுவும் இருக்காது. ஏழாம் பாவத்தைப் போன்றே எந்த பாவகமானாலும் இயற்கைப் பாவரான செவ்வாய், பாவத்துவமாக அமர்ந்திருக்கும்போது அவர் மேற்சொன்ன அமைப்பின்படியே நன்மையோ அல்லது தீமையோ கொடுப்பதற்கு கடமைப்பட்டவராவார். மேலும் மற்றுமொரு விதியாக செவ்வாய் தன்னுடைய பலத்தை முழுமையாக இழக்கும்போதும், அதாவது சூரியனுடன் இணைந்து அஸ்தாங்க தோஷத்திற்கு ஆளாகும்போதும் அவர் கண்டிப்பாக தோஷத்தைக் கொடுக்கக்கூடிய தன்னுடைய வீரியத்தை முழுமையாக இழப்பார். இந்நிலையில், செவ்வாய் தசையில் எதிர்பார்த்த தோஷத்தைக் கொடுக்காது, தன்னை அஸ்தாங்கப்படுத்திய கிரகத்தின் தசையில் தோஷத்தைக் கொடுக்க முனைவார். எனவே, மேலோட்டமாக செவ்வாயின் நிலையைப் பார்க்காது கிரகங்களில் பாகை அளவீட்டு அடிப்படையில் இணைவு உண்டா இல்லையா என்பதை முதலில் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

# பலன் கணிக்கத் தடுமாறும் ஜோதிடர்களும்

ஆட்சி உச்சம் பெற்ற செவ்வாய், குருவுடனோ வளர்பிறை சந்திரனுடனோ இணைந்து அல்லது அவர்களின் பார்வையில் இருந்தாலோ அல்லது வேறு வகைகளில் சுபத்துவம் அடைந்திருந்தால் மட்டுமே தோஷமில்லை என்று துல்லிய முடிவுக்கு வரலாம். செவ்வாய் என்பவர் ஒரு பாபக் கிரகம். இவர் நமது மூல நூல்களில் முக்கால் பாபராக குறிப்பிடப்படுகிறார். முக்கால் பாபர் என்பதில் கால் பங்கு சுபராகவும் செயல்படுவார் என்ற சூட்சுமமான உண்மை மறைந்திருப்பதை கவனத்திற்கொள்ள வேண்டும்.

சனி, செவ்வாய் இருவரும் சுபத்துவம் பெறாமல், லக்னத்துக்கோ, ராசிக்கோ இரண்டு, ஏழு, எட்டு (02, 07, 08) ஆகிய இடங்களில் இணைந்தோ தனித்தனியாகவோ சம்பந்தப்பட்டிருந்தார்களாயின், அந்த ஜாதகருக்கு தாமத திருமணம் அல்லது திருமணமற்ற நிலை, அவ்வாறில்லாமல் திருமணம் நடைபெற்றிருப்பின் மணவாழ்வில் சிக்கல், இரண்டு திருமண அமைப்பு என்று கண்ணை மூடிக்கொண்டு பலன் சொல்லி விடலாம். மேலும் இதுபோன்ற அமைப்புடையவர்களுக்கு பெண்ணாக இருந்தால் 30 வயதிற்கு அருகிலும், ஆணாக இருந்தால் 35 வயதிற்கு அருகிலும் திருமணம் நடக்கும். எப்போது திருமணம் நடக்கும் என்பது தாம்பத்ய சுகத்தைக் கொடுக்கக்கூடிய அல்லது குழந்தை பாக்கியத்தை வழங்கக்கூடிய கிரகத்தின் (குரு சுக்கிர) தசை, புத்திகளை நுணுக்கமாகக் கணித்து பலன் சொல்லப்பட வேண்டும்.

பொதுவாக இதுபோன்ற இரண்டு, ஏழு, எட்டில் இருக்கும் செவ்வாய் அதிக வலுப்பெற்று பாபத்துவம் பெற்றிருக்கும் நிலையில் மட்டுமே திருமண வாழ்க்கையில் மிகவும் சோதனைகளையும் வேதனைகளையும் ஏற்படுத்துவார். இவ்வாறான அமைப்பில் கணவனுக்கும் மனைவிக்கும் சரியான புரிந்துணர்வைக் கொடுக்காமல் தேவையற்ற பிரச்சினைகளால் விவாகரத்துவரை சென்று பிரிந்துபோனவர்கள் உண்டு. அதேபோல் எட்டில் செவ்வாய் இருந்தால் அந்தப் பெண் விதவையாவாள் என்பதிலும் எந்த உண்மையும் கிடையாது.

ஒரு பெண்ணுக்கு அப்படி ஒரு நிலை வரவேண்டும் என்றால் அதற்கு அப்பெண்ணின் ஜாதகத்தில் செவ்வாய் தவிர்ந்த வேறு சில கிரகங்களின் அமைப்புகளையும், கணவனின் ஜாதகத்தில் அவரது ஆயுள் ஸ்தானத்தையும், ஆயுள் காரகனான சனியின் நிலையையும் துல்லிதமாக கணித்தறிய வேண்டும்.

கணவன், மனைவி இருவரில் ஒருவருக்கு மட்டும் செவ்வாய் தோஷம் இருந்து அந்த செவ்வாய் சுபத்துவம் பெற்று மற்றவருக்கு தோஷம் இல்லாமல் இருக்கும் நிலையில், இருவரும் பல ஆண்டுகள் நலமாக வாழ்வாங்கு வாழ்வதை கண்கூடாக இன்றும் பார்த்து வருகின்றோம். எனவே, செவ்வாய் தோஷம் ஜாதகத்தில் இருக்கிறது என்றவுடன் யாரும் பயத்தால் நடுங்கி அலறித் துடிக்கவேண்டிய அவசியமில்லை.

செவ்வாய் தோஷத்திலும் சில அளவீடுகள் உள்ளன. அவ்வளவீடுகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கூறலாம்.

ஒருவரின் ஜாதகத்தில் லக்கினத்துக்கோ அல்லது ராசிக்கோ ஏழு மற்றும் எட்டாம் இடங்களில் பாவத்துவமாக செவ்வாய் இருப்பது முதல்தர முழு தோஷமாகும்.

இரண்டாம் வீட்டில் பாவத்துவ அமைப்பில் இருப்பது இரண்டாம் தர கடுமையான அமைப்பாகும்.

நான்காமிடம் மற்றும் பன்னிரெண்டாமிடம் அமர்வது மூன்றாம்தர குறைவான தோஷமாகும்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏழு அல்லது எட்டில் செவ்வாய் இருக்கும்போது அவை சம தோஷமுள்ள ஜாதகமாக எடுத்துக் கொள்ளப்பட்டு இரண்டையும் இணைக்கலாம்.

அடுத்து ஒருவரின் லக்னத்திற்கு ஏழு, எட்டில் உள்ள செவ்வாயை அடுத்தவரின் லக்கினத்திற்கு ஏழு, எட்டில் இருக்கும் செவ்வாயுடன் இணைத்துப் பொருத்தலாம்.



அதேபோல், ஒருவரின் ஜாதகத்தில் இரண்டிலுள்ள செவ்வாயை ஏழு, எட்டில் உள்ள மற்றவரின் ஜாதகத்துடன் பொருத்துவது நன்மை.

நான்கு, பன்னிரெண்டாம் இடங்களில் செவ்வாய் இருக்கும் குறைந்தளவு தோஷமுள்ள ஜாதகத்தைக் கடுமையான ஏழு, எட்டாமிட செவ்வாயுடன் இணைப்பது தவறு.

இன்னும் ஒரு நுணுக்கமாக ஒருவருக்கு இரண்டாமிடத்தில் செவ்வாய் அடுத்தவருக்கு இரண்டாமிடத்தில் சனி என்பது மிக நல்ல பொருத்தம்தான்.

இருவருக்குமே குடும்ப ஸ்தானம் எனப்படும் இரண்டாமிடத்தில் பாபக்கிரகம் இருப்பதால் சம தோஷமாகி கெடுதல் வர வாய்ப்பில்லை. ஆனால், இருவரில் ஒருவருக்கு ஒரு கிரகம் சுபத்துவம் அடைந்திருந்தால் பொருத்தக் கூடாது. இந்த விதி ஏழு, எட்டாம் இடங்களுக்கும் பொருந்தும்.

ஒருவருக்கு ஏழில் சனி இன்னொருவருக்கு ஏழில் செவ்வாய் என்பது தீமை தராத பொருத்தமே. அதுபோலவே ஒருவரின் எட்டில் செவ்வாய் இன்னொருவருக்கு எட்டிலோ இரண்டிலோ சனி என்பதும் இணைக்க வேண்டிய ஜாதகம்தான்.

பொதுவாக செவ்வாய் தோஷத்தைக் கணக்கிடும்போது சனியும் அந்த ஜாதகத்தில் எந்த நிலையில் இருக்கிறார் என்பதை தெரிந்துகொண்டும், சுபத்துவ, பாவத்துவ நிலைகளையும் துல்லிதமாக அறிந்து, செவ்வாய் தோஷ பலன்களைக் கணிப்பதால் நிச்சயமாக எவ்விதக் குழப்பங்களோ அல்லது சிக்கல்களோ நிச்சயமாக நேராது என்பது உறுதி.

சரி இனி செவ்வாய் தோஷ விதி விலக்குகளைப் பார்ப்போம்.

இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பனிரெண்டாம் வீடுகளில் செவ்வாய் ஆட்சியாகவோ, உச்சமாகவோ, நீசமாகவோ பாவக்கிரக தொடர்பு இல்லாமல் இருந்தால் தோஷம் இல்லை.

குருவின் வீடுகளிலோ அல்லது குருவுடன் இணைந்தோ, குருவின் பார்வையைப் பெற்றோ செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.

சுக்கிரனின் வீடுகளான இடபம், துலாமில் சுபத்துவமாக செவ்வாய் இருந்தால் தோஷம் இல்லை.

சுக்கிரனுக்கு நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திரங்களில் செவ்வாய் பாவத்துவ அமைப்பின்றி இருந்தாலும் தோஷம் இல்லை.

மேற்கண்ட வீடுகளில் செவ்வாய், சந்திரனுடனோ புதனுடனோ அல்லது இருவரும் சேர்ந்து இணைந்திருந்தாலோ தோஷம் இல்லை. (இணைவு என்பதை பாகை அளவில் கணித்தறிய வேண்டும்)

ராகுகேதுக்களுடன் மற்றும் சனியுடன் செவ்வாய் நெருக்கமாக அமைப்பில் இணைந்து பலவீனம் பெற்றிருந்தால் தோஷம் இல்லை, ஆனால் ராகுகேது, சனி தசைகள் எந்த வயதில் நடைபெறப் போகின்றன என்பதை கவனித்தல் வேண்டும்.

மேஷம், விருச்சிகம், கடகம், சிங்க லக்னத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் சுபத்துவமாக எங்கிருந்தாலும் தோஷம் இல்லை.

சூரியனுடன் 13 பாகைக்குள் அஸ்தாங்கம் அடையும் செவ்வாய்க்கு தோஷம் இல்லை.

செவ்வாய் பரிவர்த்தனை பெற்று சுப கிரக சேர்க்கை அல்லது பார்வை பெற்றிருந்தால் தோஷம் இல்லை.

தோஷம் என்று ஒன்று இருந்தால் நிச்சயமாக அதற்கு விதிவிலக்கு என்பது கூடவே இருக்கவே செய்யும்.

அந்தவகையில் உண்மையான விதிவிலக்குகளை அனுசரிக்க வேண்டுமே தவிர, அதற்குப் பதிலாக பணத்துக்காக பரிகாரம் என்றெல்லாம் போய் ஏமாற்றமடைந்து, உங்கள் குழந்தைகளின் பசுமையான கனவுகளை சீரழித்து விடாதீர்கள்.


ஜோதிட வித்தியா விபூஷணம்,
சிவாபாஸ்கரராவ் (ச.நீ)
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிடவித்தியாலுவாஸ்து நிலையம் புளத்சிங்ஹள.
தொலைபேசி : 0770 525 325 – 0786 759 739

# திருமணத் தடை விலகுவதற்கான
# பிரத்தியேக பரிகாரம்



தற்போதைய தமிழர்களின் வாழ்வில் திருமணம் என்பது பெற்றோர்கள் நிச்சயித்து நடைபெறும் திருமணத்தின் எண்ணிக்கையை விட, மணமகனும் மணமகளும் திருமணத்திற்கு முன்பே சந்தித்து, காதலித்து, பெற்றோர்களின் சம்மதத்துடன் நடைபெறும் திருமணத்தின் எண்ணிக்கைதான் அதிகமாகி வருகிறது.

மனமொத்த தம்பதிகளின் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லையென்றால் இன்றைய சூழலில் ஜோதிடத்தின் உதவியுடன் பெற்றோர்கள் நிச்சயித்த திருமணத்தின் எண்ணிக்கை பாரிய அளவில் குறைந்து, காதல் திருமணம் அதிகரித்திருக்கும். ஆனால், அது போன்றதொரு நிலை ஏற்படவில்லை.

மேலும் எம்முடைய நீதிமன்றங்களில் மணமுறிவுக்கான விவாகரத்து கோரும் தம்பதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், இன்றும் பல பெண்கள் முதிர்கன்னிகளாக இருந்தாலும் தங்களுடைய பெற்றோர்கள் நிச்சயிக்கும் மணமகனைத்தான் கரம்பிடிப்பேன் என காத்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு ஏற்படும் திருமணத் தடை குறித்த பரிகாரத்தை ஜோதிட நிபுணர்கள் தொடர்ச்சியாக வழங்கி வருகிறார்கள். மேலும் திருமணத் தடை ஏற்பட்டால், அது தொடர்பாக ஜோதிடர்கள் வலியுறுத்தும் பரிகாரத்தை அவர்கள் குறிப்பிடும் ஆலயத்திற்கு குறிப்பிட்ட தருணத்தில் சென்று நம்பிக்கையுடன் மேற்கொண்டால்தான் அந்தத் தடை அகலும்.

மேலும் திருமணத் தடையை எதிர்நோக்கியிருக்கும் மணமகனோ அல்லது மணமகளோ ஜோதிட நிபுணர்கள் பரிந்துரைக்கும் ஆலயப் பரிகாரங்கள், வாழ்வியல் பரிகாரங்கள், தாந்த்ரீக பரிகாரங்கள் ஆகியவற்றை அயராது முழு நம்பிக்கையுடன் மேற்கொண்டால் தடை விலகி, திருமணம் நடைபெற்று இல்லற வாழ்க்கை இனிமையுடன் நீடிக்கும்.

இதற்கு முன் ஜோதிடர்கள் திருமணத் தடையை நீக்குவதற்காக பரிகாரங்களை சொல்லி நீங்கள் மேற்கொண்டிருந்தாலும், தற்போது சொல்லவிருக்கும் பரிகாரத்தை பெண்களும், ஆண்களும் மேற்கொண்டால் திருமணத் தடை விலகி, திருமணம் நடைபெறும்.

திருமணத்துக்காக காத்திருக்கும் ஆண்களும், பெண்களும் அருகிலுள்ள விநாயகர் ஆலயத்துக்குச் சென்று அல்லது அருகிலிருக்கும் அரசமரத்தடி விநாயகரை தரிசித்து, திருமணம் எந்தத் தடையுமின்றி நடந்தேற வேண்டுமென மனமுருக பிரார்த்தனை செய்துகொண்டு, ஒரு தேங்காயை அருகம்புல்லுடன் வைத்து பிரார்த்திக்க வேண்டும். நீங்கள் பிரார்த்தனை செய்து முடித்தவுடன் முதல் நாளன்று ஒரு தேங்காயை சூரைக்காய் அல்லது சிதறு காய் அடிக்க வேண்டும்.

தொடர்ந்து இரண்டாவது நாள் அதே நேரத்திற்கு மீண்டும் பிரார்த்தனை செய்து கொண்டு இரண்டு தேங்காயை சிதறு காய் அடிக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து மூன்றாவது நாள் மூன்று தேங்காயையும், நான்காவது நாள் நான்கு தேங்காயையும், ஐந்தாவது நாள் ஐந்து தேங்காயையும், ஆறாவது நாள் ஆறு தேங்காயையும், ஏழாவது நாள் ஏழு தேங்காயையும், எட்டாவது நாள் எட்டு தேங்காயையும், ஒன்பதாவது நாள் ஒன்பது தேங்காயையும் சிதறு காய் அடித்து பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டும்.

ஒன்பதாவது நாளான இறுதி நாளன்று விநாயகருக்கு அபிஷேகங்கள் செய்து, அர்ச்சனை செய்து, ஏதேனும் இனிப்பு தின்பண்டங்கள் மற்றும் தயிர் சாதத்தை நெய்வேத்தியம் செய்து, பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும். பிரார்த்தனைக்குப் பிறகு அதனை தானமாக வழங்கிவிட வேண்டும்.

இப்படிச் செய்தால் உங்களுடைய திருமணத்தடை விலகி, குறுகிய கால அவகாசத்திற்குள் நீங்கள் எதிர்பாராத வகையில் திருமணம் கோலாகலமாக நடந்தேறும்.





# புதுமணத் தம்பதிக்கு ஆரத்தி எடுப்பது ஏன்?

புதுமணத் தம்பதிகள் திருமணம் முடிந்து மண்டபத்திலிருந்து வீட்டுக்கு வரும் காலத்தில் காத்து, கருப்பு உள்ளிட்ட தீவினைகள், சில கெட்ட சக்திகள், கண் திருஷ்டி உள்ளிட்டவையும் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, புதுமணத் தம்பதிகள் வீட்டுக்குள் நுழைவதற்கு முன்பாக அவர்களுடன் வந்திருக்கலாம் எனக் கருதப்படும் தீய சக்திகளை அகற்ற திருஷ்டி கழிக்கப்படுகிறது.

ஒரு தட்டில் 3 வாழைப்பழத் துண்டுகள் வைத்து அதன் நடுவே திரியைச் செருகவேண்டும். இலகுமுறை ஒரு நெருப்புக்குச்சியில் திரியை சுற்றி நெய்யில் தோய்த்த வாழைப்பழத்தின் நடுவே குத்துவதாகும்.

மஞ்சள், குங்குமம், வெற்றிலை, கற்பூரம், நீர்

ஒருவரை தண்ணீரால் சுழற்றி திருஷ்டி கழிக்கும்போது அவர் மீதான அனைத்து வகை கண் திருஷ்டியும் அகன்றுவிடும். இதனை நீர் வலம் விடுதல் என்று கூறுவர்.

ஆரத்தி எடுக்கும்போது யாருக்கு திருஷ்டி கழிக்கின்றோமோ அவரை நிற்க வைத்து (கிழக்கு முகமாக அல்லது வடக்கு பார்க்க நிற்கவேண்டும்). அவரை இறைவனாக நினைத்து இறைவனுக்கு எப்படிக் கற்பூரம் காட்டுகிறோமோ அதேபோல் ஆரத்தித் தட்டைச் சுற்றவேண்டும் (வலம் சுழியாக).

மணமக்களுக்கு எடுக்கும்போது மணமகன் பக்கத்தில் மேலெழும்பி மணமகளின் பக்கத்தில் கீழிறங்க வேண்டும். கீழே 3 முறை ஆட்டிய பின் மேலெழும்பிச் சுற்ற வேண்டும்.

பழங்காலத்தில் வாழை இலையில் சாப்பிடுவதற்கு முன்னதாக அந்த உணவை நீர் கொண்டு ஆராதித்து விட்டு அதன் பின்னரே சாப்பிடத் ஆரம்பிப்பர். இதுபோன்று செய்வதால் நாம் உண்ணும் உணவு புனிதப்படுவதாக அவர்கள் நம்பினர்.

இதேபோல் வீட்டின் வாரிசை சுமந்துவரும் தாயின் மீதும், குழந்தையின் மீதும் கண் திருஷ்டி இருக்கும் என்பதால் அந்த குழந்தை முதன்முதலாக தந்தை வீட்டுக்கு வரும்போது ஆரத்தி எடுக்கின்றனர். இதனை கௌரவிக்கும் விதமாகவும் கருதலாம்.

ஆரத்தி எடுக்கும்போது பயன்படுத்தப்படும் நீர், நெருப்பு (கற்பூரம்), இலை (வெற்றிலை) ஆகியவற்றுக்கு எந்த தீய சக்தியையும் விரட்டும் ஆற்றல் உண்டு.

திலகம் இடும் பழக்கமும் சங்க காலம் முதல் இருந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பை வதிவிடமாகக்கொண்ட 1991இல் பிறந்த, உயரம் 5'3'' procurement manager ஆக பணிபுரியும் இந்து (வேளாளர்) மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. தொடர்புக்கு 077-2222325

இந்து முக்குலம் அரச துறையில் பணியாற்றும் இவருக்கு வயது 33. திருமணமாகி ஒரு நாளில் ஒருசில காரணங்களால் விவாகரத்துக்குள்ளான இவருக்கு தகுந்த நல்லொழுக்கமுள்ள அரச துறை அல்லது தொழில்செய்யும் மணமகள் தேவை. மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். 077 3022758/072 6328336

இந்து நாயுடு இந்திய வம்சாவளி வயது 23 அழகிய சிவந்த நிறமுடையவர். இவருக்கு பதிவுத் திருமணம் மட்டும் ஆகி ஒரு வாரத்தில் சில காரணங்களால் விவாகரத்தானவர். நல்லொழுக்கமுள்ள 30 வயதுக்குள் நல்ல மணமகளை ஐரோப்பிய நாடுகளில் எதிர்பார்க்கிறோம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். 077 3022758 / Whatsapp 072 6328336.

மாத்தளை 1992இல் பிறந்த தனியார்துறையில் சுப்பர்வைசர் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. சாதி மதம் தடை இல்லை, சீதனம் தேவை இல்லை. தொடர்பு 0765424575.

யாழ். இந்து வேளாளர் 1993, பூரட்டாதி, Doctor, Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை. டச்சு வீதி, சாவகச்சேரி. 021 4923738, 077 4380900. Realmatrimony.com.

RC கணக்காளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். உயரம் 5'4'' (வேறு மதத்தவரும் விரும்பத்தக்கது) வயது 35. 076 6612325.

புலோலி, இந்து வேளாளர், 1995 மகம் கல்வியியல் கல்லூரி ஆசிரியர், 5'6'', B.A படித்துக்கொண்டிருக்கும் 7இல் செவ்வாய், பா.கிரகம் 521/4 மணமகனுக்கு பட்டதாரி ஆசிரியர், கல்வியியற் கல்லூரி ஆசிரியர், பட்டதாரி உத்தியோகத்தர் மணமகளை எதிர்பார்க்கின்றோம். T.P:076 2674603, 0212261374

யாழ். கிறிஸ்தவம் (RC) வேளாளர் 1978இல் பிறந்த, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. தொடர்புக்கு 076 3547191

யாழ். இந்து வேளாளர் 1988 அத்தம் 1இல் செவ்வாய் 38 பாவம் Auditor, 1989 உத்தரம் 12இல் செவ்வாய் 44 பாவம் சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1987 அத்தம் அவுஸ்திரேலியா PR, 1990 ரேவதி 8இல் செவ்வாய் சுவீடன் PR, 1991 அஷ்வினி சிங்கப்பூர் இஞ்ஜினியர், 1990 அவிட்டம் 8இல் செவ்வாய் நியூசிலாந்து இஞ்ஜினியர் தகுந்த மணமகள்மார் தேவை. தொடர்பு: 0770783832, 0779649245

இந்து வேளாளர் 1995இல் பிறந்த பூராடம் 3ஆம் பாதம் குற்றங்களற்ற இலங்கையில் கல்வி கற்று அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றும் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற மணமகளுக்கு மருத்துவம் அல்லது பொறியியல்துறை சார்ந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம். whatsapp number +61493097250

**உங்கள் வரன்தேடும் விளம்பரங்களை இலவசமாக பிரசுரித்துக்கொள்ள**
**076 1393805**
**Whatsapp இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்**








Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 1 இதழ் : 99 - 25.06.2023






## எமது பிறமொழி நாடகங்களுக்கு மிகுந்த ஆதரவு

ஈழத்து நாடக ஆளுமை பாலேந்திரா

## ஈழத்தின் நவீன கதை சொல்லி எஸ்.எல்.எம்.ஹனீபா

## 'மலையகம் 200' சிறப்பிதழாக வெளிவந்துள்ள 'தாயகம்' சஞ்சிகை

தமிழ் முரசு

தமிழ் முரசு Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்



மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com

தொலைபேசி: 0115 200 900/011 588 6187

விளம்பரம் : 0114 846 097


# தமிழனின் இணைப்பிதழாக 'தமிழ் முரசு'

இலங்கைத் தமிழ்த் தினசரிகளில் ஒன்றாகவே தனது பத்திரிகைத்துறைப் பயணத்தை ஆரம்பித்த 'தமிழன்' தனது மூன்றாவது அகவையை அடையும்போது தனித்துவமான அடையாளங்களுடனான தமிழ்த் தினசரி என குறிப்பிடும்படியான பெயரைத் தனதாக்கிக்கொண்டுள்ளது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பிரான்ஸில் வாழும் தமிழர்களாலும் 'தமிழன்' என்ற பெயரோடு ஒரு பத்திரிகை ஒருசில தசாப்தங்களுக்கு முன்னர் வெளிவந்துள்ளது.

இந்திய தளத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே 'தமிழன்' எனும் பத்திரிகை வெளிவந்துள்ளது.

"இன்றைக்கிருந்து 116 ஆண்டுகளுக்கு முன் சரியாக 19.06.1907ஆம் திகதி பண்டிதர் அயோத்திதாசரால் 'ஒரு பைசாத் தமிழன்' என்ற பெயரில் இதழொன்று தொடங்கப்பட்டது.

இன்றைக்குபோல் அன்றைய நிலை இல்லை. அன்றைக்கு இதழ்களைத் தொடங்குவதும் நடத்துவதும் இயக்கம் நடத்துவதற்கு ஒப்பானதாகும். எந்தவொரு சமூக நடவடிக்கையின் தொடக்கமாகவும் பிரதான பணியாகவும் இதழ் நடத்துவதாகவே இருந்தன. அயோத்திதாசர் தமிழன் ஏடு மூலம் இயக்கமாக செயல்பட்டார் என இதற்கு முன்னதான 'தமிழன்' எனும் தலைப்பிலான பத்திரிகை குறித்து குறிப்பிடுகிறார் ஆய்வாளர், முனைவர் ஸ்டாலின் ராஜாங்கம்.

அயோத்திதாசரின் தமிழன் எப்படி ஓர் இயக்கமாகச் செயற்பட்டதோ அப்படியான ஒரு முயற்சியாகவே தமிழனின் இணைப்பிதழாக வாரந்தோறும் வெளிவரும் 'தமிழ் முரசு' இதழும் ஓர் இலக்கிய இயக்கமாக செயற்பட முயற்சிக்கிறது எனலாம்.

கலை, இலக்கிய விடயதானத்துக்கென சிறப்பாக வெளிவரும் 'தமிழ் முரசு' இலக்கியச் செய்திகள், நேர்காணல்கள், ஆளுமைகள், நாட்டிய நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், குறுந்திரைப்பட முயற்சிகள் என பரந்துபட்ட தளத்தில் எழுத்தாளர்களை, கலைஞர்களை, அறிஞர்களை ஒரு புள்ளியில் இணைக்கும் பாலமாக செயற்பட 'தமிழ் முரசு' திடசங்கற்பம் கொள்கிறது.

'தமிழ் முரசு' ஓர் இணைப்பிதழ் என்றபோதும் அதனை ஒரு தனியான இதழாக மதிக்கத்தக்காக தனியான ஆசிரிய தலையங்கத்துடன் டப்லொயிட் வடிவில் வெளிவருவது சிறப்பாகும்.

இத்தகைய தனித்துவத்துடன் 'தமிழ் முரசு' இதழைக் கொண்டுவருவதற்கான சுதந்திரத்தை வழங்கியுள்ள 'தமிழன்' பிரதம ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரிய பீடத்துக்கும், நிறுவனத்துக்கும் 'தமிழ் முரசு' தனது நன்றியை இன்றைய ஆசிரிய தலையங்கத்தில் பதிவு செய்துகொள்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளைப்போலவே எதிர்வரும் ஆண்டுகளிலும் 'தமிழ் முரசு' தமிழனுடன் கரம் கோர்த்து செயற்பட திடசங்கற்பம் கொள்கிறது.

தாய்ப் பத்திரிகையான 'தமிழன்' இதழுக்கு 'தமிழ் முரசு'வின் அகவை தின வாழ்த்துகள் !

**பொறுப்பாசிரியர் - ஜீவா சதாசிவம்**

# 'மலையகம் 200' சிறப்பிதழாக வெளிவந்துள்ள 'தாயகம்' சஞ்சிகை




தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீட்டில் இலங்கையில் கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழாக வெளிவந்துகொண்டிருக்கும் 'தாயகம்' சஞ்சிகையானது தனது 108ஆவது பிரதியை மலையகத்தில் பிரசவித்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான ஜனவரி - மார்ச் வரையான இதழாக வெளிவந்திருக்கும் இவ்விதழ், தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் மத்திய மலைநாட்டுக்கு கூலித் தொழிலுக்காக அழைத்துவரப்பட்டு இன்று வரையிலும் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கும் மலையக மக்களின் 200 வருட வாழ்வியலை சிறப்பிக்கும் முகமாக 'மலையகம் 200' என்ற தொனியில் வெளிவந்திருப்பது சிறப்பம்சமாகும்.







குறித்த சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை (17) ஹட்டன் நகர சபை மண்டபத்தில் காலை 9 45 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு சிவ. ராஜேந்திரன் தலைமை தாங்கியிருந்தார்.

வரவேற்புரையோடு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக செல்வி கிருஷாந்தியின் கவிதை வாசிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தலைமை உரையாற்றிய சிவ ராஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.





"இன்றுள்ள இளைஞர்கள் சமூகத்தில் துடிப்புடனும் உத்வேகத்துடனும் இயங்கவேண்டிய தேவை இருக்கின்றது. மலையக சமூகத்தின் எழுச்சிக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த தியாகிகளின் வரலாறை நாம் கட்டாயம் படிக்க வேண்டும். அந்த இளைஞர்களின் தைரியத்தை இப்போது நாம் பாராட்ட வேண்டும்.

எமக்கு சமூக அடையாளத்தைப் பேணி பாதுகாக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் இருக் கின்றது. மேலும் மலையக சமூகத்தின் பாதையை ஒருநிலைப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

நெறிப்படுத்தப்பட்ட வாழ்க்கை தான் நிலையான இன்பத்தை தரும். நெறிப் படுத்தப்பட்ட ஒரு வாழ்க்கையின் கீழ் நாம் அனைவரும் வாழ வேண்டும். அதற்கு நாம் எமக்கான ஒரு வரையறையை - ஒரு திட்டமிடலை உருவாக்க வேண்டும். இதற்கு உதாரணமாக தேசிய கலை இலக்கியப் பேரவையின் யாப்பை காண்பிக்கிறேன்.

ஒரு நிர்வாகம், ஒரு அமைப்பு அல்லது ஒரு நாடு இயங்கவேண்டுமாக இருந்தால் நிச்சயமாக யாப்பு இருக்க வேண்டும். ஒரு யாப்புக்கு கீழ் இயங்கும்பொழுது மிக நேர்த்தியாக இயங்கக்கூடியவாறு இருக்கும். எனவேதான் நாங்கள் யாப்புக்கு கீழ் இயங்குகிறோம். அதேபோல் ஒவ்வொருவரும் ஒரு யாப்பை உருவாக்கி தமக்கான பாதையை உருவாக்கி பயணிக்க வேண்டிய தேவையும் பொறுப்பும் இருக்கின்றது. இதற்கு அனைவரும் தயாராக வேண்டும். நாம் முன்னோக்கி நகர வேண்டும். புதிய வாழ்வு, புதிய ஜனநாயகம், புதிய பண்பாட்டுக்கான பயணத்தில் இணைந்து பயணிப்போம் என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து நாட்டார் பாடல்கள் பாடப்பட்டதுடன், சிறுவர்களின் கலைத்திறமையும் வெளிக்காட்டப்பட்டது. இந்நிகழ்வின் சிறப்புரையாற்றவிருந்த எழுத்தாளர் சு.முரளிதரன் தவிர்க்க முடியாத காரணத்தால் நிகழ்வில் பங்குகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக அவருடைய வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்திருந்தார். இவரின் வாழ்த்துச் செய்தி குறித்த நிகழ்வில் வாசிக்கப்பட்டது.

எழுத்தாளர், சமூக செயற்பாட்டாளர் கிங்ஸ்லி கோமஸ் மற்றும் செம்மலர் மோகன் ஆகியோர் தம்முடைய சிறப்பான கருத்துரைகளை வழங்கியிருந்தார்கள். மேலும் இளம் கவிஞர்களின் கவிதைகள் வாசிக்கப்பட்ட தோடு மலையக நாட்டார் பாடல்களும் இசைக்கப்பட்டிருந்தன. வலி சுமந்த வரலாறு கொண்ட மலையக மக்களின் 200ஆவது ஆண்டு வரலாற்றை சிறப்பிக்கும் வகையில் வெளிவந்த 'தாயகம்' சஞ்சிகையின் சிறப்புப் பிரதிகளை நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு அதிதிகள் பெற்றுக்கொண்டதுடன், வருகை தந்திருந்த கலைஞர்கள், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என அனைவரும் பெற்றுக்கொண்டனர்.

**ராசையா கவிஷான்**
**கேம்பிரி - விந்துலை**

# யாழ்.பல்கலையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் பீ.மாணிக்கவாசகத்தின் நூல் அறிமுகம்

கடந்த 14ஆம் திகதியன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.மாணிக்கவாசகம் எழுதிய 'நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்' என்ற தலைப்பிலான நூல் அறிமுக நிகழ்வு நடைபெற்றது. இதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள்துறை மாணவர்களின் ஊடகக் கழகம் ஒழுங்கமைத்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

ஊடகக் கற்கைகள்துறை விரிவுரையாளரான டினேஷ் கொடுதோர் தலைமையில் நடைபெற்ற அவ்விழாவில் யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், அமரர் மாணிக்கவாசகத்தின் ஊடகப் பயணம் பற்றியும் அப்பயணத்தில் அவர் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும் உரையாற்றினார். தொடர்ந்து அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் அமரர் மாணிக்கவாசகத்தின் "நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்" என்ற நூலை அறிமுகம்செய்து நூலாசிரியரின் அரசியல் ஒழுக்கம் தொடர்பில் தனது உரையை அமைத்துக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து 'தினக்குரல்' வார இதழின் முன்னாள் ஆசிரியர் பாரதி இராஜநாயகம் மற்றும் மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா ஆகியோரும் நூலாசிரியருடனான அனுபவங்களையும், அவர் கொண்டிருந்த ஊடகப் பணிகள் பற்றியும் உரையாற்றினர். இறுதியாக நிகழ்வில் பங்கேற்ற அமரர் பீ.மாணிக்கவாசகத்தின் துணைவியார் தனது அனுபவங்களைப் பகிர்ந்து உரையாற்றியதோடு, அமரர் எழுதிய நூல்களின் தொகுப்புகளை யாழ். பல்கலைக்கழக நூலகத்துக்கும், ஊடகக் கற்கைகள்துறை நூலகத்துக்கும் வழங்கினார். முடிவாக ஊடகக் கழகத்தின் செயலாளர் ஆர்.தர்சினியின் நன்றியுரையோடு நிகழ்வு முற்றுப்பெற்றது.

ஒரு போர்க்காலச் செய்தியாளராகத் தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட அமரர் பீ.மாணிக்கவாசகம், ஒரு பொறுப்புள்ள ஊடகவியலாளராகத் தனது கடமைகளை நிறைவேற்றிச் சென்றிருக்கிறார் என்பதற்கு "நினைவுகள், நிகழ்வுகள், நெஞ்சில் மோதும் எண்ண அலைகள்" என்ற தலைப்பிலான இந்நூல் சான்றாகிறது. அது மட்டுமல்லாது அமரர் போன்றோர் போரின்போது தாம் எதிர்கொண்ட அனுபவங்கள், சாவால்கள், நிகழ்வுகள் பற்றியும் அது தொடர்பான கருத்துகள் போன்றவற்றை பதிவிட்டுச் சென்றிருப்ப தென்பது அவர் அடுத்த சந்ததியினருக்குச் செய்திருக்கும் அரும் பணிகளில் ஒன்று என்றுதான் குறிப்பிடலாம். அதுவும் பல்கலைக்கழகத்தில் மாத்திரமல்ல, ஊடகக் கற்கைகளை மேற்கொண்டிருக்கும், இனி மேற்கொள்ளவிருக்கும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகவும் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுல்ல, ஒரு நெருக்கடிமிக்க காலகட்டத்தின் ஆவணப் பதிவாக அமைந்திருப்பதோடு, பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட இனப்பிரச்சினை தொடர்பான பலவாறானவற்றை உள்ளடக்கியதொரு நூல் என்றவகையில் அது முதன்மைபெறுகிறது.




தமிழ்ப் பத்திரிகைச் செய்தியாளராக அவர் தொடங்கிய பணியில் அவர் கொடுத்த செய்திகளின் முக்கியத்துவம் ஒரு பிராந்தியச் செய்தியாளர் என்ற நிலையிலிருந்து தேசிய செய்தியாளர் என்ற நிலைக்கு அவரை உயர்த்திக்கொண்டது. துல்லியமாக மிகவும் உறுதிப்பட்டதாகச் செய்திகளை வழங்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய ஆர்வமும் அக்கறையும் அவரை உன்னத நிலைக்குக் கொண்டுசென்றதோடு அவரை ஒரு சர்வதேச செய்தியாளராகத் தரமுயர்த்திக்கொண்டதென்பதுதான் உண்மை.

ஊடகங்கள் தொடர்பில் உள்நாட்டுப்போர் அமரர் வாழ்ந்த வவுனியா பிரதேசத்துக்கு ஒரு முக்கியத்துவத்தைக் கொடுத்தது. யுத்தம் வலுப்பெற்றிருந்த வடக்குக்கும் தென்னிலங்கைக்கும் இடையே ஓர் "இடைத் தடுப்பு முகாம்" என்று சொல்லக்கூடிய அளவுக்கு வலுப்பெற்றிருந்த வவுனியா பிரதேசம், உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகத்துறையினருக்கு ஒரு கேந்தர நிலையமாக உருவெடுத்துக்கொண்டது.

பழைய தலைமுறையைச் சார்ந்தவராக அமரர் பீ.மாணிக்கவாசகம் இருந்தபோதிலும் நவீன தொழில்நுட்பத்துக்குத் தன்னை இலகுவாகப் பழக்கப்படுத்திக்கொண்டதை பிரபல செய்திச் சேவை ஊடகமான பீபீசி தமிழ் நிறுவனம் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டது. அத்துடன், இவர் செய்திகளைக் கையாள்வதும் அதனை உறுதிப்படுத்துக்கொண்டு வழங்குவதையும் பற்றி அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்து முன்னாள் பீபீசி தமிழ்ச் சேவை ஒலிபரப்பாளரான சிவராமாகிருஷ்ணன் குறிப்பிட்டுப் பேசியிருந்தார். அத்துணை நேர்மைமிக்கவராக அமரர் பீ.மாணிக்கவாகசம் ஊடகத்துறையில் விளங்கியிருக்கிறார் என்று சொல்வதை விடப் பிரகாசித்திருக்கிறார் என்றுதான் சொல்லலாம்.

ஊடகத்துறைசார்ந்து பணியாற்றுகின்ற வர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பொறுப்பு மற்றும் சமூக அக்கறை என்பவற்றுக்கு முன்னுதாரணமாகப் பல விடயங்களை அவர் எழுதிய "மாற்றத்தை விரும்பும் மாற்றுத் திறனாளிகள்" என்ற நூலிலே அவர் சூட்சுமமாகச் சிலவற்றைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒரு நியாயமற்ற முறையில் மௌனிக்கப்பட்ட யுதத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியதான





அந்நூல் அவர்களைப் பற்றி பேசுவதைவிட அவர்கள் சார்ந்து சமூகம் கொண்டிருக்க வேண்டிய பொறுப்புபற்றியும் அவர்களுக்கூடாகச் சொல்லியிருக்கிறது. சில நொடிப்பொழுதில் வலுவிழந்த அவர்கள் எதிர்கொண்ட மாற்றத்துக்குப் பழக்கப்பட்டவர்களாக இருக்கவில்லை என்றும் இயல்பு வாழ்க்கைக்குரியவர்களாக அவர்கள் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டி அவர்கள் சமூகத்தில் எதிர்கொண்ட சவால்கள் பற்றியும் அந்நூலின் பல இடங்களிலே அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தவகையிலே ஓர் உண்மையான ஊடகப் பணியாளர் கொண்டிருக்க வேண்டிய பண்பு பற்றியும் அவர்களுக்கு இருக்கவேண்டிய ஊடக மற்றும் சமூகப் பொறுப்புப் போன்ற விடயங்கள் பற்றியும் தனது வாழ்வை அமைத்துக்கொண்ட ஒரு கடமையுள்ளம் கொண்ட, மனிதநேயம்மிக்க ஊடகவியலாளரான அமரர் பீ.மாணிக்கவாசகம் ஊடகத்துறையினருக்கு ஒரு முன்னுதாரணமாக விளங்கிக்கொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை.

**கணபதி சர்வானந்தா**

# ஊடகத்துறை சார்ந்த சஞ்சிகை யாழில் வெளியீடு







‘செய்தியாளர் – ஊடக தூதுமடல்’ என்ற ஊடகத்துறை சார்ந்த சஞ்சிகை அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளையால் வெளியிட்டுவைக்கப்பட்டது. யாழ். பெரியதோட்டம் பீச் றோட்டிலுள்ள பிசப் சவுந்தரம் மீடியா சென்ரலில் இதற்கான நிகழ்வு யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை முன்னாள் விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும், சிறப்பு விருந்தினராக ‘வலம்புரி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரமும் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட செபஸ்தியாம்பிள்ளை மைக்கல் தாசன் ஆசியுரை வழங்கியதுடன், முதல் பிரதியையும் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் ரகுராமுக்கு ஊடக விருதும் வழங்கப்பட்டது. ஊடகவியலாளராக இருந்து கலைப் பீடாதிபதியாக உயர்ந்துள்ள ரகுராம் இன்றைய நிகழ்வில் கௌரவிக்கப் பட்டார்.



ஊடகத்துறைக்காக யாழ்ப்பாணத்தி லிருந்து ஏற்கனவே 1980களில் ‘பத்திரிகையாளன்’ என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளிவந்திருந்தது. வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத்தால் இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டது என்ற தகவலும் ‘ஊடக தூதுமடல்’ தந்துள்ளது. அது குறித்த கட்டுரை ஒன்றும் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மூத்த ஊடகவியலாளர் ராதேயன் குறித்த ஒரு விரிவான கட்டுரை உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவிலாளர்கள் குறித்தும், ஊடகத்துறையுடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் பலவும் இதில் இடம்பெற்றுள்ளன.

இலங்கையில் – குறிப்பாக, தமிழ் ஊடகத்துறையுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்வதில் ஆர்வம் உள்ளவர்களுக்குப் பயனுள்ள தகவல்களைத் தரும் ஒரு சஞ்சிகையாக இந்த மாதம் முதல் மாதா மாதம் இது வெளிவரும் என்று அருட்தந்தை ரூபன் மரியாம்பிள்ளை தெரிவிக்கின்றார்.

இன்றைய நிகழ்வில் பல்கலைக் கழக விரிவுரையாளர் தினேஷ், மூத்த ஊடகவியலாளர் எஸ்.தில்லைநாதன், பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

---




**கலைக் கமலின் 58ஆவது கீத் ராத் இசை நிகழ்ச்சியும் பாராட்டும் நிகழ்வும் கொழும்பு 7இல் உள்ள ஜே.ஆர்.ஜெயவர்தன மண்டபத்தில் 18.06.2023 இரவு நடைபெற்றது. கல்வி மற்றும் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்த பிரபல தொழிலதிபரும் சமூக தீபம் டாக்டர் எம்.சி.பஹார்தீன் ஹாஜியாருக்கு கலைக்கமல் ‘சேவை சிகரம்’ என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தார்.**

**படத்தில்: இலக்கியப் புரவலர் ஹாசீம் உமர், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் ஆகியோர் இணைந்து விருதை வழங்குவதை படத்தில் காணலாம்.**

**(அஷ்ரப் ஏ சமத்)**

---






**வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் மாதாந்த கலைஞர் ஒன்றுகூடல் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மகாஜனா கல்லூரி ஆசிரியர் விஜயகுலசிங்கத்தின் நெறியாள்கையில் வள்ளி திருமணம் இசைநாடகம் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்நாடகத்தில் நாரதராக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விமலநாதனும், வேடனாக வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கிருபானந்தனும், முதியவராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சந்திரகுமாரும், வள்ளியாக தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி ஆசிரியர் விஜயகுலசிங்கமும் முருகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் மணிமாறனும் நடித்துள்ளனர். பிரதேச கலைகளையும், கலைஞர்களையும் அடையாளங் கண்டு வளர்க்கும் நோக்கில் மாதாந்த கலைஞர் ஒன்றுகூடல் நடத்தப்பட்டு வருகிறது. ஏப்ரல் மாத கலைஞர் ஒன்றுகூடலில் நாடக ஆற்றுகை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.**

# ஈழத்துக் கலை இலக்கியத்துறையில்
# பேராசிரியர் மௌனகுரு





பேராசிரியர்- எம்.ஏ.நுஃமான்

(கடந்த வார தொடர்ச்சி)

1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவனாக மௌனகுரு வந்ததுடன், வித்தியானந்தனின் மரபுவழித் தமிழ் நாடக மறுமலர்ச்சி இயக்கம் ஆரம்பித்தது எனலாம். மௌனகுருவை மையப் பாத்திரங்களாகக்கொண்டு கர்ணன் போர் (1962), நொண்டி நாடகம் (1963), இராவணேசன் (1964), வாலி வதை (1965) ஆகிய நாடகங்களை சு.வித்தியானந்தன் அடுத்தடுத்து மேடையேற்றினார். பேராதனையில் மட்டுமன்றி, நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலும் இவை மேடையேறின. கிராமப்புறங்களில் சாதாரண மக்களின் ரசனைக்குரியதாக விடியவிடிய ஆடப்பட்ட நாட்டுக்கூத்து மத்தியதர வர்க்கத்தினரின் ரசனைக்குரிய நவீன அரங்கக் கலையாக மாற்றம் அடைந்தது. ஈழத்து அரங்க வரலாற்றில் இது ஒரு புதிய திருப்பம். இந்த அரங்க இயக்கம் ஒரு கூட்டு முயற்சிதான். பலருடைய அறிவும், ஆற்றலும், அனுபவமும், உழைப்பும் இதன் பின்னால் இருந்தன. எனினும், வித்தியானந்தனும் மௌனகுருவுமே இதன் மையம் எனலாம். அவ்வகையில் அவர்கள் பெற்ற நாடளாவிய புகழ் நியாயமானதே. வித்தியானந்தன் இல்லாமல் மௌனகுருவோ, மௌனகுரு இல்லாமல் வித்தியானந்தனோ தனித்து இதைச் சாதித்திருக்க முடியாது.

வித்தியானந்தன் அரங்கேற்றிய கூத்துகளின் உள்ளடக்கம், பாரதம், ராமாயணம் ஆகிய பண்டைய இதிகாசங்களிலிருந்து பெறப்பட்டவைதான். அவ்வகையில் அவை பாரம்பரிய உள்ளடக்கத்தைக் கொண்டவைதான். நவீன அளிக்கை முறையே அவற்றை நவீன அரங்காக மாற்றின. ஓர் இடதுசாரியான மௌனகுரு அவற்றோடு திருப்தியடையவில்லை. கூத்தின் உள்ளடக்கத்தையும் சமகாலத் தன்மையுடையதாக அவர் மாற்ற முனைந்தார். 1969இல் கொழும்பு லும்பினி அரங்கில் நடைபெற்ற தீண்டாமை, சாதி ஒழிப்பு மாநாட்டுக்காக அவர் தயாரித்து வழங்கிய சங்காரம் இதில் ஒரு பாய்ச்சல் என்று சொல்ல வேண்டும். மரபை நவீனமாக்கும் முயற்சியில் அதை ஓர் உச்சமாகக் கருதவேண்டும். சாதி, இன, மத அரக்கர்களுக்கு எதிரான மக்கள் எழுச்சியைக் காட்டுவதாக அமைந்தது சங்காரம். ''சாதி அரக்கனைச் சாய்த்திடுவோம் சங்காரம் செய்வோம்'' என்ற பாடல் வரியும், மௌனகுருவின் ஆட்டமும், தாளக்கட்டின் வீச்சும் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னும் என்னுள் புது அனுபவமாக இருப்பது மௌனகுருவின் வெற்றியின் அடையாளம்.

1960களின் பிற்பகுதியிலிருந்து 70, 80கள் வரை ஈழத்து நவீன நாடக அரங்கில் பல புதுமைகள் நிகழ்ந்தன. கூத்தாடிகள், நாடக அரங்கக் கல்லூரி, அவைக்காற்றுக் கலைக் கழகம் போன்ற அரங்கக் குழுக்கள் இதில் முக்கிய பங்காற்றின. சுஹைர் ஹமீத், தாசிசியஸ், சுந்தரலிங்கம், பாலேந்திரா, குழந்தை சண்முகலிங்கம் முதலியோர் முக்கிய அரங்கச் செயற்பாட்டாளர்களாக விளங்கினர். மௌனகுருவும் அவர்களுள் ஒருவராக இருந்தார். கூத்துக் கலையின் பல அம்சங்களை குறிப்பாக, ஆட்டத்தை நவீன அரங்கு உள்வாங்கச் செய்ததில் மௌனகுரு ஓர் உந்துசக்தியாக விளங்கினார். நவீன நெறியாளர்கள் பலருக்கு கூத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தினார். தானே பல நவீன நாடகங்களை நெறிப்படுத்தி அரங்கேற்றினார். மஹாகவியின் 'புதியதொரு வீடு', அயனஸ்கோவின் 'தலைவர்', சுந்தரலிங்கத்தின் 'அபசுரம்', அன்ரன் செக்கோவின் 'கரடி' முதலியவை இவற்றுள் முக்கியமானவை. எனது 'அதிமானுடன்' நெடுங்கவிதையையும் நாடகமாக்கி அவர் மேடையேற்றினார்.

மௌனகுருவின் அரங்கப் பங்களிப்பில் சிறுவர் அல்லது மாணவர் அரங்க முயற்சிகளும் முக்கியமானவை. மௌனகுருவை ஒரு குழந்தைப் பிரியர் என்று சொல்லலாம். அவருடைய மனமும் குழந்தை மனம்தான். சிறுவர்களோடு அவரும் அவரோடு சிறுவர்களும் மிக விரைவாக ஒட்டிக்கொள்வதைக் காணலாம். அவரது சிறுவர் அரங்கு அவருடைய இந்த இயல்பின் வெளிப்பாடெனல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் இதில் அவர் மும்முரமாக ஈடுபட்டார். பல பாடசாலைகள் அவரை நாடிவந்தன. சென். பொஸ்கோ ஆரம்பப் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, உஸ்மானியாக் கல்லூரி முதலிய பாடசாலை மாணவர்களைக்கொண்டு பல நாடகங்களை இவர் தயாரித்து மேடையேற்றினார். தப்பி வந்த தாடி ஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், ஒரு முயலின் கதை, சரிபாதி, நம்மைப் பிடித்த பிசாசுகள், பரபாஸ் முதலிய நாடகங்கள் இத்தகையன.

மாணவர் அரங்குபோல் பெண்ணிய அரங்கிலும் மௌனகுருவின் பங்களிப்பு பற்றிப் பேச வேண்டும். 1980களில் தமிழ்ச் சூழலில் பெண்ணியச் சிந்தனை மேலெழுந்துவந்த பின்னணியில் ஒரு முற்போக்காளர் என்ற வகையில் மௌனகுரு அதற்கு ஆதரவு வழங்கினார். அதில் அவரது மனைவி சித்திரலேகாவின் ஆலோசனைகளும் அவருக்கு உதவின. மகளிர் கல்லூரிகளுக்காக அவர் தயாரித்த பல நாடகங்களில் பெண்ணியச் சிந்தனையின் தாக்கத்தைக் காணலாம். 'சரிபாதி', 'நம்மைப் பிடித்த பிசாசுகள்', யாழ். பெண்கள் ஆய்வு வட்டத்துக்காகத் தயாரித்த 'சக்தி பிறக்குது' ஆகிய நாடகங்கள் இத்தகையன. சமீபத்தில் இவர் புதிதாகத் தயாரித்து வழங்கிய ராவணேசனில் மண்டோதரி ஒரு பெண்ணியப் பேச்சாளியாக மாற்றப்பட்டிருப்பதையும் இப்பின்னணியில் நாம் நோக்கலாம்.

(நீர்வை பொன்னையன் வெளியிட்ட ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிய ஓர் அறிமுக நூலுக்காக சுருக்கமாக எழுதிய கட்டுரை)



மிகுதி அடுத்த வாரம்



# எமது பிறமொழி நாடகங்களுக்கு மிகுந்த ஆதரவு

## ஈழத்து நாடக ஆளுமை பாலேந்திரா

உரையாடியவர் - ஜீவா சதாசிவம்

எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்து ஈழத்து நவீன நாடகத்துறையில் தொடர்ந்து இடைவிடாமல் உழைத்துவரும் நாடகக் கலைஞர் க. பாலேந்திரா நாடகமே மூச்சாக வாழ்பவர். கடந்த பத்து ஆண்டுகளாக லண்டனில் வாழ்ந்து கொண்டு புலம்பெயர்ந்து வாழும் நம் மக்கள் மத்தியில் நாடகத்துறையில் சாதனை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார்.

லண்டன் தமிழ் ரசிகர்கள் மத்தியில் தொடர்ச்சியாக பல நாடகங்களை தமது அவைக்காற்றுக் கழகத்தினூடாக மேடையேற்றும் இவர், சுவிட்சர்லாந்து, கனடா, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க் ஆகிய இடங்களில் நாடக விழாக்களை நடத்தியிருக்கிறார்.

பொறியியல் பட்டதாரியான பாலேந்திரா 1982இல் புலமைப்பரிசு பெற்று நோர்வே நாட்டுக்குச் சென்றார். அங்கு இவர் ஸ்தாபித்த தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் நோர்வே பல்கலைக்கழக 'இன்டர்நஷனல் கிளப்' தலைவராகவும் பணியாற்றினார். நோர்வேயிலிருந்து லண்டன் வந்த பாலேந்திரா 1978ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அவைக்காற்றுக் கழகத்தின் பணியைத் தொடர்ந்து நடத்திவருகிறார்.

'மழை' நாடகத்தை 1976ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மேடையேற்றினார். அவர் நோர்வே செல்லும்வரை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மேடையேறிய இந்த நாடகம் இவரால் இன்றுவரை பல்வேறு நாடுகளிலும் மேடையேறிக்கொண்டிருக்கிறது.

இவர் நெறிப்படுத்திய நாடகங்களின் எண்ணிக்கை 35. இதில் 18 சுயமொழியாக்கம். 17 தழுவல் மொழிபெயர்ப்புகள். இதுவரை 200க்கும் மேற்பட்ட மேடையேற்றங்களை இவரது தமிழ் அவைக்காற்றுக் கழகம் செய்து முடித்துள்ளது.

'மழை', 'கண்ணாடி வார்ப்புகள்', 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்', 'ஒரு பாலை வீடு', 'எரிகின்ற எங்கள் தேசம்', 'மன்னிக்கவும்', 'சம்பந்தம்' ஆகியன இவர் இயக்கிய புகழ்பெற்ற நாடகங்கள். இலங்கை வானொலியில் இவரது 'மழை', 'கண்ணாடி வார்ப்புகள்', 'அரையும் குறையும்' ஆகிய நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு நாடக ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது. இலங்கைத் தொலைக்காட்சி வரலாற்றில் முதன் முதலாக இவரது 'கண்ணாடி வார்ப்புகள்' 1982இல் ஒளிபரப்பானது.

இவரது நாடகங்களில் நடித்த ஆனந்தராணியை 1982இல் மணம்புரிந்து மானசி என்ற பெண்குழந்தையோடு அளவான குடும்பமாக லண்டனில் பொறியியலாளராகப் பணிபுரியும் பாலேந்திரா, நவீன தமிழ் நாடக உலகின் காரசாரமான வாதப்பிரதிவாதங்களின் மையமாகத் திகழ்பவர்.

எமது பிறமொழி நாடகங்களுக்கு மிகுந்த ஆதரவு இருந்தது. இன்றும் இருக்கிறது. நான் எனது நாடகப் பயணத்திலும் பல்வேறு வகையான நாடகங்களை செய்து வெற்றி கண்டிருக்கிறேன். நாற்பது வருடங்களுக்கு முன்னர் நான் நெறிப்படுத்திய நாடகங்களில் பல இன்றும் பேசப்படுகின்றன. லண்டனில் ஆங்கில சூழலில் அரங்குகள் இப்போதும் நிரம்பி வழியும் அளவு பார்வையாளர்கள் கூட்டம் ஒன்று எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது. தமிழ் சூழலில் அது குறைவுதான். ஆனால், தொடர்ந்து இயங்கி வரும்போது அது சாத்தியம் என்கிறார் ஐந்து தசாப்தங்களைக் கடந்து நாடகத்துறையுடன் பயணித்துக்கொண்டிருக்கும் ஈழத்தின் மூத்த முக்கிய நடன ஆளுமை பாலேந்திரா. 'நேர்காணல்கள்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்தவாரம் யாழில் இடம்பெற்றது. அடுத்தவாரம் கொழும்பில் இந்நூல் அறிமுக விழா இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் அவருடனான உரையாடலின்போது அவர் எம்முடன் பகிர்ந்துகொண்டவை எமது வாசகர்களுக்காக...

**மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் படித்துக்கொண்டிருந்தபோது, நாடகத் துறையில் நீங்கள் ஈடுபாடு காட்டியதாக அறிய முடிகின்றது. உங்களுடைய அந்த ஈடுபாட்டுக்கு என்ன காரணம்?**

மூன்று காரணங்களைச் சொல்லலாம். ஒன்று, எனது தீவிர வாசிப்புப் பழக்கம் ஒரு முக்கிய காரணம். மற்றது தேடல். மூன்றாவது எனது நண்பர்கள்.

நான் 1970இல் கொழும்பு வந்த பின்னர் நிறைய சிங்கள ஆங்கில நாடகங்களைப் பார்த்தேன். தமிழில் அந்தக் காலத்தில் எனது எதிர்பார்ப்பை நிறைவுசெய்யும் நாடகங்கள் குறைவான அளவில்தான் இருந்தன. நான் நல்ல நாடகப் பிரதிகள் சிலவற்றை எழுதி நெறிப்படுத்தினேன். அவற்றை சாத்தியமாகக்கியது மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ்ச் சங்கமும் நண்பர்களுமாகும்.

**சுமார் அரை நூற் றாண்டுக்கு முன்னரே இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு என பல இடங்களிலும் நாடகங்களை மேடையேற்றியிருந்தீர்கள். அப்போது அவற்றுக்குப் பலத்த வரவேற்பிருந்தது. சில நாடகங்கள் பல தடவைகள் மேடையேற்றப்பட்டிருக்கின்றன. அப்போது கிடைத்த வரவேற்பு இப்போது கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா?**

நாடகம் ஓர் உன்னதமான நேரடிக் கலை. அது ஈடுபட்டு உழைப்பவர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஒரு தனி கலா அனுபவம். நல்ல நாடகப் பிரதிகள் நேர்த்தியாக மேடையில் ஆற்றுகை செய்யப்பட்டால் இன்றும் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதே எனது கருத்து.

**புலம்பெயர்ந்த பின்னர் ஐரோப்பிய நாடுகளில் பல நாடகங்களை மேடையேற்றியிருக்கின்றீர்கள். இன்றைய காலகட்டத்தில் நாடகங்களுக்கு எவ்வாறான வரவேற்பு அங்குள்ளது?**

எனது நாடகங்களைப் பற்றி அறிந்தவர்கள் தொடர்ந்து ஆதரவு தந்துகொண்டே இருக்கிறார்கள். புதுப்புது நாடக வடிவங்கள் இன்றும் லண்டனில் மேடையேறி வருகின்றன. அதற்கான பார்வையாளர்கள் கூட்டம் ஒன்று எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. தமிழ்ச் சூழலில் நாங்கள் சிறுவர், இளையவர்களை இணைத்துப் பயணிக்கிறோம். கொரோனா எல்லா அரங்கக் கலைகளுக்குமான சவாலாக இருந்தது. இப்போது அங்கு அந்த சவால் சற்று தளர்ந்துபோய் விட்டது.




**ஈழத்து நாடக ஆளுமை பாலேந்திராவின் 50 ஆண்டு கலைப் பயணத்தைக் கொண்டாடும் நிகழ்வு எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும். அந்த நிகழ்வில் அவரது 'நேர் காணல்கள்' எனும் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வும், பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோர் வழங்கும் 'அரங்க நினைவலைகள்' ஆற்றுகை நிகழ்வும் இடம்பெறும்.**



**பிறமொழி நாடகங்களையும் மொழிபெயர்த்து தமிழுக்குக் கொண்டு வந்திருக்கின்றீர்கள். இவ்வாறான முயற்சியில் நீங்கள் ஈடுபடுவதற்கு காரணம் என்ன?**

அது எந்த மொழி யிலும் எப்போதும் தேவை. அது எம்மைச் செழுமைப்படுத்த உதவும். எம்மைச் சூழ இருப்பவற்றை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. மற்ற மொழிகளிலுள்ள நல்லவற்றை தமிழில் கொண்டுவருவது மிகவும் கவனமாக செய்யவேண்டும். எமது சூழலுக்கேற்ப நாடகங்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)

**எமது பிறமொழி...**
**(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

**பிறமொழி நாடகங்களை மொழிபெயர்க்கும்போது நீங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் என்ன? அதனை எமது சூழலுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்தீர்களா அல்லது அது வெறுமனே மொழிபெயர்ப்பாக மட்டும் இருந்ததா?**

மொழிபெயர்ப்பு அல்ல. மொழியாக்கம் செய்ய வேண்டும். Transcreation. கலாசார இடைவெளி ஒரு பெரிய பிரச்சினை.




நாடகங்களை எமது சூழலுக்கேற்ப மாற்றி எமது அன்றாட வாழ்வில் காணும் வார்த்தைகளைப் பயன்படுத்தி செய்ய முடிந்தால் வெற்றிபெற முடியும்.

**பிறமொழி நாடகங்களுக்கு எவ்வாறான வரவேற்பு தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது?**

எமது பிறமொழி நாடகங்களுக்கு மிகுந்த ஆதரவு இருந்தது. இன்றும் இருக்கிறது. நான் எனது நாடகப் பயணத்திலும் பல்வேறு வகையான நாடகங்களை செய்து வெற்றி கண்டிருக்கிறேன். நாற்பது வருடங்களுக்கு முன்னர் நான் நெறிப்படுத்திய நாடகங்களில் பல இன்றும் பேசப்படுகின்றன. உதாரணமாக 'கண்ணாடி வார்ப்புகள்', 'யுகதர்மம்', 'முகமில்லாத மனிதர்கள்' போன்றன.

கடந்த அண்மைய தசாப்தங்களில் நான் தயாரித்து மேடையிட்ட 'சூறாவளி', 'சமூக விரோதி', 'மரணத்துள் வாழ்வு' போன்ற நாடகங்களுக்கு புகலிட நாடுகளில் பரவலான வரவேற்பு இருந்தது.

**பொதுவான ஒரு கேள்வி. திரைப்படங்களை இப்போது வீடுகளிலிருந்தே பார்க்கும் நிலை வந்துவிட்டது. இந்த நிலையில் உலகளாவிய ரீதியில் நாடகங்களைப் பார்ப்பதற்கு மக்கள் மண்டபங்களை நோக்கிச் செல்வார்களா?**

லண்டனில் ஆங்கில சூழலில் அரங்குகள் இப்போதும் நிரம்பி வழியும் அளவு பார்வையாளர்கள் கூட்டம் ஒன்று எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. தமிழ் சூழலில் அது குறைவுதான். ஆனால், தொடர்ந்து இயங்கி வரும்போது அது சாத்தியம்.

**தமிழ் நாடக உலகின் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? உங்கள் பார்வை என்ன?**

"இளையவர்களே எமது எதிர்காலம்" என்பது எனது லண்டன் தமிழ் நாடகப் பாடசாலையின் மகுட வாசகம். 20 வருடங்களுக்கு முன்னர் தொடங்கி நடத்திவருகிறோம். அதுபோல் தாயகத்தில் நான் வந்து பார்த்தபோது இளையவர்களுடன் பழகிய போது ஆர்வம் உள்ள பலர் உள்ளனர். அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அது நடந்தால் நல்ல எதிர்காலம் உண்டு.

**உங்கள் நாடக உலகப் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?**

பாடசாலை மாணவனாக இருந்த போதே அரியாலையில் நாடக மேடை யேற்றங்களில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருக்கிறேன். ஆனால், இந்த நாடகங்கள் எனது நாடகத் தேடலுக்கு நிறைவு ஊட்டின என்று சொல்வதற்கில்லை. பின்னால் 1970இல் கொழும்புக்கு வந்த பின் சிறந்த சிங்கள நாடகங்களையும் ஆங்கில நாடகங்களையும் பார்க்க வாய்ப்புக் கிட்டியது. லண்டன் றோயல் ஷேக்ஸ்பியர் கம்பனியின் நாடகங்களையும் கொழும்பில் நவரங்ஹல மண்டபத்தில் பார்க்க முடிந்தது. இவை எனக்கு நாடகம் பற்றிய ஒரு காத்திரமான புரிதலுக்கு வழிவகுத்தன. தமிழில் அப்போது சிறிய நாடகக் குழுக்களின் நாடக மேடையேற்றங்கள் கூட ஒரு சடங்குபோல் ஒரேயொரு மேடையேற்றத்தோடு முடிந்து போனவையாகவே இருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு சுஹேர் ஹமீதின் அறிமுகம் கிட்டியது. இதேநேரத்தில் மொரட்டுவ (கட்டுப்பெத்த) பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் கொழும்பில் நாடகங்களை மேடையேற்றும் முயற்சியில் தீவிரம் காட்டத் தொடங்கியது. ஆரம்பத்திலிருந்து



எனது நாடகங்களுக்குக் களமாக இது இருந்தது. அதுகாலவரை தமிழ்ச் சங்க நிதிக்கு தென்னிந்திய திரைப்படம் மூலமாகவே நிதி சேர்க்கும் வழக்கம் கைவிடப்பட்டு தமிழ் நாடகங்களை மேடையேற்றி நிதி சேர்ப்பதெனவும் முடிவு செய்தோம். இந்தச் சூழலின் பெறுபேறாகவே "ஏணிப் படிகள்", 'ஐயா இலக்ஷன் கேட்கிறார்' (1973), 'பிச்சை வேண்டாம்' (1975) ஆகிய நாடகங்கள் மேடையேறின. 1976இல் கொழும்பில் நடிகர் ஒன்றியம் நாடக ரசிகர் அவையை உருவாக்கியபோது நா.சுந்தரலிங்கம், தாசீசியஸ், சி.மௌனகுரு, இ.சிவானந்தன், இளைய பத்மநாதன் இவர்களுடன் அதில் நான் தீவிரமாக உழைத்திருக்கிறேன். இந்த ரசிகர் அவைக்காகத்தான் இந்திரா பார்த்தசாரதியின் 'மழை' நாடகத்தை 1976இல் நான் தயாரித்தேன். எனது ஆரம்பகால முயற்சிகளில் நான் நெறிப்படுத்திய முதலாவது முக்கிய நாடகத் தயாரிப்பு என்று சொல்லலாம்.




## பரத நாட்டிய அரங்கேற்றம் இன்று






இந்திகா லியனகே தம்பதிகளின் புதல்வியும் சந்திசி ரங்கர கலா நிஹேதன நாட்டியப் பள்ளியின் மாணவியுமான தருஷி நெத்மினியின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு -03, இல. 11, பெரேரா மாவத்தையில் அமைந்துள்ள பிஷப் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

DR. சகுர அசங்கிக்கா செனவிரட்ண மற்றும் விசாரத திருது விஜயரத்ன ஆகியோரின் மாணவியின் அரங்கேற்றமே இடம்பெறவுள்ளது.



# ஈழத்தின் நவீன கதை சொல்லி
# எஸ்.எல்.எம்.ஹனீபா

## ஆளுமைகளின் அடையாளம்

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

ஈழத்துச் சிறுகதை உலகில் மக்கத்துச் சால்வையோடு நின்று மணம் பரப்புபவர், கலைப் பெறுமதிமிக்க சிறந்த கதைகளைத் தந்து மதிப்புப் பெற்றிருப்பவர், இலக்கிய உலகின் நவீன கதை சொல்லியாக எடுத்துக் காட்டப்படுபவர், "எஸ்.பொ" என்ற ஈழத்தின் மூத்த சிறுகதை ஆளுமை எஸ்.பொன்னுத்துரையின் இலக்கிய வாரிசாக, எழுத்து வட்டாரத்தால் குறித்துரைக்கப்படுபவர் எஸ்.எல்.எம்.ஹனீபா.

எஸ்.எல்.எம்.மோடு பேசிக்கொண்டிருப்பதே ஒரு தனிச் சுகம். அங்கதச் சுவையோடு பேசுபவர், வயது வித்தியாசமின்றி மூத்த - இளைய தலைமுறை எழுத்தாளர்களோடு நட்புறவைப் பேணுபவர். அவரின் தீவிர வாசிப்பும், எழுத்துலக அனுபவமும் அவருடைய உரையாடல்களில் பளிச்சிடும். இயற்கையை இரசிப்பவர். மண்ணை நேசித்து, ஒரு கிராமத்தானாக, கிராமிய மொழிவளச் சொற்களில் உரையாடி மகிழ்பவர். அவரை ஒரு நவீன சிறுகதை எழுத்தாளர் என்பதைவிட, ஒரு நவீன கதை சொல்லி என்பதே மிகப் பொருத்தம் என்பர். ஏனெனில், அவர் எழுதிய கதைகளை விட அவ்வப்போது சொல்கின்ற கதைகள் அதிகம். அதனாலேயே அவரைச்சுற்றி ஒரு ரசிகர் கூட்டம் எப்போதும் இருக்கும்.

மனிதநேயம், வறுமை, சுரண்டல், பாலியல், அரசியல், சமூக சீர்திருத்தம், தனிமனித பண்புகள் குறித்த மையப்பொருட்களில் கதையாடல்களை எள்ளலோடு நகர்த்திச்செல்பவர் அவர்.

'ராதா' என்ற சினிமா சார்ந்த பத்திரிகையில் 'நெஞ்சின் நினைவினிலே' என்ற சிறுகதை மூலம் 1960களின் பிற்பகுதியில் எழுத்துலகப் பிரவேசம் பெற்றவர். எனினும், இன்ஸான் பண்ணை எழுத்தாளராகவே எஸ்.எல்.எம். பார்க்கப்படுகின்றார். சிலர் அவரை இளம்பிறையில் வளர்ந்தவராகக் கூறுவதுமுண்டு.

'தினபதி'யின் தினம் ஒரு சிறுகதைத் திட்டத்திலும் அவர் எழுதினார். அத்திட்டத்தின் முதல் மாதத்தில் இரண்டு சிறுகதைகளை எழுதியவர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

ஓடையூர் எஸ்.ஹனீபா என்ற புனை பெயரிலும் எழுதிய எஸ்.எல்.எம். ஹனீபாவின் ஆக்கங்கள் வீரகேசரி, சுதந்திரன், சிந்தாமணி, சுடர், பாமிஸ், பூரணி, சரிநிகர், தாரகை, தென்றல் போன்ற இதழ்களிலும் வெளிவந்தன. ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்ட அவரின் எழுத்து ஊழியத்தில் மூன்று நூல்களே இலக்கிய உலகுக்குக் கிட்டின.

1.-மக்கத்துச் சால்வை- சிறுகதை (1992)

2-அவளும் ஒரு பாற்கடல் சிறு கதை (2007) காலச்சுவடு வெளியீடு

3-எண்டெ சீவியத்திலிருந்து- அனுபவக் குறிப்புகள் (2023) கஸல் பதிப்பக வெளியீடு.

அவர் வழங்கியுள்ள இரண்டு சிறுகதைத் தொகுதிகளிலும் எண்ணிக்கையில் குறைவான 24 சிறுகதைகளே உள்ளன.

"அதிக வாசிப்பே என்னை அதிகம் எழுதுவதை விட்டும் தூரமாக்கியது. நல்ல படைப்பை வியந்து வியந்தே எனது காலமும் போய்விட்டது. ஒரு சிறந்த நூலைப் படித்த கையோடு அதுபற்றி உரையாடுவதற்கு நண்பர்கள் இல்லாத சூழலில் வாழ்வதும் கொடுமை" என்று குறிப்பிடுவார் ஹனிபா.




"ஹனிபா அதிகம் எழுதாவிட்டாலும் இலக்கியத்தைத் தன்னுள் எப்போதும் சுமந்து திரிபவர். விரிவான வாசகர், ஒரு தேர்ந்த கலைஞர். ஹனீபாவுடன் பழகிய யாரும் அவரை இலகுவில் மறக்க மாட்டார்கள். வயது வேறுபாடின்றி, எல்லோருடனும் அன்பாகப் பழகக்கூடியவர். சுவையான உரையாடி. கல்மிஷம் இல்லாமல் - எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் தன் மனதில் பட்டதை வெளிப்படையாகப் பேசக்கூடியவர். கேட்பவருக்குச் சங்கடமாக இருந்தாலும் அதுபற்றி அவர் கவலைப்படுவதில்லை. இந்த வெளிப்படைத்தன்மை அவருக்குப் பல நண்பர்களையும் சில எதிரிகளையும் பெற்றுத் தந்திருக்கின்றது.




குறைவாக எழுதிய போதிலும் வாழைச்சேனை பிரதேசத்து முஸ்லிம் சமூகத்தின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தை அவரின் கதைகளில் தரிசிக்கக் கூடியதாக இருக்கும். கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் வாழ்வை புனைவு இலக்கியத்துள், கொண்டு வந்த மிகச்சில படைப்பாளிகளில் ஹனீபா முக்கிய இடம் பெறுகிறார்'' என்று அவருடைய எழுத்தாற்றல் பற்றிக் குறிப்பிடுவார் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான்.




"தள்ளம்பாடாத" ஒரு நிதான வெறி ஹனிபாவின் கதைகளில் மண்டிக் கிடக்கிறது. மட்டக்களப்பு மாநிலத்தின் வாழ்க்கையை முழுமையாக அல்லாவிட்டாலும் வலு நேர்மையாகத் தரிசிக்க விழையும் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுதான். தனித்தனி மனிதனில் பொதிந்துள்ள மானுஷத்தின் தேடலில் இலக்கியம் அவாவும் சமத்துவத்தை தரிசிக்கலாம் என்கிற பிரக்ஞையுடன் அமைந்துள்ள வார்ப்புகளும் இதில் உள்ளன. இந்த ஆரோக்கியமான பிரக்ஞையுடன் அமைந்துள்ள ஹனிபாவின் எழுத்தாற்றலின் Plus Point. ஈழத்து தமிழ் சிறுகதை வளம் முஸ்லிம் கலைஞரின் பங்களிப்பையும் உள்ளடக்கியதுதான் என்கிற உண்மையை உரத்து ஒலிப்பதற்கு 'மக்கத்துச் சால்வை' நிகர்த்த ஒரு சிறுகதைத் தொகுதி இதுவரை வெளிவந்திலது. உண்மை: வெறும் புகழ்ச்சி அல்ல" என்று ஹனிபாவின் மக்கத்துச் சால்வை குறித்து சான்றுரைப்பார் மூத்த எழுத்தாளர் எஸ்.பொ.தனது படைப்புகளுக்காக விருதுகளையும் பரிசுகளையும் பெற்றிருப்பவர் எஸ்.எல்.எம்.

1. - அரச சாஹித்ய விருது (1992)
2. - லில்லி தேவசிகாமணி விருது(1992)
3. - மாவட்ட இலக்கிய விழா விருது.
4. - தோப்பு இலக்கியவட்ட மொழி விருது
5. - வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் விருது

என்பன அவற்றில் முக்கியமானவை.

ஜீவநதி, எஸ்.எல் எம்.ஹனீபா சிறப்பிதழை (மாசி 2023) வெளியிட்டு அவரைக் கௌரவித்துள்ளது.

அவரின் இலக்கிய நண்பர்கள் 'மக்கத்துச் சால்வை' 'மண்ணும் மணமும்' என்ற பெயரில் அவரின் பணிகளை ஆவணப்படுத்தி மலர் வெளியிட்டுள்ளனர். அவருடைய சிறுகதைகளை நிலார் என். காசீம் சிங்கள மொழியிலும் தந்துள்ளார். தமிழகத்திலும் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பலரை நண்பர்களாகப் பெற்றுள்ளார் எஸ்.எல்.எம். அவர்களோடு நெருக்கமான உறவைப் பேணுகிறார். சுந்தர ராமசாமி, ஜெய மோகன், எஸ்.ரா. போன்ற பலர் அவரின் கலை இலக்கியத் தொடர்பு நண்பர்கள்.

எழுத்தாளராக, அரசியல்வாதியாக, விளையாட்டு வீரராக கீர்த்தி பெற்றிருப்பவர் எஸ்.எல்.எம்.ஹனீபா. முஸலிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக வடக்கு- கிழக்கு மாகாண சபை பிரதிநிதியாக இருந்து மக்கள் தொண்டாற்றியவர். தடகள விளையாட்டு வீரராக பல மாவட்ட போட்டிகளில் வெற்றிக்கனிகளைச் சுவைத்தவர்.

எஸ்.எல்.எம்.ஹனீபா வாழைச்சேனை, மீராவோடையில் 1946இல் பிறந்தவர். தந்தை - தம்பிசாய்வு சின்னலெவ்வை, தாய் - முகைதீன் பாவா கலந்தர் உம்மா, தொழில் - கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர், மனைவி - முகம்மது உசைன் முகம்மது பாத்து. அவருக்கு 3 பிள்ளைகள்.

பவள விழாக் கண்ட எஸ்.எல்.எம். உடல் நலம் பெற்று இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும். அவர் சொல்லும் யானை பிடிக்கும் கதையை நாவலாக்கித் தரவேண்டும் அமுத விழா, நூற்றாண்டு விழா கண்டு அவர் தொடரவேண்டுமென்பதே எங்கள் பிராத்தனையாக இருக்கின்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7



கிக்
கிக்
வாசிக்க
வாசிக்க...
மலர் : 02, இதழ் : 30 - 25.06.2023
லியோ திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக்

# மகேஷ்பாபு படத்திலிருந்து பூஜா ஹெக்டே விலகல்



தமிழில் 'முகமூடி', 'பீஸ்ட்' படங்களில் நாயகியாக நடித்தவர் பூஜா ஹெக்டே. தெலுங்கில் பல படங்களில் நடித்துவரும் அவர், ஹிந்திப் படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். அவர் இப்போது த்ரிவிக்ரம் ஸ்ரீனிவாஸ் இயக்கத்தில் மகேஷ்பாபு நடிக்கும் 'குண்டூர் காரம்' என்ற படத்தில் ஒப்பந்தமாகியிருந்தார். இதில் மற்றொரு நாயகியாக ஸ்ரீலீலா நடிக்கிறார். இந்நிலையில், பூஜா ஹெக்டே இந்தப் படத்திலிருந்து விலகியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஷூட்டிங் தள்ளிப்போய்க்கொண்டே இருப்பது மற்றும் கதையில் செய்யப்பட்ட மாற்றம் காரணமாக அவர் விலகியதாகக் கூறப்படுகிறது.

அவருக்குப் பதிலாக 'களரி', 'ஜூலை காற்றில்', 'வாத்தி' படங்களில் நடித்த சம்யுக்தா நடிக்க இருக்கிறார். இதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாக இருக்கிறது. படத்துக்கு எஸ்.எஸ்.தமன் இசையமைக்கிறார்.




தளபதி விஜய் நடிப்பில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் திரைக்கு வரவுள்ள 'லியோ' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் விஜயின் பிறந்தநாளான ஜூன் 22ஆம் திகதி வெளியானது.

# சந்திரமுகி 2 ஷூட்டிங் நிறைவு



பி.வாசு இயக்கத்தில் 2005ஆம் ஆண்டு வெளியாகி வெற்றிபெற்ற படம் 'சந்திரமுகி'. ரஜினிகாந்த், ஜோதிகா, நயன்தாரா, பிரபு, வடிவேலு உட்பட பலர் நடித்திருந்தனர். இதன் இரண்டாம் பாகம் 'சந்திரமுகி 2' என்ற பெயரில் உருவாகிறது. இதில் ராகவா லோரன்ஸ், கங்கனா ரனாவத், வடிவேலு, ராதிகா உட்பட பலர் நடிக்கின்றனர். லைகா தயாரிக்கும் இதன் படப்பிடிப்பு மைசூர், ஹைதராபாத், சென்னை உள்ளிட்ட பகுதிகளில் நடந்து வந்தது. தற்போது முழு படப்பிடிப்பும் முடிவடைந்துள்ளது. இதை படக் குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். செப்டெம்பர் 15ஆம் திகதி படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர்.

# உதவியாளர்களுக்கு தங்கக் காசு பரிசளித்த ஸ்ரேயா



நடிகை ஸ்ரேயா ரெட்டி நடித்துள்ள 'அண்டாவக் காணோம்' படம் விரைவில் வெளியாக இருக்கிறது.

அடுத்து பிரபாஸ், ஸ்ருதிஹாசன் நடிப்பில் பிரசாந்த் நீல் இயக்கும் 'சலார்', பவன் கல்யாண் நடிக்கும் 'ஓஜி' படங்களில் முக்கிய வேடங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில், 'சலார்' படத்தில் ஸ்ரேயா ரெட்டி நடிக்கும் காட்சிகளின் ஷூட்டிங் சமீபத்தில் நிறைவடைந்தது.

இதையடுத்து இந்தப் படத்தில் தன்னுடன் பணிபுரிந்த உதவியாளர்களுக்கு தங்கக் காசு பரிசளித்து ஆச்சரியப்படுத்தி இருக்கிறார் ஸ்ரேயா ரெட்டி.

# விரைவில் தயாராகும் 'புதிய பாதை 2'
## – பார்த்திபன் தகவல்



88ஆம் ஆண்டு பார்த்திபன் இயக்கி, நடித்த படம் 'புதிய பாதை'. பெரும் வெற்றிபெற்ற இந்தப் படத்தில் சீதா, மனோரமா, வி.கே.ராமசாமி நடித்திருந்தார்கள். தன்னை பலாத்காரம் செய்த ரவுடியுடன் துணிச்சலாக சேர்ந்து வாழ்ந்து அவனை நல்வழிப்படுத்திய ஒரு பெண்ணின் கதை. இந்தப் படம் பல மொழிகளில் பல வடிவங்களில் அனுமதியின்றி எடுக்கப்பட்டிருப்பதாக பார்த்திபன் தற்போது தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "மாலையும் இரவும் சந்திக்கும் நேரம். புதிய பாதை எத்தனை மொழிகளில் முறையான அனுமதியின்றி எடுக்கப்பட்டிருந்தாலும் மகிழ்ச்சி" என்று பதிவிட்டிருந்தார். இந்த பதிவுக்கு ரசிகர் ஒருவர் 'புதிய பாதை' படத்தின் இரண்டாம் பாகம் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள பார்த்திபன் "தற்போது தயாராகி வரும் படம் முடிந்ததும் 'புதிய பாதை 2' தயாராகும்" என்று


**கிக் – 'வார இதழ்'**
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442
g l lk mk
Kick – கிக்
g l lk m h l lk nl
h g l lk m
கிக் வாசிக்க வாசிக்க...
தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி





# இணையத்தை வைரலாக்கிய கவர்ச்சி தம்பதி



ஸ்பெயினிலுள்ள மிக அழகிய தீவு பொர்மென்டெரா. அங்கு அழகிய இளம் ஜோடிகள் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பிரித்தானிய தொலைக்காட்சிகளில் ஜெக்குலின் ஜொஸாவும் டென் ஒஸ்போர்னும் மிகப் பிரபலமானவர்கள். இருவரும் திருமணம் செய்துகொண்டு ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகின்றன. இந்நிலையில், அவர்கள் பொர்மென்டெரா தீவுக்கு சென்று கவர்ச்சிப் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர்.

அங்கு கடலில் படகில் பயணித்து சந்தோஷமான தருணங்களைக் கழித்ததாக இருவரும் குறிப்பிட்டுள்ளனர்.

# 73 ஆயிரம் ரசிகர்களை ஈர்த்து டெய்லர் ஸ்விஃப்ட் சாதனை

அமெரிக்காவின் மிகப் பிரபல பாடகியான டெய்லர் ஸ்விஃப்ட் பிரம்மாண்டமான இசைநிகழ்ச்சியில் 73 ஆயிரத்து 117 ரசிகர்களை ஈர்த்து சாதனை படைத்துள்ளார். அவரது இசை நிகழ்ச்சி பிட்ஸ்பர்க்கில் அண்மையில் நடைபெற்றது.

அதில் பெருந்திரளான ரசிகர்கள் கலந்துகொண்டிருந்ததுடன், டெய்லர் தனது கவர்ச்சி நடனத்தாலும் அழகிய பாடல்களாலும் அவர்களின் மனதை வென்றார். பிட்ஸ்பர்க் ஸ்டேடியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அதிக எண்ணிக்கையானோர் கலந்துகொண்டமை இதுவே முதன்முறையாகும்.

அந்த ஸ்டேடியத்தில் கார்த் ப்ரூக்ஸ் கடந்த 2019ஆம் ஆண்டு நடத்திய இசை நிகழ்ச்சியில் 72 ஆயிரத்து 887 பேர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேர்தலில் போட்டியிடத் தயாராகும் ஆர்னோல்ட்



அவுஸ்திரேலிய – அமெரிக்க நடிகரும் தொழிலதிபருமான ஆர்னோல்ட் எதிர்வரும் அமெரிக்க தேர்தலில் போட்டியிடப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்ட முடியுமென முழுமையாக நம்புவதாக தனக்கு நெருக்கமான வட்டாரங்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை த டர்மினேட்டர் ஸ்டார் இணையத்தளம் வெளிக்கொணர்ந்துள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தின் 38ஆவது ஆளுநராக விளங்கும் ஆர்னோல்டுக்கு 75 வயதாகிறது.

இவர் தனது 15ஆவது வயதிலிருந்து உடற்கட்டமைப்பு பயிற்சிகளை செய்துவந்துள்ளதுடன், 20ஆவது வயதில் ஆணழகன் பட்டத்தை வென்றார்.

இவர் சிறந்த நடிகராகவும் வலம் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெனிஸ் ரிச்சர்ட்ஸின் மாத வருமானம் 2 மில். டொலர்



அமெரிக்க பிரபலமான டெனிஸ் ரிச்சர்ட்ஸ் தனது தனிப்பட்ட சமூக வலைத்தள கணக்கின் ஊடாக இரண்டு மில்லியன் டொலரை மாத வருமானமாக பெற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

அவர் ஒன்லி பேன் எக்கவுன்ட் ஒன்றை உபயோகித்து வருகிறார். அது தனிப்பட்ட கணக்காகும். டேனிஸின் அனுமதியின்றி அந்தக் கணக்குக்குள் நுழைய முடியாது. அதனூடாகவே அவர் மாதமொன்றுக்கு பெரிய தொகையை வருமானமாகப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கறுப்பில் களமிறங்கும் கதாநாயகிகள்

நடிகைகள் படங்களில் பிஸியாக இருந்தாலும் போட்டோ ஷூட் மூலம் ரசிகர்களைக் கவர்ந்து வருகின்றனர். ஒவ்வொரு நடிகைகளுக்கும் சமூகவலைத்தளங்களில் இலட்சக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். அந்தவகையில் அவர்களின் விதவிதமான போட்டோ ஷூட்கள் ட்ரெண்ட்டாகி வருகின்றன. குறிப்பாக, ஒரு நடிகை ஒரு நிறத்திலான ஆடையில் போட்டோ ஷூட்டில் வலம் வந்தால் தொடர்ந்து அதே ஸ்டைலில் மற்ற நடிகைகளும் போட்டோக்களை வெளியிடுவர். தற்போது கறுப்பு நிற ஆடையிலான நடிகைகளின் போட்டோ ஷூட் வைரலாகிறது.

அந்தவகையில், நடிகை தமன்னா கறுப்பு நிறத்திலான ஆடையில் தனது காதலர் விஜய் வர்மாவுடன் ‘லஸ்ட் ஸ்டோரிஸ்–2’க்காக நெருக்கமான கிளாமரான போட்டோ ஷூட் படங்களை வெளியிட்டுள்ளார். கூடவே அதற்கு கேப்ஷனாக “காமமா... அல்லது காதலா... எது வெல்லும்” என குறிப்பிட்டுள்ளார்.





அவரைத் தொடர்ந்து நடிகை ராஷி கண்ணா அதீத கவர்ச்சியில் கறுப்பு நிற உடையில் போட்டோ ஷூட் வெளியிட்டுள்ளார். அதனுடன் ‘‘என் ஆன்மாவின் நிறம் அல்ல...” என குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் நடிகை பிரியா பவானி சங்கர் சமீபகாலமாக சற்றே கவர்ச்சி பக்கம் திரும்பி வருகிறார். கொஞ்சம் கொஞ்சமாக கிளாமரை வெளிப்படுத்தி வரும் இவர், இப்போது கறுப்பு நிற ஆடையில் கால்கள் முழுக்க கறுப்பு நிற ஸ்கின் உடையில் கிளாமரான போட்டோக்களை வெளியிட்டுள்ளார். உடன் ‘‘எவ்வளவு கறுப்பு... மிகவும் கறுப்பு...” என குறிப்பிட்டுள்ளார்.

# குமுறும் டாப்ஸி...

பொலிவூட்டில் பல நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாக குற்றச்சாட்டுகள் பரவியுள்ள நிலையில், அங்கு பல வாரிசு நடிகர், நடிகைகளுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

முன்னாள் உலக அழகியும், நடிகையுமான பிரியங்கா சோப்ரா கூட பொலிவுட்டிலிருந்து தன்னை விரட்டியடித்துவிட்டனர் என்று குமுறியிருந்தார். வாரிசு நட்சத்திரங்களின் ஆதிக்கத்தால் பெரும் மன உளைச்சலுக்குள்ளான இளம் நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புத் தற்கொலை செய்துகொண்டதாக கங்கனா ரனவத் குற்றஞ்சாட்டினார்.

தற்போது டாப்ஸி பொலிவுட்டிலுள்ள பாகுபாடுகள் குறித்து மனம் கொதித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்தியில் நடிகர், நடிகைகளை பாரபட்சமாக நடத்துவது புதிய விடயமல்ல. இங்கு வேண்டியவர், வேண்டாதவர் என்று பிரித்துப் பார்க்கும் நிலைமை இருக்கிறது. சினிமாவில் நான் நடிக்க வருவதற்கு முன்பே இவ்விடயம் எனக்குத் தெரியும்.

தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே நடிக்க வாய்ப்பு கொடுப்பார்கள். சாதகமான நிலைமை இல்லை என்றாலும் கூட, தொடர்ந்து சினிமாவில் நீடிக்கவேண்டும் என்று நினைப்பது அவரவர் விருப்பம். ஆனால், விஸ்வரூபம் எடுத்து வளர்ந்துவிட்டால் யாரும் அவரை வெளியேற்ற முடியாது” – என்றார்.



# கிளாமரில் கிறங்கடிக்கும் மீரா



தமிழில் லிங்குசாமி இயக்கத்தில் மாதவன் நடித்த ‘ரன்’ படத்தில் அறிமுகமானவர் மீரா ஜஸ்மின். அதன்பின்னர் மணிரத்னம் இயக்கிய ‘ஆயுத எழுத்து’, மீண்டும் லிங்குசாமி இயக்கிய ‘சண்டக்கோழி’ என பல படங்களில் நடித்து முன்னணி நடிகைகளின் பட்டியலில் இடம்பிடித்தார்.

ஒரு கட்டத்தில் டுபாய் தொழிலதிபரை திருமணம் செய்துகொண்டு அங்கேயே செட்டிலான மீரா, தனது கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விவாகரத்து பெற்ற நிலையில், மீண்டும் சினிமாவில் ரீ என்ட்ரி கொடுத்துள்ளார்.

சமீபத்தில் வெளியான ‘விமானம்’ படத்தில் நடித்ததன் மூலம் தமிழில் ரீ–என்ட்ரியான நிலையில், அடுத்தபடியாக சசிகாந்த் இயக்கும் ‘டெஸ்ட்’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் மாதவன், சித்தார்த், நயன்தாரா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

தற்போது படப்பிடிப்புகள் இடம்பெற்றுவரும் நிலையில், தமிழில் ரீ–என்ட்ரி கொடுப்பதற்கு முன்பே பல கிளாமர் புகைப்படங்களை வெளியிட்டு வந்த மீரா ஜஸ்மின், தற்போது மீண்டும் தனது அதிரடியான கவர்ச்சிப் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

# மீண்டும் வெளியாகும் 'குட்நைட்'

'ஜெய் பீம்' மணிகண்டன் கதையின் நாயகனாக நடித்த திரைப்படம் 'குட்நைட்'. இப்படத்தை அறிமுக இயக்குனர் விநாயக் சந்திரசேகரன் இயக்கினார். இப்படத்தின் நாயகியாக மீதா ரகுநாத் நடித்துள்ளார். இதில் ரமேஷ் திலக், பாலாஜி சக்திவேல், பக்ஸ் என்ற பகவதி பெருமாள், ரேச்சல் ரெபாக்கா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜெயந்த் சேது மாதவன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். ரொமான்டிக் காமெடி ஜானரில் உருவான இப்படத்தை மில்லியன் டொலர் ஸ்டுடியோஸ் மற்றும் எம்.ஆர்.பி. என்டர்டெய்ன்மென்ட் இணைந்து தயாரித்தனர். மே 12ஆம் திகதி திரையரங்குகளில் வெளியான 'குட்நைட்' திரைப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் ஓடிடி ரிலீஸ் திகதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'குட்நைட்' திரைப்படம் எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி ஹாட் ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளனர்.






# கூல் லுக்கில் மஞ்சு வாரியர்

விஷ்ணு விஷால், கவுதம் வாசுதேவ் மேனன், மஞ்சுமா மோகன் உள்ளிட்ட பலர் நடிப்பில் கடந்த ஆண்டு வெளியான திரைப்படம் எவ்.ஐ.ஆர்.

மனு ஆனந்த் இயக்கத்தில் வெளியான இப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இப்படத்தைத் தொடர்ந்து ஆர்யா மற்றும் கவுதம் கார்த்திக் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் 'மிஸ்டர் எக்ஸ்' (Mr.x) படத்தை மனு ஆனந்த் இயக்குகிறார்.

பிரின்ஸ் பிக்சர் தயாரிக்கும் இப்படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. இந்நிலையில், 'மிஸ்டர் எக்ஸ்' படத்தில் நடிகை மஞ்சு வாரியர் இணைந்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது. மலையாள நடிகையான மஞ்சு வாரியர் இதற்குமுன்பு தமிழில் தனுஷுடன் 'அசுரன்', அஜித்துடன் 'துணிவு' படங்களில் நடித்திருந்தார். தற்போது ஆர்யாவுடன் இணைந்துள்ளதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி ஆகிய ஐந்து மொழிகளில் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவை வலம்வரும் குட்டி நயன் அனிகா



நடிகை அனிகா சுரேந்திரன் மாலைதீவில் தனது விடுமுறையைக் கொண்டாடி வரும் நிலையில், அவர் வெளியிட்டுள்ள லேட்டஸ்ட் இளநீர் போட்டோக்களுக்கு ஏடாகூடமான கமெண்ட்டுகள் குவிந்து வருகின்றன.

குழந்தை நட்சத்திரமாக தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு மொழிகளில் நடித்து வந்தவர் அனிகா சுரேந்திரன். நடிகர் அஜித் மற்றும் நயன்தாராவுடன் ஏகப்பட்ட படங்களில் இவர் நடித்துள்ளார்.

நயன்தாரா சாயலில் இவர் இருப்பதாகக் கூறி குட்டி நயன்தாரா என்றே ரசிகர்கள் இவரை அன்போடு அழைத்து வருகின்றனர்.

மோகன்லால், மம்மூட்டி என ஏகப்பட்ட மலையாள நடிகர்களின் படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து வந்த அனிகா சுரேந்திரன், கவுதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்த 'என்னை அறிந்தால்' படத்தில் அஜித்துக்கு மகளாக நடித்திருந்தார்.

அந்தப் படத்தில் இடம்பெற்ற "உனக்கென வேணும் சொல்லு" பாடல் வேற லெவலில் ஹிட் அடித்தது. அந்தப் படத்தைத் தொடர்ந்து 'விஸ்வாசம்' படத்திலும் அஜித்துக்கு மகளாக அனிகா சுரேந்திரன் நடித்திருந்தார். 'நானும் ரவுடிதான்' படத்தில் நயன்தாராவின் சிறு வயது கதாபாத்திரத்தில் நடித்த அனிகா சுரேந்திரன், பாஸ்கர் தி ராஸ்கல் மற்றும் விஸ்வாசம் உள்ளிட்ட படங்களில் லேடி சூப்பர்ஸ்டாருக்கு மகளாக நடித்திருந்தார். மலையாள நடிகையான அனிகா சுரேந்திரன் அச்சு அசல் அங்கிருந்து வந்த நயன்தாரா போலவே இருக்கிறார் என ரசிகர்கள் அவரை குட்டி நயன்தாரா என்று அழைத்து வருகின்றனர்.



# பெரிய இடத்துப் பெண்

## ஸ்வீட் சிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

தமிழில் ஆயிரக்கணக்கில் படங்கள் வெளிவந்தபோதும் சில படங்களின் கதைகள் ரசிகர்களைக் கவர்ந்து, அக்கதைகள் மீண்டும் மீண்டும் படமாகி ரசிகர்களின் ஆதரவைப் பெற்றே வந்துள்ளன. அப்படிப்பட்ட ஒரு கதையைக்கொண்டு உருவான படம்தான் 'பெரிய இடத்துப் பெண்'. படம் வெளியாகி அறுபது ஆண்டுகளாகிய போதும் இன்றும் இப்படத்தின் கதை ரசிகர்களின் கவனத்தில் ஏதோ ஒரு படம் மூலம் நினைவில் இருந்தவண்ணமே உள்ளது.

எம்.ஜி.ஆரின் நடிப்பில், படத்தின் இறுதியில் கதாநாயகன் இறப்பதுபோல் காட்டி பாசம் என்ற தோல்வி படத்தைத் தயாரித்து இயக்கிய டி.ஆர்.ராமண்ணா, அந்தத் தோல்வியிலிருந்து சுதாரித்துக்கொள்ள உருவாக்கிய ஜனரஞ்சக படம் இது. ஆனால், குடும்பக் கதையை அடிப்படையாகக் கொண்டே படம் உருவானது.

கிராமத்தில் குடுமி வைத்து, வீடுண்டு, மாடுண்டு என்று தன் ஒரே அக்காளுடன் வாழ்ந்துவரும் முருகப்பன், அதே ஊரில் வாழும் செல்வந்தர் கைலாசபிள்ளையின் எதிர்ப்புக்கு உள்ளாகிறான்.

கைலாசபிள்ளையின் சதியால் அவன் வீடு எரிக்கப்படுகிறது. அக்காள் கங்கையம்மாள் களங்கப்படுத்தப்பட்டு காணாமல் போகிறாள். எல்லாவற்றையும் இழந்து பட்டணம் போகும் முருகப்பன் தன் நண்பன் பிச்சாண்டி மூலம் நவநாகரீக மனிதனாகி புனிதத்தை கல்யாணம் செய்து தன் சபதத்தை நிறைவேற்றுகிறான்.

படத்தில் கிராமத்தானாகவும், பட்டணவாசியாகவும் வரும் எம்.ஜி.ஆர். ஒரு கலக்கு கலக்கி இருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களின் கோயில் பிரவேசத்துக்கு குரல் கொடுக்கும் போதும், சாட்டையடியிலிருந்து ஒரு தொழிலாளியை காப்பாற்றும்போதும் எழுச்சியுடன் அவர் நடிப்பு மிளிர்கிறது. அதேபோல் அக்காளை பிரிந்து துடிக்கும்போதும், குழந்தையை பார்க்க ஏங்கும்போதும் உணர்ச்சிகரமாக நடித்திருந்தார். அதேபோல் பாடல் காட்சிகளில் அவருடைய ஆட்டம், முகபாவம் எல்லாம் ஜோர்!

பெரிய இடத்துப் பெண்ணாக, திமிர் பிடித்தவளாக வரும் சரோஜாதேவி, ஆரம்பத்தில் குமரியாக அலட்சியத்துடனும், பின்னர் தாயாகி, கணவன் அன்புக்கு ஏங்கும் பெண்ணாகவும் நிறைவாக நடித்திருந்தார். நாகேஷ் இல்லாவிட்டால் படமே இல்லை என்பது உண்மை. அவர் நடிப்பு சூப்பர். அசோகன் காட்டும் முறைப்பும், விறைப்பும் கவனத்தைக் கவர்கிறது. ஒரு காலத்தில் கவர்ச்சி காட்டி நடித்த டி.ஆர்.ராஜகுமாரியின் நடிப்பு மென்மை. அதேசமயம் பிற்காலத்தில் கவர்ச்சி நடிகையாக திகழ்ந்த ஜோதிலட்சுமிக்கு இதுவே முதல் படம். இவர்களுடன் மணிமாலா, ஆர்.எம்.சேதுபதி, கொட்டப்புளி ஜெயராமன் ஆகியோரும் நடித்தனர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் மகன் கோலப்பன் இந்தப் படத்தில் அறிமுகமானார்.



படத்தில் எம்.ஆர்.ராதா கோயில் தர்மகர்த்தாவாகவும், செல்வந்தராகவும் வந்து முத்திரை பதிக்கிறார். நான் வாழணும், என் குடும்பம் வாழணும், என் குலம் வாழணும் அதுக்கு நீதான் அருளணும் என்று அவர் பிரார்த்திப்புடன் தொடங்கும் படம் அவர் கதாபாத்திரத்தை உணர்த்துவதாக அமைந்தது.

ஆரம்பத்தில் ஆர்ப்பாட்டமாக நடிப்பவர், படத்தின் பிற்பகுதியில் மகளின் நிலையை பார்த்து உருகி நடித்து திறமையை வெளிப்படுத்துகிறார். ஆனால், எந்த வஞ்சனைக்கும் அஞ்சாத எம்.ஆர்.ராதா இரவு தூக்கத்தில் ஓர் உருவத்தைக் கண்டு அலறுகிறார், உளறுகிறார். ஆனால், எவ்வித பாதுகாப்பும் அவர் வீட்டுக்கு செய்யப்படுவதாக இல்லை. அந்த உருவமும் இஷ்டப்படி வந்து போகிறது. இது கதையில் இருக்கும் ஓட்டை!

படத்துக்கு கதை வசனம் எழுதியவர் சக்தி கிருஷ்ணசாமி. சிவாஜியின் கட்டபொம்மனுக்கு அனல் பறக்கும் வசனம் எழுதியவர் இதில் சீர்திருத்த கருத்துகளை எழுதி யதார்த்தத்தை உணர்த்தினார். ''மாட்டையே அடிக்கக்கூடாதுன்னு சொல்ற காலத்திலே மனுசன சாட்டையால அடிக்கிறீங்க, தவறு செய்திருந்தால் தண்டனையை சட்டப்படி செய்யணும், உங்கள் இஷ்டப்படி அல்ல, மனித சமுதாயத்தில் இருக்கும் நீதி, உரிமை, வழிபாடு இவற்றில் எல்லாம் ஏற்றத்தாழ்வு கூடாது'' என்று சக்தி கிருஷ்ணசாமியின் வசனங்கள் பளிச்சிட்டன. இந்தப் படத்தை தொடர்ந்து எம்.ஜி.ஆரின் மேலும் சில படங்களுக்கு வசனம் எழுதும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

படத்துக்கு படம் ஏதாவது புதுமை செய்யும் நோக்கில் இருந்த விஸ்வநாதன், ராமமூர்த்தி இருவரும் இப்படத்திலும் அதனை செய்ய தவறவில்லை. பி.சுசிலாவின் மென்மையான குரலில் ''ரகசியம் இது ரகசியம்'' பாடலுக்கு சபாஷ். இது தவிர, அன்று வந்ததும் இதே நிலா, கட்டோடு குழலாட ஆட, பாரப்பா பழனியப்பா, அவனுக்கென்ன தூங்கி விட்டான் பாடல்கள் இன்றும் வரவேற்பில் உள்ளன. கண்ணதாசன் எட்டு பாடல்களையும் எழுதியிருந்தார்.

படத்தை தரமாக ஒளிப்பதிவு செய்தவர் எம்.ஏ.ரஹ்மான். படத்தொகுப்பை கையாண்ட எம்.எஸ்.மணி படத்தின் விறுவிறுப்புக்கு உதவினார். படத்தில் எம்.ஜி.ஆரும் அசோகனும் இரண்டு கரங்களினாலும் போடும் சிலம்பாட்டம் அருமை. அதனை அமைத்த சிவசுப்ரமணியத்துக்கு ஓ போடு!

ராமண்ணா இயக்கிய 'பெரிய இடத்துப் பெண்' வெற்றி படமானது. அதுமட்டுமன்றி இப்படத்தின் சாயலில் பின்னர் குமரிப் பெண், கல்யாணமாம் கல்யாணம், பட்டிக்காடா பட்டணமா, சகலகலா வல்லவன் என்று இன்னும் சில படங்கள் உருவாகி ரசிகர்களைக் கவர்ந்தன. அறுபது ஆண்டுகள் கடந்தும் ஸ்வீட் சிக்ஸ்டியாக இன்றும் பெரிய இடத்துப் பெண் உயர்ந்து நிற்கிறாள்!

rrtmsd cr nsl h nl



# ஹொலிவூட் பட வாய்ப்புக்காக ஆபாசமாக நடிக்கிறேனா? தமன்னா விளக்கம்



தமிழ் சினிமாவில் 'கேடி' படத்தின் மூலம் அறிமுகமானார் தமன்னா. ஆனால், அவருக்கான கவனிப்பு என்பது கல்லூரி மற்றும் அயன் ஆகிய படங்களின் மூலம்தான் கிடைத்தது. அதையடுத்து வரிசையாக முன்னணி நடிகர்கள் படங்களில் நடித்து டொப் நடிகையானார்.

ஆனால், ஒரு கட்டத்தில் புது நாயகிகளின் வரவுக்குப்பட பிறகு தமன்னாவின் வாய்ப்புகள் குறைய ஆரம்பித்தன. இப்போது சினிமாவில் 18 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், பொலிவுட் பட வாய்ப்புகள் அவருக்கு அதிகமாக வர ஆரம்பித்துள்ளன. பொலிவுட்டில் அடுத்தடுத்து ஜி கர்தா மற்றும் லஸ்ட் ஸ்டோரிஸ் 2 ஆகியவற்றில் நடித்துள்ளார்.

இரண்டுமே பாலியல் சம்பந்தப்பட்ட கதைக்களம் என்பதால் இரண்டிலுமே கவர்ச்சி கூடுதலாக நடித்துள்ளார் தமன்னா. அதிலும் ஜிகர்தாவில் டொப்லெஸ் மற்றும் உடலுறவு காட்சிகளிலும் நடித்திருப்பதால் அவரது ரசிகர்கள் ஷொக் ஆகியுள்ளனர். இந்நிலையில், ஹொலிவூட் படங்களில் வாய்ப்புகளைப் பெறத்தான் தமன்னா இப்படி ஆபாசமாக நடிக்கிறார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இதற்கு விளக்கமளித்துள்ள தமன்னா, "கதைக்கு தேவை என்பதால்தான் அப்படி நடித்தேனே தவிர, ஹொலிவூட் வாய்ப்புகளுக்காக அல்ல. 18 வருடங்களுக்குப் பிறகு பிரபலமாக மாற நான் முயற்சிகள் எடுக்கவேண்டியதில்லை" என பதிலளித்துள்ளார்.



# வாழ்வியலில் புரிந்துணர்வு

வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும்போது என்ன படித்திருக்கிறார், வேலை, குடும்பப் பின்னணி என்று பொதுவாக பல விடயங்களை ஆய்வுசெய்வதை போலவே எமோஷனல் மெச்சூரிட்டி என்று கூறப்படும் மன முதிர்ச்சி அடைந்த நபரை தெரிவுசெய்வது மிக மிக முக்கியம். மெச்சூரிட்டி இல்லாத நபர் என்று பலரை பார்த்திருப்பீர்கள். அவ்வாறு மெச்சூரிட்டி இல்லாத, மன முதிர்ச்சி அடையாத நபரிடம் எப்போதாவது பேசுவதென்பதே பிரச்சினைக்குரியதாக இருக்கும். இந்நிலையில், அதுபோன்ற நபரை வாழ்க்கைத்துணையாக தெரிவு செய்தால் மேலும், எமோஷனல் மெச்சூரிட்டி என்று கூறப்படும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப சென்சிட்டிவாக நடந்துகொள்ளும் நபரை நம் வாழ்க்கைத்துணையாக தேர்ந்தெடுப்பது மிக மிக அவசியம்.

கணவன் - மனைவி உறவு ஆரோக்கியமாகவும், நீண்டகாலம் மகிழ்ச்சியாகவும் இருக்க, நல்ல புரிந்துணர்வு முக்கியமானதாகும். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு முதிர்ச்சி இருந்தால்தான் உறவில் பிணைப்பு அதிகரிக்கும். இக்கட்டான நேரத்தில், மோசமான காலகட்டத்தில் எமோஷனல் மெச்சூரிட்டி உள்ள நபர்கள் சரியான முடிவெடுப்பார்கள். அதேபோல், சின்ன சின்ன விடயங்களை எளிதாகக் கையாள்வார்கள்.

பொதுவாகவே முதிர்ச்சியடைந்த நபர்கள் தம் மனதில் இருப்பதை மறைக்க மாட்டார்கள். குறிப்பாக, உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகக் கூறுவார்கள். போலியான உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் அல்லது சென்டிமென்ட் தூவியோ, பேசவோ மாட்டார்கள். தன்னுடைய உணர்வுகளை வார்த்தைகளின் மூலமாகவும் செயல்களின் மூலமாகவும் வெளிப்படுத்தி விடுவார்கள். தமது உணர்வுகளை போலியாக வெளிக்காட்ட மாட்டார்கள்.

ஒரு சூழ்நிலை எவ்வாறு கையாள வேண்டும் என்பது உணர்ச்சிப்பூர்வமாக முதிர்ச்சி அடைந்த நபர்களுக்கு நன்றாகவே தெரியும். எனவே, ஒரு சிக்கல் அல்லது இக்கட்டான சூழ்நிலையில் தானாக முன்வந்து தயங்காமல் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்கள். மற்றவர்கள் மீது பழி சுமத்தவோ மற்றவர்களை எப்படியாவது மாட்டிவிட வேண்டும் என்ற எண்ணமோ இவர்களுக்கு கொஞ்சம் கூட இருக்காது. எனவே, முதிர்ச்சி அடைந்த நபர்களிடம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தன்மையும் நேர்மையும் இயல்பாகவே இருக்கும். இதனால் உறவில் ஏற்படும் சிக்கல்கள், கருத்து வேறுபாடுகள் எல்லாம் எளிதில் காணாமல் போய்விடும்.

ஒவ்வொரு விடயமும் ஒவ்வொருவரின் பார்வையில் வெவ்வேறாகக் காணப்படும். எமோஷனல் மெச்சூரிட்டி உள்ள நபர்களுக்கு இது நன்றாக தெரியும். எனவே, சட்டென்று ஒரு முடிவை எடுக்காமல், ஒரு கருத்தைச் சொல்லாமல் வெவ்வேறு கண்ணோட்டத்திலிருந்து ஒரு விடயத்தை அணுகுவார்கள். எதிர்மறையான கருத்துகளைக்கூட இவர்களால் எளிதில் எதிர்கொள்ள முடியும். இந்த அடிப்படையில் இவர்கள் எடுக்கும் முடிவு மிகவும் சரியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

கவிஞர் கண்ணதாசன் எல்லா துறைகளையும் தனது பாடலில் சேர்த்திருக்கிறாரா? தெரிந்த தகவல்களை சொல்லுங்களேன்?

**விவேக் - மஸ்கெலியா**

ஆமாம், அவர் தொடாத விடயங்களே இல்லை என்று சொல்லிவிடலாம் போங்கள்.

திரையுலக கம்பனாக, வள்ளுவனாக வற்றாத கற்பனையுடனும், வளமான கருத்துகளுடனும் வலம் வந்த கண்ணதாசன், முத்தையாவாக சூல்கொண்டது சிவகங்கை மாவட்டம், சிறுகூடல்பட்டியில்.

பாட்டுப் பல்லக்கில் பயணம் செய்த இந்த ராஜ கவிஞனின் படைப்புகள்தான் எத்தனை எத்தனை?. காதலா? வீரமா? பாசமா? தாலாட்டா? அரவணைப்பா? ஆறுதலா? மனிதனின் ஒவ்வொரு உணர்வுக்கும் கண்ணதாசனின் ஒரு பாட்டு கைபிடித்து நடந்தது.

***உன் கண்ணில் நீர்வழிந்தால்***
***என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி...***

– இந்தப் பாட்டு கண்ணீர் துடைத்தது.

***காலம் ஒருநாள் மாறும் – நம்***
***கவலைகள் யாவும் தீரும்...***

– இந்தப் பாட்டு காயங்களுக்கு மருந்திட்டது.

***ஒருத்தி ஒருவனை நினைத்துவிட்டால்***
***அந்த உறவுக்குப் பெயரென்ன...***

– இந்தப் பாட்டு காதல் சொன்னது.

***நினைக்கத் தெரிந்த மனமே***
***உனக்கு மறக்கத் தெரியாதா?***

– இந்தப் பாட்டு பிரிவுத் துயரத்தைப் பேசியது.

***காதல் சிறகைக் காற்றினில் விரித்து***
***வான வீதியில் பறக்கவா...*** – பிரிந்தவர் இணைகையில், பீறிட்டு எழும் அழுகையின் ஆனந்தத்தை வெளிப்படுத்தியது இந்தப் பாட்டு.

***மலர்ந்தும் மலராத பாதி மலர்போல***
***வளரும் விழி வண்ணமே...***

– மனதையும், உடலையும் வாஞ்சையுடன் வருடும் தென்றலை. மயிலிறகால் வருடி தலைகோதியது இந்த வரிகள்.

***கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா***
***கீதையின் நாயகனே கிருஷ்ணா...***
***கிருஷ்ணா...***

– குறையோடு பிறந்ததால் அநாதையாக்கப்பட்டவன், ஆண்டவனை நோக்கி அறைகூவல் விடுத்ததை விளம்பியது இந்தப் பாட்டு.

***சின்ன சின்ன கண்ணனுக்கு***
***என்னதான் புன்னகையோ?***

– மகப்பேறு என்ற மருத்துவத்தை கவிதை மொழியில் கற்றுக்கொடுத்தது இந்தப் பாடல்

***பூ முடித்தாள் இந்தப் பூங்குழலி***
***புது சீர் அடைந்தாள் வண்ணத்***
***தேனருவி...***

– திருமணத்தையே நடத்தி முடித்து வைத்தது இந்தப் பாட்டு.

***ஆலயமணியின் ஓசையை***
***நான் கேட்டேன்...***

– அழகான அதிகாலையை அர்த்தமுள்ளதாக்கி மேலும் அழகாக்கிக் காட்டியது இந்தப் பாடல்.

***தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்***
***தரத்தினில் குறை வருமோ...***

– கம்பீரமாகக் கால்பதித்து நடந்து வரவேண்டிய தன்னம்பிக்கை, தாழ்வு மனப்பான்மையால் தவழ்ந்து வந்தபோது, அள்ளி அணைத்து ஆதரவுக் கரம் நீட்டியது இந்தப் பாடல்

இப்படி எத்தனை எத்தனையோ பாடல்கள் கண்ணதாசனின் கற்பனையில் வற்றாத நதியாய் ஊற்றெடுத்துக் கிளம்பின. அவரது பாடல் இடம்பெற்ற தாலேயே தமிழின் பல வரிகளுக்குத் தனி கௌரவம் கிடைத்தது.

எதையெல்லாம் வாழ்க்கையில் கண்டுகொள்ளாமல் நகர்ந்து விடுவது நல்லது?

**சுப்பிரமணியம் - அவிசாவளை**

பொதுவாக யாருடைய சொந்த விடயத்திலும் அவர்களுடைய அனுமதி இல்லாமல் தலையிடுவது மிகவும் தவறாகும். இதை எல்லாம் கண்டு கொள்ளாமல் இருப்பது நல்லது..

வீட்டிலும் வெளியிலும் யாருடைய குறைகளையும் பெரிதுபடுத்தாமல் இருந்தாலே நிம்மதியாக இருக்க முடியும்.

அலுவலகத்திலும் வெளி இடங்களிலும் அரசியல் பற்றிய பேச்சுகளை கண்டும் காணாமல் நகர்வது நல்லது. தேவையில்லாத பிரச்சினைகள் வராது.

நமக்கு வேண்டியவர்கள் நம்மை கோபத்தில் பேசினால், கண்டும் காணாமல் நகர்வது மிகவும் நல்லது.



உங்கள் கேள்விகளை 65 0 8 7 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
'ஜிகினாவிடம் கேளுங்கள்'
வட்ஸ்அப் : 076 139 3805




## விமர்சனம்

ஒரு கிராம் மோதிரத்தைச் சுற்றி ஏழ்மையான ஒரு குடும்பத்தின் பொருளாதாரமும், மகிழ்ச்சியும் எவ்வாறு பின்னப்பட்டிருக்கிறது என்பதைப் பேசுகிறது ‘எறும்பு’.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் வசித்து வருகிறார் விவசாயக் கூலியான அண்ணாதுரை (சார்லி). முதல் மனைவி இறந்துவிட, மகள் பச்சையம்மா (மோனிகா சிவா), மகன் முத்து (சக்தி ரித்விக்), இரண்டாம் மனைவி கமலம் (சூசன் ஜோர்ஜ்), அண்ணாதுரைக்கும் கமலத்திற்கும் பிறந்த கைக்குழந்தை, அண்ணாதுரையின் தாய் பொம்மி (பல்ரவை சுந்தராம்மாள்) ஆகியோருடன் கடனிலும் வறுமையிலும் நாட்களைக் கடத்தி வருகிறார் அண்ணாதுரை. இந்நிலையில், கந்துவட்டிக்காரர் ஆறுமுகத்திடம் (எம்.எஸ்.பாஸ்கர்) வாங்கிய முப்பதாயிரம் ரூபா கடனை அடைக்க முடியாததால், ஆறுமுகத்தின் தகாத வசவுகளால் ஊர் முன் அவமானப்படுகிறார். மொத்த கடனையும் வட்டியுடன் அடைக்க, அண்ணாதுரையும் கமலமும் 15 நாட்களுக்கு வெளியூருக்குக் கரும்பு வெட்டும் வேலைக்குச் செல்கிறார்கள்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அக்குடும்பத்தின் ஒரே சொத்தாக இருக்கும் ஒரு கிராம் மோதிரத்தை முத்து தொலைத்துவிட, சித்தி கமலத்தின் வசவுகளுக்குப் பயந்து அக்கா பச்சையும் தம்பி முத்துவும் செய்வதறியாது நிற்கின்றனர். சித்தி வீடு திரும்புவதற்குள் தொலைந்த மோதிரத்தைக் கண்டுபிடித்தார்களா, ஆறுமுகத்திடம் வாங்கிய கடனை அண்ணாதுரை திரும்பி அடைத்தாரா போன்ற கேள்விகளுக்கு அக்கா - தம்பியின் வாழ்க்கை வழியே பதில் சொல்லியிருக்கிறார் அறிமுக இயக்குநர் சுரேஷ்.ஜி.



தாயை இழந்து வாடும் தம்பிக்கு ஆறுதலாக இருக்கும் தருணங்கள், சித்தியிடமிருந்து தம்பியைக் காக்கும் இடங்கள் என எல்லா காட்சிகளிலும் பக்குவமான நடிப்பை வழங்கியிருக்கிறார் மோனிகா சிவா. சிறுவன் சக்தி ரித்விக்கும் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்திற்கு நியாயம் செய்திருக்கிறார். பாசக்கார தந்தையாகவும், ஏழ்மையில் அவமானப்படும் குடும்பத் தலைவனாகவும் வரும் அண்ணாதுரை கதாபாத்திரத்திற்கு சார்லியின் அனுபவ நடிப்பு ஒருபக்கம் பலம்தான் என்றாலும், அவரின் வழக்கமான முக பாவனைகளும் உடல்மொழியும் இன்னொரு பக்கம் பின்னடைவாகவும் இருக்கின்றன. சூசன் ஜோர்ஜும், எம்.எஸ்.பாஸ்கரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்துக்கு நியாயம் செய்திருக்கிறார்கள். ஜோர்ஜ் மரியானின் நடிப்பு சில இடங்களில் ரசிக்க வைத்தாலும் மற்ற இடங்களில் ஓவர் டோஸாகவே இருக்கிறது.

ஒரு சிறிய தெரு, ஒரு சிறிய வீடு, ஒரு சிறிய குடும்பம், கிராமத்தில் உள்ள சொற்ப மனிதர்கள் என எளிமையாகத் தொடங்கி நகர்கிறது முதற்பாதி. ஆனால், காட்டப்படும் எல்லா கதாபாத்திரங்களும் வழக்கமான சோக படங்களில் வரும் கதாபாத்திரங்களாகவே எழுதப்பட்டுள்ளன. அதனால், கதாபாத்திரங்களின் அடுத்தடுத்த நகர்வுகள் மட்டுமல்ல, ஒவ்வொரு காட்சியும் தொடங்கும்போதே, அது எவ்வாறு நகரும், எங்கு முடியும், என்ன வசனம் வரும் என மிகத் துல்லியமாகக் கணித்துவிட முடிகிறது. இறுதிக்காட்சி வரையுமே இந்தப் பிரச்சினை தொடர்கிறது. ஏற்கனவே பார்த்துப் பழகிய பல சிறார் படங்களும் மனதில் வந்து போகின்றன.

கே.எஸ்.காளிதாஸின் ஒளிப்பதிவும், எம்.தியாகராஜனின் படத்தொகுப்பும் ஒரு முழுநீள திரைப்படம் என்ற அனுபவத்தைத் தரத் தவறியிருக்கின்றன. காட்டுமன்னார்கோவிலின் அழகை நம் மனதில் பதியவைத்த விதத்தில் மட்டும் ஒளிப்பதிவாளர் கே.எஸ்.காளிதாஸ் கவனிக்க வைக்கிறார். அருண் ராஜின் இசையில் அனைத்து பாடல்களிலும் மேற்கத்திய இசையில் ஒலிப்பதால், படத்தின் மையக் களத்திலிருந்து விலகியே நிற்கிறது. பின்னணி இசை மட்டும் சில நெகிழ்ச்சியான காட்சிகளுக்குக் கைகொடுத்திருக்கிறது.

ஜோர்ஜின் பழுதான போனில், இறந்து போன தன் அம்மாவிடம் மோனிகா சிவா பேசுவதும், அதைக் கண்டு ஜோர்ஜ் உடைவதும் நெகிழ்ச்சியான தருணம்தான் என்றாலும், அழுத்தமான திரைக்கதையில் இக்காட்சி பொருத்தப்பட்டிருந்தால், கூடுதலாகக் கைத்தட்டலைப் பெற்றிருக்கும்.

மொத்த பட ஆக்கமுமே ஒரு நீண்ட குறும்படத்தைப் பார்க்கும் அனுபவத்தை மட்டும் தருவதால் ‘எறும்பு’ கவனம் ஈர்க்காமல் கடந்துபோகிறது.

# அதிவேக வசூல் சாதனையில் ஆதிபுருஷ்

‘ஆதிபுருஷ்’ திரைப்படம் அதிவேகமாக வசூல் சாதனையை நிகழ்த்தியுள்ளது.

ஓம் ராவுத் இயக்கத்தில் பிரபாஸ் நடித்துள்ள ‘ஆதிபுருஷ்’ திரைப்படம் கடந்த வாரம் திரையரங்குகளில் வெளியானது.

ராமாயணத்தை அடிப்படையாகக்கொண்டு உருவான இப்படம் வெளியான 6 நாட்களில் ரூ.410 கோடி வசூலித்துள்ளதாக தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ள காட்சி அமைப்புகள், வசனங்கள், கதாபாத்திரங்களை உருவகப்படுத்தியுள்ள விதம் உள்ளிட்டவை ஹிந்து மதத்தை அவமதிக்கும் விதத்தில் உள்ளதாக வட மாநிலங்களில் படத்துக்கு எதிர்ப்பு எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07